கல்கி

புத்தாண்டு மலர்

"என் ஹெர்குலிஸ் பூட்டியிருக்கிறதா என்று பார்த்து வருகிறேன்"

ஹெர்குலிஸ் ஸைக்கிள்
அவரது மதிப்பு வாய்ந்த சொத்து

ஒரு ஸைக்கிள் வாங்குவதற்காக நீங்கள் எவ்வளவோ தியாகம் செய்ய வேண்டியிருக்கும். பஸ் கட்டணத்திலோ, டிபன் செலவிலோ, துணிமணி, நகைகள் வாங்குவதிலோ சிக்கனம் செய்து சேமித்த பணத்தில் ஒரு உயர்ந்த ஸைக்கிளை வாங்க விரும்புவது இயற்கை தானே! ஆகவே, சிறந்த ஹெர்குலிஸ் ஸைக்கிளையே வாங்குங்கள். உலகெங்கிலுமுள்ள 134 தேசங்களில் அதிகமாக விரும்பி வாங்கப்படும் 'ஹெர்குலிஸ்' ஸைக்கிள் உன்னத அமைப்பும், பிரயாஸையின்றி, சுலபமாகச் செல்லும் தன்மையும் கொண்டது.

இந்தியாவிலேயே மிகப் பெரியதும், சிறந்த சாதனங்கள் கொண்டுள்ளதுமான டி. ஐ. ஸைக்கிள்ஸ் தொழிற்சாலையில், ஹெர்குலிஸ் ஸைக்கிளின் ஒவ்வொரு உறுப்பும் நுட்பமான பரிசோதனைக்கிடையே தயாரிக்கப்படுகிறது.

ஹெர்குலிஸ் சட்டங்களும் இணைப்புகளும் அரும்பிடிக்காமலிருக்க 'ஸ்ப்ராஇராநோடைஸ்' செய்யப்படுவதோடு பளபள வென்று தோற்ற மளிக்க அவைகளுக்கு மூன்று தடவை எனாமல் பூச்சு அளிக்கப்படுகிறது.

உங்கள் ஸைக்கிள் ஒரு முதலீடு. ஹெர்குலிஸ் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமானம்.

ஹெர்குலிஸ்

ஒரு ஸைக்கிள் மட்டுமல்ல—
வாழ்நாள் முழுதும்
உழைக்கும் ஓர் நற்துணை

தயாரிப்போர்
டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா
மதராஸ்


Where there is
photography...
there is
GEVAERT
GEVAERT 120
GEVAPAN 33
GEVAPAN 33
GEVAERT 120
GEVACOLOR N5
ALLIED PHOTOGRAPHICS LIMITED
Kasturi Building, Jamshedji Tata Road, Bombay.


குளிர்ச்சிக்கும் நறுமணத்திற்கும்
சந்தனாதி, அரைக்கீரை
பிருங்காமலகா, தைலங்கள்
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்

கல்கி புத்தாண்டு மலர்

பொருளடக்கம்

பிலவ சித்திரை 4

ஏப்ரல் 16, 1961

புத்தாண்டும் புது வாழ்வும்	(தலையங்கம்) ...	5
மனம் கவர்ந்த முனிவர்	... ...	9
பெரியாழ்வார் பாசுரம்	(சித்திர மடல்) ...	10
விக்கிரம தூதன்	ராஜாஜி ...	17
மணி பல்லவம்	நா. பா. ...	23
அவல் பாயசம்	கலி ...	34
கௌரவம்	ரஸவாதி ...	38
திருமூலர் தவமொழி	ராஜாஜி—சோமு ...	42
அன்பே ஆரமுதே!	தி. ஜானகிராமன் ...	47
நரி வேட்டை	விනு-ஜெயந்தி ...	62
காலத்தால்....	கோமதி சுவாமிநாதன்	68
கவியரங்கம்	... ...	78
பக்தி நெறி	ராஜாஜி ...	83
சொர்க்கத்தின் நிழல்	ஜெகசிற்பியன் ...	86
மெய்க் காதல்	சுந்தர ராமசாமி ...	98
அக்கரைச் சீமை	சோமு ...	109
படியளந்தான் மலை	பி.எஸ்.ராமையா...	116
திருமெய்யம்....	தொ. மு. பா. ...	125
வெள்ளம் வந்தது	அகிலன் ...	130
பட்டுப் பூச்சி (குறுநாவல்)	பொன்முடி ...	137



மிகப் பழங்கால முதலாகவே அமெரிக்கப் பூர்வீகக் குடிகள் புகையிலையைப் பரம் பொருளிடமிருந்து பெற்ற வரப்பிரசாதமாகப் போற்றித் தொழுததுண்டு. விசேஷச் சடங்குகளின்போது புகையிலையை யாகத் தீயிலிடுவதும், மழையற்ற வரட்சியின் போது பொடித்த புகையிலையைக் காற்றில் தூவிவிடுவதும், மீன்கள் கிடைக்காத போது கடலில் புகையிலைத் தூள்களை இறைப்பதும் அவர்களிடமிருந்த சம்பிரதாயம்.

புகையிலையின் வரலாறு... 2

GT.702 TM

Greens' Advtg

மலர் 20 | தமிழ்த்திரு நாடு தன்னைப் —பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 37

புத்தாண்டும் புதுவாழ்வும்

தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் பரவி வாழும் தமிழ் அன்பர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

புத்தாண்டில் பாரத மக்களின் இல்லங்களில் புது மகிழ்ச்சி பொங்கிப் பெருக வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

பிறக்கிற புத்தாண்டின் பெயர் 'பிலவ' என்பதாகும். பிலவ என்றால் குதித்து ஓடுவதைக் குறிக்கும் ஒரு சொல். இந்தப் பொருளை யொட்டி இன்று ஆளும் கட்சியிலிருப்பவர்கள், தவற்றுக்கு மேல் தவறு செய்துகொண்டு குதித்து ஓடுகிறார்கள்.

பிரதமர் நேரு உள்நாட்டு விஷயத்தில் எவ்வளவு குழப்பமான கொள்கைகளைக் கடைப்பிடித்து நாட்டு மக்களின் வாழ்க்கையைக் கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாக்கினாலும், வெளிநாட்டு விவகாரத்தில் அறிவுத் தெளிவும் சாமர்த்தியமும் திறமையும் கொண்டவர் என்று ராஜாஜி சொல்லிவந்தார். நேருஜியின் வெளிநாட்டுக் கொள்கையில் தவறு காண்பவர்களிடமெல்லாம், நேருஜிக்காகப் பரிந்து பேசிவந்தார். நேருஜியின் வெளிநாட்டுக் கொள்கை சரி என்று வாதாடி வந்தார். நேருஜி நமது வட எல்லையைக் காப்பாற்ற ருஷ்ய விமானங்கள் மட்டுமின்றி ருஷ்ய விமானிகளையும் பரிந்து அழைத்து நமது விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கிறார் என்று கேள்விப்பட்ட பிறகு, நேருஜியின் இந்தச் செய்கை வியப்பாக இருக்கிறது என்றும் நேருஜியைப் பற்றித் தாம் வைத்திருந்த மதிப்பு மிகத் தாழ்ந்து விட்டதாகவும் கூறினார் ராஜாஜி. மதுராந்தகத்தில் பதினாயிரம் பேர்கள் கூடியிருந்த பொதுக் கூட்டத்தில், ராஜாஜியே இப்படிக் கூறவேண்டுமென்றால், வெளி விவகாரம் எவ்வளவு மோசமான நிலைக்கு, ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்!

உள்நாட்டு விவகாரத்தில் நிலை எப்படியிருக்கிறது என்று பார்க்கலாம்.

சென்ற ஐந்து ஆண்டுகளாக ஏழை மக்கள் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களின் விலைகள் ஏறி வருகின்றன என்று கூக்குரலிட்டு வருகின்றனர். இவை போதாவென்று இந்த வருஷ பட்ஜெட்டில் ஏழை மக்களின் அன்றாட உபயோகத்துக்குரிய பொருள்களின்மீதும் இன்னும் பல பொருள்கள்மீதும் மறைமுக வரிகள் ஏராளமாக விதித்து விட்டார்கள். அதன் காரணமாக, எல்லாப் பண்டங்களின் விலைகளும் ஏகத்தாறாக உயர்ந்து விட்டன! "இதோ கட்டுப்படுத்துகிறோம். விலைவாசிகளை உயர விடமாட்டோம்" என்று வாய்ச் சொல்லில் வீரம் பேசுவதும் நிற்கவில்லை. விலைவாசிகள், இவர்களது வறட்டு வீரப்பேச்சுக்கு மசியாமல் உயர்ந்தது உயர்ந்தபடியே இருந்து வருகின்றன. இதைப்பற்றி இப்போது ஆளும் கட்சியினர் பேசும் பேச்சுத்தான் உலகில் எங்கும் கண்டும் கேட்டும் இராத அதிசயப் பேச்சாக இருக்கிறது.

புதுதில்லியில், நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் தலைமையில் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சி விலைவாசிகளின் உயர்வைப் பற்றி இரண்டு மணி நேரம் சுவையாக விவாதம் நடத்திவிட்டு, இதற்கெல்லாம் காரணம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமானபோது, திட்டத்தை ஆரம்பித்தால் இப்படி விலைவாசிகள் உயரும் என்று எதிர்பார்க்காததுதான் என்று பேசி முடித்திருக்கிறார்கள்.

பல்லாயிரங் கோடி ரூபாய்கள் அயல் நாடுகளில் கடன் வாங்கிய பணத்தையும், நாசிக் அச்சகத்துக் காகிதப் பணத்தையும் புழங்கவிட்டால் நாட்டில் விலைகள் ஏறும்

என்பது பொருளாதாரத்தில் அரிச்சுவடி வகுப்பிலிருக்கும் மாணவனுக்கும் தெரியும். ஆனால் இன்றைய ஆளும் வர்க்கத்தினர் அந்த அடிப்படை அறிவின்றித் திட்டம் வகுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட மகா மேதாவிகளைப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின், இனியும் பதவி வகிக்க அனுமதிக்கலாமா?

'சோஷலிஸம்' என்று ஒரு மோசப் பேச்சு வேறு ஓயாமல் பேசி வருகிறார்கள்— பணக்காரர்களை ஏழைகளாக்கி சமத்துவத்தை ஏற்படுத்தப் போவதாக! ஆனால் அவர்கள் கடைப்பிடிக்கும் சமத்துவம் என்னவென்பதைச் சென்ற வாரம் திருவல்லிக்கேணியில் ராஜாஜி பேசிய போது விளக்கினார்.

காந்தி மகான் உப்பு வரியை ரத்து செய்ய வேண்டும் என்று சத்தியாக்கிரகம் செய்தார். ஒருவன் பணக்காரன் என்பதற்காக உப்பை அதிகமாக உபயோகிப்பதில்லை. ஏழை என்பதற்காகக் குறைவாக உபயோகிப்பதில்லை. ஏழை பணக்காரன் எல்லாருமே சமமாகத்தான் உபயோகிக்கிறார்கள். ஆகவே உப்பின்மேல் வரி விதித்தால் ஏழை பணக்காரன் இருவருமே சமமாக வரி விதிக்கப்படுகிறார்கள். இது அநீதி, இந்த உப்பு வரி நீக்கப்படவேண்டுமென்று போராடினார்.

ஆனால், இன்று காந்திஜியின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள சர்க்கார், ஏழை மக்களும், பணக்காரர்களும் சமமாக உபயோகிக்கும் உணவுப் பண்டம் முதலியவற்றிற்குச் சமமாக வரி விதித்திருக்கிறார்கள்! இந்த மறைமுக வரிப் பண்டங்கள் எல்லாம் ஏழை பணக்காரர் என்ற பேதமின்றி உபயோகிக்கப்பட்டு வரும். அதனால் வரிப் பளு ஏழைகளுக்கு அதிகம் ஆகும். ஏழைகளால் இவ் வரிகள் தாங்கக்கூடியவையல்ல! பணக்காரர்களுக்கோ, கடுகளவு கனம் கூட இராது! இதுதான் ஏழைகளுக்கு நன்மை செய்யவே வந்துள்ள காங்கிரஸின் சோஷலிஸம்!

மொத்தத்தில் காங்கிரஸ் பல விதங்களில் மக்களை ஏமாற்றப் பார்க்கிறது. இதனைப் பாரத மக்கள் புரிந்து கொண்டு விழித்தெழவேண்டும். மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன! ஆனால் அது போதாது. நன்றாக விழித்துக்கொண்டு விட்டார்கள் என்பதனைப் பிலவ வருஷத்தில் காட்டவேண்டும்.

'பிலவ' வருஷம் குதித்து ஓடி முடிவதற்குள் இன்று பதவியிலிருக்கும் கட்சியை ஓட்டி விட்டு, நல்லதொரு புதிய கட்சியைப் பதவியிலிருத்த வேண்டும்.

மோதிலால் நேருவின் நூற்றாண்டு விழா

பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் தந்தையாரான பண்டித மோதிலால் நேருவின் நூறாவது பிறந்தநாள் சென்ற வாரம் 6-ம் தேதி புது தில்லியில் உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

பண்டித மோதிலால் நேரு பாரத நாட்டு விடுதலை இயக்கத்தில் முன்னணியில் நின்றவர். மிதவாதிகளின் முக்கியத் தலைவராக இருந்தார். காந்தி மகான் தேச விடுதலைக்காக மகத்தான தியாகங்கள் புரிய வேண்டும் என்று சொன்னபோது, அதற்குச் சற்றும் தயங்காது, தொழிலையும் செல்வத்தையும் துறந்து சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

பாரத நாட்டின் பெரிய வழக்கறிஞர் என்றும், பெரும் பணக்காரர் என்றும், மேற்கத்திய வாழ்க்கை முறையை மேற்கொண்டவர் என்றும் பெயர் எடுத்த அவர், காந்தி மகானின் இயக்கத்தில் சேர்ந்துவிட்டார் என்றதும் தேசம் அவருடைய தியாகத்தையும் துணிவையும் கண்டு அதிசயம் அடைந்தது. அதுவே தேசத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் தியாக வாழ்வு வாழத் துணிச்சல் அளித்தது. காந்தி மகான் தேச விடுதலையை வாங்கித் தருவார் என்பதை அவ்வளவு தெளிவாகக் கண்டார் மோதிலால் நேரு.

அவர் அந்நாட்களில் தில்லி சட்ட சபையில் ஆற்றிய பிரசங்கங்கள் மறக்க முடியாதவையாகும்.

மோதிலால் நேரு ஆசார அனுஷ்டானங்களைக் கைவிட்டவர் என்றாலும் அந்தரங்கத்தில் தெய்வபக்தி கொண்டவராக இருந்தார். அவர் மறையும்தறுவாயில் காயத்ரி மந்திரத்தை ஜபித்துக் கொண்டே உயிர் நீத்தார் என்று பிரதமர் கூறியதாக

டாக்டர் ராதாகிருஷ்ணன் அன்றைய கூட்டத்தில் தெரிவித்தார்.

மோதிலால் நேருவின் நூற்றாண்டு விழா ஏப்ரல் 6 ந் தேதியிலிருந்து மே 6ந் தேதி வரை கொண்டாடவும், அவர் பெயரால் ஞாபகார்த்தங்களும் நினைவுப் பரிசுகளும் ஏற்படுத்தவும் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் திரட்டவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

மோதிலால் நேருவின் ஞாபகார்த்த நிதிக்குப் பணம் அனுப்ப வேண்டிய விலாசம்: பொருளாளர், மோதிலால் நேரு நூற்றாண்டு விழாக் கமிட்டி, 69, பார்லிமெண்ட் ஹவுஸ், புதுதில்லி.

என்ன சேதி?

சித்தமல்லி அன்பர்கள்

தஞ்சை ஜில்லாவிலுள்ள சித்தமல்லி என்ற ஊரிலிருந்து சில அன்பர்கள் ஏப்ரல் 4 ந் தேதி ராஜாஜிக்கு எழுதிய கடிதத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்:

"ஒத்துழையாமை இயக்க காலம் முதல் மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நடந்த பலவேறு சுதந்திரப் போராட்டங்களில் இவ்வூர் பூரணமாகப் பங்கு கொண்டு செயல் புரிந்து வந்திருக்கிறது. கள்ளுக் கடை மறியல் காலத்தில் தங்களை இவ்வூருக்கு வரவேற்கும் பாக்கியம் பெற்றோம். சமீப காலத்தில் காங்கிரஸ் ஸ்தாபனத் தின்விபரீதப்போக்கு காரணமாகத்தாங்கள் சுதந்திரக் கட்சி நிறுவியதை இங்குள்ள நாங்கள் அனைவரும் மனப் பூர்வமாக வரவேற்கிறோம். சுதந்திரக்கட்சியில் இங்குள்ள தீவிர காங்கிரஸ்காரர்களாயிருந்த சுமார் 50 பேர் அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். தங்கள் அறிக்கையைக் கண்ணுற்று அடியிற் கையொப்பமிட்டுள்ள நாங்கள் எங்களாலான சிறு தொகையைத் தேர்தல் நிதிக்காகத் தங்கள் பெயருக்கு அனுப்பியுள்ளோம். மேலும் சுதந்திரக் கட்சியின் லட்சியம் பூர்த்தியாகும் நிலை ஏற்படத் தங்கள் தலைமையில் எங்களாலான சேவை புரியத் தயாரா யிருக்கிறோம். தாங்கள் நீண்ட காலம ஜீவித்திருந்து, நம நாடு அடைந்த பூரண சுதந்திரத்தின் பயனை மக்கள் அடைய அருளுமாறு சர்வவல்லமையுள்ள சுகவரனை வேண்டுகிறோம்."

கடலூர் மகாநாடு

சுதந்திரக் கட்சியின் தென்னார்க்காடு மாவட்ட மகாநாடு கடலூரில் வருகிற 16ம் தேதி சிறப்பாக நடக்க ஏற்பாடாகி வருகிறது. சுதந்திரக் கட்சித் தலைவர் ஆசார்ய ரங்கா, ஆந்திர சுதந்திரக் கட்சித் தலைவர் பி. ராமச்சந்திரா ரெட்டி, திரு சா. கணேசன் மற்றும் பலர் மகாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். அன்று மாலை நடக்கவிருக்கும் பொதுக் கூட்டத்தில் ராஜாஜி பேசுகிறார்.

சுதந்திர நிதி

(3—4—61 லிருந்து 8—4—61 வரை)

கே. ஆர். நாராயணன்	... 2	00
ரா. பாலகிருஷ்ணன்	... 1	00
ஸ்ரீமதி அலமேலு அம்மாள்	... 2	00
டி. பாஷ்யம் அய்யங்கார்	... 2	00
சிரஞ்சீவி சந்திரமௌளி	... 30	00
எஸ். எம். எம். பிள்ளை	... 10	00
ஏ. வி. வி. முதலியார்	... 2	00
பி. எல். ராஜாராம ஐயர்	... 1	00
ஒரு சம்சாரி	... 1	00
ஆர். கிருஷ்ணமூர்த்தி	... 2	00
சித்தமல்லி அன்பர்கள் :		
கே. கிருஷ்ணசாமி அய்யர்	... 3	00
டாக்டர் கே. கல்யாணராமன்	... 2	00
எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர்	... 3	00
கமலம்	... 2	00
எஸ். வி. ராமசாமி ஐயர்	... 2	00
சரஸ்வதி	... 2	00
எஸ். ஆர். லக்ஷ்மணன்	... 1	00
எஸ். வி. கல்யாணசுந்தரமய்யர்	... 5	00
எஸ். சாம்பசிவம்	... 3	00
ஞானம்பாள்	... 2	00
எஸ். வி. கோதண்டராமய்யர்	... 3	00
மங்களம்	... 2	00
எஸ். சேஷ அய்யர்	... 1	00
டி. எஸ். ராமமூர்த்தி ஐயர்	... 1	00
எஸ். வெங்கடராம வாத்தியார்	... 1	00
எஸ். அண்ணுசாமி அய்யங்கார்	... 1	00
ஜி. ராமசேஷய்யர்	... 1	00
எம். சீனிவாச வரதன்	... 10	00
கே. கண்ணன்	... 10	00
கடம் கோதண்டராமய்யர்	... 51	00
ஆர். ஆர். ராமமூர்த்தி	... 5	00
வி. எஸ். நாகசாமி	... 1	00
என். எஸ். சீனிவாசராவ்	... 1	00
வி. ஜானகிராம அய்யர்	... 1	00
யு. பி. வேணுகோபால்	... 1	00
டி. ஆராவமுதன்	... 5	00
10-1-61 முதல் 2-4-61 முடிய	3282	02
மொத்த வரவு	3455	02

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி C/O கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

CALCIUM CARBIDE

Guaranteed to Grade A
of the
ISI Specification

Manufactured by

INDUSTRIAL CHEMICALS LTD.

TALAYUTHU, TAMILNADU

SOLE DISTRIBUTORS

V. D. SWAMI & CO. (Private) LTD.

Offices at:

CALCUTTA - 2, Mangoe Lane
NEW DELHI - 10-A, Nizamuddin West
BOMBAY - Kasturi Buildings, Churchgate
MADRAS - 3/1, Cathedral Road

GET THE BEST - GET CALCIUM CARBIDE

ஞானத் தபோதனத்தை வழி வழியாக அளித்து வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதரிலிருந்து பல மகனீயர்கள் தோன்றி மக்களை நல்வழிப் படுத்தி யிருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டின் பின்பாதியில் நாற்ப தாண்டுகள் இவ்வாறு! அருட் செல்வத்தை வாரி வழங்கியவர்கள் ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகள்; பீடத்தின் அறுபத்தைந்தாவது ஆசாரியர்கள். தமது மனத்தை வசப்படுத்திக் கொண்டதோடு, பிறர் மனத்தையும் கவர்ந்திழுத்த 'பக்த மனோ வசங்கர'ராக இருந்திருக்கிறார் அந்த சங்கரகுரவர்.

பல தலைமுறைகளாகச் சமயம், அரசியல், சமூகசேவை, கலை யாவற்றிலும் அளவற்றஆற்றல் பெற்ற ஓர் அந்தணக் குடும்பம் திருவிடைமருதூரில் இருந்து வந்தது. இக்குலம் செய்த தவப்பயனாகப் பிறந்த 'மகாலிங்கம் பாலப் பருவத்திலேயே உடலாலும், உள்ளத்தாலும் அறிவாலும் உயர்ந்து விளங்கினார். ஐந்தாம் ஆண்டில் உபநயனம் செய்வித்தார்கள். பிரம்மசரிய நியமங்களை வழுவாது காத்து, தமது பதினேழாவது பிராயத்திலேயே கசடறக் கற்ற பண்டிதரானார் ஸ்ரீ மகாலிங்கம். இவரது புத்தி நுட்பமும், வித்தையிலுள்ள ஆர்வமும், ஆசாரமும், அன்பு இதயமும் அப்போது காமகோடி பீடாதிபதிகளாக விளங்கிய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் கவனத்தைக் கவர்ந்தன. அந்த மகான், ஸ்ரீ மகாலிங்கம் எவ்வளவோ செய்ய வல்லவர், செய்ய வந்தவர் என்பதை உணர்ந்தார். அவ்வளவுதான்! 1851-ம் ஆண்டு சந்நியாச ஆசிரமம் பெற்று காமகோடி பீடத்துக்கு அதிபதியானார் ஸ்ரீ மகாலிங்கம். புரிந்தும் புரியாத புதிராக, அருவுருவாக, மகாலிங்கமாக இருந்தவர் எங்கும் ஒளிபரப்பும் தேவராகி, மகா தேவேந்திர சரஸ்வதிகளாகி, நல்லறம் தழைக்கச் செய்தார். பூரி ஜகந்நாத க்ஷேத்திரத்திலிருந்து இராமேசுவரம் வரையில் திக்விஜயம் செய்தார். விஜய நகரத்தின் மன்னர் ஆனந்த கஜபதி இச்துறவி வேந்தரை யானைமீதமர்த்தி ஊர்வலம் நடத்தி, தாமே சாமரம் வீசினார். பொப்பிலி, பித்தாபுரம், வேங்கடகிரி, காளஹஸ்தி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் முதலிய ராஜ்யங்களின் மன்னர்களெல்லாம் சுவாமிகளுக்குச் சேவைசெய்து பேறுபெற்றனர். மக்களும் அவரது தெய்வத் திருவுருவிலும், தவத் திருமொழிகளிலும், அவர் மனம் குளிந்துபுரியும் வழிபாட்டிலும் உள்ளுருகிப் போனார்கள். அவரது ஆதரவின் கீழ் அநேக அறப்பணிகள் நடைபெற்றன.

அந்த நாளில் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கூடமாகவும் விளங்கியது ஸ்ரீமடம். பஞ்சாங்க கணன முறையில் இரு சாராருக்கிடையே விருந்த சர்ச்சை ஸ்ரீ சுவாமிகளின் முன்னரே விவாதிக்கப்பட்டது. 'கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம்' தோன்றியது இதன் பின்பே.

சிவ மகிமையைக் கேட்டுக் கேட்டு மகிழ்வதிலும், சற்றும் குறைவின்றி ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத சந்திரமௌளீசுவரரைப் பூஜிப்பதிலும் சுவாமிகளுக்கு அளவற்ற ஈடுபாடு.

தாம் உலகில் செய்ய வேண்டியதெல்லாம் செய்தாயிற்றெனக் கண்டார் சுவாமிகள். இளையாற்றங்குடியில் கைலாஸநாதர் ஆலயத்திலரிடமிருந்து ஒரு நாள் அவர் வட்புதராயிருந்த ஓரிடத்தைத் தமக்கெனக் கேட்டபோது அதன் பொருள் யாருக்கும் புரியவில்லை. பங்குனி மாதப் பிரதோஷத்தன்று, தாம் 'செல்வ'மாகக் கருதி வளர்த்த வில்வமரத்தின் தளத்தினால் ஈசனை அர்ச்சித்த அவர், 'இத்தளத்தினால் பூஜிக்கும் பாக்கியம் இனி இல்லை' என்று கூறியபோது அவர் கருத்து ஒருவாறு புலப்பட்டது. அன்றிரவு அவர் வியக்தமாகவே கூறி விட்டார்: 'வந்த காரியம் ஆகிவிட்டது. அம்பாள் மந்தஹாஸத்துடன் இரண்டு கைகளையும் நீட்டி அழைக்கிறாள்' என்று. மறுநாள் காலையில் தடாகத்தின் கரையில் கிழக்கு முகமாக வீற்று, தியானித்தபடியே பரம் பொருளில் கரைந்து போனார். அவர் தேர்ந்தெடுத்த இடத்திலேயே அவருக்கு ஆலயம் எழும்பியது. இறுதி மூச்சுவரை இறைவனே நினைவாக இருந்த அந்த மகா புருஷரின் எழுபத்தியோராவது ஆராதனை இந்தப் பங்குனி அமாவாசையன்று இளையாற்றங்குடியிலுள்ள அவரது அதிஷ்டானத்தில் நடைபெற்றபோது பக்தி வெள்ளம் ததும்பியது. ஸ்ரீ காமகோடி பீடத்தின் வழிவந்த இரு தவச் செல்வர்களின் வருகையால் அப்போது அத்தலம் மேலும் புனிதமடைந்தது.

முடியொன்றி மூவுலகங்களும் ஆண்டு உன்
அடியேற்கு அருளென்று அவன்பின் தொடர்ந்த
படியில் குணத்துப் பரதநம்பிக்கு அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப்பற!
அயோத்தியர் கோமானைப் பாடிப்பற!

காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடம்செய்து
மீள அவனுக்கு அருள்செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப்பற
தூமணி வண்ணனைப் பாடிப்பற!

மாயச் சகடம் உதைத்து மருது இறுத்து
ஆயர்களோடு போய் ஆநிரை காத்து அணி
வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப்பற
ஆநிரை மேய்த்தானைப் பாடிப்பற!

காரார் அணை த்தி இலங்கை புக்கு
ஓராதான் ன்முடி ஒ தோடு ஒன்றையும்
நேரா அ தம்பிக்கே ளரசு ஈந்த
ஆரா அழ னப் பாடி
அயோ தியர் கோ நந் பாடிப்பற

மணியம்

வெளிவந்து விட்டது...

புது வருடப் பிறப்பன்று

'கல்கி'யில் வெளிவந்து பல்லாயிரக்கணக்கான
வாசகர்களின் பாராட்டுக்களைப் பெற்ற

அகிலன் எழுதிய சரித்திர நாவல்

வேங்கையின் மைந்தன்

விலை ரூ. 12-50

பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 13-50 முன் பணம் (M. O.) அனுப்பவும்

பழனி பிரசுரம்

3, பைகிராப்ட்ஸ் ரோடு. திருவல்லிக்கேணி, சென்னை - 5

இலங்கையில் கிடைக்குமிடங்கள் —

1. திரு டி. தம்பித் துரை, 226, ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம்
2. திரு ராமு நாகலிங்கம், 14, திரிகோண மலைத்தெரு, கண்டி

திருவாவடுதுறை ஆதீனம்

மாயூரம் ஸ்ரீ அபயப்பிரதாம்பிகா, சமேத

ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயில்

அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேகம்

பிலவ வருஷம் சித்திரை மாதம் 16-ந் தேதி 28-4-1961
வெள்ளிக்கிழமை காலை மணி 7-28க்கு மேல் 8-52க்குள்
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும்

விக்கிரம தூதன்

மீஞ்சூர் நாராயணசாமி (வயது 25) பள்ளிக்கூடத்தில் இருக்கும் போதே, தான் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டவன். சென்னையில் பல மாதங்கள் அலைந்தும் யாரும் அவனை எடுத்துக் கொள்ளவில்லை யென்று தானே ஒரு சின்ன அச்சுக் கூடம் வாங்கி அவனே பத்திரிகை ஆரம்பித்து விட்டான். தகப்பனார் இறந்து விட்டபோது விட்டுப் போன ஒரு நிலம். அதை விற்றுவிட்டு எடுத்த பணத்தை இந்த அச்சுக்கூடத்தில் போட்டான்.

தாயார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். "வேண்டாம் இந்த வியாபாரம். நல்ல நிலத்தை, அதிலும் பிதுரார்ஜித நிலத்தை யாராவது விற்பார்களா? பணம் எத்தனை நாட்கள் சாசுவதம்? நிலம் அல்லவோ ஸ்திரம். என்னவோ பைத்தியக்கார வேலையில் இறங்குகிறாயே?" என்று துயரப்பட்டுச் சொல்லிப் பார்த்தாள். நாராயணசாமி கேட்கவில்லை. அவனுக்கு இருந்த ஆசையும், பத்திரிகை உலகத்தில் தான் வானளாவப் புகழ் பெற்று, புகழுடன் பணமும் சம்பாதித்து விடலாம் என்று அவனுக்கு இருந்த நம்பிக்கையும் தாயாருக்குத் தெரியாது.

வேலைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முடித்துக் கொண்டு பெரிய ஒரு திறப்பு விழாவும் ஏற்பாடு செய்தான். ஊர்வலம், சங்கீதக் கச்சேரி எல்லாம் வெகு தடபுடலாக நடந்தன. "விக்கிரம தூதன்" ஆரம்பமாகி விட்டது.

ஊரில் எங்கேயும் விக்கிரம தூதனைப் பற்றித்தான் பேச்சு. ஆசிரியர் நாராயணசாமி என்பதுகூட யாருக்கும் அவ்வளவாகத் தெரியாது. விக்கிரம தூதன் என்கிற பெயர் ஜனங்களின் மனத்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தைக் கவ்விற்று. "இந்த வாரத்து விக்ரமதூதன் என்ன சொல்லுகிறான்?" "விக்கிரம தூதனில் எழுதியிருக்கும் கட்டுரையைப் படித்தாயா?" என்று எந்த வீட்டுத் திண்ணையிலும் பேச்சு.

ஆறு மாதங்களுக்குள் விக்கிரம தூதன் திருச்சிறுப்பள்ளி மக்களிடையே பெரியதொரு சக்தியாக வளர்ந்துவிட்டது.

* * *

புது வருஷப் பிறப்பு மலருக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தான் மீஞ்சூர் நாராயணசாமி. தாயாருங்கூட அவனுடைய ஆட்சேபணையும் கவலையும் தீர்ந்து பையனுக்கு ஏற்பட்ட புகழையும் செல்வாக்கையும் பார்த்து சந்தோஷப்பட்டாள். நிலம் போனதைப் பற்றித் துக்கப்பட்டதை அவள் மறந்துவிட்டாள். சர்க்கார் நிலங்களைப் பற்றி என்னென்னவோ சட்டங்கள் செய்து வருவதைப் பார்த்து, விற்று விட்டதே நல்லது என்றும் எண்ணினாள்.

ஒரு நாள் நாராயணசாமி கையில் ஒரு கடிதம். படித்தவாக்காக மேஜை மேல் கையும் கையின் மேல் தலையுமாக ஏதோ கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தான்.

கடிதம்:

ஐயா, பத்திராதிபரே! உமக்குக் கர்வம் அதிகமாகப் போய்விட்டது. போன வாரத்து இதழில் ஏதோ ஒரு சிறுகதை எழுதியிருந்தீரே! அதில் சலவைத் தொழிலாளர்களைப் பற்றிக் கேவலமாக எழுதியிருக்கிறீர். கதையில் ஏதேதோ எழுதி மக்களை ஏமாற்றலாம். ஆனால் 'வண்ணான் திருமலை வெளுக்கக் கொடுத்த சொக்காயைத் தோய்க்கும்போது கிழித்துவிட்டு அதை மூடி மடித்துக் கொண்டு வந்து தந்தான்' என்று எழுதியிருக்கிறீர்கள். இது சலவைக்காரர்களையெல்லாம் அவதூறு செய்வதாகும். எங்களுடைய சங்கத்தில் இதைப் பற்றியே இந்த வாரம் பேசிக் கண்டனம் செய்தோம். எங்கள் வகுப்பினர் எல்லாம் விக்கிரமதூதனை நிறுத்திவிட்டோம். — இப்படிக்கு, சலவை சாமியப்பன்.

* * *

மறு நாள் மற்றொரு கடிதம் வந்தது. மீஞ்சூர் நாராயணசாமியின் முகம் இன்னும் வாட ஆரம்பித்தது. முன்னிருந்த களை இப்போது இல்லவே இல்லை.

ஐயா,

உங்கள் பத்திரிகை இவ்வளவு நாட்கள் நன்றாகத்தான் நடைபெற்று வந்தது. ஆனால் இந்த வாரம் வந்த இதழ் வெகு மோசம். நாடார்கள் மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்? ஒரு பிராமணப் பையனை வைத்து அந்தக் "காணாத பேனாக் கத்தி" கதையை எழுதலாகாதா? நாடார் ஜாதியை அவமதிக்க வேண்டுமென்றே கதையை எழுதியிருக்கிறீர்கள். இது யாருடைய தூண்டுத



தேய்ந்த மோட்டார் உருப்புகளை வீணாக்க வேண்டாம்!

எத்தனையோ தேய்ந்துபோன மோட்டார் உருப்புகளை டிவிஎஸ் புதுப்பித்திருக்கிறது. அவை புத்துயிர் பெற்று, நன்கு உழைக்கின்றன. ஆனால், சிலர் தேய்ந்து போன உருப்புகளை குப்பையில் எறிந்து விடுகிறார்கள். மிக நுணுக்கமான நவீன யந்திரங்களையும், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களையும் கொண்டு டிவிஎஸ் புதுப்பிக்கும் வேலையை செய்கிறது. உருக்கிய உலோகத்தை, தேய்ந்துபோன உருப்புகளின்மீது தெளித்து, உற்பத்தியாளர்கள் நிர்ணயித்த அளவுக்கே அதனைக் கடைசல் பிடிக்கிறார்கள். புதுப்பிக்கப்பெற்ற உருப்புகள் புது உருப்புகளைப்போலவே இருக்கின்றன. ஆனால் விலையோ பாதிக்கும் குறைவு; எனினும் புது உருப்புகளைப் போலவே நீண்டநாள் உழைக்கக்கூடியவை. புதிய மோட்டார் உருப்புகளின் இறக்குமதி மிகமிகக் குறைவு.

நீங்கள் உபயோகமற்றவை என்று கருதும் மோட்டார் உருப்புகளை குப்பையில் எறிய வேண்டாம். மீண்டும் உழைக்க அவற்றை டிவிஎஸ் புதுப்பிக்கட்டும்.

கீழ்க்காணும் மோட்டார் உருப்புகளை டி. வி. எஸ். புதுப்பிக்கிறது:

தேய்ந்துபோன "ஹப்"
தேய்ந்துபோன "பிரஷர் ப்ளேட்"
தேய்ந்து போன "புரொபெல்லர் ஷாப்ட்"
துருப்பிடித்து நசித்த அலுமினியம் "சிலிண்டர் ஹெட்"

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
கிளைகள்: திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை
சேலம் - கோயமுத்தூர்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் - பெங்களூர் - செகந்திராபாத் (டெக்கான்)

JWT-TVS-RC 1047a

இல்லாளின்
சலவை வேலைகளுக்கு கைகண்டது...
காவேரி பார்
CAUVERY BAR SOAP
உங்கள் ஆடைகளை சுத்தமாகவும், சுலபமாகவும், சலவை செய்ய மிகவும் இன்றியமையாதது காவேரி பார் சோப். இந்த சோப்பினின்று உடனடியாக ஏற்படும் நுரைகள் ஆடைகளின் அழுக்கை சில நிமிடங்களில் அறவே அகற்றி, வெள்ளை ஆடைகளை தூய வெண்மையாகவும், வண்ண ஆடைகளை மேலும் பிரகாசமாகவும் செய்ய உதவுகிறது.
தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜெண்டஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

லின்மேல் இப்படி எழுதியிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாடார் குலத்தில் யாரும் இனி உங்கள் பத்திரிகையை வாங்க மாட்டார்கள். நேற்று மாலை கடைத் தெருவில் விக்கிரமதூதனைத் தீ வைத்துக் கொளுத்தினோம். அறியவும் — காமாட்சி நாடார்.

மற்றொரு கடிதமும் வந்தது:

பத்திராதிபரே! பேனாக் கத்திக் கதை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் சப் – இன்ஸ்பெக்டர் ரஜாகான் லஞ்சம் வாங்கியதாகக் கதையில் கோத்திருக்கிறீரே. இது சுத்த அக்கிரமம். உமக்கு முஸல்மான்தான் சிக்கினானா லஞ்சம் வாங்கிய கதை எழுத? லஞ்சம் எல்லா ஜாதியாரிலும் உண்டல்லவா? முதலியாராவது ஏன் ஐயராவது லஞ்சம் வாங்கி யிருக்கக் கூடாதா? இது வேணுமென்று எங்கள் இஸ்லாத்து ஜாதியாரை அவமானப்படுத்தி எழுதியிருக்கிறீர். ஜாக்கிரதை. இந்த நகரத்தில் இன்னும் முஸல்மான்களின் செல்வாக்கும் பலமும் அழிந்து போகவில்லை. அல்லாஹு அக்பர் — சத்தியப்பிரியன்.

• • •

இந்தப் பத்திரிகைத் தொழில் வேண்டாம் என்றும் அச்சகத்தை "ஜாப்" வேலைக்கு மட்டும் பயன்படுத்தி ஜீவனம் நடத்துவதாகவும் முடிவு செய்து விட்டான் நாராயணசாமி. தாயார் மங்களம்மாளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "யாரோ என்னவோ சொன்னதற்காக பயந்து போவதா?" என்றாள்.

"உனக்குத் தெரியாது, அம்மா! இது ஜனநாயகம். இந்தப் பத்திரிகைத் தொழில் அபாயம்" என்றான் நாராயணசாமி.

"எந்தத் தொழிலும் அப்படித்தான், குழந்தாய்! தைரியம் இருந்தால்தான் பிழைக்கலாம்" என்றாள் மங்களம்மாள்.

மதுரைக் கோவில் சித்திர சபையில் காணப்படும் சிற்பத்தில் அன்னத்திலமர்ந்த இரதியை மட்டும்தான் காணலாம். ஆனால் ஓவியர் மணியம், அட்டைச் சித்திரத்தில் சிற்பத்துக்கு வண்ணம் தீட்டும் சைத்திரிகனையும், அவன் சிந்தைக்கு வண்ணம் தரும் மண்ணுலகத்து இரதியையும் சேர்த்துப் படைத்திருக்கிறார். அன்னத்தின் மேலமர்ந்திருக்கும் மின்னற்கொடியின் சிற்பத்துக்கு வண்ணம் தீட்டுகிறான் அவன். சிற்பத்தில் வீற்றிருக்கும் இரதியைப் போலவே அவன் சிந்தையில் இடம் கொண்ட இரதி எதிரே வண்ணப் பேழைகளைத் தாங்கி நிற்கிறாள். இவ்வளவு அழகான சிற்பம் எங்கேயிருக்கிறதென்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் 'சித்திர[illegible] ஆயிரக்கால் மண்டபத்தில்தான் இ[illegible] அற்புதமான இரதி சிற்பம் இருக்கிற[illegible] படத்தில் காணப்படும் இ[illegible]தைப்போல் பல்லாயிரம் [illegible] சித்திரங்களும், கலையெழில்களும் மிகுந்த மீனாட்சி கோவிலில் இப்போது திருப்பணி [illegible] நடந்துகொண் டிருக்கிறது. தமிழ்நாட்டின் கலைச்செல்வமான இந்தக்கோவிலில் கோபுரங்களையும், பிற பகுதிகளையும் செப்பனிடப் போகிறார்கள். நமது கலைச் செல்வங்களைக் காப்பாற்ற வேண்டுமென்னும் ஆர்வமுள்ள பெருமக்களும், பக்தர்களும் இத்திருப்பணிக்குத் தங்களாலியன்ற நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோருகிறோம். 'திருப்பணி கமிட்டி—மீனாட்சி கோவில்—மதுரை' — என்ற முகவரிக்குப் போதும் போதுமென்கிற அளவு உதவிகளை அனுப்பிப் பெருமை கொள்ளுமாறு தெய்வ பக்தி மிகுந்த தமிழ்மக்களை வேண்டுகிறோம்.

சித்திரசபைச் சித்திரம்


ACOSTO
அகாஸ்டோ
ஒரே
சீராக அமைந்த
அகௌஸ்டிகல்
போர்டு . . .
...நீங்கள் விரும்பும் போர்டு
சுந்தரதாஸ் டிரேடிங் & மானுபாக்சரிங் கோ.
இன்ராஜ்மேன்ஷன்
150-A, மவுண்ட்ரோடு (போன் : 84979) சென்னை-2

மணிபல்லவம்

நா. பார்த்தசாரதி

வினு

இதுவரை மலர்ந்தது

காவிரிப்பூம் பட்டினத்தில் சக்கரவாளக் கோட்டத்து முனிவர் ஒருவரால் வளர்க்கப்பட்ட அறிவும், அழகும், வீரமும் பொருந்திய இளங்குமரன் என்னும் இளைஞன் தன் பெற்றோரைப் பற்றி அறிந்து கொள்ளத் தவிக்கிறான். தன் பிறப்பில் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது அவனுக்கு.

அந்த ஆண்டு இந்திர விழாவின் முதல் நாள் பூம்புகார்க் கடற்கரையில் ஒரு மல்லனை வெற்றி கொண்டு புகழடைந்த இளங்குமரனுக்குப் பட்டினப்பாக்கத்துப் பெருஞ்செல்வர் வீட்டுப் பெண் சுரமஞ்சரி மணிமாலை பரிசளிக்க முன் வருகிறாள். இளங்குமரன் அதை மறுத்து விடுகிறான். தன் பெரும் பரிசை அவன் ஏற்க மறுத்தும்கூட அவன்மேல் சுரமஞ்சரிக்கு அன்பு ஏற்படுகிறது.

அதே நாளிரவில் சம்பாபதி கோவில் பின்புறமுள்ள நாவல் மரத்தடிக்கு வந்தால் இளங்குமரனுக்கு அவன் அன்னையை அங்கே காண்பிப்பதாக அவனை வளர்த்த முனிவர் கூறியிருந்தார்.

தன் தாயைக் காணும் ஆவலோடு சம்பாபதி வனம் சென்ற இளங்குமரனைச் சிலர் வழிமறித்துத் தாக்குகிறார்கள். 'நீயோ, உன்னை வளர்த்த முனிவரோ உன் தாயைப் பற்றி அறிந்து கொள்ள முயன்றால் மறுநாள் பிணமாகக் கிடப்பீர்கள்' — என்று எச்சரிக்கையும் செய்கிறார்கள். அதன்பின் சம்பாபதி வனத்துப் புதரில் தாக்கப்பெற்று மயங்கிக் கிடந்த முனிவரைத் தன் நண்பன் கதக்கண்ணனின் வீட்டுக்கு எடுத்துச் செல்கிறான் இளங்குமரன். கதக்கண்ணனின் தங்கை முல்லை இளங்குமரனுக்கும் முனிவருக்கும் வேண்டிய உதவிகள் செய்கிறாள். தன் தாயைப் பற்றி முனிவரிடம் மீண்டும் தூண்டிக் கேட்கிறான் இளங்குமரன். முனிவர் மறுத்து விடுகிறார்.

மறுநாள் காலையில் முனிவருக்குத் துணையாகக் கதக்கண்ணனின் தந்தை வீரசோழிய வளநாடுடையாரை வைத்துவிட்டு இளங்குமரனின் துணையோடு நாளங்காடிப் பூதசதுக்கத்துக்குப் படையலிடச் செல்கிறாள் முல்லை. அவளைப் பூத சதுக்கத்துக்குள் அனுப்பிவிட்டு வெளியே நின்ற இளங்குமரனை ஓவியன் மணிமார்பன் வந்து சந்திக்கிறான். 'உங்களைப் போல் ஓவியம் வரைந்து கொண்டு வந்து அளித்தால் சுரமஞ்சரி நூறு பொற்கழஞ்சுகள் பரிசளிப்பதாக'க் கூறியிருக்கிறாளென்று சொல்கிறான் ஓவியன்.

அந்த ஏழை ஓவியனுக்கு உதவுவதற்காக இளங்குமரன் இணங்குகிறான். அப்போது கடற்கரையில் இளங்குமரனால் தோல்வியுற்ற யவன மல்லனைச் சேர்ந்தவர்கள் அவனைத் தாக்க வருகிறார்கள். ஆனால் சுரமஞ்சரி அங்குவந்து இளங்குமரனைக் காப்பாற்றுகிறாள். அவளால் தான் காப்பாற்றப்பட்டதை இளங்குமரன் விரும்பவில்லை.

தன் மாளிகையில் வந்து ஓவியத்தை முழுமையாக்கித் தருமாறு ஓவியனையும், இளங்குமரனையும் அழைக்கிறாள் சுரமஞ்சரி. இளங்குமரன் விருப்பமின்றி இசைகிறான்.

அவன் சென்று விட்டானென்பதை அறிந்த முல்லை, ஏமாற்றத்துடன் தனியாகத் தன் இல்லத்துக்குத் திரும்புகிறாள். அவள் தந்தை 'அருட்செல்வ முனிவர் சொல்லிக் கொள்ளாமல் இங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டார் மகளே' என்று பெண்ணிடம் தெரிவிக்கிறார். ஒருவேளை முனிவர் தமது தவச்சாலைக்கே சென்றிருக்கலாமோ என்று நினைத்து அங்கே செல்கிறார் வீரசோழிய வளநாடுடையார்.

அங்கே தவச்சாலைக்கு யாரோ தீயிடுவதைக் காண்கிறார். தீயிட்டவர்கள் தீயை அணைக்க முடியாமல் அவரைத் தடுத்ததோடன்றித் தப்பியும் விடுகிறார்கள். தவச்சாலைக்குள் முனிவரும் தீயில் அகப்பட்டுக் கொண்டுவிட்டாரோ என்று அஞ்சுகிறார் வளநாடுடையார். அப்போது அப்பகுதியில் சுற்றிநம் இருந்தவர்களால் துரத்தப்பட்டு ஓடிய வளநாடுடையார் அருட்செல்வ முனிவரையே வழியில் மறைவிடத்தில் சந்தித்துத் திகைப்படைகிறார். அப்போது முனிவர் வளநாடுடையாரிடம், "நான்

மெய்யாகவே தீயில் வெந்து மடிந்ததாக இளங்குமரன் உள்பட உலகம் நினைக்கும்படி செய்ய வேண்டும். இன்றிரவு நான் மணிபல்லவத் தீவுக்குப் புறப்படுகிறேன். அவசியமானால் அடுத்த புத்த பௌர்ணமி வைகாசி விசாகத்தன்று உங்களையும் இளங்குமரனையும் மணிபல்லவத் தீவுக்கு வரவழைத்துச் சில பெரிய உண்மைகளைத் தெரிவிப்பேன்'' என்று கூறி, சத்தியமும் வாங்கிக் கொள்கிறார்.

சுரமஞ்சரியும் அவள்சகோதரி வானவல்லியும் இரட்டைப் பிறவிகள். பட்டினப்பாக்கத்து மாளிகையில்



பெர்க்கின்ஸ்

நிச்சயமான
திறமைக்கு



பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜினை இயக்குபவர் ஒவ்வொருவரும் திருப்தியுடன் முறுவல் பூப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதில் வியப்பே இல்லை! பெர்க்கின்ஸ் டீஸல்கள் கடும் உழைப்பினால் சிறந்த திறமைக்குப் புகழ்பெற்றவை.

சிக்கனம், நம்பகம், நீடித்த உழைப்பு, தேய்வுக் குறைவு, சுலபமான சமாளிப்பு இப்படி டீஸல் சக்திக்குரிய வசதிகள் யாவும் சேர்ந்து, **மிகக் குறைந்த செலவில், மிகப் பெரிய பயனை** பெர்க்கின்ஸ் டீஸல்கள் அளிக்கின்றன.

Perkins HIGH QUALITY DIESELS

இந்தியாவில் தயாரிப்பவர்கள் :

Simpson & Co. Ltd

சென்னை - 2

S-316 கிளைகள் : உதகமண்டலம், பெங்களூர், திருச்சிராப்பள்ளி, செகந்திராபாத் (டெக்கான்)

ஓவியம் எழுதி முடித்ததும், கரமஞ்சரியின் தந்தையை இளங்குமரன் சந்திக்க நேரிடுகிறது. அவன் அங்கிருந்து வெளியேறும்போது ஒற்றைக் கண் மனிதன் ஒருவனும் கரமஞ்சரியின் தோழி வசந்தமாலையும் அவனைப் பின்தொடர்கிறார்கள்.

மணிமார்பன் வரைந்தளித்த இளங்குமரனின் ஓவியத்தைத் தனது சித்திரசாலையில் வைத்து அழகு பார்க்கிறாள் கரமஞ்சரி. அவள் விடையளித்து அனுப்பிய ஓவியனை அங்கிருந்து வெளியேற விடாமல் அவளுடைய தந்தை தடுத்து வைத்துக் கொள்கிறார். கரமஞ்சரி இல்லாதபோது அவளுடைய அனுமதியின்றி ஓவியனும் அவள் தந்தையாரும் சித்திரசாலையில் புகுந்து இளங்குமரனின் ஓவியத்தில் ஏதோ மாறுதல் செய்கிறார்கள். அப்போது அங்கே வந்த கரமஞ்சரியும் அதைப் பார்த்து விடுகிறாள். அவள் மனத்தில் தன் தந்தையாரைப் பற்றியே பல சந்தேகங்கள் உண்டாகின்றன.

அவள் அன்றிரவு தான் அவசரமாக இளங்குமரனைச் சந்திக்க விரும்புவதாய் ஒரு மடல் எழுதி ஓவியனிடமே அதைக் கொடுத்து அனுப்புகிறாள். நீலநாகர் படைக்கலச்சாலையில் இளங்குமரனைச் சந்தித்துச் கரமஞ்சரியின் மடலைக் கொடுக்கிறான் மணிமார்பன். இளங்குமரன் அந்த மடலை அலட்சியம் செய்கிறான்.

அவமானமடைந்து தனியாக நள்ளிரவில் கரமஞ்சரியின் மாளிகைக்குத் திரும்பிச் சென்ற மணிமார்பனை நகைவேழம்பர் எதிர்கொண்டு அச்சுறுத்துகிறார். இனி தொடரலாம்.

27 தேர் திரும்பி வந்தது!

பாதாள அறையில் கூண்டினுள் இருந்த புலிகள் பயங்கரமாக உறுமின. நகைவேழம்பர் வளையத்தில் பாதங்களை நுழைத்துத் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தார். ஓவியன் தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சூழ்நிலையும், நேரமும் பொருத்தமாயிருந்தன. கள்ளிச் செடியைப் பிடுங்கி எறியலாம் என்று கைகளால் தீண்டினாலும் அதன் நச்சுப்பால் கைகளில் படுவதுபோல் கெட்டவர்களோடு பழக நேரிடும்போதே கெட்ட காரியங்களைச் செய்யும் விருப்பமில்லையாயினும் அவற்றைச் செய்வதற்குரிய வழிகள் மனத்தில் நெருங்கித் தோன்றுகின்றன. அப்பாவியான ஓவியன் மணிமார்பனுக்கும் நகைவேழம்பர் போன்ற கொடுமையே உருவான ஒருவர் அருகில் இருந்ததனாலோ என்னவோ தானும் கொடுமையாக ஏதாவது செய்து பார்க்கலாமா என்ற நினைப்பு உண்டாயிற்று.

ஆனால் அவன் இப்படி நினைத்துக் கொண்டிருந்த போதே, நகைவேழம்பர் வளையத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு இறங்கி வந்துவிட்டார். அவர் இறங்கி அருகில் வந்து அவன் கையிலிருந்த தீப்பந்தத்தை வாங்கிக் கொண்டதும், அவனைக் கேட்ட முதல் கேள்வி தூக்கிவாரிப் போடச் செய்தது.

"சற்று முன் நான் வளையத்தில் தொங்கிக் கொண்டிருந்தபோது மேலே ஓடிப்போய்ப் புலிக் கூண்டுகளின் கதவைத் திறந்து விடலாமென்று நினைத்தாய் அல்லவா?"

"அப்படி ஒருபோதும் நான் நினைக்கவில்லையே, ஐயா!"

"புளுகாதே! நீ நினைத்தாய். எனக்குத் தெரியும். இன்னும் சிறிது நேரம் நான் வளையத்தில் தொங்கியிருந்தால் நீ நினைத்ததைச் செய்யும் துணிவு கூட உனக்கு உண்டாகியிருக்கும்."

"இல்லவே இல்லை..." என்று சிரித்து மழுப்ப முயன்றான் ஓவியன். நகைவேழம்பர் ஒற்றை விழி அகன்று விரியக் குரூரமாகச் சிரித்தார். "நீ என்னை ஏமாற்ற முடியாது தம்பீ! என் போன்றவர்களுக்குப் பிறருடைய மனத்தில் என்னென்ன நல்லெண்ணங்கள் தோன்றுகின்றன என்பதை அநுமானம் செய்ய முடியாவிட்டாலும் என்னென்ன கெட்ட எண்ணங்கள் தோன்ற இயலும் என்பதை அநுமானம் செய்ய முடியும். நீ சோழ நாட்டுத் தண்ணீரை மட்டும்தான் குடித்திருக்கிறாய், தம்பீ! ஆனால்நான் எத்தனை எத்தனையோ தேசங்களின் தண்ணீரைக் குடித்திருக்கிறேன். நீ வண்ணங்களில் உருவாகும் அழகான சித்திரங்களோடுமட்டுமே பழகியிருக்கிறாய். நானோ அழகும், அசிங்கமும், நல்லதும், கெட்டதும், சூழ்ச்சியும், சூதும் நிறைந்த எண்ணற்ற மனிதப் பயல்களோடு பழகியிருக்கிறேன். என்னைப் போல் பலருடைய வெறுப்புக்கு ஆளாகிய ஒருவன் இப்படிப் புலிக் கூண்டுகளின் இடையே உயிரையும், மரணத்தையும் அருகருகே வைத்துக் கொண்டு சோதனை செய்வது போல் தொங்கியபோது உன்னைப்போல் என்னைப் பிடிக்காத ஒருவனுடைய மனத்

தில் என்ன நினைவு எழும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நான் மூடனில்லை.''

தன் மனத்தில் தோன்றியதை அவர் கண்டு பிடித்துச் சொல்லி விட்டாரே என்று தலைகுனிந்தான் மணிமார்பன்.

''ஒழுங்காக நடந்து கொள்ளா விட்டால் நீயும் ஒருநாள் இங்கே தலை கீழாகத் தொங்குவாய். இந்தக் கொடும் புலிகளுக்கு இரையாவாய்'' என்று கூறிய வாறே ஓவியனை இழுத்துக் கொண்டு மேலே படியேறினார் நகைவேழம்பர்.

படிகளில் ஏறி மேலே வந்தவுடன், நகைவேழம்பர் அவனைத் திகைக்க வைக்கும் மற்றொரு கேள்வியையும் கேட்டார்.

''தம்பீ! நானும் நீ வந்ததிலிருந்து கவனிக்கிறேன். உன்னிடம் தாழம்பூ மணம் கமழ்கிறதே? இத்தனை வயது வந்த இளைஞனாகிய பின்பும் பூ வைத்துக் கொள்ளும் ஆசை இருக்கிறதா உனக்கு?'' என்று கூறிச் சிரித்துக் கொண்டே மணிமார்பனின் இடுப்புக் கச்சையிலிருந்து வாள் நுனிபோல் சிறிதளவு வெளியே தெரிந்த வெண்தாழை மடலை உற்றுப் பார்த்தார் நகைவேழம்பர்.

''ஐயோ! இதையும் இந்தப் பாவி மனிதர் பார்த்து விட்டாரே'' என்று உள்ளம் பதறி நின்றான் மணிமார்பன்.

''ஒன்றுமில்லை, ஐயா...மணத்துக்காக எடுத்துச்சொருகிக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறித் தப்ப முயன்றும் அவர் அவனை விடவில்லை.

''எங்கே பார்க்கலாம்? அந்த நறுமணத்தை நானும்தான் சிறிது மோந்து பார்க்கிறேனே'' என்று சொல்லிச் சிரித்தபடியே அவன் இடையிலிருந்து அந்த வெண்தாழை மடலை உருவி எடுத்து விட்டார் அவர். என்ன செய்வதென்று தோன்றாமல் அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டான் மணிமார்பன். 'ஐயா! இதை நீங்கள் பார்க்கக் கூடாது. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இந்த மடலில் இல்லை' என்று கடிந்து கூறி அவரை விரைந்து தடுக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை.

நகைவேழம்பர் தீப்பந்தத்துக்கருகில் மடலை நீட்டி ஒற்றைக் கண்ணைப் பக்கத்தில் கொண்டு போய் உற்றுப் பார்க்கலானார். அந்த மடலைப் படிக்கும்போது 'அவர் முகம் என்னென்ன உணர்ச்சிகளைக் காட்டுகிறது? எப்படிக் கடுமையடைகிறது?' என்பதையெல்லாம் கவனித்துக் கொண்டு நிற்பதைத் தவிர ஓவியனால் வேறொன்றும் செய்வதற்குத் துணிய முடியவில்லை. அதைப் படித்து விட்டுத் தலைநிமிர்ந்தார் நகைவேழம்பர்.

''தாழை மடலில் வெறும் நறுமணம் மட்டும் கமழவில்லையே? காதல் மணமும் சேர்ந்தல்லவா கமழ்கிறது?'' என்று கூறிக் கொண்டே தீப்பந்தத்தைக் கீழே எறிந்து விட்டு எலும்பு முறிவதுபோல் அவன் கையை அழுத்திப் பிடித்து இறுக்கினார் அவர். ஓவியனின் மெல்லிய கையில் இரத்தம் குழம்பிச் சிவந்தது. கைப்பிடியால் இறுக்குவது போதாதென்று கேள்வியாலும் அவனை இறுக்கினார் அவர்.

''இந்த மடலை ஏன் இதற்குரியவனிடம் சேர்க்கவில்லை?''

''உரியவருக்கு இதைப் பெற விருப்பமில்லை'' என்று சுருக்கமாகப் பதில் கூறினான் ஓவியன். அதற்குமேல் அவர் அவனை ஒன்றும் கேட்கவில்லை. அந்த மடலையும் அவனிடம் திருப்பித் தரவில்லை. அவனை இழுத்துக் கொண்டு போய் மாளிகைத் தோட்டத்தில் தாம் வசிக்கிற பகுதியின் இருண்ட அறை ஒன்றில் தள்ளிக் கதவுகளை வெளிப்புறம் தாழிட்டுக் கொண்டு போனார் நகைவேழம்பர். ஓவியனைச் சுற்றிலும் இருள் சூழ்ந்தது. அவன் மனத்திலும்தான்.

தன்னுடைய மாடத்தில் தோழி வசந்தமாலையோடு ஓவியன் திரும்பி வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்த சுரமஞ்சரிக்கு நேரம் ஆக ஆகக் கவலை பிறந்தது. ஓவியன்மேல் சந்தேகமும் உண்டாயிற்று. அந்த மாளிகையிலிருந்து தப்பிப் போக வேண்டுமென்ற ஆசையில் தான் வெளியே அனுப்பிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்படியே ஓவியன் எங்கேயாவது ஓடிப் போய் விட்டானோ என்று நினைத்தாள் அவள். அப்படி அவள் சந்தேகப்படுவதற்கு நியாயமிருந்தது.

அந்த மாளிகையில் தொடர்ந்து இருப்பதற்குத் தான் விரும்பவில்லை என்ற கருத்தை அவளிடம் மடலை வாங்கிக் கொண்டு புறப்படுமுன்பே அவன் சொல்லியிருந்தானே.

சிறிது நேரத்துச் சிந்தனைக்குப் பின்பு ஏதோ தீர்மானமாக முடிவு செய்து கொண்டவள் போல் உட்கார்ந்தபடியே உறங்கிப் போயிருந்த தன் தோழி வசந்தமாலையை எழுப்பினாள் சுரமஞ்சரி.

''என்னம்மா? மடல் கொடுக்கப் போன ஓவியன் திரும்பி வந்தாயிற்றா?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து நின்றாள் வசந்தமாலை. ''ஓவியன் திரும்பி வரவில்லை வசந்தமாலை. இனிமேல் எதிர்பார்த்துக் காத்திருப்பதிலும் பயனில்லை. நீ புறப்படு. நாமே போக வேண்டியதுதான்'' என்று அந்த அகாலத்தில் தலைவியிடமிருந்து பதில் வந்தபோது வசந்தமாலை திகைத்துப் போனாள்.

''ஓவியன் வராவிட்டால் நாளைக் காலை வரையில் எதிர்பார்க்கலாம். அதற்காக

நா. பார்த்தசாரதியின்
சிறந்த நூல்கள்

நாவல்கள்

குறிஞ்சிமலர் (கல்கியில் வெளிவந்தது) 10·00
பிறந்த மண் 5·00
கோபுர தீபம் 5·00
மலைச் சிகரம் 1·50
வலம்புரிச் சங்கு 3·00

சிறுகதைகள்

காலத்துக்கு வணக்கம். 3·00
மூவரை வென்றான் 2·00

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே, சென்னை-1

அன்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

உலகப் பிரயாணம் !
உள்நாட்டுப் பிரயாணம் !!
எதுவாகிலும் அது
ஏஷியன் மூலம்
உல்லாசப் பிரயாணம் !!!

உங்கள் பிரயாணங்களுக்கு
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

ASIAN travels
(INDIA) Private ltd.,

ஏஷியன் டிராவல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
நெ 1, பட்டுல்லோஸ் ரோடு, சென்னை - 2

போன் : 84009 தந்தி : ஜொர்ல்-டிராவல்

அதிக ஜனங்கள் "பயர்கிங்" ஸ்டவ்களை வாங்குவதின் காரணம்

Fireking

HOUSEHOLD SAFETY STOVE

மிகத்தெளிவு

"பயர்கிங்" ஸ்டவ்கள் வீட்டிலோ அல்லது உல்லாசப் பிரயாணத்திலோ எப்பொழுதும் மிகுந்த பயனளிக்கும் உறுதுணையாக இருந்து வருகிறது. எளிதாகத் தூக்கிச் செல்லலாம். சுலபமாகப் பற்ற வைத்து விடலாம். — சப்தமில்லாதது. பராமரிப்புச் செலவில் சிக்கனம்; மேலும் அதில் சமைப்பதிலே ஒரு தனி ஆனந்தம்!

போப்பட் ஜமால் & சன்ஸ்.,

182, பிராட்வே, மதராஸ்-1 & 36-B. மவுண்ட் ரோட், மதராஸ்-2

கிளைகள்:- எர்ணாகுளம், ஹைதராபாத், பம்பாய் & விஜயவாடா

ஆஸ்தமா பிராங்கைடீஸ் குளிர்சுரம்

முதலியவைகளை எப்படி அடக்குவது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல் சுவாசம் தடைபடுதல் ஆஸ்த்மா, ப்ராங்கைடீஸ், ஜலதோஷம், குளிர் சுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு நிவாரணம் அடையலாம். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து, இரத்தத்தின் மூலமாக சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சு விடுதல், இல்லாமல் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்கமுடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக் கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூலகாரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும் வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரண மடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளை கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி, மிருதுவாகச் சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர்தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள் பூரண திருப்தி அது நிச்சயமாக அளிக்கும்.

இந்த வேளையில் நாம் எப்படி அங்கே போக முடியும்? போவதுதான் நன்றாயிருக்குமா? ஏறக்குறையப் போது விடிவதற்கே சில நாழிகைகள்தான் இருக்கும். இப்போது அங்கே போக வேண்டுமானால் நடந்து போக முடியாது. பல்லக்கிற் போகலாமென்றால் தூக்கி வருவதற்குப் பணியாட்களை எழுப்ப இயலாது. பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள். எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்று வசந்தமாலை தடை செய்ததைக் கரமஞ்சரி பொருட்படுத்தவில்லை.

''சொன்னால் சொன்னபடி கேள். இந்தக் காரியத்தை இப்போதே செய்து தீர வேண்டுமென்று என் மனத்தில் தோன்றுகிறது. நீ என்ன தடை சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை. பல்லக்கிலே போக வேண்டாம். கீழே வா. எப்படிப் போகலாமென்று தெரிவிக்கிறேன்'' என்று வசந்தமாலையையும் இழுத்துக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கி வந்தாள் கரமஞ்சரி.

கீழே தன் தலைவி விரைவாகச் செய்த ஏற்பாடுகளைப் பார்த்தபோது, வசந்தமாலைக்கே அதிசயமாக இருந்தது. குதிரைகள் கட்டியிருந்த கொட்டாரத்துக்குப் போய் வேகமாகச் செல்லவல்ல வெண்புரவிகள் இரண்டை அவிழ்த்து வந்து மாளிகையின் ஒரு புறத்தே நிறுத்தியிருந்த அழகிய அலங்காரத் தேரில் தன்னுடைய வளைகள் ஒலிக்கும் கைகளாலேயே பூட்டினாள் கரமஞ்சரி. தேரைச் செலுத்தும் சாரதியின் இடத்தில் அவள் தானே ஏறி நின்று கடிவாளக் கயிறுகளைப் பற்றிக் கொண்டாள்.

''வசந்தமாலை! உள்ளே ஏறிக் கொள்'' என்று அவள் கட்டளையிட்டபோது மறுத்துச் சொல்லத் தோன்றாமல் அப்படியே ஏறிக்கொள்வதைத் தவிரத் தோழியால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

வேளையில்லாத வேளையில் மாளிகையின் இளவரசி தானே தேரைச் செலுத்திக் கொண்டு வெளியேறுவதைப் பார்த்து வாயிற் காவலர்கள் வியந்து நின்றனர்.

இரவின் அமைதி கவிந்த பட்டினப் பாக்கத்து அகன்ற வீதிகளில் கரமஞ்சரியின் தேர் ஓசையெழுப்பிக் கொண்டு விரைந்தது. நிசப்தமான தெருக்களில் மத்தளத்தை அளவாக வாசிப்பதுபோல் குதிரைக் குளம்பொலி எழுந்து ஒலித்தது. வேகமாக ஓடும் தேரும் அதைவிட வேகமாக முந்திக் கொண்டு ஓடும் மனமுமாகக் கரமஞ்சரி நீலநாகர் படைக்கலச் சாலைக்குச் சென்று கொண்டிருந்தாள்.

'' அம்மா ! தேரை நான் செலுத்துகிறேன். நீங்கள் உள்ளே உட்கார்ந்து கொள்ளுங்கள் '' என்று வசந்தமாலை நடுவழியில் கூறிய வார்த்தைகளுக்குக் கரமஞ்சரி செவிசாய்க்கவே இல்லை.

நாளங்காடியின் அடர்ந்த மரக் கூட்டங்களுக்கிடையே உள்ள சாலையைக் கடந்து தேர் மருவூர்ப் பாக்கத்துக்குள் புகுந்தபோது, தேரை நிறுத்தாமலே பின்பக்கமாகத் திரும்பி, '' அவர் தங்கியிருக்கிற படைக்கலச்சாலைக்குப் போகும் வழியைச் சொல்லிக் கொண்டு வா '' என்று தோழிக்கு உத்தரவு பிறப்பித்தாள் கரமஞ்சரி. தோழி வசந்தமாலை வழியைக் கூறினாள். தேர் அவள் கூறிய வழிகளின்படியே மாறியும், திரும்பியும் விரைந்து சென்றது.

* * *

விடிவதற்குச் சில நாழிகைகள் இருக்கும்போதே நீலநாக மறவருக்கு உறக்கம் நீங்கி விழிப்புக் கொடுத்து விடும். படைக்கலச் சாலையின் எல்லையில் முதன் முதலாகக் கண் விழிக்கிறவர் அவர்தான். எழுந்தவுடன் இருள் புலருமுன்பாகவே ஆலமுற்றத்தை ஒட்டிய கடற்கரை ஓரமாக நெடுந் தொலைவு நடந்து போய் விட்டுத் திரும்பி வருவார் அவர். கடற்காற்று மேனியில் படுமாறு அப்படி நடந்து போய்விட்டு வருவதில் அவருக்குப் பெரு விருப்பம் உண்டு. கதிரவன் ஒளி பரவு முன்பே தமது உடல் வலிமைக்கான எல்லாப் பயிற்சிகளையும் முடித்துக் கொண்டு நீராடித் தூய்மை பெற்று விடுவார் அவர். நீலநாகமறவர் நீராடிவிட்டுப் புறப்படுவதற்கும், ஆலமுற்றத்து அண்ணல் கோவிலில் திருவனந்தல் வழிபாட்டு மணி ஒலி எழுவதற்கும் சரியாயிருக்கும்.

வழக்கம்போல் அன்று அவர் துயில் நீங்கிக் கடற்கரையில் தனியே உலாவி வருவதற்காகப் புறப்பட்டுப் படைக்கலச்சாலையின் வாயிலுக்கு வந்தபோது வெண்புரவிகள் பாய்ந்து இழுத்து வரும் அலங்காரத் தேர் ஒன்று அழகாக அசைந்து திரும்பி வந்து நிற்பதைக் கண்டு வியப்படைந்தார்.

அந்தத் தேரிலிருந்து இரண்டுபெண்கள் இறங்கி வருவதைக் கண்டபோது நீலநாகமறவரின் வியப்பு இன்னும் மிகையாயிற்று. படைக்கலச்சாலைக்குள் நுழைகிறவாயிலை மறித்துக்கொண்டாற்போல் அப்படியே நின்றார் அவர். தேரிலிருந்து இறங்கி முன்னால் வந்த பெண் அரசகுமாரிபோல் பேரழகுடன் தோன்றினாள். உடன் வந்தவள் அவள் தோழியாக இருக்கலாமென்று அவர் புரிந்து கொள்ள முடிந்தது.

சிலம்பொலி குலுங்க, அன்னம்போல் பின்னிப் பின்னி நடந்து வரும் மென்

னை, சூடிய பூக்களும், பூசிய சந்தனமும். அவர்களிடமிருந்து காற்றில் பரப்பிய நறுமணம்-இவற்றால் சற்றும் கவரப்படாமல் கற்சிலைபோல் அசையாமல் நிமிர்த்து கம்பீரமாக நின்றார் நீலநாக மறவர். அவரருகில் வந்ததும் அவர்கள் தயங்கிநின்றார்கள். இரண்டு பெண்களும் தங்களுக்குள்ஒருவரையொருவர் மருண்டு பார்த்துக் கொண்டார்கள். நீலநாகமறவர் அவர்களை நோக்கிக் கேட்டார்:

“நீங்கள் இருவரும் யார்? இங்கே என்ன காரியமாக வந்தீர்கள்? இது படைக்கலச்சாலை. ஆண்களும், ஆண்மையும் வளருமிடம். இங்கே உங்களுக்கு ஒரு காரியமும் இருக்க முடியாதே?”

“இங்கே இளங்குமரன் என்று ஒருவர் இருக்கிறாரே: அவரை அவசரமாக நாங்கள் பார்க்க வேண்டும்” என்று அவருக்குப் பதில் கூறினாள், முன்னால் நடந்து வந்த பெண். நீலநாக மறவருடைய முக பாவம் மாறியது.

“இளங்குமரனை உங்களுக்குத் தெரியுமா, பெண்களே?”

“நன்றாகத் தெரியும்.”

“எப்படிப் பழக்கமோ?”

“எங்களை அவருக்கு நன்றாகத் தெரியும். இன்று பகலில் பட்டினப்பாக்கத்திலிருக்கும் எங்கள் மாளிகைக்குக்கூட அவர் வந்திருந்தார்.”

“எதற்காக வந்திருந்தான்?”

அவர்களிடமிருந்து பதில் இல்லை. நீலநாகமறவருடைய கடுமையான முகத்தில் மேலும் கடுமை கூடியது.

“இப்போது நீங்கள் அவனைப் பார்க்க முடியாது.”

“அவசரமாகப் பார்த்தாக வேண்டுமே....?”

“இந்த அகாலநேரத்தில் ஓர் ஆண் பிள்ளையைத் தேடிக்கொண்டுவர வெட்கமாக இல்லையா உங்களுக்கு?” என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டு விட்டுத் இறந்து கிடந்த படைக்கலச் சாலையின் பெரிய கதவுகள் இரண்டையும் இழுத்து அடைத்தார் அவர். அந்தக் கதவுகளை இழுத்து அடைக்கும்போது, அவருடைய தோள்கள் புடைப்பதைப் பார்த்தாலே பெண்கள் இருவருக்கும் பயமாயிருந்தது. தழும்புகளோடு கூடிய அவர் முகமும், பெரிய கண்களும் ‘இவரை நெகிழச் செய்ய உங்களால் முடியவே முடியாது’ என்று அந்தப் பெண்களுக்குத் தெளிவாகச் சொல்லின. அவர்கள் நம்பிக்கை யிழந்தார்கள். கதவை மூடிக் கொண்டு நிற்கும் அவர்முன் இரண்டு பெண்களும் அவரது முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் துணிவின்றித் தலை குனிந்தபடியே தேருக்குத் திரும்பிப் போய் ஏறிக் கொண்டார்கள். தேர் திரும்பியது. வெண் புரவிகள் பாய்ந்தன.

“நான் புறப்படும்போதே சொன்னேனே, அம்மா! இந்த அகாலத்தில் நாம் இங்கே வந்திருக்கக் கூடாது.”

“வாயை மூடடி வசந்தமாலை! நீயும் என் வேதனையை வளர்க்காதே” என்று தேரைச் செலுத்தத் தொடங்கியிருந்த சுரமஞ்சரி, கோபத்தோடு பதில் கூறினாள். தேர் மறுபடியும் பட்டினப்பாக்கத்துக்கு விரைந்தது. சுரமஞ்சரியின் முகத்தில் மலர்ச்சியில்லை, நகையில்லை. யார் மேலோ பட்ட ஆற்றாமையைக் குதிரைகளிடம் கோபமாகக் காட்டினாள் அவள். வெண்பட்டுப் போல் மின்னும் குதிரைகளின் மேனியில் கடிவாளக் கயிற்றைச் சுழற்றி விளாசினாள். அடிபட்ட புரவிகள் மேலும் வேகமாகப் பாய்ந்தன. வந்ததை விட வேகமாகத் திரும்பிக் கொண்டிருந்தது அவர்கள் தேர்.

தேர் மாளிகைக்குள் புகுந்து நின்றது. சுரமஞ்சரியும் வசந்தமாலையும் கீழே இறங்கினார்கள். குதிரைகளை அவிழ்த்துக் கொட்டாரத்தில் கொண்டு போய்க் கட்டி விட்டுவா” என்று தலைவி உத்தரவிட்டபடியே செய்தாள் வசந்தமாலை.

பின்பு இருவரும் மாளிகையின் மூன்றாவது மாடத்துக்குச் செல்லும் படிகளில் ஏறி மேலே சென்றார்கள். சுரமஞ்சரியின் மாடத்தில் தீபங்கள் அணைக்கப்பெற்று இருள் சூழ்ந்திருந்தது. தாங்கள் வெளியே புறப்பட்டபோது தீபங்களை அணைத்ததாக நினைவில்லை சுரமஞ்சரிக்கு. “எதற்கும் நீ கீழே போய்த் தீபம் ஏற்றிக் கொண்டு வா! தீபத்தோடு உள்ளே போகலாம்! அதுவரை இப்படி வெளியிலேயே நிற்கிறேன்” என்று வசந்தமாலையைக் கீழே அனுப்பினாள் சுரமஞ்சரி. சிறிது நேரத்தில் வசந்தமாலை தீபத்தோடு வந்தாள். தீப ஒளி உள்ளே பரவியபோது மாடத்தின் முதற் கூடத்துக்கு நடுவில் தன் தந்தையாரும், நகை வேழம்பரும், தங்கள் இருவர் வரவையும் எதிர்பார்த்தே காத்திருப்பது போல் அமர்ந்திருப்பதைச் சுரமஞ்சரியும், வசந்தமாலையும் கண்டார்கள்.

“உள்ளே போகலாமா? இப்படியே திரும்பி விடுவோமா?” என்று பதறிய குரலில் தலைவியின் காதருகே மெல்லக் கேட்டாள் வசந்தமாலை.

“நம்மை ஒன்றும் தலையைச் சீவிவிட மாட்டார்கள். வா, உள்ளே போவோம்” என்று தோழியையும் கைப்பற்றி அழைத்தவாறு துணிவுடன் உள்ளே புகுந்தாள் சுரமஞ்சரி. (தொடரும்)

இப்பொழுது

உங்கள் அன்புக்குரிய ஆரோக்கியத்தை அளிக்கும்

விட்டமின்கள்

அடங்கிய **டானிக்**

வாட்டர்பரீஸ் காம்பவுண்டை வாங்குங்கள் !

இப்பொழுது நீங்கள் இந்தியாவின் அன்புக்குரிய ஆரோக்கியத்தை அளிக்கும் விட்டமின்கள் மிகுந்த டானிக்கை வாங்கலாம். வாட்டர்பரீஸ் காம்பவுண்டின் புகழ்பெற்ற கலவையில் ஆரோக்கியத்துடனும், பலத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படியான விட்டமின்கள் சேர்ந்திருக்கின்றன. வாட்டர்பரீஸ் விட்டமின் காம்பவுண்ட் உங்களுக்கு அநேக விதங்களில் பயனளிக்கிறது. இது இரத்தத்தைப் பரிசுத்தமாக்குகிறது. இழந்த சக்தியையும், வீரியத்தையும் மீண்டும் அளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி தசைகளுக்கு சமனூட்டுகிறது. சரீரத்தில் வியாதிகளை எதிர்க்கும் சக்தியை உண்டு பண்ணுகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேற மிகவும் உதவுகிறது.

வாட்டர்பரீஸ்

விட்டமின்

காம்பவுண்ட்

உங்களுக்கு போஷாக்கை அளிக்கிறது.

இருமலையும், ஜலதோஷத்தையும் போக்குவதற்கு கிரியோ ஸோட் மற்றும் க்வயகால் சேர்க்கப்பட்ட சிறப்பு வகையினுடைய வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் கிடைக்கிறது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம்தேதி: மாலை நேரம்.

லண்டனில் புகழ் பெற்ற எல்லாத் தினப் பத்திரிகைகளின் மாலைப் பதிப்பிலும் எச்சுப் பாட்டியின் படம் இடம் பெற்றிருந்தது. டைம்ஸ் பத்திரிகை,

''தமிழ்ப் புத்தாண்டுக்காக இலண்டன் வந்த பாட்டி (படம் ஒன்று). அவர் கொண்டு வந்த அவல் மூட்டை (படம் இரண்டு) சென்னைக் கட்டைத் தொட்டியிலிருந்து வந்த ஒரு குண்டு சவுக்கு விறகு (படம் மூன்று)''

எனக் கொட்டை எழுத்திலே பிரகரம் செய்திருந்தது.

''தமிழ் நாட்டிலும் ஆண்டுத் தொடக்கம் உண்டாம்!'' — இது மான்செஸ்டர் தந்த தலைப்பு.

''பீட்டன் — ரைஸ் — புட்டிங் என்றால் என்ன? விவரம் எதிர்பாருங்கள்''—லேடீஸ் ஹோம் ஜர்னல் தந்த படவிளக்கம்.

விமான நிலையத்தில் ஹேமா, அவள் கணவன் ஆர். ஆர். ஆமன் (ரகுராமன்) இருவரையும் எச்சுப் பாட்டி தேடினாள். விமானத்தை விட்டு இறங்கியபோது—அவல் மூட்டை (7 படி உள்ளது) ஒன்றும் அது பாயஸமாக மாறும்போது தேவைப்படும் வாசனைதிகள் (குங்குமப்பூ, கற்கண்டு, பச்சைக் கற்பூரம், ஏலம், கிராம்பு, முந்திரி, திராக்ஷை உள்ளிட்ட) மூட்டை இரண்டும் அவள் இடுப்பில் இருந்தன. விமானநிலைய போர்ட்டர் ஒருவர் எச்சுப்பாட்டி

அவல் பாயசம்

எடுத்துவந்த சவுக்கு விறகுக் கட்டினை அவர்கள் வீட்டுக்காரில் எடுத்து வைக்க நான்கு பவுன் கூலியைப் பெற்றதும் கார் நகர்ந்தது. பாட்டியின் படத்தைப் பல கோணங்களில் பத்திரிகை நிருபர்கள் பிடித்துக் கொண்டார்கள். தொழில் துறையில் அனுபவங்களைக் கற்று வந்திருந்த ஆர். ஆர். ஆமனிடம் பேட்டி கண்டு பாட்டியின் விஜய விவரத்தை அறிந்து கொண்டார்கள்.

ஏப்ரல் 6ந் தேதி இந்திய தூதர் காரியாலயத்துக்குச் சாரை சாரையாக வந்த டெலிபோன் பேச்சுகளில் 90 சதவிகிதம் பீட்டன் ரைஸ் புட்டிங் (அவல் பாயஸம்) என்றால் என்ன என்ற கேள்விகளாக இருந்தன. தொழில் அதிபர் ஆர். ஆர். ஆமனும் அவர் மனைவியும் நாலாயிரம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவு செய்து எச்சுப் பாட்டியையும் அவள் கொண்டு வந்த அவல் மூட்டையையும் எதிர் கொண்டழைத்தனர். இதற்காக அவர்கள் வருந்தவில்லை. பெரிய ஆபத்திலிருந்து தப்பிய மகிழ்வு அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் முதல்நாள் இவர்களுக்கு வந்த ஆபத்து இவ்வாண்டு ஜனவரி

முதல் தேதிக்கு முதல் நாள் வந்தது. தொழில்துறை அனுபவங்களைக் கற்றுவரச் சென்ற ஆர். ஆர். ஆமன் இளைஞன்; கறு கறுப்பு உள்ளவன். ஆங்கிலேயத் தம்பதிகள் தரும் விருந்துகளில் கலந்துகொண்டு கலகலப்பைத் தரும் பழக்கமுள்ளவன். அவனுடன் ஹேமாவும் லண்டன் போயிருந்தாள். லண்டனில் கிடைக்கும் விருந்துக் கூட்டங்களுக்கும் உடன் போவாள். ஜனவரி பிறப்பதற்கு முதல் நாள் நாட்டிங்ஹாம்ஷயரிலுள்ள ஹாமில்டன் தம்பதிகள் தந்த விருந்தில் இவர்கள் கலந்து கொண்டனர். செல்வாக்கும் அரசியல் பிரபுத்துவமும் உள்ள கூட்டம் அங்கு கூடியிருந்தது. யாரோ கேட்டார்கள்:

"தமிழ் நாட்டவருக்கு ஆண்டுத் தொடக்கம் உண்டா? ஆண்டாண்டு பிறக்கும் ஆண்டுக்கு விருந்தும் உண்டா? அவ்வாறு உண்டானால் ஹாமில்டன் தம்பதிகள் தமிழ்ப் புத்தாண்டு விருந்தில் கலந்து கொள்ள ஹேமா-ஆமன் தம்பதிகள் அழைப்பார்களா? அனுமதிப்பார்களா?"

ஹேமாவுக்குச் சமையலைப் பற்றிச் சந்தேகம். ஆனால் பேச்சிலே சூடும் சுவையும் தரும் இயல்புடையாள். "நாகரிகமுள்ள மக்களுக்கு ஆண்டுத் தொடக்கம் உண்டு. சாப்பிடத் தெரிந்த மக்களுக்குப் புத்தாண்டு விருந்தும் உண்டு. தமிழர்கள் இரண்டும் தெரிந்தவர்கள்" என்று பதில் சொன்னபோது ஸ்ரீமதி ஹாமில்டன் இணைந்துபோனார். ஆனால் மறுவாரம் செல்வச் செல்லப் புத்தாண்டு விருந்துபற்றி ஏன் சொன்னேம் என ஹேமா வருந்தினாள்.

■ ஹேமா-ஆமன் தம்பதிகள் புத்தாண்டு விருந்துக்கு எவர் எவரை அழைப்பது எனத் திட்டமிட்டார்கள்.

அழைப்பு வெகு சுலபமாக முடிந்தது. என்னென்ன விருந்துப் பட்டியல் என்றபோது கஷ்டம் எழுந்தது. வேப்பம் பூப் பச்சடியும் அவல் பாயஸமும் கொடுப்பதென்று முடிவு கட்டினார்கள்.

லண்டனில் வேப்பம்பூ பச்சையாகக் கிடையாதது முதற் காரணம்; கசப்பைக் கொடுத்து வாணிபத் துறையில் மனக்கசப்பை ஏற்படுத்த விரும்பாதது அடுத்த காரணம். அவல் பாயஸம் மட்டுமே விருந்திலே முக்கிய இடம் பெற வேண்டுமெனத் தீர்மானித்தனர். அன்று, பிப்ரவரி முதல் தேதி.

மார்ச்சு வந்த போதுதான் அவல் பாயஸத்தைப் பற்றிய அக்கறை வலுத்தது. ஹேமா யோசிக்க ஆரம்பித்தாள். மாமியாருக்குக் கடிதம் எழுதினாள். அவல் பாயஸத்தின் மூலப் பொருள்களை அனுப்பச் சொன்னாள். இத்தனைக்கும் சமையலைப் பள்ளிப் பாடமாகக் கற்றவள். ஹேமா அனுபவத்தில் உப்புக்கும் சர்க்கரைக்கும் வேறுபாடு தெரியாத சமையல் ஞானம் கொண்டவள்.

சுகி சுப்பிரமணியம்

ஆமனைப் பெற்ற மகராசி பாயஸத்தை எவ்வாறு தயாரிப்பது என எழுதினாள்; அவன் தங்கை உரையும் விளக்கமும் தந்தாள். அவன் தமக்கை நுணுக்கமான அனுபவத்துகளைக் கருத்துடன் எழுதினாள். தபால் வழியாக அவல் பாயஸம் - கடித ரூபத்தில்தான் - லண்டன் வந்து சேர்ந்தது. சமையலைத் தபால் வழியாகக் கற்றுக் கொள்வதைப் போல விருந்தினர்களும் தபால் வழி உண்ணக் கற்றுக் கொள்ள முடியாதே!

ஹேமா செய்த பாயஸம், பாலைப் போல் ஓடும் பொருளாய் ஒரு முறை இருந்தது; மறு முறை தயாரித்தபோது கொத்துப் பாயஸமாக அமைந்தது. மீண்டும் தயாரித்தபோது களிப் பாயஸமாக இருந்ததே தவிர, அவல் பாயஸத்தின் திட-திரவ-ருசி நிலைக்கு வரவில்லை. ஹேமா - ஆமன் தம்பதிகள் அவதி இங்ஙனம் இருக்க ஹாமில்டன் தம்பதிகள் அவல் பாயஸத்தின் பெருமையையும் ருசியையும் வெகுவாக விளம்பரம் செய்து விட்டார்கள். இவ்வாறு வியாபகமான பாயஸ விருந்துக்கு மந்திரி ஒருவரும் இடம் பிடித்தார், ஜெர்மானிய விஞ்ஞானி ஒருவரும் இடம் கேட்டார். பாவம், ஆர். ஆர். ஆமன் எத்தனை அவதிப்பட்டிருப்பான்? பாலில் போட்ட அவல் மாதிரி அவன் மனம் வெந்து கொண்டிருந்தது.



> அந்தரங்க சுத்தமே அமரத்துவத்துக்கு வழி; விவேகமின்மை மரணத்துக்கு இட்டுச் செல்லும் மார்க்கம். அந்தரங்க சுத்தமுள்ளவர்கள் இறப்பதில்லை. விவேகமில்லாதவர்கள், இருக்கும்போதே இறந்தவர்களைப் போலத்தான். —கௌதம புத்தர்

ஹேமா செய்து பழகிய அவல் அவதார ஹிம்சைகள், ஆமன் தலையில் அடிக்கடி விழுந்தன. தன் தலையில் விழுந்தது போக, எஞ்சியதைத் தபால் தலையில் விழச் செய்து தாயாருக்குக் கடிதம் எழுதினான். கடிதங்கள் பறந்தன. செய்முறைக் குறிப்புகள் உடனுக்குடன் அனுப்பப்பட்டன. ஒரு சமயம் அவல் பாயஸத்தைக் கரிப் பாத்திரத்துடன் தாயாரின் பரிசோதனைக்காக அனுப்பியும் என்ன பயன்? தேதி நெருங்கி விட்டது.

லண்டனிலிருந்து டெலிபோனில் பேசினான்.

"அம்மா! நம்முடைய தொழில் துறையில் நலம் பெருக வேண்டுமானால், புத்தாண்டு விருந்தில் அவல் பாயஸம் பரிமாறி ஆக வேண்டும். அல்லது மார்ச்சு முடிவுக்குள் நாடு கடத்தி என்னைத் தாயகத்துக்கு அழைத்து விடுங்கள். ஐம்பது நண்பர்களை விருந்துண்ணச் சொல்லித் தகவல் அறிவித்து விட்டேன். பிலவ வருஷத்தில் எங்கள் வீட்டில் விருந்து நடந்தே ஆக வேண்டுமா? அல்லது நாடு விட்டு நாடு ஓட வேண்டுமா? அமெரிக்கா போய் விடுவேன்! என்றைக்கும் தாயகம் திரும்ப மாட்டேன்" என்று அழமாட்டாக் குறையாகப் பாயஸமாகக் குழைந்து கடிதம் எழுதினான்.

தாயின் நெஞ்சம் நெகிழ்ந்தது. அவல் பாயஸத்தைத் தயாரித்து அனுப்பி விடலாம், புட்டி உணவைப் போல, லண்டனில் பரிமாறட்டும் என்று முடிவு செய்தாள். ஆனால் பாயஸத்தின் சூடு போனால் சுவையேது? நாலு நாட்கள் சூடு தாங்கக் கூடிய தர்மாஸ் பிளாஸ்குகள் கிடைக்குமாவென லண்டனுக்கு டெலிபோன் போட்டாள்.

கிடைக்கும். அனுப்புவதற்குரிய அனுமதியை வாங்க இரண்டு மாதங்கள் பிடிக்குமென்று மறுதினம் டெலிபோன் செய்தி சொன்னது.

மார்ச்சும் முடிந்து விட்டது; அவல் சோதனை பரிசோதனையிலிருந்து ஹேமா மீளவில்லை. அது என்றைக்குப் பாயஸம் ஆவது? நிச்சயமாகப் புத்தாண்டில் ஆகுமென்று எப்படி நம்புவது என்று தவித்தனர் தம்பதிகள். ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து ஹேமா விம்மினாள். மாமியார் இப்பாலிருந்து மறுகினாள்.

"ஹேமா! நீ ஒன்றுக்கும் பயப்படாதே. எச்சப் பாட்டி இருக்கவே இருக்கிறாள். அவள் கை அவலுக்குத் தனி ருசி. குசேலர் கொடுத்த அவல் கிருஷ்ண பரமாத்மாவுக்கு அமிர்தமாக இருந்தது புராணம். அவளை லண்டனுக்கு அனுப்பி வைக்கிறேன். கவலையை விடு."

"அப்படியே செய்யுங்கள், அத்தை! எச்சப் பாட்டி வந்து சேர்ந்ததும் இங்கிருந்தே உங்கள் திசைக்கு மூன்று முறை விழுந்து வணங்குகிறேன். சற்று அதிகமாகவே அவல் அனுப்பி வையுங்கள். இல்லை; இல்லை. அனுப்பி வாழ்த்துங்கள்!"

மருமகள் துயர் தீர்க்க, மகன் தொழில் துறை அனுபவம் கறக, எச்சப் பாட்டியை விமானத்தில் ஏற்றினாள் ஆமனின் தாயார். அவளோடு அவல் மூட்டை, பாயஸ வாசனை மூட்டை, ஓர் எடை சவுக்கு ஆகியவையும் பிரயாணம் செய்தன. லண்டன் வந்து சேர்ந்தாள் எச்சப் பாட்டி.

ஹேமா-ஆமன் தம்பதிகள் மறு நாள் காலைப் பதிப்பில் எச்சப் பாட்டியின் படத்தைப் பார்த்து ஆனந்தப்பட்ட போது டெலிபோன் கிணுகிணுத்தது. தாயகத்திலிருந்து மாமியார் குரலை எதிர்பார்த்தாள்.

"ஹலோ! நான் லண்டனிலிருந்து பேசுகிறேன். விருந்தில் எனக்கும் இடம் வேண்டும். இடம் இல்லாவிட்டாலும் பாட்டியுடன் பேட்டி காணும் பெருமையாவது வேண்டும்" என்று தமிழில் பேசிற்று குரல்.

"ஓஹோ! பி. பி. ஸி. நிலையத்துத் தமிழ்ப் பகுதியா?" என்றாள் ஹேமா. (தொடரும்)

கணக்கணக்கான குடும்பங்கள் நம்பிக்கையுடன் உபயோகிப்பன
40 வருடம்
நஞ்சன்கூட்-பல்பொடி
மற்றும்
54 அரிய குடும்ப-மருந்துகள்
விபரப்புத்தகம் வேண்டுவோருக்கு

T. A. அப்துல் ரஹீம், தஞ்சாவூர்
ஊதுபத்திகள், வாசனைகள்
கஸ்தூரி பத்தி
அம்பர் ,,
மட்டிப்பால் ,,
மல்லிகை ,,
குலாப் ,,
ஃப்ளவர் டஸ்ட்
சந்தன முகப்பவுடர்
பெடல் டஸ்ட்
சுகந்த சந்தனத்தூள்
அரகஜா, புனுகு

சொல் ஏஜண்டுகள்: பு... கன்னர்ன், 54, பந்தர் தெரு சென்னை-1

கந்தர் கதம்பம்
(முருகன் துதிகள்)
ரூ. 1-25
54, பந்தர் தெரு
சென்னை - 1

உள்ளொளி விளக்கி அருளொளி பெருக்க
அமிர்தவசனி
சிறந்த தெய்வீக மாதப் பத்திரிகை

திருப்புகழ் மாலை
340 பாடல்கள்
ரூ. 1-25
தெய்வீகப் படங்கள்
விரிவுரைகள்

சித்திரை - பங்குனி வருட சந்தா ரூ. 3 அனுப்பவும் (வி. பி. இல்லை)



நான் பலவீனமடைந்து களைப்புற்று வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் சிரமப் பட்டேன்.
எங்கள் அடுத்த வீட்டு மாமி தினமும் இரண்டு வேளை போர்ன் வீடா அருந் தவேண்டுமென்று சொன் னாள்.
அவர்களுடைய டாக்டரும் அதையேதான் சொன்னா ராம். நானும் அதைக் கடை பிடித்தேன். சக்தியும் பல மும் பெற்றேன்.
இப்பொழுது உடம்பும் முன் போல நன்றாகிவிட்டது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's BOURN-VITA THE IDEAL FOOD DRINK MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் என் வேலைகளை சக்தியுடன் செய்து வருவதற்குக் காரணம்
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்

கௌரவம்

ரஸவாதி

காரியாலயத்துக்கு நேரமாகி விட்டது. படித்துக் கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு நான் எழுந்தபோது, வாசற்புறத்தில் ஏதோ நிழலாடுவது போல் இருந்தது.

"யார்?" என்றேன்.

உருவம் ஒன்று மறைவிலிருந்து வாசல் எதிரே நின்றது.

"யார் வேண்டும்?"

"நடராஜன் என்பது..."

"நான்தான். உள்ளே வாருங்கள்."

வந்த ஆசாமி மெதுவாக அடியெடுத்துத் தயங்கித்தான் உள்ளே வந்தான்.

கன்னமெல்லாம் ஒட்டி இளைத்த உருவம். முகத்தில் நாலைந்துநாள் தாடி. உடலிலிருந்த சட்டை வேட்டிகளெல்லாம் வெளுப்பு மங்கிப் பழுப்பு நிறமேற ஆரம்பித்திருந்தன. கழுத்துப பட்டையில் அழுக்கு அடையாக அப்பியிருந்தது.

"உட்காருங்கள்."

"இருக்கட்டும்!"

"பரவாயில்லை, உட்காரலாம்."

அந்த ஆள் உட்கார்ந்தான். தயக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் கண்கள் சோர்ந்துபோய்த் தோற்றமளித்தன.

"நீங்கள் யார் தெரியவில்லையே?" என்றேன். சீக்கிரமாகப் பேசி அந்த ஆசாமியை அனுப்பினால்தான் நான் நேரத்துக்கு ஆபீசுக்குப் போய்ச் சேர முடியும்.

"மதுரைதான். உங்கள் அண்ணாவின் மைத்துனனுக்குச் சிநேகிதன். என்னை நீங்கள் பார்த்திருக்கலாமே, உங்கள் அண்ணாவின் கல்யாணத்தின்போது?"

எனக்குச் சரியாக நினைவில்லை.

"இருக்கலாம்!"

வந்த ஆசாமி பார்த்த பார்வை பரிதாபமாக இருந்தது. யாராவது யாசகத்துக்கு வந்த ஆசாமியாக இருக்கும் என்று ஆரம்பத்தில் நான் நினைத்ததுபோக அவன் உறவு கூறிக்கொண்டு வருவது எனக்கு மிகுந்த வியப்பையே அளித்தது.

நான் பேசிய முறை அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை என்று தோன்றியது.

"ஜானவாஸத்தின்போது கூடக் காரின் அருகில் நான்தான் இருந்தேன்!"

"அப்படியா?"

"அது மட்டுமல்ல; இரண்டு நாட்களும் எடுபிடி வேலை செய்து அலைந்திருக்கும்போது என்னை நீங்கள் பார்த்திருக்கலாம். மேலும் சாப்பாட்டுப் பந்தியில் விசாரணை செய்து தண்ணீர் கேட்டது நான்தான்!"

எனக்கு எதுவும் அறவே நினைவில்லை. ஆசாமிக்கு என்ன தேவை, எதற்காக இங்கு வந்திருக்கிறார் என்று தெரியவில்லை. சும்மா பார்த்து விட்டுப் போக வந்திருப்பாரோ, என்னவோ!

"நீங்கள் இன்றைக்குத்தான் வந்தீர்களா பட்டணத்துக்கு?"

"இல்லை; இரண்டு நாட்களாயிற்று!"

"ஓஹோ!"

"வழி இடம் ஒன்றும் புரியாமல் சுற்றிக் கொண்டிருக்கிறேன்!"

"சரிதான்!"

கைக்கடிகாரத்தை ஒருமுறை பார்த்து விட்டு உடையணிந்து கொள்ளத் தொடங்கினேன். வழக்கமாகக் கிளம்பும் நேரத்துக்கு மேலேயே பத்து நிமிஷங்கள் ஆகி விட்டன. மூக்குக் கண்ணாடி, பேனா, மணிபர்ஸ் இவற்றை எடுத்து ஸ்டாண்டின் மீது தயாராக வைத்து விட்டுத் தலை சீவிக்கொள்ள ஆரம்பித்தேன் பரபரவென்று.

"உங்கள் விலாசம் தேடித்தான் அலைந்து கொண்டிருக்கிறேன்!"

"அப்படியா? என்னால் ஆக வேண்டியது ஏதேனும் உண்டா?" என்றேன் முகத்தை மட்டும் திருப்பியபடி.

"ஒன்றுமில்லை! ஏதாவது வேலை இருந்தால்...உங்களைப் பிடித்தால் கிடைக்கலாம் என்று கேள்விப் பட்டேன்!"

எனக்குச் சிரிப்பு வந்தது.

"யாரோ உங்களுக்குத் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள், பாவம்! இதற்காகவா ஊர் விட்டு ஊர், அதுவும் சென்னைக்கு வந்தீர்கள்?"

சட்டைப் பொத்தானைச் சரி செய்து கொண்டு கண்ணாடியில் ஒரு முறை பார்த்துக் கொண்டேன்; நெற்றியில் சரிந்திருந்த மயிரை ஒதுக்கி விட்டுக் கொண்டேன்.

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். அதுவும் இங்கே வேலை கிடைப்பது என்றால் குதிரைக் கொம்பாயிற்றே, பாவம்! வீண் அலைச்சல். ஊரிலேயே நீங்கள் இருந்திருக்கலாம்!

நிஜமாகவே அந்த ஆளைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருந்தது. எனக்குத் தாட்சிண்ய சுபாவம் உண்டு என்பது என் நண்பர்கள் கண்டு கொண்ட உண்மை. என்னை மீறி அது வந்துவிடக் கூடாது என்பதற்காகக் கஷ்டப்பட்டு அசட்டையாக நடந்து கொண்டேன். என்னுடைய இந்த விதமான ஏனோதானோ என்கிற நடத்தையை அந்த ஆளும் புரிந்து கொண்டிருப்பானோ என்று தோன்றியது.

ஆனால் அந்தக் கண்களிலிருந்து ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆசாமி யோக்கியன் என்றுதான் என் மனத்தில் பட்டது. தலையெழுத்தினால் இப்படி அலைகிறது போல் இருக்கிறது என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

"சரி! கிளம்பலாமா? எனக்கும் நேரமாகி விட்டது!" என்றேன்.

அந்த ஆசாமி அப்போது என்னைப் பார்த்த பார்வையிலிருந்த பரிதாபம் என்னை உலுக்கி எடுத்து விட்டது.

"சரி, ஆபீசுக்கு நேரமாகி விட்டது உங்களுக்கு. வழியில் சாப்பிட்டு விட்டு அப்படியே போவீர்களோ?";

இப்போது அந்த ஆசாமி இயல்பாக ஒரு நிதானத்துடன் பேசினார், யாரோ ரொம்பத் தெரிந்த ஒருவருடன் பேசுவது போல. ஆசாமி பட்டினி என்று புரிந்துகொள்ள எனக்கு வெகு நேரமாகவில்லை. ஆனால் வாய்விட்டுக் கேட்டால் என்ன? அவ்வளவு கௌரவமா?......

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்க முடியுமா? அது போதும்!"

முகம், கை எல்லாமே கெஞ்சின.

"தருகிறேன்!"

பக்கத்து அறையில்தான் தண்ணீர்ப் பானை இருந்தது. கண்ணாடித் தம்ளருடன் அறைக்குள் நுழைந்து திரும்பினேன்.

"இந்தாருங்கள்!"

தண்ணீரும் கையுமாக நான் வந்ததையும் கவனிக்காமல் மோட்டு வளையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த அந்த ஆசாமி சட்டென்று திரும்பினான்.

தம்ளரை வாங்கி மடக்கு மடக்கென்று ஆவலுடன் குடித்தான். நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ரொம்ப வந்தனம்... சரி... இனியும் உங்களைக் காக்க வைக்கக் கூடாது."

அவன் எழுந்தான்.

கதவருகில் இருந்த பூட்டை எடுத்து மாட்டிக் கொண்டேன். ஸ்டாண்டில் வைத்திருந்த கண்ணாடி, பர்ஸ் முதலிய வற்றை ஞாபகமாக எடுத்துக் கையில் போட்டுக் கொண்டேன். பூட்டையும், சாவியையும் கையில் எடுத்தபடி கிளம்பினேன்.

என்கூடவேதான் அவனும் வந்தான்.

தெருமுனை வந்தது.

"சரி! நான் வரட்டுமா? ஊருக்குப் போய்ச் சேருங்கள் நல்லபடியாக!"

"ஆகட்டும்."

கையைக் கூப்பி அந்த ஆள் விடை பெற்றுக் கொண்டான். இரண்டடி நகர்ந்திருப்பான்.

"ஒரு நிமிஷம்!"

திடுக்கிட்டவனாக அவன் திரும்பினான்.

"நீங்கள் இன்னும் சாப்பிடவில்லை அல்லவா?" என்று கேட்டேன்.

"ஆம்!" பசியினாலோ என்னவோ எச்சரத்தில் மென்று விழுங்கிக் கொண்டு சொன்னான். என்னுடைய இயல்பான சுபாவத்தை அதற்கு மேலும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

கை பைக்குள் நுழைந்தது. சாப்பாட்டு டிக்கெட் புஸ்தகம் வந்தது. ஒன்றைக் கிழித்து நீட்டினேன்.

"அதோ அந்தத் திருப்பத்தில்தான் இருக்கிறது ஹோட்டல். பசிதீரச் சாப்பிட்டுவிட்டுப் போங்கள். நீங்கள் பட்டினி என்று சொல்லாமலே எனக்குத் தெரிந்து விட்டது!"

என்ன ஆச்சரியம்!

அந்த ஆள் டிக்கெட்டை என்னிடமிருந்து வாங்கவில்லை. அவன் விழிகள் என்னவோ போல் ஆகின. உடல் நடுங்கியது.

"என்ன?" என்றேன் ஒன்றும் புரியாமல்.

"அப்படியே பாய்ந்து என்னைக் கட்டிக் கொண்டான் நடுரோட்டில். கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது.

"என்னை மன்னித்து விடுங்கள். நான் மகா பாவி."

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"பசிக்கொடுமையை உங்களிடம் சொல்ல என் கௌரவம் இடந் தரவில்லை. ஆனால் அதைத் தாங்கவும் என்னால் முடியவில்லை. தண்ணீர் கொண்டுவர நீங்கள் பக்கத்தறைக்குச் சென்றபோது உங்கள் பர்ஸிலிருந்து ஒரு ரூபாய் எடுத்துவிட்டேன். திருடி விட்டேன் ஸார்!"...என்று கூறி அழுதே விட்டான்.

திகைத்துப் போய் அவன் முகத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்றேன். தாட்சிண்யம் கூடாது என்று கௌரவமாக இருக்க நான் நினைத்தேன். யாசகம் கேட்பது கௌரவத்துக்குக் குறைவு என்று அவன் நினைத்தான். வேடிக்கைதான்!

அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு நான் கிளம்பினேன் காரியாலயத்துக்கு.

நேற்றைய பழம்பெருமை, இன்றைய கடும் உழைப்பு, நம்பிக்கை ஒளி வீசும் எதிர்காலம்—இது இந்தியாவின் நிலைமை. நாட்கள் செல்லச் செல்ல நவ இந்தியா வளர்ந்து வருகிறது.

இந்தியாவின் வளர்ச்சிக்காக அசோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனியாரும், இந்திய ஸிமெண்டஸாரும் சிறப்பான ஸிமெண்டைப் பெருமளவில் தயாரித்தளிக்கிறார்கள்.

தி ஸிமெண்ட் மார்க்கெடிங் கம்பெனி
ஆப் இந்தியா லிட்.,
தி அசோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.,
தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்.



ACC. 401 A TM

முன்யோசனை!

"ஏன் அப்பா! பேரு என்னசொன்னே?"

"கண்ணாயிரமுங்க!"

"இதோ பாரு, கண்ணாயிரம்! காரியத்திலே நீ கண்ணாயிருக்கணும். என்னான்னு எண்ணேயைக் கொண்டு வருகிறவனாயிருக்கணும். மசமசன்னு இருக்கக் கூடாது!"

"நீங்க சொல்லவே வாணாமுங்க. இந்தக் கண்ணாயிரம் சொல்லாமலே செய்வானுங்க எதையும். என்னான்கிறதுக்கு முன்னாடி எண்ணெயைக் கொண்டு வருவதோடு மட்டுமில்லீங்க. சீயக்காய்ப் பொடி, வெந்நீர், தலை துவட்டிக்கிற துண்டு எல்லாத்தையும் ரெடியா எடுத்து வைச்சிடுவானுங்க. இல்லாக்காட்டி திவான்பகதூர் திரவிய சகாயத்தின் வீட்டில் குப்பை கொட்டி நல்ல பெயர் எடுக்க முடியுங்களா?"

"பேஷ், பேஷ்! அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். ஊகத்திலேயே ஒவ்வொரு வேலையையும் செஞ்சிக்கிட்டுப் போகணும். எசமான் இதைச் சொல்லலையே, அதைச் சொல்லலையேன்னு வேலையிலே மசமசப்புக் காட்டக் கூடாது."

"அதுதான் முன்னமேயே சொல்லிட்டேனுங்களே! இந்தக் கண்ணாயிரத்தின் வேலையைப் பாருங்க; அப்புறம் சொல்லுங்க. நான் பெருமைக்குச் சொல்லிக்கலீங்க. இந்தக் கண்ணாயிரம் எந்த வேலை செய்தாலும் கனகச்சிதமாயிருக்குமுங்க. எங்க, எசமான்! இப்ப மணி என்ன ஆவுதுங்க?"

"ஒன்பது அடிக்க ஒன்பது நிமிஷமிருக்கு."

"இன்னிக்குச் சனிக்கிழமைதானுங்களே! இன்னும் ராகு காலம் வரல்லே! இப்பவே வேலையை ஒப்புக்கிறேனுங்க. உங்க துணிமணிகளை லாண்டிரியிலே கொண்டு போட்டுவிட்டு, அப்படியே உங்களுக்குக் கும்பகோணம் வெத்திலை வாங்கிக்கிட்டு..."

"வரப்போ..."

"ஏதாவது தபால் இருக்கான்னு பார்த்துக்கிட்டும் வந்துடறேனுங்க!"

"அட, பலே புத்திசாலியாயிருக்கியே! நீ நல்ல வேலைக்காரன்தானப்பா!" என்று தட்டிக் கொடுக்காத தோஷமாய்ப் புகழ்ந்தார் ஆளவந்தார்.

எது எது எந்தக் காலத்தில் செய்ய வேண்டுமென்ற அறிவும், அதற்கேற்ற யுக்தி—புத்தியும் கண்ணாயிரத்துக்கு இருப்பதாகத் தீர்மானமாகி விடவே, ஆளவந்தார் அந்தக் கணமே அவனைத் தமது வேலைக்காரனாக 'அப்பாயிண்ட்' செய்து விட்டார். நாளடைவில் அவன் அவருக்கு ரொம்ப ரொம்பப் பிடித்துப் போய் விட்டான். முன் யோசனைக்காரன் என்ற பட்டமும் வாங்கி விட்டான்.

அன்று மாலை முதற்காட்சி படம் பார்த்து விட்டுத் திரும்பிய ஆளவந்தார் அசாத்தியத் தலைவலியோடு திரும்பி வந்தார். வந்ததும் வராததுமாகக் கண்ணாயிரத்தைக் கூப்பிட்டுத் தலையை மிகவும் வலிக்கிறது என்றும், பிடித்து விடுமாறும் சொன்னார். "இதோ வந்து விட்டேன்" என்று சொன்ன கண்ணாயிரம் இரவு மணி ஒன்றடித்தும் தலையைப் பிடித்துவிட வரவில்லை. ஆளவந்தார் நிமிஷத்துக்கொருதரம் அவனைக் கூப்பிட்டுப் பார்த்து விட்டு அலுத்துச் சலித்துக் கண் அயர்ந்து போனார்.

பொழுது பல பல வென்று விடியவும், தலைவலி நீங்கி ஆளவந்தார் கண் விழிக்கவும், கண்ணாயிரம் அவர் எதிரே வந்து நிற்கவும் சரியாயிருந்தது.

"என்னடா! தலையைப் பிடித்துவிடக் கூப்பிட்டேன். வராமல் இருந்து விட்டாயே, இரவு முழுதும்!" என்று கடிந்து கொண்டார் ஆளவந்தார்.

"மன்னிக்கணும், எசமான்! நீங்க தலையை வலிக்கிறதுன்னு சொன்னீங்களா? உடனே எனக்கு ஒரு யோசனை தோணிச்சுங்க!"

"என்ன?"

"தலைவலி இருகுவலியாச்சன்னு? டாக்டரைக் கூப்பிட்டாற வேணுமுங்களா? அதனாலே அவருகிட்டப் போயி, ஐயாவுக்கு இப்படித் தலைவலியாயிருக்கு. அவசியம் நேர்ந்தால் கூப்பிட வருவேன்னு சொன்னேனுங்க. அப்புறம் இன்னொரு ரோசனை. ஓடிப்போய், 'நம்ம மருந்துக் கடையைத் திறந்துவையுங்க. தேவையேற்பட்டால் மருந்து எடுத்துப்போக வேண்டியிருக்கும்' என்று சொன்னேன். அப்புறம் திரும்பி வந்துக்கிட்டிருந்தேன் பாருங்க! சடார்னு தோணிச்சுங்க. வியாதி முத்தி விபரீதமாக முடிஞ்சதுன்னு வச்சுக்குங்க..."

"அதுக்காக உறவுக்காரங்களுக்கெல்லாம் போய்ச் சொல்லிட்டு வந்தாயாக்கும்."

"ஆமாங்க. எல்லாரும் என்ன ஆயிருக்குன்னு பாத்துப்போகச் சித்த நேரத்துக்கெல்லாம் வந்துடுவாங்க."

"அப்படியே இடுகாட்டுக்குப் போய் அந்த ஏற்பாட்டையும் பண்ணிவிட்டு வருவதுதானே?"

"அதென்ன அப்படி நினைச்சுட்டீங்க இந்தக் கண்ணாயிரத்தை! அங்கேயும் போய்ச் சொல்லாமல் வருவேனுங்களா? எல்லாம் ரெடியாயிருக்குதுங்க! முன் யோசனையோடு காரியம் செய்யறதிலே இந்தக் கண்ணாயிரத்தை யாரும் மிஞ்ச முடியாதுங்க. என்னங்க நான் சொல்றது?" என்று முடித்தான் கண்ணாயிரம்.

ஆளவந்தாருக்கு வந்த ஆத்திரத்திலும் சிரிப்பு வந்தது. "ரொம்ப சரியான வார்த்தை. என் காரியம் முடிஞ்சு போச்சுன்னு வைச்சுக்க, அப்புறம் இந்த வீட்டு வேலைக்கு ஒரு வேலைக்காரன் எதற்கு?"

"மெய்தானுங்க! வேண்டாங்க!"

"அதனாலே இன்னியோடு உன் சீட்டைக் கிழிச்சுப்புடறதாக வச்சிருக்கேன். என் யோசனை எப்படி? உன் முன் யோசனைக்கு என் யோசனை பிந்திவிடவில்லையே?" என்றார் ஆளவந்தார்.

—குறும்பன்

திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

முன்னுரை

முன்னுரை ஒன்று இருந்தால் நலம் என்கிறார் பத்திராதிபர்.

முனிவர் வாக்கால் விநாயகரைத் தொழுது வணங்குவதற்குமேல் வேறு என்ன முன்னுரை? கடினமான காரியம். தடைகள் பல. விக்னங்களைத் தீர்த்துக் கொடுப்பவன் அழகிய ஆனைமுகன்.

1

ஐந்து கரத்தனை
ஆனை முகத்தனை
இந்து இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து, அடி
போற்றுகின் றேனே!

'திருமந்திர மாலை' என்றும் 'திருமூலர் திருமந்திரம்' என்றும் வழங்கி வருகிற தவ நூலின் 'காப்புச் செய்யுள்' இது.

ஐந்து கைகளும், ஆனை முகமும் இளம்பிறைச் சந்திரன் போன்று வளைந்து ஒளியோடு திகழ்கிற வெண் கொம்பு ஒன்றும் உடையவரான விநாயகரை 'நந்தி மகன்' எனவும் 'ஞானக் கொழுந்து' எனவும் பக்தி பரவசத்தோடு பாடுகிறார் முனிவர்! விநாயகப் பெருமானுக்கு ஒற்றைக் கொம்பன் என்றும் ஒரு பெயர்.

'இந்து' என்றால் சந்திரன். இளம் பிறைச் சந்திரன் போன்று ஒளியும் அழகும் வளைவும் கொண்ட ஒற்றைக் கொம்பு என உபமானம் சொல்லுகிறார். எயிறு - தந்தம், கொம்பு.

'நந்தி' என்பது சிவபெருமானுக்கே உரிய பெயர். திருமூலர் பல இடங்களில் சிவபெருமானை 'நந்தி' என்ற பெயராலேயே பாடுகிறார்.

ஞானச் சுடராக ஒளி வீசுகிற பிள்ளைக் கடவுளை ஞானக்கொழுந்து என்று துதிக்கிறார். கொழுந்து என்பது பெருந் தீயினின்று பிறந்த சுடருக்கும் பசுமையான இலைக்கும் உரிய ஒரு சொல்.

புந்தி - புத்தி. என்னுடைய அறிவில் விநாயகரை வைத்து அவருடைய திருவடிகளைப் போற்றுகிறேன் என்று தொடங்குகிறார்.

கல்லிலும் செம்பிலும் தெய்வ உருவங்களைச் செய்து வழிபடுவதுபோலே, தம்முடைய உணர்வைக் கொண்டு ஐந்து கரங்களும் ஆனை முகமும் ஒற்றைக் கொம்புமுடைய அந்தத் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடுகிறேன் என்கிறார்.

புந்தியில் வைத்து, அடி
போற்றுகின் றேனே!

மூர்த்தி வழிபாடு என்ற பூஜையை மானசமாகச் செய்கிற தவயோகி, அந்த மானச தெய்வத்துக்கு அங்கங்

களும் வடிவத் தோற்றமும் கொடுத்து உள்ளத்தில் நிறுத்துகிறார்.'

விநாயகருடைய ஐந்து கைகளும் ஐந்து தொழில்களைக் குறிக்கின்றன என்பது பெரியோர்கள் சித்தாந்தம். பாசத்தை வைத்துள்ள கை படைப்புத் தொழிலைச் செய்கிறது.

"அஞ்சேல்" என்று சொல்லி அபய கரம் நம்முடைய பயத்தைப் போக்குகிறது. அங்குசம் தாங்கிய கை 'அழித்தல்' என்ற தொழிலைச் செய்கிறது. மோதகம் ஏந்திய கையானது 'கரப்பு' என்ற தொழிலைச் செய்கிறது. கரப்பு என்றால் மறைத்தல் — உலக அனுபவங்களை நமக்குக் கொடுத்து மெய்ப்பொருளை நமது பார்வையிலிருந்து மறைத்துவிடுவது! இதையே 'திரோதான சக்தி' என்று வடமொழியில் கூறுவார்கள். விநாயகருடைய வரதகரம் (வரம் தரும் கரம்) மக்களுக்கு வரம் நல்குகிற திருவருளைக் காட்டுகிறது! இப்படி ஐந்து செயல்கள் இணைந்த உருவமே ஆனைமுகக்கடவுள்.

சிவபெருமானுக்குரிய ஐந்து தொழில்களையும் விநாயகருக்கு ஏற்றிச் சொல்வது மரபு. அதாவது விநாயகப் பெருமானை சிவபெருமானாகவே எண்ணி வழிபடுவது முறை.

மற்றப் புலவர்களின் இலக்கிய நூல்கள் விநாயகர் வணக்கத்தோடு தொடங்குவது போலவே, திருமந்திரமும் தொடங்குகிறது. 'காப்புச் செய்யுள்' என்ற இந்தப் பாடல் திருமூலர் பாடியதா அல்லது பிற்காலப் புலவர் பாடியதா என்ற ஆராய்ச்சி ஒன்று இருந்து வருகிறது. அது நமக்கு அவசியமில்லை.

இந்த நூலைப் பயிலத் தொடங்கும் பக்தர்களுக்கு ஓர் அருமையான காப்பாகத் திகழும் இந்தத் தொடக்கச் செய்யுளை நாம் விட்டு விடலாகாது. புனிதம் நிரம்பிய இந்தக் காப்புப் பாடலை ஓதி வழிபட்டுத் திருமூலருடைய தவமொழியைச் சிந்திப்போமாக!

பம்பாய் மாதுங்கா ஆஸ்திக சமாஜத்தில் மார்ச் 5-ந் தேதியிலிருந்து 15-ந் தேதிவரை அதிருத்ர மகாயக்ஞம் வைதிக முறைப்படி அதிவிமரிசையாக நடைபெற்றது. பம்பாயில் முதன் முதலில் நடைபெற்ற இந்த யக்ஞத்தை மகாராஷ்டிர கவர்னர் திரு ஸ்ரீபிரகாசா ஆரம்பித்து வைத்தார். எல்லா வைதிகச் சடங்குகளையும் தம் சாஸ்திர சம்பிரதாயப்படி உபன்யாச சக்கரவர்த்தி சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் முன்னின்று சிறப்பாக நடத்தி வைத்தார். தென்னிந்தியாவிலிருந்து இருநூறு வித்வத் சிரோமணிகள் வந்து இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் பங்கு கொண்டனர். இந்த நற்காரியத்துக்குக் காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும், ராஜாஜியும் ஆசிகூறி வாழ்த்தியிருந்தார்கள். இந்த மகா யக்ஞத்துக்குப் பிறகு ஸ்ரீ ராம நவமி உத்ஸவமும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.


Send your GOODS by
QUICK TRANSIT SERVICE
AMRITSAR
NEW DELHI
BELANGANJ
KANPUR
LUCKNOW
GWALIOR
VARANASI
SATNA
PATNA
ALLAHABAD
AHMEDABAD
BHOPAL
JUBBULPORE
TATANAGAR
HOWRAH
SHALIMAR
AKOLA
AMRAOTI
NAGPUR
WADI BANDAR
POONA
SECUNDERABAD
SHOLAPUR
HYDERABAD-DN.
VIJAYAWADA
KOLHAPUR
SANGLI
ADONI
BELGAUM
HUBLI
YERRAGUNTLA
HARIHAR
DEVANGERE
SALT COTAURS
BANGALORE CITY
GOODS INSPECTOR.
WADI BANDAR.
The Going is Safe & Quick!
CENTRAL RAILWAY

இராமாயண நாட்டிய நாடகம்

சாமி

ராமாயண காவியத்தை எத்தனை விதங்களாக அமைத்து அனுபவித்தாலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புதுமையும் எழிலும் மிளிர்கிறது. சமீபத்தில் நாட்டிய வடிவிலும் முழு ராமாயணம் வெளிவரத் தொடங்கியுள்ளது.

சென்ற மார்ச் 25ல், ஸ்ரீராம நவமியன்று சங்கீத சபைகளில் பழமையான பார்த்தசாரதி ஸ்வாமி சபையின் ஆதரவில் திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபத் திறந்தவெளி மேடையில் அரங்கேற்றப்பட்ட திருவாங்கூர் சகோதரிகளின் ராமாயண நாட்டிய நாடகம் கண்குளிரக் கண்டு இன்புறுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தது. இந்திய நடனங்களின் பல்வேறு விதங்களையும் திரைப்படத்தில் காண்பது போல் வேகத்துடனும், விறுவிறுப்புடனும், பகட்டுடன் ஆடிக் காட்டிப் புகழடைந்துள்ள ராகினி, பத்மினி சகோதரிகள் தங்கள் குழுவினருடன் இப்போது சம்பூர்ண ராமாயணத்தையே நாட்டியமாக ஆடிக் காட்டுகின்றனர். திரைப்பட அனுபவம் மிக்க உள்ளவர்களாதலால் நவீன சாதனங்கள் அனைத்தையும் கையாண்டு படத்தில் காணும் வேகத்துடனும், பிரமிப்பூட்டும் செயல் திறமையுடனும், காட்சிகளையும், உடைகளையும் ஏராளமான செலவில் அமைத்து வெற்றிகரமாக இதை ஆடிக் காட்டுகின்றனர். பரதநாட்டியப் பகுதியுடன் கதகளி நடனங்களும், கிராமிய நடனங்களும், நாடகப் பாணியைத் தழுவிய நடிப்புகளும் கலந்து கலந்து ஊடுருவிச் செல்லுகின்றன. திரைப்பட "டெக்னிக்"களும் சினிமா டெக்னிக்கும் சிற்சில இடங்களில் கையாளப்பட்டிருப்பவை நாடகத்தை மனோகரமாகச் செய்ய உதவுகின்றன.

இரண்டரை மணி நேரத்தில், ஆரம்பத்திலிருந்து பட்டாபிஷேகம் வரையில் நடத்திக் காட்ட வேண்டுமானால் காட்சிகள் எவ்வளவு வேகமாக ஓட வேண்டும் என்பது விளங்கும். திரைப்படத்தைவிட அதிக வேகமாகத்தான் ஓடுகின்றன. ஆனால் காட்சிகளின் அழகு குன்றாமல், அடுக்குத் தவறாமல் அமைப்பாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பின்னணி இசையும் ஆட்டத்தின் விறுவிறுப்புக்கும் வேகத்துக்கும் ஈடு கொடுக்கிறது. ஹரிகதா காலக்ஷேப நிபுணர் எம்பார் அவர்களின் சாகித்ய அமைப்பும் ஸ்ரீமதி வஸந்த "அக்கா"வின் (ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரியை இப்படித்தான் வெகு செல்லமாகப் பத்மினி சகோதரிகள் அழைக்கின்றனர்.) இசை அமைப்பும், ஸ்ரீமதி பொன்னம்மாளின் இசையும் நாடகத்துக்கு ஏற்றபடி அமைந்திருக்கின்றன. எதையுமே ஜனரஞ்சகமாக வழங்குவதில் நாட்டமும் அனுபவமும் உள்ள ஒரு குழுவினர் அளித்துள்ள இந்த ராமாயண நாட்டிய நாடகம் ஒரு ரஞ்சகமான காட்சி.

இக் காட்சியின் அரங்கேற்றத்தை ஒரு புனித நாளில் நிகழ்த்தி, அதன் பலனை ஒரு புனித கைங்கரியத்துக்காக அர்ப்பணம் செய்தது மிகவும் பாராட்டுதற்குரியது. பார்த்தசாரதி சபை வைர விழாக் கொண்டாடிய பழம்பெரும் சபையென்றாலும் தனக்கென்று ஒரு சங்கீத மண்டபம் இது வரையில் அமைத்துக் கொள்ளவில்லை. சமீப காலத்தில்தான் இக்காரியத்தில் இச் சபை நிர்வாகிகள் முனைந்துள்ளார்கள். ஒரு லட்சம் ரூபாய் செலவில் மண்டபம் ஒன்று கட்டி முடிக்கத் திட்டமிட்டு, பல உதவிக் கச்சேரிகள் மூலம் வேகமாக நிதி திரட்டி வருகிறார்கள். கலையை வளர்ப்பதில் தங்களுக்கும் பொறுப்பு உண்டு என்று மத்திய சர்க்கார்கூட இதற்கென 25000 ரூபாய் மானியமாக அளித்துள்ளனர். திருவாங்கூர் சகோதரிகளின் ராமாயண அரங்கேற்ற நாட்டிய நாடகத்தில் ஏறக்குறைய 19000 ரூபாய் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. கலைஞர்களின் ஆதரவு இருக்கும்போது சபையின் உத்தேசம் சீக்கிரமே பூர்த்தியாகி விடும் என்பதில் சந்தேகமில்லை. ராமாயண நாடகமும் ஒவ்வொரு முறையும் நடிக்கப்படும்போது மேன்மேலும் மெருகு பெற்றுப் பிரகாசிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

18 சிறந்த மூலிகைகள் கலந்து முதல்முதலாகதயாரிக்கப்பட்ட



ஆயுர்வேதிக்

பேஸ்ட்டும், பௌடரும்

உலகத்தில் எல்லா டூத்பேஸ்ட்டும், பௌடரும் பற்களை சுத்தம் செய்கிறது. ஆனால், ஈறுகளை பலப்படுத்த என்னென்ன கலவைகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன என்று யோசித்துப் பாருங்கள். முதல்முதலாக ஆயுர்வேதிக் 'விக்கோ வஜ்ரடன்தி' (பேஸ்ட்டும், பௌடரும்) 18 சிறந்த மூலிகைகளினுல் தயாரிக்கப்பட்டது. ஈறுகளை நன்ருக இறுகச்செய்து பற்களை மிகவும் பலப்படுத்துகின்றன. ஒரு முறை உபயோகித்து திருப்தியடையுங்கள்.

விக்கோ வஜ்ரடன்தி

பேஸ்ட்டும், பௌடரும்

VICCO LABORATORIES DADAR T.T., BOMBAY 14

ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ் ஆர். எல். கௌடர் அண்டு கம்பெனி, சென்னை -1
மெஸர்ஸ் கே. எஸ். கௌடர் அண்டு கம்பெனி, பெங்களூர் -9
மெஸர்ஸ் என். தேசாய் கவுண்டர் அண்டு கம்பெனி, கோயமுத்தூர்-1

அன்பே ஆரமுதே
தி. ஜானகிராமன்

அத்தியாயம் ஒன்று

அனந்தசாமி குடையும் பையுமாக வெளியே கிளம்பினார். நடை மாடத்திலிருந்த செருப்பை மாட்டிக் கொண்டு, "போயிட்டு வரேம்மா!" என்று சொல்ல வாயெடுத்தார். சொல்லவில்லை. ஞாபகம் அவர் வாயைப் பொத்தி விட்டது. அந்த நினைவில் அவர் முகம் மலர்ந்தது. வருத்தத்திலும் வைராக்கியத்திலும் மலரும் மலர்ச்சி அது. தேர்ந்த சன்யாசிக்கு வருகிற மலர்ச்சி.

வாசல் திண்ணையில் பங்கஜம் பாட்டி உட்கார்ந்திருந்தாள்.

"பாட்டி! அம்மா இல்லே. நீங்கதான் சொல்லணும். ஜாக்கிரதையாப் போயிட்டு வாடாப்பான்னு" என்று சிரித்தார் அனந்தசாமி.

பாட்டி உடனே பதில் சொல்லவில்லை. அவளுக்கு ஆச்சரியமோ, பூரிப்போ, அனுதாபமோ — எது என்று சொல்ல? அந்தக் கண்கள் பெரிய கண்கள். இரண்டிலும் சதை வளர்ந்து ஆபரேஷன் ஆகி, டாக்டர் இரண்டு பூதக் கண்ணாடிகளை மாட்டியிருந்தார். கோவில் வாசலில் விற்கும் அல்லிஅரசாணி மாலையிலும் தல புராணங்களிலும் வரும் கண்களைப்போல் விசுவரூபம் கொண்டிருந்தன அந்தக் கண்கள். என்ன உணர்ச்சி என்று சட்டென்று கண்டுபிடிக்க முடியாத கண்கள்.

"என்ன பாட்டி?" என்று கேட்டார் அனந்தசாமி.

"போயிட்டு வாங்கோ. ஜாக்கிரதையாப் போயிட்டு வாங்கோ."

"அப்படித்தான்."

"நீங்க சொல்கிறது சரி. ஆனா உங்க அம்மாவாக ஆக முடியுமா நான்? பூமாதேவின்னா அந்த அம்மாதான். அவர் மாதிரி யாரும் ஆகமுடியாது, சுவாமி. இல்லே, உங்க மாதிரிதான் ஒரு பிள்ளை கிடைச்சுடுமோ? வெள்ளை வேஷ்டி கட்டிண்டிருக்கிற பிள்ளைகளையா நம்பினா உங்கம்மா?"

"அதனால் என்ன இப்ப? வெள்ளை வேட்டின்னா சம்சாரம் அதிகம். காவி வேட்டிதான் செஞ்சு போடணும்!"

"அப்படிச் சொல்லி விடறதா? பெண்டாட்டி, பிள்ளை குட்டின்னு இல்லாதபோது அம்மா மாத்திரம் வந்து விடுமா காவி வேட்டிக்கு! நீங்க மகான். உங்க கையாலே வாங்கிச் சாப்பிடக் கொடுத்து வச்சா அந்த அம்மாளும். உம்ம கையாலேயே கடைசியிலே ஜாம் ஜாம்னு சுவர்க்கத்துக்கும் போய்ச் சேர்ந்தா. சொர்க்கம்னு கூடச் சொல்ல மாட்டேன். போனா எந்த ஜீவனும் திரும்பி வராதாமே, அந்த மாதிரி இடத்துக்குப்போயிருப்பர் உங்கதாயார். இந்த மகானோட கைன்னா அனுப்பி யிருக்கு!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவ பரம சாது. குழந்தை மாதிரி கடைசி வரைக்கும் இருந்தா. அதனாலேதான் ஸ்வாமி அவளை விடமாட்டார்னு நினைக்கிறேன்."

"ஆட்சேபணை என்ன? ஆனா அவருக்கு என்ன கைவல்யம் கிடைச்சாலும் உங்களுக்கு நஷ்டம் நஷ்டம் தான். இனிமே என் மாதிரி இழுத்துண்டு கிடக்கிறதுகளைப் பார்த்து, இப்படித்தான் எங்க அம்மாவும் கிழவியா யிருந்தா, முடியாமக் கிடந்தாள்னு இந்தக்கிழக்கோலத்தை மாத்திரம் பார்த்து அம்மாவைப் பார்க்கிறாப்போல் ஆசுவாசப் படுத்திக்கணும். காலம் யாரை விடும்? ம். சரி இன்னிக்குத்தான் வெளியிலே கிளம்பறாப்போலிருக்கு?"

"ஆமாம், பாட்டி! அம்மா இல்லாமல், எப்படி இருக்கப் போறேம்னு நினைச்சுண்டே பதினஞ்சு நாள் ஓடிப் போயிடுத்தே. ரெண்டு நாளா ரொம்பச் சோம்பல் அடிக்கிறது. பொழுதும் போகலே. கிளம்பி விட்டேன். வரட்டுமா...?"

"ஜாக்கிரதையாகப் போயிட்டு வாங்கோ."

அனந்தசாமி அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே தெருவில் இறங்கினார். குடையைப் பிரித்துக் கொண்டார். இருபது வருஷங்களாக நடக்கிற நடையை மீண்டும் தொடங்கினார்.

நடை, நடை, நடையான நடையில்லே. சென்னைப் பட்டணத்தில் அவர் கால் படாத வீதி ஏது? சந்து ஏது? ரிக்‌ஷாவில் ஏற மாட்டார். அவசரமிருந்

தால் பஸ்ஸில் ஏறுவதுண்டு. தெருவுக் குத் தெரு, சந்துக்குச் சந்து அவருக்கு வாடிக்கை. ஒவ்வொன்ருகப் பார்த்துப் போகக் காலேப் போல் ஒன்றும் பயன் படுவதில்லே. அந்தக் கால் ராயப்பேட் டைச் சந்திலிருந்து மௌப்ரேஸ் சாலே யில் வந்து ஏறிற்று. பத்தடி நடந்ததும் '' குட்மார்னிங் அங்கிள் '' என்று ஒரு கிச்சுக் குரல் கத்திற்று. வலது தோளில் மார்பின் குறுக்கே அவர் போட்டிருந்த காவி வஸ்திரத்தைப் பின்னிருந்து இழுத்தது.

'' அட, மாஸ்கியா, குட்மார்னிங் '' என்ற குழந்தையைப் பார்த்தார் அனந்த சாமி. சட்டைக்காரப் பெண். ஏழு வய திருக்கும். செம்பட்டை மயிர். உடம்பு மண் நிறம். மண் ஏறிய கவுன் அதற்கு மேலே. வாய்க் கடைகளில் வெள்ளே.

''மம்மிக்கு ஜுரம் '' என்று சட்டைக் கார இங்கிலீஷிலேயே சொல்லிற்று அது.

'' அப்படியா? எத்தனே நாளாக ?''

'' நீங்கள் வந்து பாருங்க, அங்கிள்.''.

அனந்தசாமி உள்ளே போனுர்.

பனே அகணி வேய்ந்த கட்டில் ஒன்றில் 'மம்மி' படுத்துக் கொண்டிருந்தாள்.

'' வாங்க டாக்டர் !''

'' என்ன கெல்லி ? என்ன உடம்பு ?''

'' ஒரு வாரமா ஜுரம், டாக்டர் !''

''மாஸ்கிகிட்ட சொல்லி அனுப்பக் கூடாது?''

''மாஸ்கியை அனுப்பினேன். உங்கள் தாயார் காலமாகி விட்டதாக வாசலில் ஒரு பாட்டி சொன்னுளாம். மாஸ்கி வந்து சொல்லிற்று. எனக்கு வந்து பார்க்கக்கூட முடியவில்லே, டாக்டர்! அன்றைக்குச் சாயங்காலம் மாஸ்கியை மாதாகோவிலுக்கு அனுப்பி ஒரு விளக்கு ஏற்றி வைக்கச் சொன்னேன். அப்புறம் உங்கள் தாயாருக்காகத் தொழுதேன். நான் வேறு என்ன செய்ய முடியும்? அங்கிள்! நீ இப்படி அனுதையாப் போய்விட்டாயே அங்கிள் !'' என்று கெல்லி படுத்துக் கொண்டே அரற்றி ஞள். கன்னத்தில் சுருங்கிக் கிடந்த கொஞ்ச நஞ்சம் சதையும் கோணியது. வாய் இழுத்துக் கொண்டது. சுருங்கின கன்னம் நனேந்தது.

'' என்ன உடம்பு உங்க அம்மாவுக்கு?''

'' எண்பத்திரண்டு வயசு.''

'' நீ இனிமேல் யாருக்குச் சோறுக்கிப் போட்வே?'' என்று தமிழில் ஆரம்பித் தாள் அவள்.

'' எனக்குத்தான்.''

'' நீ மட்டும் சாப்டப் புடிக்காதே, உனக்கு.''

அதைக் கேட்டு நாலு விநாடிகள் கண்ணெடுக்காமல் அவளேப் பார்த்தார் அனந்தசாமி. திடீரென்று இந்த உலகம் முழுவதும் அவருக்குத் தாயாகத் தோன் றிற்று. கெல்லி, மாஸ்கி, சுவரில் மாட்டி யிருந்த வர்ணம் போன ஏசு, மூலேயில் அந்த அழுக்குச் சாய்வு நாற்காலியில் ஒண்டிக் கண்ணே மூடிக் கிடந்த பூனேக் குட்டி எல்லாமே அவருக்குத் தாயாகத் தோன்றின. இருதயம் முழுதும் விம்மிக் கொண்டே அந்த அறை, சாலே, வெளி வானம் எல்லாவற்றிலும் பம்முவது போலிருந்தது. பார்வை மட்டும் கெல் லியை விட்டு அகலவில்லே. பார்க்காத பார்வையாகக் குத்திட்டுக் கிடந்தது. அம்மாவின் அந்தக் கண்கள் - அடிக்கடி நீர் வடியும் வலது கண் - ஆறு மாதங்கள் அவன் படுத்த படுக்கையாகக் கிடந்த கிடை அனந்தசாமி அவள் கையை வருடிக் கொண்டே 'ராம ராம ராம' என்று அவளுடைய அமைதிக்காக மன் முடிய நிசிகள்... .

'' பெரிய டாக்டரை அழைச்சிண்டு வரேம்மா.''

''எனக்கு என்னத்துககுடா பெரிய டாக்டர்? உன் மருந்தைத் தவிர வேறு ஒண்ணையும் தொட மாட்டேன். உன் பேச்சைக் கேட்காத சாமி, பெரிய டாக்டர் மருந்திலே புகுந்து விடுவனே?''

பட்பட் பட்பட்டென்று வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் பறந்தது. அடி வயிற்றைக் கலக்கும் ஓசை.

''செல்வி! நான் மருந்து கொடுக்கிறேன். கவலைப்படாதே.''



'' நீ வந்தா எனக்கு என்ன கவலெ?... நீ வந்து நின்னலே போதும். நான் எந்துக்குனு நடப்பேன்......ஒன்று செய்கிறயா ?''

'' என்ன ?''

'' அடுப்புமேல் தேத்தண்ணீர் இருக்கிறது. பக்கத்திலே பால் டப்பாவில் கொஞ்சம் சர்க்கரை இருக்கிறது. கொஞ்சம் கரைச்சுச் சாப்பிடேன்.''

'' ஐயையோ, நான் இப்பத்தான் சாப்பிட்டுக் கிளம்பினேன். உனக்கு வேணும்னு கலந்து தரேன்.''

'' எனக்கு இப்பொழுது வேண்டாம். வாயெல்லாம் கசக்கிறது......மருந்தைக் கொடு. அப்படியே மாஸ்கிக்கும் கொடுக்க வேண்டும். நேற்று ராத்திரி இருமிக் குரைத்துத் தள்ளிவிட்டாள்.''

இரண்டு பேருக்கும் மருந்தை மடித்துக் கொடுத்து விட்டு வெளியே வந்தார் அனந்தசாமி. மாஸ்கி பின்தொடர்ந்து வந்து, '' ரொம்ப நன்றி, அங்கிள். நீங்க கூட ரொம்ப இளைச்சுப் போயிட்டீங்களே '' என்று மரியாதையாக, நிணமாகச் சொல்லிற்று.

'' நானு! இளைச்சா போய்ட்டேன்? இன்னும் ஒரு மாசத்திலே பாரு! உனக்கே அடையாளம் கண்டுபிடிக்க முடியாது... அப்படிக் குண்டாகி விடுவேன்... வரட்டுமா ?..வந்து...ஆல்பர்ட் ?''

''அப்பா ஒரு வாரமா வல்லே'' என்று அழாத குறையாக உதட்டைப் பிதுக்கினுள் மாஸ்கி.

'' வந்துவிடுவார். அதோ பார் அவர் கிட்ட சொல்லு'' என்று வாசலுக்கு நேராகச் சுவரில் மேல் பக்கம் சாய்ந்த, வர்ணம் போன ஏசுவின் படம் இரும்பிக் காட்டிவிட்டு நடந்தார் அனந்தசாமி.

ஆல்பர்ட்டு குச்சித்த ஸ்வாதீனம் இல்லே. பிராட்வே, மௌண்ட் ரோட் - இப்படி எங்கேயாவது கடை வாசலில் உட்கார்ந்து ஒரு குச்சியைப் பாம்பு விரலுக்கு அடியில் வைத்துக் '' கட்டு

கட கட்டு கட, கட்டு கட்டு கட்டு'' என்று தந்தியடித்துக் கொண்டிருப்பான். பசித்தால் போகிறவர்களிடம் கையை நீட்டுவான். நினைவு வந்தால் வீட்டுக்கு வருவான். இல்லாவிட்டால் பீச் ஸ்டேஷன், மத்திய தந்தி நிலையவாசல் இப்படி எங்கேயாவது படுக்கை, தந்தி.

இந்த ஆல்பர்ட்டுக்குப் பைத்தியம் தெளிய வேண்டும் என்றுகூட அவர் பலதடவை ராமஜபம் செய்திருக்கிறார்.

ஐந்தாம் நம்பர் பஸ் ஒன்று ரத்தம் பாய்ந்து வருகிறாற்போல் சீறிக்கொண்டு எதிரே வந்தது. அவர் சற்று ஒதுங்கிக் கடையோரமாக நின்றார். வெற்றிலைப் பாக்குக் கடைக் கண்ணாடியில் அவர் உருவம் இடுப்புவரையில் தெரிந்தது.

மாஸ்கி சொன்னாற்போல் இளைத்துத் தானிருக்கிறோம். தன் நிழலைப் பார்த்ததும் அம்மாவின் நினைவு வந்தது அவருக்கு. அதே அச்சு அந்த முகம். அதே நிறம். வித்தியாசம், இவர் தலை மொட்டை, இவர் முகத்தில் ரோமம், இவர் காது தோடில்லாத வெறும் காது. அவ்வளவுதான்.

அனந்தசாமி நல்ல கறுப்பு. ஆனால் இதோ புதிதாகத் தார் ஊற்றியிருக்கிறார்களே, சாலையோரத்தில் — அந்த மாதிரிக் குழைத்த கறுப்பில்லை. அதோ கருங்கல் ஜல்லி கொட்டியிருக்கிறார்களே, அந்த மாதிரி சற்று நரைத்த கறுப்பு. அகல முகம். உருண்டை முகம். விரிந்து பலகை போலிருந்தது மார்பு. மார்பின் இரண்டு பக்கங்களும் இரண்டு பெரிய இரும்புப் பட்டம் வைத்து அடித்தாற் போலிருக்கும். அந்தக் காலத்தில் ரிஷிகேசத்திலும், அனுராதபுரத்திலும் மூச்சை இழுத்து இழுத்து உள்ளே அடக்கிக் காப்பாற்றிய பிராணாயாமத்தின் பலனோ என்னவோ, கையும் உருண்டு திரண்டிருக்கும். முழங்கையை மடக்கினால் புஜத்தில் ஓர் இரும்புப் பந்து முண்டும். காலும் அப்படித்தான். ஆடு சதையில் தென்னங்கீற்றின் அடிமட்டையைப் போல் ஓர் உறுதி. இருபது வருஷ நடை தந்த உறுதி. கணுக்கால் வரையில்

ஒரு தட்டுச் சுற்று வேஷ்டி. மேலே மார்பின் குறுக்கே ஒரு நாலு முழத் துண்டு. ஐந்நூறு, அறுநூறு மருந்துப் பொட்டலங்களை வைத்துச் சுற்றிய ஒரு துணி மூட்டையும், கண்ணாடிக்கூடும், பித்தான் கழன்ற ஒரு சின்னத் தோல் மணிபர்ஸும் கொண்ட ஒரு கான்வாஸ் பை. அது தோளில் தொங்கும். ஒரு குடை.

பார்த்த வாக்கில் அவரை வைத்தியர் என்று சொல்வது சிரமம். தொழிற்சாலையில் சம்மட்டி அடிக்கிற ஆளா, ரயிலடி கூட்ஸ் பிரிவில் அரிசி மூட்டைகளை அலாக்காகத் தூக்கி எறிகிற ஆளா, பெரிய அன்னதானங்களில் அண்டாக்களையும் கப்பரைகளையும் அநாயாசமாக அடுப்பில் ஏற்றி இறக்கும் பரிசாரகளு-இப்படி வெவ்வேறு ஐயங்களை எழுப்பும் முரட்டு உடல் அவருடையது.

பார்த்த வாக்கில் துறவி என்று சொல்வதும் சிரமம். அந்த அரை வேஷ்டியும் காவி வஸ்திரம் என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது. காவி நிறமோ, குங்குமப்பூ நிறமோ இல்லை அவை. சவுக்காரம் போடாமல், சலவைக்கும் போடாமல் மாதக் கணக்கில் வெறுமே தண்ணீரிலேயே நனைத்து, நனைத்து உலர்த்தி வரும் துணியில் ஏறும் பழுப்பு.

பழகின வாக்கிலும் துறவி என்று சொல்ல முடியாது. மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல ஒரே ஊரில் தங்காத சன்யாசி இல்லை அவர். தண்டு கமண்டலம் ஏந்துகிற சன்யாசியும் இல்லை. மடத்தில் ஒதுங்கும் சன்யாசி இல்லை. காசு பணத்தைத் தொடாத சன்யாசி இல்லை. அவருக்குப் பாங்குக் கணக்கு உண்டு. பதினாயிரம் ரூபாய் சேமிப்பு உண்டு. தங்குவதற்கு வீடு உண்டு. நாலு இல்லறங்களுக்கு நடுவில், இரண்டு அறைகள் கொண்ட பகுதியில் குடியிருப்பு. அந்தப் பகுதி கொண்ட வீடு ராயப்பேட்டையில் ஒரு சந்தில் இருக்கிறது. அங்கிருந்துதான் புறப்பட்டு இப்பொழுது வெளி வந்தார் அவர். பண்டம், பாத்திரம், பாய், தலையணை, மேஜை, நாற்காலி எல்லாம் அங்கே இருக்கின்றன. ஒரு மாதத்துக்குக் காணும்படியாக அரிசி, புளி, அஞ்சரைப் பெட்டி தானியங்கள், தேயிலை, சர்க்கரை அவ்வளவும் அந்த அடுக்களையில் இருக்கின்றன.

அத்தனையிருந்தும் அவர் சன்யாசிதான்.

அத்தியாயம் இரண்டு

"நான் சன்யாசியா?" என்று தம்மையே அவர் கேட்டுக் கொள்வதுண்டு.

"இத்தனை குடும்பங்களைக் கட்டிண்டு, இத்தனை கவலையை மனசிலே குடிவச்சுண்டு, நீர் சம்சாரி இல்லே சன்யாசின்னு நான் கேட்பேனய்யா?" என்று மங்களம் பாட்டி அவரைக் கேட்டிருக்கிறாள்.

அந்தக் குடும்பங்களில் நாலைந்து இப்பொழுது அவர் நினைவில் வந்திருக்கிறது. அங்கேதான் அவர் கிளம்பி யிருக்கிறார் இப்பொழுது. முதலில் மீர்சாகிப் பேட்டை லத்தார் சாயபு வீட்டுக்குப் போக வேண்டும். அவர் மனைவிக்கு இரண்டு வருஷங்களாக க்ஷயரோகம். அங்கிருந்து திருவல்லிக்கேணிக்குப் போய் விருத்தகிரி முதலியாரின் மூத்த பிள்ளைக்கு - திடீர் திடீர் என்று கீழே விழுந்து இழுத்துக்கொண்டு நாலு நாழி நினைவில்லாமல் கிடந்துவிடும். அந்தப் பையனுக்கு மருந்து கொடுக்க வேண்டும். சிந்தாதிரிப்பேட்டையில் சலவைக் கடை வைத்திருக்கும் கோவிந்தன் தம்பி - எழும்பூரில் கந்தசாமி அய்யர்-மாம்பலத்தில் சுப்பராம பாகவதர் - அவசரமாகப் பார்க்க வேண்டிய கேசுகள் இல்லை இவைகள். ஆனால் அவசியம் பார்க்க வேண்டியவை. ஏனென்றால், மனுஷனாகப் பிறந்த வேறு யாரிடத்திலும் மருந்துக்குக் கைநீட்டுகிறவர்கள் இல்லை அவர்கள்.

கார் ஹாரன் ஒன்றும் கேட்கவில்லை. ஆஸ்பத்திரிக்குப் பயந்து வாடகைக் கார் ஓட்டுகிறவர்கள் கூட மரியாதையாக, கருணையுடன் ஹாரன் கொடுக்காமல் போய்க் கொண்டிருந்தார்கள். அந்த வெள்ளை வெய்யில் கஜகஜ வென்று சென்னைப் புழுக்கம் கிளம்பி விட்டது. காற்றை மடியில் கட்டிப் பிடித்துக் கொண்டு, விடமாட்டேன் விடமாட்டேன் என்று அழ அழ வைக்கிற புழுக்கம் தனியாட்சி செலுத்துகிற நேரம். சாலையில் தண்ணீரை வேறு தெளித்து, அந்த ஆவியின் வெத வெதப்பையும் அதோடு சேர்த்து விட்டிருந்தார்கள்.

எந்தப் புழுக்கமும் அவரை நிறுத்த முடிந்ததில்லை. எந்த மழையும் காற்றும் நிறுத்தியதில்லை. புயல் அடித்து, மரங்கள் குறுக்கே விழுந்து தந்தி மரம் கோணி, கொள்ளை யடித்த அலங்கோலமாக ?திகள் நடுங்கின போதுகூட அவர் லத்தார் சாயபு வீட்டுக்குப் போகாமல் இருந்ததில்லை. பழைய மாம்பலம் சாக்கடைகளும் மழை நீரும் ஐக்கியமாகித் தெருக்களில் தொடை அளவுக்கு மாசக் கணக்கில் நின்றபோதுகூட அவர் நின்றதில்லை. அம்மாதான் இப்பொழுது கட்டிப் போட்டுவிட்டாள், வீட்டோடு வீடாக. அதாவது அம்மா இல்லாதது அவரைக் கட்டிப் போட்டு விட்டது.

இனிமேல் எல்லோரும் அம்மா தான். சத்தார் சாயபுவின் குழந்தைகள் அம்மா இல்லாமல் எப்படி உயிர் வாழும்? எனும்போ, தோலோ, அம்மா அம்மா தானே! அந்த அம்மாளைப் பார்க்காமல் எப்படி யிருக்கிறது?

சற்று வேகமாக நடந்தார் அவர். யாரையோ ,நிமர் என்று காப்பாற்றுவதுபோலப் பெரிய சத்தத்துடன் ப்ரேக் போட்டுக்கொண்டு ஒரு கார் நிற்கிறது. ராயப்பேட்டை முழுவதுமே அதிர்ந்து போய் அந்தக் காரைப் பார்த்தது. அனந்தசாமியும் பார்த்தார்.

"நான்தான் சாமி."

"அட, நீயா! ஏன் இப்படி சடார்னு ப்ரேக் போட்டே? டயர்கியர்..."

"அதெல்லாம் இல்லீங்க. சாமியைப் பார்த்துத்தான் நிறுத்தினேன். வீட்டுக்குத்தான்போயிட்டு வரேன். இப்பத்தான் கிளம்பிப் போறீங்கன்னு சொன்னுங்க வாசல்லே ஒரு பாட்டியம்மா, ஓடியாந்தேன். ஏறுங்க!"

"எதுக்கு?"

"உங்களைக் கையோட அளச்சிட்டுப் போகத்தானே வந்தேன். அம்மா அவசரமாகக் கூட்டியாரச் சொன்னுங்க."

"எதுக்கு?"

"என்னமோ தெரியலெ. ஓடிப் போய் நான் சொன்னேன்னு இட்டாடான்னுங்க...."

"சாயங்காலமாவந்தால் போதாதோ? நான் அவசரமா இரண்டு இடத்துக்குப் போயாகணுமே."

"அப்புறம் போயிக்கலாம், வாங்க. அப்பாலெ வண்டியிலேயே இட்டுப் போறேன்."

"ஏன் அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லையா?"

"அதென்னமோ தெரியலெ. நீங்க ஏறுங்கனேன்."

இன்னும் சற்று நின்றால் அவனே தூக்கி அவரை உள்ளே போட்டுவிடுவான் போலிருந்தது. பேசாமல் காரில் ஏறிக்கொண்டார். கார் அப்படியே இடது புறம் வளைந்து பீட்டர்ஸ் சாலை வழியாகப் பறந்தது.

மறுபடியும் கேட்டார் அவர். "என்ன குருசாமி இவ்வளவு அவசரம்?"

"பழக்கமாப் போயிடிச்சுங்க. வண்டியை எடுத்தா, அம்பது மைலுக்குக் குறைஞ்சு கால் அமுங்கறதில்லே."

"அதைச் சொல்லலேப்பா நான். அம்மாவுக்கு உடம்பு கிடம்பு சரியாயில்லையா? இவ்வளவு அவசரமா வழியை மறிச்சு ஏத்திட்டுப் போறியேன்னு கேட்டேன். அண்ணு ஊரிலே தான் இருக்காங்களா?"

லக்ஷக்கணக்கான
நூற்போர், நெசவாளர்
மற்றும் கதர் தொழிலாளர்
அனைவருக்கும் தரும்

புனித புத்தாண்டு
வாழ்த்துக்கள்

தூய கதராடை உடுத்தி
சிறந்த கிராமக் கைத்தொழிலாகிய

கதர்த் தொழிலில்
ஈடுபட்டிருக்கும்

லக்ஷக்கணக்கான
ஏழை மக்களைக்
களிப்புறச் செய்யுங்கள்

கதர்
பருத்தி
பட்டு
இனுசுகள்

கண்கவரும் ரகங்களில்

சென்னை ராஜ்ய
கதர் கிராமத் தொழில் போர்டின்

காதி

விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்

சென்னை நகரில்
ஜார்ஜ் டவுன் 86, பிராட்வே
மௌண்ட் ரோடு: 60, வாலாஜா ரோடு
திருவல்லிக்கேணி:
3, பைகிராப்ட்ஸ் ரோடு
தியாகராயநகர்: 22, தியாகராயா ரோடு
மைலாப்பூர்: 82, ராயபேட்டை ஹைரோடு
புரசைவாக்கம்: 6, தாணாத் தெரு
ஆகிய இடங்களில் உள்ளன.

காதி இலாகா
சென்னை ராஜ்ய கதர் கிராமத் தொழில் போர்டு

"அவங்க கல்கத்தா போயிருக்காங்க. ஒரு வாரமாச்சு. அம்மா சோர்ந்தாப்பல இருக்காங்க, அவ்வளவுதான்."

புது மாம்பலத்தில் ஒரு பெரிய வீட்டுக்குள் வளைந்து முகப்பில் நின்றது வண்டி.

"வாங்கோ" என்று ஹாலில் உட்கார்ந்திருந்த நாகம்மாள் அவரை வரவேற்றபடி சற்றே எழுந்தாள்.

"பரவாயில்லை. நீங்க எழுந்திருக்க வேண்டாம்" என்று அருகில் போனார் அவர். "என்ன உடம்பு?"

"காலமே புடிச்சுக் கிறுகிறுன்னு மயக்கமாக இருந்தது. கைகாலெல்லாம் துவண்டு போறது."

நாக்கு கண்ணையெல்லாம் பார்த்தார் அவர். நாடியைப் பிடித்துப்பார்த்தார். வைத்தியர் கேட்க வேண்டிய கேள்விகளெல்லாம் கேட்டார்.

நாடி ஸ்பஷ்டமாகத் தெளிவாகத்தான் இருந்தது.

"ஒன்றுமில்லையம்மா. அசக்தமாகத்தான் இருக்கும். கவலைப்படாமல் இருந்தால் போதும். அது நடக்கிறபோது நடக்கட்டும். ராமராமான்னு சொல்லிக் கொண்டே யிருங்கள்."

"சந்திரா எங்கே?"

"பொழுது போகவில்லை அவளுக்கு. இப்பத்தான் ஒருமணியாச்சு. யாரோ சிநேகிதி வீட்டுக்குப் போறேன்னு போயிருக்கா......நீங்க இந்தப் பக்கமே வரக் காணுமே ஒரு மாசமா?" என்று பேச்சை மாற்றிவிட்டாள் நாகம்மாள்.

அவருக்கு வியப்பாக இருந்தது. சந்திராவைப் பற்றிய கவலை அவளை எப்பொழுதுமே அரித்துக் கொண்டிருந்தது. அந்த ஏமாற்றத்துக்குப் பிறகு சந்திரா வீட்டிலேயே இருப்பதில்லை. இருப்புக் கொள்ளாமல் சிநேகிதிகள் வீடுகள், நூல் நிலையம் என்று எங்கேயாவது போய் உட்கார்ந்து பொழுதை ஓட்டிக் கொண்டிருப்பது அவருக்குத் தெரியும். சந்திராவின் பேச்சை எடுத்தால் நாகம்மாள் நாளு நாழி ஓயமாட்டாள். புலம்பிக் கொண்டேயிருப்பாள். இப்பொழுதோ?

"ஊரில்தானே இருந்தீர்கள்?" என்று மறுபடியும் கேள்வி வந்தது.

அம்மா காலமானது இவள் காதில் விழுந்திருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டிருந்தார் அவர்.

"அம்மா இல்லையே இப்ப."

"இல்லையா! அப்படின்னா?"

"இன்றோடு பதினைந்து நாளாகிறது. அம்மா காரியமாகி."

"என்ன இது! எனக்குத் தெரியவே தெரியாதே! பதினைந்து நாளாச்சா! எனக்குத் தகவலே தெரியவில்லையே! என்ன உடம்பு?"

"ஆறு மாசமாக நடமாட்டமில்லை. படுத்த படுக்கையாக் கிடந்தாள். வரவர ஆகாரம் குறைந்துகொண்டே வந்தது."

மேலே நடந்தவற்றையெல்லாம் சொன்னார் அனந்தசாமி. அவருக்கு இந்தச் சென்னையிலேயே மூன்று அண்ணாக்கள் இருக்கிறார்கள். டில்லியில் ஒரு தம்பி யிருக்கிறான். இங்கேயே இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். ஆனால் தாயாரை வைத்துக் காப்பாற்றத்தான் ஆளில்லை. எல்லாரும் பணம் கொடுக்கத் தயாரா யிருந்தார்கள். நாலு வருஷங்களுக்கு முன்னால் இந்த சன்யாசி அவள் படுகிற வாதையைப் பொறுக்க முடியாமல், திடீரென்று ஒருநாள் இரண்டு அறைகள் கொண்ட ஒரு வீட்டின் பகுதியைக் குடக்கூலிக்கு எடுத்துத் தாயாரை அங்கே அழைத்து வந்து விட்டார்.

எப்பொழுதாவது, ஒரு மாசம் இரண்டு மாசங்களுக்கு ஒரு முறை அவர்கள் அம்மாளைப் பார்க்க வருவார்களாம். அப்பொழுது எல்லாருமே சேர்ந்து வந்தார்கள், உயிரில்லாத அவளைப் பார்க்க. அன்றிலிருந்து காரியங்களை முடித்துவிட்டு அவரோடு சண்டையும் போட்டு விட்டுப் போனார்கள்.

"உடம்பு அதிகமாயிருக்குன்னு ஒரு வார்த்தை சொல்லி யனுப்பிச்சால் தேஞ்சா போயிடுவே?" — ஒரு பிள்ளை.

"நாங்களும் உடன்பிறப்புன்னு நீ என்றைக்காவது நினைச்சதுண்டோன்னு நானும் யோசிச்சு யோசிச்சுப் பாக்கறேன், எனக்குத் தலையைத்தான் சுத்தறது!" — அவருடைய ஒரு தங்கை.

"உனக்கு என்னமா அப்படிப் பேசாமல் இருக்க முடிஞ்சுது!"-இன்னொரு அண்ணா.

"பெத்தவளுக்கு வயத்துலெ பிறந்ததெல்லாம் துரோகம் பண்ணிடுத்துன்னு ஒரு கட்சியை ஸ்தாபிக்க எத்தனை நாளாக் கங்கணம் கட்டிண்டிருந்தேண்ணா? இல்லாட்டா இப்படி இருப்பியா நீ?..."

"எனக்கு நினைக்க நினைக்க ஆறலேடி" என்று தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டே தழுதழுத்தாள் இன்னொரு தங்கை.

அனந்தசாமிக்கு ஒரு நிமிஷம் சந்தேகம் கூட வந்து விட்டது. தாம்தான் தவறு செய்து விட்டோமோ என்று தவியாய்த் தவித்தார்.

எல்லோரும் சண்டை போட்டுப் போனபிறகு தனியாகப் பித்துப் பிடித்து உட்கார்ந்திருந்த அவரை மங்களம் பாட்டி வந்து சமாதானப்படுத்தினாள்.

"சும்மா உட்கார்றதையும் உட்கார்ந்துட்டு, கடைசியிலே நீர் சொல்லியனுப்பிக்கலே. அதனாலே பெத்தவளைப் பாக்கற பாக்கியம் போயிட்டுதுன்னு எல்லாரும்

நல்ல பேர் வாங்கிண்டு போயிட்டானே, ஐயா! வாயைத் திறந்து பதில் சொல்லப்படாதோ! நீர்தான் கடுதாசி போட்டீரேய்யா, எல்லாருக்கும். மறந்தா போய்ட்டீர்?" என்று அவரைத் தட்டி எழுப்பினுன்.

அப்பொழுதும் அவருக்குச் சந்தேகம் தான்.

"உடம்பு ரொம்ப அதிகமா யிருக்கு, கவலைக்கிடமா யிருக்குன்னு நான் தீர்மானமா எழுதலையோன்னு நினைக்கிறேன்" என்ருர்.

அதையேதான் அவர் திரும்பி நாகம்மாவிடமும் சொன்னுர். நாகம்மாளுக்கு அவரைத்தான் நன்ருகத் தெரியும். தாயாரைக் காப்பாற்றி வருகிருர் என்பது தெரியும். அதற்கு மேல் அதிகமாகத் தெரிந்துகொள்ள அவள்முயன்றதில்லை. சன்யாசிகளின் பூர்வாசிரமத்தைப்பற்றிப் பேசத் தயங்கிக் கொண்டே இருந்து விட்டாள். அவளுக்கு வேண்டியது வைத்தியம், அவருடைய அமைதி, ஆழ்ந்து குதறிய புண்களை ஆற்றும் அவருடைய வார்த்தைகள் — இவைதான். எல்லா மனிதர்களையும் போல் அவரும் ஒருவர் என்று அவள் நினைத்ததேயில்லை. சாதாரண உலக விதிகளுக்கு அடங்காத மனிதக் கட்டுப்பாடுகளுக்கு மேல் பட்ட அமிர்தத்தை மருந்திலும் சொல்லிலும் வழங்கித் திரிகிற ஆண்டியாகத்தான் அவரைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தாள் அவள். அவர் அம்மாவுக்குப் பணிவிடை செய்கிருர்! அவருக்கு அண்ணுக்கள், தங்கைகள்!

"மறுபடியும் சன்யாசியாகப் போய் விட்டீர்கள்" என்று பெருமூச்செறிந்தாள் நாகம்மாள்.

"அம்மா மனசு திருப்தியாகி விட்டது என்று நினைக்கிறேன். ஆறு மாசம் சமைத்துப் போட்டேன். அவளுக்குப் பிடித்ததையெல்லாம் பண்ணிப் போட்டேன். படுத்தவாக்கிலேயே எனக்கு எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். ஏ! அப்பா இத்தனை மிளகாய்ப் பொடியா! பாதி போதும். எண்ணெய் இன்னும் இரண்டு சொட்டு கூட ஊற்றணும். இப்படிச் சொல்லிச் சொல்லி என்னைத் தேர்ந்த சமையல்காரனுக்கி விட்டாள். இப்பொழுது நீங்கள் எது கேட்டாலும் நான் சமைத்துப் போடுவேன். பத்தியச் சாப்பாடா? கலியாணச் சாப்பாடா? மிளகாய் சேர்க்காத புண்யச் சாப்பாடா? எது வேணும்? எதுவும் செய்வேன். அம்மாவுக்கு எல்லாவற்றையும் செய்துபோட்டேன். அம்மாவுக்கு இருந்த ஒரு குறையும் தீர்ந்து அவள் சமாதானமாக நிறைவாகத்தான் போனுள் என்று நினைக்கிறேன்"

"உங்களிடம்கூடக் குறையிருந்ததா என்ன, உங்கள் அம்மாவுக்கு?" என்று வியப்புடன் கேட்டாள் நாகம்மாள்.

"எந்த அம்மாவுக்கும் தன் பிள்ளை குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டுமென்றிராதா? ஏம்மா?"

"உங்கள் தாயாரைப் பற்றி இரண்டு மூன்று தடவை சொல்லியிருக்கிறீர்கள். ஆனுல் நீங்கள் இப்படி இருப்பதை அவர் அவ்வளவு குறையாக நினைத்ததில்லை என்று தான் எனக்குப் படுகிற வழக்கம்."

"நாட்டுப் பெண்கள் அவளைப் படுத்தின பாட்டில் நான் செய்தது சரியென்று நினைக்க ஆரம்பித்து விட்டாளோ என்னவோ? ஆனுல் நான் எல்லார் முகத்திலேயும் கரியைப் பூசி விட்டு ஓடிப் போய்ப் பத்து வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்து அவளைப் பார்த்தபொழுது அவள் அப்படிச் சரியாகப் பேசி விடவில்லை."

"கரியைப் பூசி விட்டு என்ருல்....?"

"ஆமாம்மா! நான் பி. ஏ. படித்து முடித்தேன். கலியாணம் நிச்சயம் செய்தார்கள். வேண்டாம்வேண்டாம் என்று சொன்னேன். தலைகீழாக நின்றேன். கேட்கவில்லை. அப்பா கத்து கத்தென்று கத்தினுர். அம்மா அழுதாள். பெண்ணைப் பிடிக்க வில்லையா என்று கேட்டார்கள். பெண் அழகாகத்தான் இருந்தாள். நல்ல அழகு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனுல் அதெல்லாம் என் மனத்தில் உறைக்க வில்லை. அது ஒரு வயசு. நான் வேறு அழகில் மனசை ஒட்டியிருந்தேன். பரீட்சை முடிந்து ஆறு மாசம் சும்மா உட்கார்ந்திருந்த சமயம். இப்பொழுது மாதிரியா? அப்பொழுது விலையெல்லாம் இறக்கம். கலம் நெல்லு பதினுறு அணுவுக்கு விற்ற காலம். அதையும் வாங்க ஆளில்லை."

"எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது, சுவாமி. குறுக்கையிலிருந்து சொர்ணம்



மாடல் 0374 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 4 பாண்ட்
பியானோ - கீ - ஸ்விட்ச்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)

யாராக இருந்தாலும் சரி....



உங்களுக்குப் பூரண
திருப்தி அளிப்பது

மர்பி
ரேடியோ



மாடல் 0322 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 3 பாண்ட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)


மாடல் 266 :
மாடல் 0724:
மாடல் 0737:
மாடல் 0352 :
மாடல் 0720:
மாடல் 0752:
மாடல் 0751:
மாடல் 0298 :
மாடல் 0299 :
murphy radio
delights
the home!

சொர்ணம் என்று ஒருத்தி வெண்ணெயைக் காய்ச்சிப் புத்துருக்கு நெய்யாக ரூபாய்க்கு மூன்று சேர் கொடுத்து விட்டுப் போவாள். ஒரு செம்பு நல்லெண்ணெய் இரண்டரையணு..."

"பண்டமும் பாடியும் அப்படி இறைந்த காலம். காசுதான் கிடைக்காது. அதைவிடக் குதிரைக் கொம்பு, வேலை கிடைக்கிறது. ஆறு மாசம் வீட்டிலே இருக்க முடியாமல் தவியாய்த் தவித்தேன். ஏன் படித்தோம், அப்பா உழைத்து உழைத்துச் சம்பாதித்த காசை ஏன் இப்படி இறைத்தோம் என்று வேதனைப்படாத நிமிஷம் கிடையாது. அப்பொழுதுதான் விவேகானந்தர் புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். அது ஒரு வயசு. இத்தனை காலமாகப் படித்ததெல்லாம் படிப்பில்லை - காலம் எல்லாம் வியர்த்தமாகி விட்டதாக எப்பொழுதும் ஒரு வேதனை. எல்லோருக்கும் பாரமாக இருக்கிறோம் என்று ஓர் அரற்றல். எந்த இடத்துக்குப் போனாலும் கால் தரிக்காது மனசுக்குள்ளே ஒரு நச்சரிப்பு...."

"கலியாணமாகாத பெண்களுக்கு இருக்கிற மாதிரி ..." என்று குறுக்கிட்டாள் நாகம்மாள்.

"ஆமாம்" என்று சிரித்தார் அவர். பிறகு சற்று யோசித்தார் முகத்தைச் சற்று அப்பால் திருப்பி. "ரொம்பச் சரியாகச் சொன்னீர்கள். பெண்களுக்கு அந்த மாதிரி ஆற்றாமை-கலியாணமாகவில்லையே-எத்தனை நாட்கள் இப்படிப் பெற்றவர்களுக்குப் பாரமாக உட்கார்ந்திருக்கப் போகிறோம் என்று. ஆண் பிள்ளைகளுக்கும் அதே மாதிரி கவலைதான். ஆனல் கலியாணம் பண்ணிக் குறைக்கிற பாரமில்லையே அது! நம்ம தேசத்தில் அவனுக்கு அப்பொழுது பாரம் இரட்டித்துப் போகிறது. என் பாரம் போதாதென்று இன்னொன்றையும் சுமத்தப் பார்த்தார்கள் அப்பாவும் அம்மாவும். ஆன மட்டும் சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. பெண்ணைப் பார்க்கவா என்று தரதரவென்று என்னை இழுத்துக் கொண்டு போனார்கள். பெண் சுடர் மாதிரி இருந்தது. அதைப் பார்த்ததும் இது என்ன அக்கிரமம் என்று தோன்றியது எனக்கு."

"எது ?"

"இந்த அழகான பெண்ணை எனக்குக் கொடுக்க வந்தார்களே, அது ஒரு அக்கிரமம். நான் சரியென்று சொன்னால் நடந்து விடும். ஆனல் அவள் சம்மதத்தைப்பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை."

"அந்தக் காலத்தில் அது கிடையாது."

"அந்தக் காலத்திலேயும் மனசு, ஆசையெல்லாம் இருக்கவில்லையா ?"

"அதுகளுக்குத்தான் மதிப்பு இல்லை என்று ஆகி விட்டதே! அப்புறம் என்ன அக்கிரமத்துக்கு இருக்கிறது? அவளே சம்மதித்திருந்தால்..."

"சரி, அவளே சம்மதித்ததாகவும் இருக்கட்டும். ஒரு காலணுக் காசு சம்பாதிக்க ஆரம்பிக்காதவனிடம் அவளை எப்படி ஒப்படைக்கிறது என்று ஏன் யாரும் யோசித்துப் பார்க்கவில்லை ?"

"அந்தக் கவலைக்குத்தான் அப்போது இடமே இல்லையே ?"

"ஏன் ?"

"பெண்ணுக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயசிருக்கும். அவள் ஆளாகிப் புருஷன் வீட்டுக்கு வர இரண்டு வருஷங்கள் ஆகும். அந்தச் சமயத்துக்குள் இவன் சம்பாதிக்க ஆரம்பித்திருக்க மாட்டானு ?"

"அதெல்லாம் சரி. நான் பார்த்த பெண் அப்படி இல்லையே !"

"ஏன் ?"

"அவளுக்குப் பதின்மூன்று வயசு ஆகிக் கொண்டிருந்ததாம். அதுக்கே ரொம்பத் தாமசமாகிவிட்டது என்று பெண்ணுக்குப் பாட்டி தாத்தா வெல்லாம் மொண மொண வென்று பிடுங்கினார்களாம். கல்யாணமாகி ஒரு வருஷத்துக் கெல்லாம் அவள் புருஷன் வீட்டுக்கு வரக் கூடியவள்தான்."

"ஒரு வருஷத்துக்குள் உங்களுக்கு வேலை கிடைத்திருக்காதா ?"

"அப்படி நிச்சயமாகச் சொல்லக் கூடிய காலமில்லை அப்பொழுது. அது மட்டுமில்லை : நானே வேலைக்குப் போவதா வேண்டாமா என்று நிச்சயம் செய்து கொள்ளவில்லை. பெண்ணைப் பார்த்து விட்டு வந்தபிறகு முரண்டு பண்ணினேன். பெண் பிடிக்கவில்லையா, அழகாக இல்லையா என்று வளைத்துக் கொண்டார்கள். இரண்டும் இல்லை என்று எப்படிச் சொல்கிறது? அந்த வயசில் உள்ள குழப்பத்தையும் பயத்தையும் யார் புரிந்து கொள்கிறார்கள்? வேண்டாம், வேலை கிடைக்கட்டும் என்றேன். அப்பாவுக்குக் கோபம் வந்து விட்டது. 'உன்னைப் பத்து வருஷங்கள் தண்டச் சோறு போட்டுக் காப்பாற்ற முடியும்டா எனக்கு' என்று கத்தினர். அப்பா மகா கோபக்காரர்."

"எல்லாக் கோபத்தையும் அவரே உங்களுக்குப் பாக்கி வைக்காமல் வைத்துக் கொண்டு விட்டாராக்கும்!"

அனந்தசாமி இலேசாகச் சிரித்துக் கொண்டே சொன்னர். "என்னமோ, தலை கால் தெரியாமல் கத்துவார்,

கோபம் வந்தால். பத்து வருஷங்கள் தண்டச் சோறு போட்டு உன்னைக் காப்பாற்றுவேன் என்று எந்தத் தகப்பனாராவது சொல்லுவார்களோ! அவருக்கு அத்தனை ஆசை. அந்தப் பெண்ணை எப்படியாவது நம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு விடவேண்டும். அந்த ஆசை வீணாகி விடுமோ என்றுதான் என்னை விரட்டினார் என்று நினைக்கிறேன். அம்மா, அத்தைகள், அப்பாவின் சிநேகிதர்கள் எல்லாருமாக என்னைக் கொட்டு கொட்டு என்று கொட்டினார்கள். கரைத்தார்கள். அழுகை அழுகையாக வந்தது. சரி என்றேன். பாக்கு வெற்றிலை மாற்றினார்கள். பத்திரிகை அடித்தார்கள். கலியாணமும் வந்து விட்டது. கலியாணத்துக்குக் கிளம்புகிற பொழுதே எனக்கு மனசு சரியாக இல்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே கிளம்பினேன். ரயிலில் ஏறிப் போய்ச் சேர்ந்தோம். சின்னக் கிராமம். ஒரு வீட்டில் இறக்கினார்கள். வேடிக்கையைப் பாருங்கள். வாசல் படி ஏறி ரேழிக்குள் கால் வைத்ததுமே, நிலைக்கு மேலே விவேகானந்தர் படம் ஒன்று என்னை முறைத்துப் பார்த்தது. பொட்டையாக, உயரமாக, ஆள் உயரம் ஒரு தடியை வைத்துக் கொண்டு நிற்குமே அந்தப் படம்தான்.

"நீ எங்கேடா வந்தே இங்கே?" என்று கேட்கிறாற் போலிருந்தது. அப்படியே அதைப் பார்த்துக் கொண்டு நின்றேன். "உள்ளே போங்கோ, மாப்பிள்ளை!" என்று என் மாமா சத்தினார். தூக்கிவாரிப் போட்டது. "அதுக்கு இன்னும் அம்பது வருஷம் இருக்குடா. உள்ளே போ" என்று நன்றாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தார் அவர். உள்ளே போனேன்.

"கூடத்தில் இலை போட்டார்கள். சொஜ்ஜி பஜ்ஜி யெல்லாம் பரிமாறினார்கள், எனக்குச் சாப்பிடுகிறாற் போல் இல்லை. "நீ எங்கேடா வந்தே?" என்று கேட்டாரே ரேழியிலே படத்திலே இருந்தவர், அவர் இன்னும் கேட்டுக் கொண்டேயிருந்தார். பேசாமல் சாப்பிட்டேன்.

"உன்னைத் தாண்டா!" என்று அவர் சத்தம் போடுவது போலிருந்தது. நான் என்ன செய்வேன்? படம் காட்டுகிறதா? அந்த அதட்டலைக் கேட்கிறதா? அதட்டல் என்றால் ஒரு தடவையா? இரண்டு தடவையா? திருப்பித் திருப்பி இந்த வலது காதிலே வந்து அதட்டல். சொஜ்ஜிக்கு மேல் அந்த முகம்தான் தெரிகிறது. எனக்குக் கல்லூரியிலே வையாபுரி என்று ஒரு வாத்தியார் இருந்தார். அவர் விவேகானந்தரைப் பார்த்திருக்கிறாராம். ஆஜானுபாகுவாக அவர் நிமிர்ந்து நடக்கிறதைப் பற்றி அடிக்கடி சொல்லுகிற வழக்கம். அப்படியே அவர் இலை மேலே நடந்து போகிறது போல் இருக்கிறது எனக்கு. நடுவேநடுவே நின்று என் பக்கம் திரும்பி இந்தக் கேள்வி: "நீ எங்கேடா வந்தே?" என்று. நான் என்ன செய்வேன், சொல்லுங்கள்."

இப்பொழுது என்னவோ தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டிருப்பது போலக் கேட்டார் அனந்தசாமி. "நான் என்ன செய்வேன், சொல்லுங்கள்" என்று அவர் கேட்பது இப்பொழுது தவிப்பது போலிருந்தது. அவருடைய சிரிப்பு மாறாத முகம் இன்னும் அந்தத் தவிப்பைப் பெருக்கி விட்டது.

"ம்" என்றாள் நாகம்மாள்.

"பார்த்தேன். இது ஏதுடா வம்பாய்ப் போச்சு என்று ஆகி விட்டது. கைகழுவிக் காப்பி சாப்பிட்ட பிறகு, இப்படி உலவி விட்டு வரலாம் என்று கிளம்பினேன். ஊர்க் கோடி திரும்பி, ஸ்டேஷன் பக்கம் நடந்தேன். நடந்து கொண்டே போனேன். கொஞ்சம் கொஞ்சம் கை மறைகிறாற் போல் வெளிச்சம் குறைந்து கொண்டே வந்தது. ரயில் ஸ்டேஷனுக்கு வழி காட்டும் ஒரு கைகாட்டி தெரிந்தது. அடுத்த ஸ்டேஷன் இன்னும் கொஞ்ச தூரம்தான். நடந்துகொண்டே அந்த ஸ்டேஷனுக்கே போய் விட்டேன். திருவாரூருக்குப் போகிற வண்டி இன்னும் அரை மணியில் வரும் என்றார்கள். ஒரு டிக்கெட் எடுத்தேன். வண்டி வருகிற வரையில் பயம்தான். யாராவது தேடிக் கொண்டு வந்துவிடப் போகிறார்களே என்று ஓர் ஓரமாக உட்கார்ந்திருந்தேன். வண்டி வந்தது. ஏறிக் கொண்டேன். திருவாரூரில் இறங்கினேன். கையில் இருந்தது, இரண்டு மோதிரம். 'கலியாணமாகச்சே போட்டுக் கொள்' என்று அப்பா கொடுத்திருந்தார். இரண்டும் ஒன்றே முக்கால் பவுன். கடைத் தெரு திறந்திருந்தது. நகைக் கடையில் விற்றேன். அடுத்த வண்டியிலே ஏறி மாயவரம் போனேன். அங்கிருந்து போட் மெயில் ஏறி இங்கே மெட்ராஸுக்கு வந்தேன். மறு நாள் காலையில் டில்லி வண்டியில் ஏறிவிட்டேன், ரிஷிகேசத்துக்குப் போவதற்காக." அனந்தசாமி நிறுத்திவிட்டார்.

"ம்...அப்புறம்?" என்றாள் நாகம்மாள்.

"அப்புறம் என்ன?"

"கலியாணம்?"

"யார் கண்டார்கள்?" என்று அலட்சியமாகப் பதில் வந்தது அனந்தசாமியிடமிருந்து. (தொடரும்)

திருடாதே

காந்தன்

வரப் போகிறது என்று நீண்ட காலமாக அறிவிக்கப்பட்டு வந்த ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான ''திருடாதே'' கடைசியில் வந்தே விட்டது. முக்கிய பாகத்தை எம். ஜி. ராமச்சந்திரன் ஏற்று நடிப்பதால் இந்தப் படத்தின் திரைக் கதையில் இன்னின்ன காட்சிகள் வரும் என்று தங்களுக்குள் பலர் தீர்மானித்து வைத்துக் கொண்டிருந்தனர். படத்தில் நடிப்பவர்கள் யார் என்று தெரிந்தால் திரைக்கதையை ஒருவாறு ஊகித்து விடலாம் அல்லவா? ஆனால் ''திருடாதே'' படத்தில் அந்த ஊகம் தவறி விட்டது. ''மகாதேவி'', ''புதுமைப் பித்தன்'' போன்ற ராஜா - ராணிப்படமல்ல இது. நல்ல உருக்கமான உயர்ந்த சமூக சித்திரம். மனிதனை உயர்த்தும் கருத்துக் களைக் கொண்ட திரை ஓவியம். ''மலைக் கள்ளன்'' மாதிரி மலைக்காட்டில் வாழ்ந்த கள்ளனின் கதையல்ல; மக்களோடு சமூகத்தில் வாழ்ந்து மனம் திருந்திய மனிதனின் கதை.

பாலு என்ற வாலிபன் பிழைக்க வழியின்றித் திருடுவதையே பிழைப்பாகக் கொண்டு விடுகிறான்; தாயிடம் தன் இழிதொழிலைப் பற்றிச் சொல்ல மனம் இல்லாமல், தான் ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வருவதாகக் கூறுகிறான். தும்பு என்பவன் பாலுவின் தொழில் முறைத் தோழனாகிறான். சென்னையில் இருந்த தன் அண்ணனைத் தேடிவந்த கிராமத்துப் பெண் சாவித்திரியை முரடர்களிடமிருந்து காப்பாற்றுகிறான் பாலு. சாவித்திரியின் அண்ணன் ராஜு தன் தாயாருக்கு அனுப்புவதற்காகத் தபால் நிலையத்துக்குக் கொண்டு வந்த 2,500 ரூபாயை, பாலு சாமர்த்தியமாகத் திருடுகிறான்.

அத்துடன் இருந்த கடிதம் பாலுவின் அகக்கண்ணைத் திறக்கிறது. பணத்தை உரிமையாளனிடமே திருப்பித் தரத் தீர்மானித்து ஓடுகிறான். ஆனால் பணத்தை இழந்த ராஜு அந்த அதிர்ச்சியில் இறந்து விடுகிறான். பாலு உடனே கிராமத்துக்குச் சென்று ராஜுவின் தாயாரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நல்லவன் மாதிரி நழுவி விடுகிறான்; அது பாங்கியிலிருந்து சமீபத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் என்றும், பாலுதான் அதைச் செய்திருக்க வேண்டும் என்றும் போலீஸார் சந்தேகிக்கின்றனர்.

பாலுவின் பாத்திரத்தை ஏற்றிருக்கும் எம். ஜி. ஆர். உண்மையிலேயே ஒரு புரட்சி செய்திருக்கிறார். தபால் நிலையத்தில் 'க்யூ' வில் நின்று லாகவமாகப் பணத்தைத் திருடும் போதிருந்த அவரது முகபாவத்துக்கும், பணத்துடன் இருந்த ராஜுவின் கடிதத்தைப் பார்த்ததும் மாறிய முகபாவத்துக்கும் எத்தனை வித்தியாசம்! முன்னது ஒரே உற்சாகம், பின்னது ஒரே சோகம். கிராமத்தில் ராஜுவின் தாயைச் சந்தித்துப் பேசியும் ராஜுவின் மரணத்தைப் பற்றி அறிவிக்க முடியாமல் தவித்த தவிப்பு அற்புதமான நடிப்பு. தான் திருந்திவிட்டதாகக் கூறியும் தன்னை மன்னிக்காமலே இறந்து போய்விட்ட தாயிடம் பாலு விம்மி விம்மி அழுததைக் கண்டு படம் பார்க்க வந்தவர்களெல்லோரும் கண்கலங்கி விட்டனர். எம். ஜி. ஆரின் இவ்வளவு உணர்ச்சி மயமான நடிப்பை நாம் கண்டு அநுபவிக்க இதுவரையில் எந்தப் படத்திலும் சரியான வாய்ப்புக் கிட்டவில்லை. சாவித்திரியைக் காதலித்தபோதும் சிறிது தாராளமாகவே காதல் காட்சியில் நடித்திருக்கிறார். எம். என். நம்பியாருடன் நடந்த கைகலப்பில் எம். ஜி. ஆர். தமக்கே உரிய லாகவத்துடன் ஜமாய்த்திருக்கிறார்.

கிராமத்துப் பெண் சாவித்திரியாக வரும் பி. சரோஜா தேவி துள்ளலும், துடுக்கும் கொண்டு கள்ளங்கபடமற்ற பார்வையும், சிரிப்புமாகப் படம் பார்ப்பவர்களைக் கொள்ளை கொள்கிறார். அவரது அலட்சியச் சிரிப்பு ஒன்றே போதும். பாத்திரத்தை உணர்ந்து அழகாக நடித்திருக்கிறார். சரோஜா தேவியின் நடை, உடை, பாவனை, பேச்சு 'மேக்கப்' யாவும் அவரைப் பட்டிக்காட்டுப் பெண்ணாகவே மாற்றி விடுகின்றன. சில படங்களில் வருகிறது போல் திடீரென்று நவ நாகரிக உடைகளில் தோன்றித் திணற வைக்கவில்லை.



எம். என். நம்பியார் வழக்கமான வில்லன் பாகத்தை ஏற்றிருந்தாலும் நன்றாயிருக்கிறது. போலீஸாரால் நெடுநாட்களாகத் தேடப்பட்டு வந்த கொள்ளைக்காரன் 'மேக்கப்' மிகவும் தத்ரூபமாகத் தோன்றுகிறது.

எம். என். ராஜம் நம்பியாரின் அண்ணன் மகளாக வருகிறார். நவநாகரிக

உடையில் மின்னுகிறார்; பானுவை மயக்க முயன்று, கடைசியில் உயிர் துறக்கிறார். அந்தப் பாத்திரத்துக்கு அதிக வேலையில்லை. ஆகவே, நடிப்பிலும் விசேஷமாகக் கூற ஒன்று மில்லை. எம். ஜி. ஆரும், நம்பியாரும் போடும் சண்டைக் காட்சிகள் பிரமாதமா யிருக் கின்றன. 'டும், டும்' என்று ஒருவரை யொருவர் குத்திக் கொள்ளுவது இன்னும் என் செவியில் ஒலிக்கிறது. இருளில் நடக்கும் சண்டைக் காட்சியில் காமிரா சிறப்பாக வேலை செய்திருக்கிறது. அந்தக் காட்சி முடிகிற வரையில் மூச்சுவிடக்கூட நினைவில்லை.

தங்கவேலு பானுவின் நண்பன் ஜம்புவாக வந்து எல்லோரையும் சிரிக்க வைக்கிறார். உருக்கமான கதையில் உருகுவதற்குச் சந்தர்ப்பம் இருப்பதுபோல், சிரித்து மகிழ்வதற்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும் அல்லவா? தங்கவேலுவும், எம். சரோஜாவும் ஹாஸ்யப் பகுதிக்குத் துணை புரிகின்றனர்.

சாவித்திரியின் அண்ணன் ராஜு படத்தில் முக்கியமான பாத்திரம். பானுவின் மன மாற்றத்துக்கே அவன்தான் காரணம். ஆனால் அவன் எல்லாக் காட்சிகளிலும் வரவில்லை. குறிப்பிட்ட சில காட்சிகளிலே வந்தாலும் எல்லோருடைய உள்ளங்களிலும் படம் முடிகிற வரையில் தங்கி விடுகிறான். அவன் இல்லையென்றால் கதையே யில்லை. அந்தப் பாத்திரத்தை முஸ்தபா நன்கு சோபிக்கச் செய்திருக்கிறார்.

ப. நீலகண்டனின் டைரக்ஷன் பல இடங் களில் பாராட்டும்படியா யிருக்கிறது.

முன்னொரு காலத்தில், அதாவது தமிழ் பேசும் படம் வெளிவந்த புதிதில் ஏராளமான பாடல்கள் புகுத்தப்பட்டு வந்தன. அப்புறம் காலம் முன்னேற முன் னேறப் பாடல்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. எண்ணிக்கை குறைந்த வரையில் நல்லதுதான் என்று முற்போக்குவாதிகள் மகிழ்ந்த னர். ஆனால் இப்போது பாடல்கள் தரத்திலும் குறைய ஆரம்பித்து விட் டன. உள்ளத்தைக் கவரும் நல்ல மெட்டையே கேட்க முடிவதில்லை. காரணம், இசை அமைப்பாளர்களின் முயற்சிக் குறைவுதான்; அசிரத்தை காரணமாகவோ, அலட்சியம் காரண மாகவோ அவர்கள் தாங்கள் ஏற்க னவே தயாரித்த மெட்டுக்களையே காப்பியடிக்கின்றனர்; இந்த நிலை மாற வேண்டும். இசை அமைப்பா ளர்கள் சிரத்தை எடுத்துக் கொண்டு படக்கலை உயர உண் மையாகப் பாடுபட வேண்டும். புதுப் புதுக் கவர்ச்சி நிறைந்த மெட்டுக்களை உருவாக்க முயல வேண்டும்.

"திருடாதே" படத்தின் பாட்டுக்கள் மனத்தில் பதிய வில்லை—"திருடாதே பாப்பா திருடாதே" என்ற ஒரு பாட் டைத் தவிர. அது நல்ல கருத் துள்ள பாட்டு. காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந் தரம் இயற்றியது. மேற்படி பாட்டில் வரும், "திட்டம் போட்டுத் திருடற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது-அதைச் சட்டம் போட் டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது...திருடராய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற வரிகள் ஒரு பெரிய உண்மையை எளிமையாகவும் இனிமையாகவும் எடுத்துக் கூறி நம்மை மகிழ்விக்கின்றன.

கொள்ளைக்காரனைக் கண்டு பிடித்துக் கொடுத்ததற்காகப் பானுவுக்குப் பரிசளித்துக் கௌரவித்த சர்க்கார், அவனது திருட்டுக் குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை யளித் தது பிரமாதமான முடிவு.

வசனத்தை 'வளவள' என்று அதிகமாக வளர்த்தாமல் வரையறுத்து அளவாக எழுதி யிருக்கிறார் கண்ணதாசன்.

நன்றாய் நடித்தவர்களுடன் பானுவின் தாயாராக நடித்தவரையும், ராஜுவின் மனைவியாக நடித்தவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

குடியின் கேட்டை விளக்கும் நாடகம் என்று விளம்பரம் செய்யப்பட்ட நாடகத்தில் குடித்துவிட்டு ஆடுவதே பெரும் பகுதிக் காட்சிகளை ஆக்கிரமித்துக் கொண்டுவிடும். குடிகாரன் திருந்தும் காட்சி கடைசிக் காட்சியா யிருக்கும். அதுபோல், திருட்டைக் கண்டிக்கும் படத்தில் திருட்டின் மகத்து வத்தையே அதிகமாகக் காட்டாமல், திருடன் திருந்துவதை விரைவில் காட்டிவிட வேண் டும். இல்லையென்றால் 'பிக் பாக்கெட்' அடிக் கும் விதம்தான் இளைஞர் மனத்தில் நன்கு பதியும். இந்தப் படத்தில் அவ்விதக் குறைக்கு இடம் வைக்காமல் நன்றாய்ச் செய்திருக் கிறார்கள். "திரு டாதே"—"பாக் கெட் மார்" என்ற ஹிந்திப் படத்தின் தழுவல். நல்ல கருத்தைச் சொல் லும் நல்ல படம் தமிழில் வருவதும் நல்லதுதானே?

நரிவேட்டை
1
கதை: ஜெயந்தி
சித்திரம்: வினு
வெண்பனிக் கிரீடம் தரித்து
வானளாவி நிற்கும் இமய
மலைத்தொடரின் அடிவாரத்
தில் திபேத்தியர், சீனர்,
இந்தியர் முதலிய பல தேசத்
தவர் வாழும் ஓர் ஊர்.
சீன ஆக்கிரமிப்புக்குப்
பிறகு அதி முக்கியத்துவம்
பெற்று விட்ட ஒரு நகரம்.
அதுதான் காலிம்பாங்.
இந்த இடத்தில்.....
இங்கே உழைத்துப் பிழைப்பவர்
சிலர்; ஏய்த்துப் பிழைப்பவர்
ஏராளம். தேசத்துரோகிக
ளான அந்தக் குள்ள நரியை
வேட்டையாட வேண்டும்!
மழை ஓயவே ஓயாதோ?
இந்த ஓட்டலுக்குள் போய்த்
தங்கினால் என்ன?

வாருங்கள்!
தங்குவதற்கு ஓர் அறை வேண்டும்
நம் நம்பர் பதினறு இதில் கையெழுத்துப் போடுங்கள்.
யாரோ உன்னைக் கவனிக்கிறார்கள் என்னே
யாரைக் கேட்டுக் கொண்டு சாவியைக் கொடுத்தாய்? போ உள்ளே!
அடப் பாவி! வேலைக்காரியானால் என்ன? பிடித்துத் தள்ள வேண்டுமா?
இந்தப் புகைப்படத்தில் இருப்பவன் தானே இவன்?
நில்லுங்கள்! அவர் என் அப்பா!
உன் அப்பாவை நான் ஒன்றும் செய்யவில்லை. வேண்டாத விருந்தாளியாகவும் இருக்கவில்லை. போய் வருகிறேன்.
சற்றுப் பொறுங்கள்!

கிழவன் கையில் ஒரு போட்டோ இருந்ததே? என் போட்டோ தானோ அது? முன்பொரு நாள் டில்லியில்.....
இரவு ஏழு மணிக்கு மேல் என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினாரே எதற்கு?
குமார்! நாளைக்கு நீ காலிம்பாங் போகிறாய். இதிலுள்ள குறிப்புக்களை மனப்பாடம் செய்து பிறகு கொளுத்தி விடு!
ஒரு டாக்ஸி கூடக் காணோமே? அதோ! ஏ டாக்ஸி!
நான் கவனித்துக் கொள்கிறேன். உங்களுக்குக் கவலை வேண்டாம். வரட்டுமா?
ஒரு கார் டாக்ஸியைப் பின் தொடர்கிறது
வீடு வந்தாச்சு, நிறுத்திக் கொள் இந்தாப்பா!
தொடரும்

சோப் உபயோகிப்பதால்
கூந்தல் சோபையை
இழக்கிறது
'ஹேலோ'
கூந்தலைப் பளபளப்பா
கச்செய்கிறது!
அமெரிக்காவில்,
ஏராளமாக
விற்பனை
யாகும்
ஷாம்பு
HALO
மறைந்துவிடக்கூடும் உங்கள் கூந்தலின் அழகை ஹேலோ பிரகாசிக்கச்செய்கிறது.

கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
தயாரிப்பாளர்கள் :— எஸ்.பி.எஸ்.ஜெயம் அண் கோ.,
25, கீழ நாப்பாளையத் தெரு, மதுரை.
MINERVA

இக்கால இல்லங்களிலே ஸர்ப்...



"இதற்காகக் காத்திருந்தேனே அந்த மாறுதல்..."

என்கிறார் பம்பாயிலுள்ள சமூக ஊழிய ரான ஸ்ரீமதி நோரீன் அமோலிக்.

'குடித்தனம் நடத்துவதற்காக ஏராள மான பெண்மணிகள் காலத்துக்கேற்ற புதுப்புது முறைகளை மேற்கொள்வதைப் பார்க்கிறேன்.
'எடுத்துக்கொள்ளுங்களேன் ஸர்ப். அன்றாட சலவைக்கு அது எத்தகைய பேருதவி என்பதை அனுபவத்தில் அறிந்தவள் நான்' என்கிறார் அவர்.
எளிதான வேலையோடு, எடுப்பான வெளுப்பு...எனவே, சட்டை, சேலை, பாவாடை....எதுவானாலும் சரி, எல்லாத் துணிமணிகளுக்கும் நான் ஸர்ப் உபயோகிப்பதில் வியப்பில்லை.

இக்கால மாதரின் தீர்ப்பு... ஆற்றல் மீறிய ஸர்ப், அழுக்கை அறவே அகற்றி, வெண்மைக்கு ஒப்பற்ற வெண்மை அளிக்கிறது. உங்கள் வீட்டுத் துணிகளுக்கு உகந்தது ஸர்ப்!

ஸர்ப் மூலம் உங்களுக்கு வெள்ளைவெளேரென்ற சலவை

ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 17-X52 TM



"என்ன சார்! புது வருஷப் பஞ்சாங்கம் வாங்க இவ்வளவு கூட்டமா இருக்கு?"
"அதிலே புதுசாத் தொடர் கதை ஆரம்பித்திருக்காங்களாம்!"
புத்தாண்டில் சில புது முயற்சிகள்!
இந்தப் புத்தாண்டிலிருந்து நான் சமைக்கிறதாக இருக்கிறேன்
இந்தப் புத்தாண்டிலிருந்து நான் மேக்கப் செய்து கொள்ளாமலே வெளியே செல்லப் போகிறேன்!
இனிமேல் வீட்டில் புது வருஷத்தைத் தவிர வேறு ஏதும் பிறக்க நான் அனுமதிக்க மாட்டேன்!
"ஆற்றிலே ஒரு முழுக்கு இன்னிக்கி தான் போகுதுங்க!"
"ஐயா, பூக்காரரே முழுக்கு இன்னிக்கி என்று, நீர் சொன்னால் நான் நம்ப முடியாது! கூடவே தான் போகும்!"
வேம்புசாமி விலாஸ்
புது வருஷ ஸ்பெஷல்
1. வேப்பங் கொழுந்து அல்வா
2. வேப்பிலை வடை
3. வேப்பம்பூ சட்னி
இவ்வளவு நாளும் இது தான் பண்ணிக் கொண்டிருந்தார்கள்! இன்றைக்கு உண்மையைச் சொல்லி விட்டார்கள்!

காலத்தால் தேயாத நாவல்

கோமதி சுவாமிநாதன்

[எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் வீடு. மாலை வேளை. பஞ்சாமிர்தம் கோபம் ததும்பக் கையில் ஒரு கவரை வைத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடக்கிறார்.]

பஞ்சாமிர்தம்: வரவரக் கெட்டுப் போச்சு.

[பஞ்சாமிர்தத்தின் பையன் ராஜு உள்ளிருந்து வருகிறான்.]

ராஜு: என்னப்பா! நந்தனார் சரித்திரத்தைப் புதுக் கோணத்தில் ஆராய்ச்சி செய்து எழுதப் போகிறீர்களா? நந்தன் சரித்திரத்திலே தான் 'வரவரக் கெட்டுப் போச்சு' என்கிற பாட்டு வரும்.

பஞ்சா: கோணல்தனமாக எதையாவது உளறாதே! மகா மேதாவித்தனமாக உன் மாமா சிதம்பரம் கடுதாசி எழுதியிருக்கிறான். தலைபோகிற அவசரமாக இங்கு வந்து நிற்கப் போகிறானாம்! அவனுக்கு இப்போது, இங்கு என்ன வேலை என்று கேட்கிறேன்?

ராஜு: பேஷ்! பேஷ்! இது நிஜமாகவே புது மாதிரி நந்தன் சரித்திரம்தான்! பழசிலே சிதம்பரத்தைத் தேடி நந்தன் போனான். நம்ப நவீனத்திலே, சிதம்பரமே இங்கே வரது!

பஞ்சா: சிதம்பரமும் சீர்காழியும் அதது இருக்கிற இடத்திலேதான் இருக்கணும்!... இந்தா! உங்க அம்மா காது கேட்க எதையாவது உளறாதே! அவள் இப்போதே தன் அருமைத் தம்பியை வரவேற்று உபசரிக்கப் பாயச வெங்கலப் பானையை அடுப்பிலே ஏற்றி வைத்து விடுவாள்!

[பஞ்சாமிர்தத்தின் மனைவி பெரியநாயகி உள்ளிருந்து வருகிறாள்.]

பெரியநாயகி: (வந்து கொண்டே) என்னைப் பார்த்தால் வெங்கலப் பானை மாதிரித்தான் இருக்கும்! வெள்ளிக்குத்து விளக்காகவே வாழ்நாள் முழுதும் இருந்துவிட முடியுமா? நீங்ககூடத்தான் அந்தக் காலத்திலே பூண் பிடித்த வாக்கிங் ஸ்டிக் மாதிரி இருந்தீர்கள். இப்போது பூசணிப்பழம் மாதிரி ஆகியிருக்கிறீர்களே?

பஞ்சா: நிறைய வை! அவசியமில்லாத விஷயங்களெல்லாம் விசேஷ அர்த்தபுஷ்டியுடன் உன் காதில் விழும். தேவையானது உன் காதில் விழாது! அதுவும் இப்போது நல்லதுதான்! நீ உள்ளே போ முதலில்!

பெரிய: நான் எப்போது கூடத்துக்கு வந்தாலும் 'உள்ளே போ! உள்ளே போ' என்று விரட்டத்தான் உங்களுக்குப் பொழுது சரியாக இருக்கிறது. அதனால்தானோ என்னவோ நீங்க அனுப்பற கதைகளையெல்லாம் பத்திரிகைக் காரியாலயங்களில் 'திரும்பிப் போ' 'திரும்பிப் போ' என்று விரட்டுகிறார்கள்.

பஞ்சா: இப்போது நானே 'திரும்பிப் போ! திரும்பிப்போ' கோஷத்தைத்தான் எழுப்பப் போகிறேன்.

ராஜு: ஐயையோ! நீங்களும் அந்தக் கதைகளைத் திரும்பிப்போ என்றால் 'டெட் லெட்டர்' ஆபீஸுக்குப் போய்ச் சமாதியாகிவிடும். அப்புறம் நம்ம வீட்டிலே வழக்கமாகப் பழைய பேப்பர் வாங்குபவன் ஏமாந்து போய் விடுவான்!

பஞ்சா: போடா மண்டு! நான் கதையைச் சொல்லலேடா! உங்க மாமா சிதம்பரத்தைச் சொன்னேன்! கடுகிலிருந்து காப்பிக் கொட்டை வரையில் அகரத்தனமாக விலை ஏறியிருக்கும்போது விருந்தாளி கழுத்தறுப்பு வேறு வேண்டுமா?

பெரிய: அவன் ஒன்றும் விருந்தாளியில்லே! என் தம்பி!

பஞ்சா: அவன் ஒன்றும் சாதாரண விருந்தாளியில்லே! என் மைத்துனன்! வேளைக்கு ஒரு கூஜா காப்பிதான் குடிப்பான்!

பெரிய: அந்தப் பித்துக்குளி ஏன்தான் இப்போது இங்கு வருகிறதோ? கையிலே நானூறு ஐந்நூறு அகப்பட்டிருக்கிறது என்று வேறு எழுதியிருக்கிறது! உங்களுக்கு வேறு

கடுதாசி எழுதி யிருக்கிறுனே? எனக்கு மொட்டையாக எழுதியிருக்கிறுன்.

பஞ்சா: (வியப்புடன்) நானூறு ஐந்நூரு? எது? உன் தம்பிகூட அவ்வளவு சமர்த்தாகப் போய்ச் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டானு? பரவாயில்லையே! அந்தப் பயலே இங்கே வரவழைத்துப் பாராட்ட வேண்டியதுதான்!

பெரிய: ஓஹோ! குதிரை, கொள் என்றுல் வாயைத் திறக்கும், கடிவாளம் என்றுல் கப் என்று மூடிக் கொள்ளுமாக்கும்! கையிலிருப் பதைக் கொண்டு வந்து இங்கே கொட்டி நாசமாக்க அவன் ஒன்றும் அத்தனை அசடு இல்லை! அதை வைத்து ஐயாயிரம் ஆறுயிரம் பண்ணலாம் என்று நினைக் கிறுன்!

பஞ்சா: பிரமாதம்!... பிரமாதம்! உன் தம்பிக்கு அவ்வளவு பிஸினஸ் மூளை இருக்கிறதா? இங்கே வந் தான்னு நான் மணி மணியா, யோசனை சொல்ல மாட்டேனு?

பெரிய: அவன் சொல்லுவான் உங் களுக்கு ஆயிரம் யோசனை! (போய்க் கொண்டே) உங்கள் அற்புத யோசனைகளை உங்கள் கதா நாயக நாயகிக ளிடமே சொல் லுங்கள்! அவர்



களால்தான் குட்டிச்சுவராகப் போக முடியும்.

[போகிறுள்]

பஞ்சா: சே! சே! தம்பிகிட்டே கொஞ்சம் பணம் இருக்குன்னு அக்காக்காரி தலைகால்லவா ஒழுங் காக நிற்க மாட்டேங்கிறது?...ராஜு! ஒரு கார்டு எழுதித் தரேன். தபாலில் போடுடா!

ராஜு: 'சிதம்பரமே! சிந்தித் துப் பார்! இங்கிதம் தெரியாத வனே! இங்கு உனக்கு என்ன வேலை?' என்று?

பஞ்சா: அடசீ! தடிப்பயலே! மாமாவுக்கு நீ வைக்கும் மரியா தையா இது?...அவன் என் மைத்துனன்டா! அவனே வரச் சொல்லி எழுதப் போகிறேன்.

[போகிறுர்கள்]

காட்சி 2

[பத்து நாட்கள் கழித்து. பஞ் சாமிர்தத்தின் வீட்டுக் கூடம். பஞ்சாமிர்தம் உட்கார்ந்து தனியாக ஏதோ எழுதிக் கொண் டிருக்கிறுர்.]

பஞ்சா: (தனக்குள்) என்ன? இந்தச் சிதம்பரம் பயல் வந்து நாலு நாட்களாச்சு! பணத்தைப் பத்தியோ, பிஸினஸ் பத்தியோ ஒரு வார்த்தை வெளிவிடாமல் 'கம்' என்று இருக்கிறுன்! அக்காக் காரியோட உபதேசமா?

[சிதம்பரம் வருகிறுன்]

சிதம்பரம்: தீவிர யோசனை போலிருக்கு! உங்களிடம் ஒருவிஷ யம் பேசணும்! அப்புறம் வரு கிறேன். [திரும்புகிறுன்]

பஞ்சா: சிதம்பரமா! வா! வா! உட்காரு! ஏதாவது கதை எழுதலாமென்றுஉட்கார்ந்தேன்!

சிதம்: பேஷ்! பேஷ்! நானும் அது விஷயமாகத்தான் வந்தேன்.

பஞ்சா: (மெதுவாக) நாசமாய்ப் போச்சு! இவன் வேறு எதையாவது குப்பைகளை எழுதிக்கொண்டு வந்து என் பிராணனை வாங்கப் போகிறானா?...காரியம் ஆகும் வரையில் கழுதையானாலும் காலைப் பிடித்துத்தானாக வேண்டும்! (இரைந்து) கதை விஷயமா? நீ ஏதாவது எழுதி யிருக்கிறாயா?..பேஷ்! கொண்டா! படித்துப் பார்த்துத் திருத்தி என்ன பத்திரிகைக்கு அனுப்பலாம் என்று சொல்கிறேன்!

சிதம்: நீங்க ஒண்ணு! நான் எழுதுறதாக இருந்தால்தான் எப்போதோ தலைசிறந்த எழுத்தாளனாக ஆகியிருப்பேனே! ஆயிரம் கற்பனை மனத்திலே இருக்கு! ஆனால் அரை வரி எழுதத் திறமை இல்லையே! அது என் அதிருஷ்டம்!

பஞ்சா: அதுதான் பிஸினஸில் இறங்கத் தீர்மானித்து விட்டாயாக்கும்! நீ கெட்டிக்காரன்! நாம் இரண்டு பேரும் கூட்டாக ஒரு பிஸினஸ் தொடங்கலாம் என்று யோசனை!

சிதம்: ஆஹா! ரொம்பக் கரெக்டாக என் மனத்தில் இருப்பதைச் சொல்லி விட்டீர்களே! அந்த பிஸினஸிலே இரண்டு பேர் முயற்சியும் சரிபாதி! லாபத்திலும் சரிபாதி! உங்களுக்குச் சம்மதமா?

பஞ்சா: மனப்பூர்வமாகச் சம்மதம்!

சிதம்: இதோ வந்துட்டேன்! உள்ளே அக்கா கூப்பிடறு போலிருக்கிறது!

[போகிறான்]

பஞ்சா: ஜல்தி வா! அவள் ஏதாவது தொண தொணத்தால் காதில் போட்டுக் கொள்ளாதே! (தானாக) ஆஹா! பயல் கெட்டிக்காரன்! பஞ்சாமிர்தம் பப்ளிகேஷன்ஸ் என்று ஆரம்பித்து, நம்முடைய மணியான பத்துக் கதைகளை அந்தப் பயலோட ஐந்நூறு ரூபாயில் ஆயிரம் புஸ்தகங்களாக அடித்துத் தமிழ் வாசகர்களை ஒரு கலக்குக் கலக்கலாமே! அவனே மானேஜராக இருந்து விட்டுப் போகட்டும்!

[சிதம்பரம் வருகிறான்]

சிதம்: என் ஐடியாவைச் சொல்லட்டுமா?

பஞ்சா: சொல்லு...இப்போ நல்லவேளை தான்.

சிதம்: (தலையைச் சொறிந்து கொண்டு) அதாவது...ஒரு நல்ல சரித்திர நாவலாக...

பஞ்சா: நோ! நோ!...முதலில் பண்டு ஸினால் சிறு கதைத்தொகுதியாக...

சிதம்: அது யாருக்குத் தெரியும்? எனக்கு வராது!

பஞ்சா: உன்னை யாருடா சொன்னு?... என் கதைகள்!

சிதம்: உங்க கதைகள் கிடக்கட்டும்! நான் சொல்லுகிற கதையைக் கேளுங்கள்!

பஞ்சா: (மெதுவாக) கேட்டுத் தொலைக்கிறேன்! உன்கிட்டே பணம் இருந்து தொலைக்கிறதே! (இரைந்து) சொல்லு!...ஏதாவது உபயோகப்படுமா, பார்ப்போம்.

சிதம்: பார்க்கலாவது? அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? பஸ்டுக்ளாஸ் சரித்திர நாவல்,...நீங்க தொடர்கதையாகக்கூட எழுதலாம். பிரமாதமான பிளாட்!... உங்களுக்குக் கிடைக்கிற சன்மானத்திலே எனக்குப் பாதி தந்துவிட வேண்டும்!

பஞ்சா: சரித்திரத் தொடர்கதைப் பிளாட்டா? உனக்கென்ன சரித்திரத்தைப் பற்றித் தெரியும்? ஹிஸ்டரியிலே 25 ஹூ மார்க் வாங்கினதாலேதானே நீ ஒரு தடவை நாலாம் பாரத்தைக்கூட இன்னொரு வருஷம் சுத்தகை எடுத்தே?

சிதம்: அதெல்லாம் பழைய சரித்திரம்! மகேச வர்மன் மாதுளவல்லியை எப்படிக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டான் என்று மாத்திரம் அப்போது கேட்டிருந்தால் நான் ஒரே தாவலில் நாலாம் பாரத்திலிருந்து ஆறும் பாரம் போயிருப்பேன்! என்னவோ பானிபட் யுத்தம், சாணி தட்டற சண்டை என்று கேட்டுக் கழுத்தை அறுத்து விட்டார்கள்!

பஞ்சா: அது யாருடா மகேச வர்மனும் மாதுளவல்லியும்? காதிலே விழாத பேர்களாக இருக்கு?

சிதம்: அதுதான் நான் சொல்லவிருக்கும் சரித்திர நவீனத்தின் முக்கிய பாத்திரங்கள்! அற்புதமான படைப்பு. பிரபல புதை பொருள் ஆராய்ச்சியாளர் ரவியில் எனக்குச் சிநேகிதமானார். அவர்தான் குறிப்புகள் கொடுத்தார்!....... நான் கதையைச் சொல்கிறேன்! சன்மானத்தில் பங்கு கொடுக்கச் சம்மதமா?

பஞ்சா: முக்கால் பங்கு வேண்டுமானாலும் தருகிறேன்! சரிதானே!... அப்புறம் நீ ஏதோ பிஸினஸ் பண்ண....

சிதம்: முதலில் இந்தக் கதை பிஸினஸ் நடக்கட்டும்... காஞ்சிமாநகர் கடற்கரையிலே ஒரு நாள் மாலை! மந்தமாருதம் வீசுகிறது....

பஞ்சா: உஷ்!....... காஞ்சீபுரத்திலே ஏதுடா கடற்கரை?

சிதம்: ஆரம்பத்திலேயே என் உற்சாகத்திலே தண்ணீரைக் கொட்டுகிறீர்களே!... கடற்கரை இல்லையென்றால் கார்ப்பொரேஷன் பூங்காவாக இருக்கட்டுமே! மகேந்திர வர்மன் வெள்ளைப் புரவியில்....

பஞ்சா: அந்தக் காலத்திலேயே காஞ்சீபுரத்திலே கார்ப்பொரேஷன் தோன்றி விட்டதா?... மேயர் எந்தக் கட்சியாம்?...

சிதம்: கொல்லுறீங்களே! என்னவோ பூங்கா! இல்லே பொட்டல்! அதுவுமில்லேன்னு குளத்தங்கரை! இந்தக் கட்டத்திலே அவன் மேலே ஒரு அல்சேஷன் வந்து விழுந்து, அவனுடைய டுவீட் பாண்ட் அழுக்காகி, அதற்காகப் பின்னால் வந்த மாதுளவல்லி மன்னிப்புக் கேட்கும்போதுதானே காதல் துளிர்க்கிறது!

பஞ்சா: கதை ஜிவு ஜிவுன்னு ஆரம்பமாகிறாற் போலே இருக்கு! மகேச வர்மன் டுவீட் பாண்டுக்கான துணியை டில்லாராம் கடையிலே வாங்கினான்? பொல்லாராம் கடையிலே வாங்கினான்?

சிதம்: பாலாற்றங்கரைக் கல்வெட்டுகளில் அதைப் பற்றிக் குறிப்புகள் இல்லை... (திடுக்கிட்டு) என்ன? டுவீட் பாண்டா? இல்லே! சாவகத்துச் சால்வை! ஆமாம்! சால்வை!

வெயி
லிலும்
சுறு
சுறுப்பு!
Bata

BETTER FANS ARE BUILT THROUGH BETTER ENGINEERING

நல்ல இயந்திரக் கலையின் மூலம் சிறப்பான மின்சார விசிறிகள் தயாரிக்கப்படுகின்றன

அஃதுவே
ஓரியண்ட்
முறை

Orient
FANS

தோற்றத்திலும் சேவையிலும் பல் லாண்டுகளாக முன்னணியில் நிற்கிறது



ஓரியண்ட ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா-11

ASP/OGI-7

பஞ்சா : சால்வையோ? போர்வையோ? உன்னை உன் அக்கா கூப்பிடுகிறுள் போலிருக்கிறது, பார்.

சிதம் : நீங்க என்னைத் தட்டிக் கழிக்கிறீங்க! குறிப்பிலே டுவிட் என்றுதான் இருக்கிறது!... இல்லே! இல்லே! பார்த்து விட்டு வந்து சொல்கிறேன்.

[சிதம்பரம் எழுந்து போகிறுன். பஞ்சாமிர்தம் பூனை போல் அவனுக்குப் பின்னுல் போகிறுர். சிதம்பரம் பெட்டியைத் திறந்து எதையோ பார்க்கிறுன்.]

பஞ்சா : ஏனப்பா! குறிப்பு ரொம்பக் கனமாக இருக்கும் போலிருக்கே !

சிதம் : ஐநூற்றி முப்பத்தி ஆறு பூல்ஸ்காப் பேப்பராக்கும். கம்மாவா ?

பஞ்சா : சரிதான் போ ! யாரோ எழுதிக் கொடுத்ததைக் கொண்டு வந்தா வேடிக்கை செய்கிறுய் ? இதை அபேஸ் செய் உன்னை யார் அனுமதித்தார்கள் ?

சிதம் : (தன்னை மறந்து) அபேஸா ! யார் சொன்னுர்கள் ! விலை கொடுத்து வாங்கினேன் ! வீசை பத்தணு வீதம் இரண்டரை ரூபாய் கொடுத்து எங்கள் ஊர்த் தெருவில் வாங்கினேன் ! முதல் இரண்டு பக்கங்களும் கடைசி இரண்டு பக்கமும் இல்லே !

பஞ்சா : அந்தச் சரித்திரக் கதையை எங்கிட்டே சாடு விட்டு அழறியாக்கும் ! இதற்குச் சன்மானம் பேரம் வேறு! எழுதினவன் வந்து உதைப்பான்.

சிதம் : இதைச் சரித்திரக் கதை என்று யாரு உங்களுக்குச் சொன்னு ? அசல் சமூகக் கதை. அதைத்தான் என் திறமையாலே சரித்திரக் கதையாக மாற்றுகிறேன் ! உங்கவிடம் சொல்லுகிறேன் !

பஞ்சா : சமூகக் கதையா ! நிலை வை! அது தான் மகேந்திரவர்மன் டுவிட் கூட்டிலே வருகிறுனு ?

[பாய்ந்து சிதம்பரத்தின் பெட்டியிலுள்ள பேப்பர்க் கட்டை எடுக்கிறுர்.]

சிதம் ஜாக்கிரதை! அது என் பிளினல்...

பஞ்சா : பழக்கமான கையெழுத்தாக இருக்கிறதே ! எந்த மடையன் இப்படிக் கத்தை கத்தையாக எழுதிப் பழைய பேப்பர்க்காரனிடம் போட்டிருக்கான் ? (கண்ணுடியைச் சரியாகத் தள்ளிவிட்டுக் கொண்டு) அட பாவி ! நான் மூணும் வருஷம் எழுதின நாவல் ! காலத்தால் தேயாத காதல்...

ராஜு : (வந்து கொண்டே) அதுதான் காலத்தாலே தேயாமல் உங்க வீடு தேடி வந்து விட்டது ! நான் நேத்திலே மாமா பெட்டியைப் பார்த்தேன் ! என்னவோ புதையல் மாதிரி மாமா பார்த்துக் கொண்டிருந்தார் ! அப்புறம் நான் அவருக்குத் தெரியாமல் புரட்டிப் பார்த்தேன். பழைய கறுப்பன் ! போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே...

சிதம் : ஐயையோ ! நான் இதற்கு விலை கொடுத்து வாங்கினபோது ஏகக் கற்பனை செய்து ஆகாசக் கோட்டை கட்டினேனே ! இந்த ஐந்நூறு அறுநூறு பக்கங்களை மூலதனமாக வைத்துக் கொண்டு அத்திம்பேர் உதவியாலே இரண்டாயிரம் ரூபாய் பணம் பண்ணலாமென்று பார்த்தேன். புகைந்த போச்சே. அக்காவுக்குக்கூட ஜம்பமாக எழுதினேன் !

பஞ்சா : அட பாவி ! இந்தக் குப்பையோடே பக்கங்களை மனத்தில் வைத்துக் கொண்டா ஐந்நூறு அறுநூறு என்று எழுதினுய் ? நிலை வை ! நான் அதை ரூபாய் என்று நினைத்து பிரகாரங்கூட சுற்றிப் பண்ணினேன் !

சிதம் அத்திம்பேர் ! காணுமல் போன இந்தத் தொடர்கதையை எங்கள் ஊரில் கண்டுபிடித்துக் கொடுத்ததற்காகவாவது ஏதாவது பணம் கொடுங்கள் !

ராஜு : காணுமற் போனதா ! யாரு சொன்னு ? இவர் கையாலே பழைய பேப்பர்க்காரன் கிட்டே போட்டதாக்கும் ! யாரோ ரயிலிலே சுவாரசியமாகக் கதை சொன்னுர்கள் என்று கேட்டுவிட்டு வந்த இந்த அப்பா, பிராணனை விட்டு அறுநூறு பக்கம் நாவலாக எழுதினுர். கடைசிப் பக்கம் எழுதின பிறகுதான், அந்தக் கதை சொன்ன பாவி அப்பா படிக்காத ஆங்கில நாவலைச் சுருக்கிச் சொல்லி யிருக்கிறுன் என்று தெரிந்தது. அப்புறம் இந்த நாவல் பத்திரிகை ஆபீஸ்களுக்குப் போனுல் அப்பா கௌரவம் என்ன ஆவது ? மரியாதையாகப் பழைய பேப்பர்க்காரன்கிட்டே அடைக்கலம் புகுந்தது. பத்திரிகை ஆபீசைப் பார்க்காமல் நேராகப் பழைய பேப்பர்க்காரன்கிட்டே போன பெருமை இந்த ஒரு நாவலுக்குத்தான் !

[பஞ்சாமிர்தம் தலையைப் பிடித்துக் கொண்டு உள்ளே போகிறுர்.]

எமது புத்தாண்டு வாழ்த்துகள்

கண்ணைக் கவரும் கலையழகோடு உள்ளத்திற்கும் உடலுக்கும் குளுமை தரும் உல்லாச மிகு பெரிய திரையரங்கு!

சாந்தி ஏர்-கண்டிஷன்ட்

தொடர்ந்து அரங்கு நிறைந்த காட்சிகளோடு தென்னகத்திலேயே புதிய சாதனையை ஏற்படுத்தி வருகிறது.

வாரம் ஒன்றிற்கு வசூல் ரூ. 38,803-60

பிரதி தினமும் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை தொடர்ந்து அட்வான்ஸ் புக்கிங் உண்டு.

சாந்தி தியேட்டர்ஸ்

உரிமையாளர்கள் : D. ஷண்முகராஜா – G. உமாபதி
மவுண்ட் ரோடு, சென்னை. போன் 84086

13-4-61 தமிழ் வருஷப்பிறப்பை முன்னிட்டு "பாவ மன்னிப்பு" காலை 9-30 மணிக்கு பிரத்யேகக்காட்சி

EP

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு

இங்கிலாந்து நாட்டிலே

சுதந்திரக் கட்சி பற்றிய பேச்சு பாரத தேசம் முழுவதிலும் மட்டுமின்றி இங்கிலாந்திலும்கூட எதிரொலிக்கிறது. சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக பிதாக்களில் ஒருவரான பொதுக் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். மஸானியின் சீமை விஜயம் தான் காரணம். "இந்திய அரசியலில் தோன்றியுள்ள புது அலை இன்று இங்கிலாந்துக் கடற்கரையில் ஒரு சுழிப்பு ஏற்படுத்தியுள்ளது" என்று 'பர்மிங்ஹாம் போஸ்ட்' பிப்ரவரி 15 ந் தேதி இதழில் கூறுகிறது—அன்று லண்டனில் நடைபெற்ற மஸானியின் நிருபர் கூட்டத்தைக் குறிப்பிட்டுத்தான். இங்கிலாந்தில் பல லிபரல் கட்சித் தலைவர்களுடனும், சங்கங்களிலும் மஸானி பேசினார்.

ஆந்திரம்

ஜனவரி கடைசியிலும், பிப்ரவரி தொடக்கத்திலும் சுதந்திரக்கட்சித் தலைவர் ஸ்ரீ என். ஜி. ரங்கா அவர்கள் ஆந்திராவில் நடத்திய சுற்றுப்பிரயாணம் நல்ல பலனை அளித்தது. கட்சி வலுப்பெற்று வருகிறதென்பதற்கு அவருடைய உரைகளைக் கேட்கத் திரண்டு வந்திருந்த கூட்டங்களே அத்தாட்சி கூறின. விஜயவாடாவில் பிப்ரவரி 15 ந் தேதி நடைபெற்ற ராஜ்யக் கமிட்டி கூட்டத்துக்கு ராஜ்யக் கட்சித் தலைவர் ஸ்ரீ பி. ராமச்சந்திர ரெட்டி தலைமை வகித்தார். தெலுங்கானாவில் கட்சி அடைந்த முன்னேற்றம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தாலுகா, தேர்தல் - தொகுதி வாரியாகக் கட்சியைப் பலப்படுத்துவது பற்றியும், துண்டுப் பிரசுரங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் பிரசாரத்தைத் தீவிரமாக்குவது குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆந்திரா முழுவதிலும் — முக்கியமாக ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம், மேற்கு கோதாவரி முதலிய மாவட்டங்களில்—கட்சிக் கிளைகள் தொடங்கப்பட்டன.

தெலுங்கானா நிர்வாகக் குழுவின் கூட்டமொன்று ஹைதராபாத்தில் நடைபெற்றது. அதில், ராஜாஜி அடுத்தமுறை ஹைதராபாத்துக்கு விஜயம் செய்யும்போது அவரிடம் ஒரு லட்சம் ரூபாய் கொண்ட பண முடிப்பு அளிப்பதென்று முடிவு செய்து, அதற்காக ஒரு துணைக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

அஸ்ஸாம்

அன்பர்கள் சிலர் அழைப்புக்கிணங்கி, அஸ்ஸாம் ராஜ்யப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ ஜான் டெங், மேண்டிபதர் என்ற எளிதில் செல்ல முடியாத மலைப் பிரதேசத்துக்குச் சென்றார். அங்குள்ள மக்கள் சுதந்திரக் கட்சிக்குக் காட்டிய பேராதரவு அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. அங்கு ஒரு மாவட்டக் கிளையே நிறுவப்பட்டு விட்டது. உலகத்திலேயே அதிக மழையைப் பெறும் சிரபுஞ்சியில், கனத்த மழையிலேயே கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. பிப்ரவரி 9 ந் தேதியன்று, 'தருமப் பயிர் வாழும் தருணமா மழை'யாக இந்தக் கட்சி தோன்றியுள்ளதென்பதை மக்களும் அறிந்து கொண்டு விட்டார்கள் என்பதை அன்றைக்குக் கூடியிருந்த ஏராளமான மக்கள் தெளிவாக்கி விட்டார்கள்.

பீஹார்

சுற்றுப் பயணத் திட்டங்கள் வகுப்பதற்கென்றும், பிரசார வேலைகளுக்கென்றும் பீஹாரில் துணைக்கமிட்டிகள் நிறுவப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். செயல் முறைகளைத் தக்கபடி இணைக்க வேண்டியதன் அவசியத்தை ஏனைய ராஜ்யங்களும் நன்றாக உணர வேண்டும். மற்ற ராஜ்யத் தலைவர்கள் பீஹாரில் சுற்றுப் பிரயாணம் செய்ய ஏற்பாடாகி யிருக்கிறது. அகில இந்தியத் தலைவர்களை உருவாக்க இது மிகவும் உதவி புரியும்.

தலைவர் ராஜா காமாக்யா நாராயண்சிங், உபதலைவர் ராம் பிரேஹத்சிங், பொதுக் காரியதரிசி ஞானஜித்தன்சிங் ஆகியோரின் சலியா உழைப்பு பாராட்டுக்குரியது. இந்த உழைப்பின் பலனேபோல் மார்ச் 11, 12 தேதிகளில் டால்டின்கஞ்சில் ராஜ்யத்தின் முதல் சம்மேளனம் அதி விமரிசையாக நடந்தேறியது. ஸ்ரீ ராஜாஜி அவர்களே பிரசன்னமாகி யிருந்தார் என்றால் விமரிசைக்குக் கேட்பானேன்?

பம்பாய்

டில்லி செல்லும் வழியில், மார்ச் 1, 2, 3 தேதிகளில் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் பம்பாய் வந்திருந்தது கட்சிக்கு அமோக ஆதரவைத் தேடித் தந்திருக்கிறது. இன்றைய அரசியல் அமைப்பில் தேர்தலுக்காக ஒரு கோடி ரூபாய் திரட்ட வேண்டியது இன்றியமையாததாகும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

மலாட் என்ற இடத்தில் சுதந்திரக் கட்சியின் ஆதரவில் சமூகசேவா நிலையம் ஒன்று அமைத்திருக்கிறார்கள்; பெரிதும் பாராட்ட வேண்டிய காரியம்.

மாதுங்கா கிளையில் மார்ச் 16 ந் தேதி ஸ்ரீமான்கள் பி. மோடி, ஆர். வி. மூர்த்தி, மதுமேதா, ரமேஷ் குல்கர்னி ஆகியோர் பேசினார்கள். இங்கு எப்போதுமே கட்சிக்குச் செல்வாக்கு அதிகம்.

குஜராத்

ஸ்ரீ கே. எம். முன்ஷியும், பாலிவாலும் பாபட்டும் பிப்ரவரி 5 ந் தேதியிலிருந்து 9 ந் தேதிவரை குஜராத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து மாபெரும் கூட்டங்களில் பேசினர்.

8 ந் தேதி நாடியாத்தில் தொழில் மகாநாடு ஒன்றைத் திறந்து வைத்தார் ஸ்ரீ முன்ஷி. இதன்பின் பஞ்ச் மஹால் மாவட்டத்தில்

> அன்பு செய்யாதவன் கடவுளை அறிவதற்கில்லை; ஏனெனில் அன்பே கடவுள். கண்முன் காணும் சகல ஜீவர்களிடம் அன்பு பூணுதவன், காணுத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்?
>
> அன்பே கடவுள். அன்பில் வாழ்பவன் கடவுளுக்குள் வாழ்கிறான், கடவுள் அவனுக்குள் வாழ்கிறார்.
>
> —இயேசு கிறிஸ்து

ஸ்ரீ படேல் பிரயாணம் செய்த போது இப்பகுதிகளில் வாழும் 'பீல்' மக்கள் கட்சியை உற்சாகத்தோடு வரவேற்றார்கள். பிப்ரவரி மாதக் கடைசியில் படேலுடன், ஸ்ரீ ஏ. டி. ஷராப் அவர்களும் பல இடங்களுக்கு விஜயம் செய்தார். அவர் தொழில் துறை பிரமுகர்கள் கொண்ட பல கூட்டங்களிலும் வர்த்தக சபைகளிலும் பேசினர். இது காரணமாக, பயந்து நடுங்கி வந்த பலர் தைரியமாகக் கட்சிக்கு ஆதரவு தர முன் வந்திருப்பது குறிப்பிட வேண்டிய விஷயமாகும். கட்சியின் முன்னேற்றத்தில்தான் தங்கள் முன்னேற்றம் பிணைந்துள்ளது என்று குஜராத்தின் வர்த்தக சமூகம் உணர்ந்து விட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மத்தியப் பிரதேசம்

இந்தோர் பகுதியிலுள்ள ஒன்பது மாவட்டங்களிலும் கட்சியின் கிளைகள் பல அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீமான்கள் என். வி. ஜமீன்தார், ஷிர்லே சாகேப், பாருலேகர், ஜாதவ், பாண்டியா ஆகியோரின் தலைமையில் தொண்டர்கள் தீவிரமாகப் பணி புரிந்து வருகின்றனர்.

மேற்கு வங்கக் கட்சித் தலைவர் ஸ்ரீ என். வி. சட்டர்ஜி இங்கு சுற்றுப் பிரயாணம் செய்தார்.

பிச்சோட்டில் மார்ச் 4, 5 தேதிகளில் நடைபெற்ற உஜ்ஜயினி மாவட்ட சம்மேளனம் சிறப்பாக நடந்தேறியது. காலுஹேரா ராஜ்குமார் உதயசிங் இதில் கலந்து கொண்டார். சம்மேளனத்தின் போது ஆயிரக்கணக்கான நிலமற்ற விவசாயிகளை நிலவரம்புச் சட்டத்தை எதிர்த்தது. இச்சட்டத்தின் நோக்கத்தில் அந்தரங்க சுத்தமே இல்லை என்பதை அடித்துக் கூறியது. நில வரம்புச் சட்டம், கூட்டுப் பண்ணை இவற்றை ஆட்சேபித்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன, இச் சம்மேளனத்தில்.

மத்தியப் பிரதேசத்தில் கட்சியின் புதுத் தலைவராக ஸ்ரீமந்த் ராஜ் ராஜேந்திர மலோஜி நர்சிங் ராவ் ஷிதோல் எம். எல். ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பஞ்சாப்

பிப்ரவரி மாதம் முழுதும் ராஜ்யமெங்கிலுமுள்ள பற்பல கிராமங்களில் நடைபெற்ற கட்சிக் கூட்டங்கள் மக்களிடையே புது விழிப்பை உண்டாக்கின; வரிகளின் கொடுமையை அவர்களுக்கு நன்ருக உணர்த்தின.

பிரிவினைச் சக்திகளை வளர்த்து, தாம் நிலை பெறுவதற்காக இந்த ராஜ்யத்தில் ஆட்சியிலுள்ளோர் செய்யும் அக்கிரமங்களை ராஜ்யக் கமிட்டியார் பிப்ரவரி 12ந் தேதி நிறைவேற்றிய ஒரு தீர்மானம் எடுத்துச் சொல்கிறது. நிர்வாகத்தில் மலிந்திருக்கும் ஊழலையும் அது குறிப்பிடுகிறது. இவற்றை முறியடிக்க, சிறப்பான ஒரு வழியையும் கூறுகிறது அது. அதாவது, தனி நபர் உரிமைகள், வரிக் கொள்கை, நிர்வாக ஊழல் இவை குறித்துப் பொதுமக்களின் கருத்தை உருவாக்குவதற்கு, ஜனநாயக அடிப்படையில் அமைந்த கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்த ஒரு சம்மேளனத்தைக் கூட்ட வேண்டும் என்கிறது. இதற்காக, இதர எதிர்க் கட்சிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளத் துணைக் கமிட்டியும் அமைக்க உத்தேசித்திருக்கிறது.

கபூர்தலாவில், ஸ்ரீ உத்தம்சிங் நாகோகி தலைமையில் மாவட்ட மகாநாடு ஒன்று நடைபெற்றது.

பிப்ரவரி 14-ந் தேதி பதேஹாபாத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஸ்ரீ காகாராம் என்ற கம்யூனிஸ்ட் தலைவர் தாமும் தம்மைச் சேர்ந்த முந்நூறு பேரும் சுதந்திரக் கட்சியில் சேரப் போவதாக அறிவித்தார். இவர்களில் 45 பேர்கள் ஸ்தலத்திலேயே கட்சி அங்கத்தினராகச் சேர்ந்தும் விட்டார்கள்!

உத்தரப் பிரதேசம்

உத்தரப்பிரதேசக் கிளையின் பொருளாளர் ஸ்ரீ ராகவேந்திர பிரதாப்சிங் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். சுல்தான்பூர் மாவட்டத்திலுள்ள லம்புவா என்ற இடத்தில் இவர் உரை நிகழ்த்திய உடனேயே ஏராளமான விவசாயிகள் அங்கத்தினராகச் சேர்ந்தார்கள். பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலர்கூட அதற்கு முழுக்குப் போட்டுவிட்டுச் சுதந்திரக்கட்சியில் சேர முன் வந்தனர். இதேபோல் ராம்குந்த்பஜாரிலும், பஸ்தி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஸ்ரீ பிரதாப்சிங் சுற்றுப்பயணம் செய்து கட்சிக்குப் பலம் கூட்டியிருக்கிறார். ராஜ்ய பொது காரியதரிசி ஸ்ரீ சவுத்திரி லாயக் சிங்கும் பொருளாளருக்குப் பின் தங்காமல் நற்பணி புரிந்து வருகிறார்.

ராஜ்யக் கிளையின் நிர்வாகஸ்தர்களும், உள்ளூர்க் கிளைகளின் தலைவர்கள், காரியதரிசிகளும் அடங்கிய ஒரு கூட்டம் பிப்ரவரி 26ந் தேதி லக்ஷ்மணபுரியில் நடைபெற்றது. ராஜ்யத் தலைவர் ஸ்ரீ எஸ். கே. டி. பாலிவால் தலைமை தாங்கினார். ஒவ்வொரிடத்திலும் பிரசாரத்தை வலுச்செய்வது பற்றியும், தேர்தலுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. கட்சியின் அடுத்த வருஷாந்திர சம்மேளனத்தை டிசம்பர் மாதத்தில் ஆக்ராவில் நடத்துமாறு கேட்டுக் கொள்வதெனவும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்

ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட்.
மதராஸ்-17

தி கோயமுத்தூர் காட்டன் ஜூபிலி மில்ஸ்
சிங்காநல்லூர்

எந்த காலத்திலும்
எந்த வேளையிலும்...

முடிஸ்
தேயிலை

பாக்கெட்டுகளிலும்
டின்களிலும் கிடைக்கும்.

பாம்பே பர்மா டிரேடிங் கார்பரேஷன் லிமிடெட்
1/6 — 2nd லைன் பீச். சென்னை-1.

புத்தாண்டுக் கவியரங்கம்

வேனில் பிறந்தது! வேம்பு மலர்ந்தது

ஓடை நெடுங்கரை மணலாச்சு—அலை
ஓடு நறும்புனல் வறண்டாச்சு
கோடை யெழுந்தனல் வெய்யலாச்சு—தரை
கூடி யெழுந்துயர் மலைகோகவிக்
கோடை யூட்டி குற்றாலம்
நாடி விருப்பிலே டிருப்பாச்சு
சாடி மிகுங்கனல் பொறுவாறுச
சென்னை யெனும்நகர் நெருப்பாச்சு
சில்லினிமைத் தென்றல்வளி பிறந்தாச்சு
தேனருவி புனல்பெருகிச் சுரந்தாச்சு
கல்லினிடை முழவினொலி எழுந்தாச்சு
கானமதில் மாமரங்கள் பழமாச்சு
மெல்லினிமைக் குரலையொலி ஒலித்தாச்சு
மேலவயற் கோடைநட வெடுத்தாச்சு
அல்லலறச் சிறுதெய்வ விழவாச்சு
ஆற்றினிலும் அழகரவர் துறலாச்சு.
வெள்ளி பிதிர்ந்தசில் மணித்துளிபோல
வேம்பு மலர்ந்தினி துதிர்ந்தாச்சு
கொள்ளை யெழில்தரு மல்லிநறும்பூக்
கொல்லை பொல்லென மலர்ந்தாச்சு
பள்ளி கல்லூரிச் சிறைநகள்
பரிட்சை முடிந்தபின் விடுத்தாச்சு
பின்னை இளைஞர்கள் வினையினில்
பரிட்சை முடிவெனவே தவிப்பாச்சு.
இத்தரை யுள்ளார் அத்தனைபேர்களும
இன்குளிர் நாடி யெழுந்தாச்சு
சித்தர்கள் தென்மலைச் சாரலெலாம்
தென்றலின் நாடி துடித்தாச்சு
பெற்றவா வாயினில் திருமணப்
பேச்சது சூடு பிடித்தாச்சு
சித்திரை நங்கை மலரடி
சிலம்பிடு தளிர்நடை நடந்தாச்சு.

மணிவண்ணன்

பத்தரை மாற்றுத் தங்கம்

சித்திரை வந்தான் புத்தொளி தந்தான்
பத்தரை மாற்றுத் தங்கம்— அவன்
பத்தரை மாற்றுத் தங்கம்!

இத்தரை மேலே முத்தொளி போலே
இன்னொளி வீசிவரும் — வானின்
கண்ணொளி பூசிவரும் — அந்த
முத்திரைச் சோதி ஆதவனைத் தான்
முன்னுக் கிழுத்துவந்தான்—இருள்
தன்னை யழித்து வந்தான்! (சித்)

புள்ளினம் கூவிக் கொல்லெனத் தாவிப்
பாடல் பலகொடுக்கும் — நடம்
ஆடல் சிலமுடுக்கும்! — கனவுக்
கள்ளினம் வெல்லும் கன்னியர் கண்கள்
காதல் கதைதொடுக்கும் — பெரும்
போதை தனைமடுக்கும்! (சித்)

கற்பனை முட்டும் காவியம் சொட்டும்
காமலர் தான்விரியும் — அந்தத்
தூமலர் தேன்சொரியும்! — மணி
நெற்பயிர் சாயும் நலவயல் தாயும்
நன்கு சிரித்துவிட்டாள் — உளம்
பொங்கிப் பெருத்துவிட்டாள்! (சித்)

ஏருடன் காளை சேறுடன் ஆடிச்
சித்தம் களித்துவிட்டான் — துயர்ப்
பித்தம் தெளிந்துவிட்டான் — இந்தப்
பாருடன் கூடிச் சோற்றினை உண்ணப்
பாடு எடுத்துவிட்டான் — கனா
சாடி யடித்துவிட்டான்! (சித்)

- திருவள்ளூர் தாயு

சித்திரை வந்தானே!

ஓடிய பெருகுர
ரோடையில் மீன்கள்
உவந்து குதிபோடக்
கூடிப் பெருமுகில்
குன்றுகள் தோறும்
குலவி விளையாட

வாடைப பெருங்குளிர்
வாட்டம் தவிர்த்துநல்
வையகம் கொண்டாட
ஆடிப் புதியதோர்
ஆண்டெனச் சித்திரை
ஆனந்தி வந்தானே!

புருவம் எறியும்
புதுமக ளிர்குலம்
போற்றி வரவேற்க
மருவும் இளநீர்
மழலையின் பங்கள்
மகிழ்ந்து கரமார்க்கத்

இருவும் பயனும
இனித்துநம் வீடெலாம்
தெய்வ அருள்சேர்க்கப்
பருவம் எனுமோர்
பரதமே சித்திரை
பண்ணிதான் வந்தானே!

- தமிழ்மகன்

காலக் கன்னி

செவ்வான் எழில்சேர்த்துப் பொட்டுவைத்துக்-கதிர்ச்
செங்கை கனகப்பூச் சூட்டிவிடக்
கவ்விப் பிடித்திருந்த இருளொடுங்க—நற்
காலக் கன்னியவள் வந்துநின்றாள்!

செங்கை வளையல்கள் சேர்ந்திசைக்க—வாழ்வுத்
தெருவில் திருக்கோலம் இட்டுவந்தாள்.
மங்கை குலத்திற்கோர் வாழ்வளிக்கும்—புகழ்
மங்கள கீதங்கள் பாடிவந்தாள்!

இரவு பகலென்று பருவமென்று—அவன்
இயங்கிக் கடனுற்ற வந்துநின்றான்
சருகு தளிரென்று பூக்களென்று - தன்
சாதனை உலகிற்குக் காட்டிநின்றான்!

'நீள வழிநடந்தும் அயர்ச்சியின்றி—புது
நினைப்பைத் தரவேண்டி வந்துநின்றேன்.
கால வழிதன்னில் கடந்ததெல்லாம்—பின்பு
காணக் கிடைப்பதில்லை' என்று சொன்னாள்!

கால கடையழகைக் கண்டுமக்கள்—நற்
காரியம் யாவினும் நினைவிழப்பார்
காலம் வருமென்று காத்துநிற்பார்—அது
காலன் எனவந்து போகுமிங்கே!

- பக்திசாரன்

கனவு கோடி காணலாம்

கனவு கோடி காணலாம—இன்
கவிதை நூறு பாடலாம்
கனிகு லாவ வாழலாம் - என ?
கடவு ளோடு லாவலாம்
நினைவி னூறும் ஆசை யாவும்
நிறைவு பெறு காணலாம
நியதி சாய அழிவு நாடும்
நெறியிலாளர் வீழ்வரேல

புதுமை வீறு மேவி ஆவி
புரையி லாது வாழலாம
பொலியும் நீள நிலவு நூலின்
வலியஏணி ஏறலாம
அதிரு மாறு சீறி மூசி
அகில லோக மாடிட
அணுவினூடு கூறு போடும்
அழிவினோர்கள் ஓயவரேல்.

கலைகள் தோறும் ஊறி மேவும்
கனிவுநாவில் ஏறலாம
கவலை சாய மாய சாலம்
கனவு யாவும் ஓயலாம.

வலைகள் வீசி நவிவு காணின்
வால் பிடித்த தெடுத்த பின
மலைகள் மீது மோதலோன
வாழ்வு பூழ்தி யாகுமேல்.

பருவ கால நினைவு நாளு
பலித மாகி நீளலாம்
பகைமை சாக இனிமை வாழும்
பாண்மை கூட நேரலாம்.
உாமை வேணும் என்று சொன்ன
உலகினோரின் மண்டைகள்
உடையு மாறு படையை ஏவும்
உணர்வி லார்கள் மாய்வரேல்.

அமைதியோடு சாந்தி கூட
அரசை ஆன லாகலாம்
அமரராகின் உலகி னோர்கள்
அவனி தேவ லோகமாம்
குலமயு மாறு பிறர்கள் நோகக்
குடையும் நீசர் சாய்வரேல்.
குழைவி னோடு கருணை நீதி
குமிழி சால ஓடுமேல்.

- முருகையன்

அழகின் அபிவிருத்தி
நீங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உபயோகித்
தீர்களானால், வெயிலின் வெப்பமோ, காற்றோ,
மழையோ உங்களுடைய தோற்றத்திற்கு
ஏதொரு கெடுதியும் விளைவிக்காது. கெடுதியற்ற
தன்மையுள்ள "'ஹாஸலீன்' ஸ்னோ"
உங்களுடைய சருமத்தை மிருதுவாகவும்
அழகாகவும் விளங்கச் செய்கிறது.
மற்றும் அது ஏமாற்றம் செய்ய
முடியாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW" TRADE MARK
"'ஹாஸலீன்' ஸ்னோ"
ட்ரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
HAZELINE SNOW

ரஸிகப் பெருமக்களுக்கு

தமிழ்ப் புத்தாண்டு தினப் பரிசு

ராம் தியேட்டர்

ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்

படங்கள் பார்த்துப் பரவசமடைய தமிழ்
நாட்டின் தலை சிறந்த கலைக் கோயில்

13-4-1961 அன்று ஆரம்ப விழா

★ ஸினிமாஸ்கோப்-வொயிட் ஸ்க்ரீன் படங்களைத் திரையிட வசதியான பெர்லெக்ஸ் ஸ்க்ரீன்.

★ உலகில் சிறந்த புரொஜெக்ஷன் & ஸவுண்ட் ஸிஸ்டம் G.K. '21' நிறுவப்பட்டது.

★ உட்கார சௌகரியமான கிளைமாக்ஸ் புஷ்-பேக் (CLIMAX PUSH BACK) நாற்காலிகள்.,



அகில இந்திய பிலிம்பெடரேஷன் தலைவர்
திரு. B. நாகிரெட்டி அவர்கள் தலைமையில்
நடிகர் திலகம் **திரு. சிவாஜி கணேசன்**
அவர்கள் தியேட்டரைத் துவக்கி வைப்பார்கள்.

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர்
திரு. A L. ஸ்ரீனிவாசன் அவர்கள்
புரொஜெக்டர் இயக்கத்தைத் துவக்கி வைப்பார்கள்.,

திட்டமிட்டு நிர்மாணித்தவர்கள் உரிமையாளர்

ராம் அன் கோ.,

317, தம்புசெட்டி தெரு, மதராஸ்-1.
போன்: 5326 தந்தி: ஆபீஸ் 'KUGA'
தியேட்டர் 'PADMAIA'

EP

13-4-1961 முதல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்கும்
விஜயா பிலிம்ஸ் "புனர் ஜென்மம்" தினசரி 3 காட்சிகள்

66

திருப்பேரை என்னும் திவ்ய ஸ்தலத்தை அடைகிறார் ஆழ்வார். அந்த ஸ்தலத்தின் வர்ணனை:

குருமாமணி உந்துபுனல்
பொன்னித் தென்பால்
திருமால்சென்று சேர்விடம்
தென்திருப்பேரே.

திருமால் விரும்பிச் சென்று சேரும் இடம் எதுவெனில் மணிகளைக் கொண்டு வந்து தள்ளும் (பொன்னி) காவிரியாற்றின் தென்கரையிலேயுள்ள திருப்பேரை.

திருமாலிருஞ் சோலைமலை
என்றேன்: என்ன,
திருமால் வந்து, என் நெஞ்சு
நிறையப் புகுந்தான்;

மலையின் பெயரைச் சொன்னேன். அவ்வளவே, மனத்தோடு முழுதும் படாத அந்த வார்த்தையைச் சொன்ன மாத்திரத்தில் எம்பெருமான் வந்து என் நெஞ்சில் புகுந்தான், எப்படிப் புகுந்தான், ஐம்புல இன்பங்களுக்கு இடம் இல்லாதபடி நிறையப் புகுந்தான்.

என்ன — என்று சொன்ன மாத்திரத்தில்; நிறையப் புகுந்தான்—நிறையும்படி புகுந்தான்.

* * *

அது மட்டுமல்ல: நான் இனி விட்டு அகல மாட்டேன் என்று புகுந்தான் என்கிறார்.

பேரே உறைகின்ற பிரான்
இன்று வந்து,
பேரேன் என்று, என் நெஞ்சு
நிறையப் புகுந்தான்;
கார் ஏழ், கடல் ஏழ், மலை ஏழ்,
உலகு உண்டும்
ஆரா வயிற்றானை அடங்கப்
பிடித்தேனே.

'இன்று வந்து புகுந்தான்' அதாவது தான் ஒரு சாதனத்தையும் கொண்டு அவனை வரவழைக்கவில்லை. எதிர்பாராமல் திடீரென்று வந்து புகுந்தான். நேற்று தெரியாது அவன் வருவது.

பேரேன் என்று—நான் திரும்பிப் போக மாட்டேன் என்று சொல்லி.

ஏழு மேகங்கள், ஏழு கடல்கள், ஏழு மலைகள், இவை கொண்ட உலகத்தை உண்ட திருப்தியாகாத பெருவயிற்றானை அடங்கப் பிடித்தேனே என்று வியந்து பாடுகிறார்.

* * *

பிடித்தேன்; பிறவிகெடுத்தேன்;
பிணிசாரேன்;
மடித்தேன் மனை வாழ்க்கையுள்
நிற்பது ஓர் மாயையை;
கொடிக்கோபுர மாடங்கள்சூழ்
திருப்பேரான்
அடிச்சேர்வது எனக்கு எளிது
ஆயினவாறே!

எவ்வளவு எளிதில் முடித்துக் கொண்டேன் என்று பாடுகிறார்.

திருவடிகளைப் பிடித்தேன், பிறவியினை அறுத்தேன், நோய் பயம் இனி இல்லை

மனை வாழ்க்கையுள் நிற்பது ஓர் மாயையை மடித்தேன் — இவ்வுலக வாழ்க்கையில் சிக்குவதற்குக் காரணமான மாயையை வென்று விட்டேன். பாம்பைப் பிடுங்கி எறிவது போல் மாயையை மடித்தேன்.

* * *

வானேதருவான் எனக்காய்,
என்னோடு ஒட்டி,
ஊன்ஏய் குரம்பை-இதனுள்
புகுந்து இன்று,
தானே தடுமாற்ற வினைகள்
தவிர்த்தான்—
தேன்ஏய் பொழில்தென்
திருப்பேர் நகரானே.

தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன் 'உனக்குப் பரமபதம் தருகிறேன்' என்று எனக்கு அந்தரங்கமாக உறுதி சொல்லி ஊன் குரம்பையாகிய இந்தச் சரீரத்துக்குள் புகுந்தான். அவனாகவே என்னால் ஒரு முயற்சியுமின்றி என்னைத் தடுமாறும்படி செய்யவல்ல பாவங்களைப் போக்கினான். ஒட்டி—சபதம் செய்து.

'இன்று' என்பான் வேகம்-நேற்று ஒரு நினைவு இல்லை: எதிர்பாராத கிருபை.

* * *

அந்தக் கிருபையின் அமுதத்தை உண்டு களித்தேன் என்று அடுத்த பாசுரத்தில் பாடுகிறார்.

திருப்பேர் நகரான், திருமாலிருஞ்
சோலைப்
பொருப்பே உறைகின்றபிரான்
இன்றுவந்து,
இருப்பேன்என்று, என்நெஞ்சம்
நிறையப் புகுந்தான்
விருப்பே பெற்று, அமுதம்
உண்டுகளித்தேனே.

விருப்பே பெற்று — எம்பெருமானுடைய அன்பைப் பெற்று. அந்த அன்பாகிய அமுதத்தை உண்டு களித்தேன் என்கிறார்.

* * *

இன்று என்னைப் பொருளாக்கி
தன்னை என்னுள் வைத்தான்:
அன்று என்னைப் புறம்போகப்
புணர்த்தது என்செய்வான்?
குன்று என்னத் திகழ்மாடங்கள்
சூழ் திருப்பேரான்
ஒன்று எனக்கு அருள்செய்ய,
உணர்த்தல் உற்றேனே.

இன்று என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு என்னுள் புகுந்து வசிக்கிறானே, ஏன் இவன் இத்தனை நாட்கள் என்னை ஐம்புல இன்பங்களிலே அலையும்படி பராமுகம் செய்தான்? என்ன அவன் லீலா நோக்கம்? இதற்குப் பதில் அவனே சொல்ல வேண்டும்.

இந்த இடத்தில் ஈடு வியாக்யாதா வழக்கப்படி ராமாயணத்தில் ஆழ்ந்து போய் எழுதுகிறார். சீதைக்கு ஹனுமான் அசோக வனத்தில் சொன்ன சொற்களை எடுத்து அனுபவிக்கிறார். "நீங்கள் இங்கே இருப்பதைப் பெருமாள் அறியவில்லை. அதனால் ஆறியிருந்தார். அறிந்தால் ஒருகணம் தாமதிப்பாரோ?" என்று ஹனுமான் சீதைக்குச் சொன்ன சொற்களை ஆழ்வாருக்கு வியாக்யாதா ஆறுதல் சொல்லுவதைப் போல் எடுத்துக் காட்டுகிறார்.

'செம்மை நலம் அறியாத' என்ற பாட்டில் மாணிக்கவாசகரும் நம்மையும் ஓர் பொருளாக்கி என்று வியந்து பாடினார்.

'ஏன் இத்தனை நாட்கள் பராமுகம் செய்தாய்?' என்று ஆழ்வார் கேட்டதற்கு ஈசுவரன் என்ன விடை சொன்னார் என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டாராம். அதற்கு அவர் "ஈசுவரன் விடை சொல்ல முடியாமல் நாணம் உற்று காலாலே தரையைக் கீறி நின்றான் அவ்வளவே" என்றாராம்.

* * *

இந்தக் கேள்வி கேட்ட ஆழ்வாரே பகவானுடைய லீலையை யான் கேட்டறிய முடியுமா, ஆதலினால் கேள்வியை விட்டேன் என்று பாடுகிறார்.

உற்றேன்: உகந்து பணிசெய்து,
உனபாதம்
பெற்றேன்: ஈதே இன்னம்
வேண்டுவது எந்தாய்!
கற்றார் மறைவாணர்கள் வாழ்
திருப்பேராற்கு
அற்றார் அடியார்-தமக்கு
அல்லல் நில்லாவே.

தேங்காய்க்குள் இளநீர் புகுந்தது எப்படி என்று ஆராய்ச்சி செய்வதா காரியம்? தாகவிடாயை இளநீர் குடித்துத் தீர்த்துக் கொள்வதல்லவோ காரியம் என்று ஈடு வியாக்கியாதா ஹாஸ்யமாக இந்த இடத்தில் சொல்லுகிறார்.

திருப்பேராற்கு அற்றார்—எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்த அடியார் 'அற்று இறை பற்றே' என்றதனிலுள்ள 'அற்று.'

‘டெட்’டில் சலவை செய்த துணிகளினால்

பெருமையடையுங்கள்

- **டெட்-சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசிக்கின்றன**

  டெட்டின் தனிரக சலவை செய்யும் குணங்கள் உங்கள் ஆடைகளுக்குப் புத்துணியின் பிரகாசத்தை அளிக்கின்றன.

- **டெட் கண்கவர பளபளவென்று சலவை செய்யும் சக்தி வாய்ந்தது**

  டெட் துணிகளைத் துப்புரவாக சலவை செய்கிறது. வெள்ளைத் துணிகளை மேலும் வெண்மையாக்குகின்றது.

- **டெட்டினால் உங்கள் துணிகளை நவீன முறையில் சலவை செய்யுங்கள்**

  டெட் வெந்நீரிலும் மென்னீரிலும் துரிதமாகச் சலவை செய்கிறது. அபரிமிதமாக நுரை கட்டுகிறது. டெட்டில் சலவை செய்வதால் வெள்ளை அல்லது கலர்—துணிகளுக்கோ, சில்க், ரேயன், உல்லன் துணிகளுக்கோ யாதொரு கேடும் கிடையாது.



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.

சொர்க்கத்தின்

அத்தியாயம் முப்பத்தொன்று

நீ[லவண்டு] தொங்கிய திரைச் சீலையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தார் மாசிலாமணி. ரண சிகிச்சையில் கைதேர்ந்த டாக்டர் அவர்.

கூடத்து அறையில் உட்கார்ந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் வசப்பட்டிருந்த டாக்டர் ராமநாதன் தமது நண்பரான மாசிலாமணியை அமைதியாக ஏறிட்டுப் பார்த்தார். புன்முறுவல் பூத்தவாறு வந்த மாசிலாமணி கையுறைகளையும், 'ஏப்ரனை'யும் கழற்றிவிட்டு அவர் அருகில் அமர்ந்தார்.

அவர்கள் ஏதாவது பேசமாட்டார்களா என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர் சுந்தரியம்மாளும், சிவப்பிரகாசமும். ஆனால், ஐந்து நிமிஷங்களாகியும் அவர்கள் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. மாடிப்படி அருகில் மனம் பதைக்க நின்று கொண்டிருந்த சுந்தரியம்மாள் பொறுமை இழந்தவளாய்ச் சற்றே முன் வந்து, "டாக்டர்! இப்போது அவள் எப்படியிருக்கிறாள்?" என்று துயரம் தொண்டையை இறுக்கக் கேட்டாள்.

"பயப்படும்படியாக ஒன்றுமில்லையம்மா!" என்றார் மாசிலாமணி புன்னகையுடன்.

டாக்டர்களுக்கே உரிய இந்தப் பதிலில் எப்போதுமே எவ்விதப் பொருளும் இருப்பதில்லை என்று சுந்தரியம்மாளுக்கு நன்றாகத் தெரியுமாதலால் அதோடு திருப்தியடையாமல் மேலும் ஓரடி முன்னால் வந்து, "அப்படியானால் அவள் பிழைத்துக் கொள்வாளா, டாக்டர்?" என்று உள்ளடங்கிய அங்கலாய்ப்புக் குரலில் கேட்டாள்.

மாசிலாமணியின் முகத்தில் படர்ந்திருந்த புன்னகை மறைந்தது. டாக்டர் ராமநாதனை மெல்லத் திரும்பிப் பார்த்துவிட்டுத் தணிந்த தொனியில் சொன்னார்: "இன்றையப் பொழுது கழிந்தால்தான் அம்மா இதற்குப் பதில் சொல்ல முடியும்."

சுந்தரியம்மாளின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கி அதிர்ந்தது. அவள் கண்கள் குளமாயின. கைகளைப் பிசைந்த வண்ணம் அந்த அறையை நோக்கிச் சென்று காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த திரைச் சீலையை மெல்ல விலக்கி விட்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

விசாலமான அந்த அழகிய அறையின் நடுவில் போடப்பட்டிருந்த ஓர் ஒற்றைக் கட்டிலில், ஹேமந்தத் திரை போர்த்தி மறைக்கப் பெற்றதொரு முற்றுப் பெறு விக்கிரகம் சாய்ந்து கிடப்பதுபோல் படுத்துக் கிடந்தாள் கோமதி. கிரகண கால சந்திரன் போல் அவள் முகத்தின் ஒரு பாதி மட்டுமே தெரிந்தது. மற்றப் பாதி மெல்லிய சல்லாத் துணியால் மூடப் பெற்றிருந்தது. பிரக்ஞையிழந்த நிலையில் கிடந்த அவள் அவ்வப்போது தன் வதங்கிய உடலை மெல்ல நெளிப்பதும், வேதனை செறிந்த ஹீன ஸ்தாயியில் முனகுவதுமாக இருந்தாள். அந்தக் கட்டிலின் தலைமாட்டுச் சட்டத்தின் மேல் இரு கைகளையும் ஊன்றி முகம் தெரியாமல் தலை கவிழ்ந்து கொண்டு நின்றிருந்தான் விவேகானந்தன். அவனுடைய தோள்பட்டைகளும் முதுகும் மிக மெல்லக் குலுங்கிக் கொண்டிருந்தன. அப்படிக் குலுங்கும்போதெல்லாம் கோமதியின் அர்த்த நிலாத் துண்டு போன்ற வெளுத்த நுதலில் நீர்த் துளிகள் உதிர்ந்து சிதறின. கட்டிலின் கால் மாட்டில் நின்று மெல்ல விசிறிக் கொண்டிருந்த தேவகி, கோமதியின் வாய் முனகும் தெளிவற்ற சொற்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

இதையெல்லாம் பார்த்த சுந்தரியம்மாள் தன் கையில் பற்றியிருந்த திரைச் சீலையால் முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மிப் பொருமியே விட்டாள். கோமதியின் தாயார் உயிரோடிருந்து இந்தக் காட்சியைப் பார்க்க நேரிட்டிருந்தால் கூட இவ்வளவுக்கு மனம் விண்டு புலம்புவாளா என்பது சந்தேகமே.

"டாக்டர்! அவள் ஏதோ முனகிக் கொண்டிருக்கிறாளே! வலி அதிகமாகிவிட்டிருக்குமோ, டாக்டர்? நீங்கள் போய்ப் பாருங்களேன்!" என்று அங்கலாய்த்தபடியே திரும்பி வந்தாள் சுந்தரியம்மாள்.

தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் உட்கார்ந்திருந்த ராமநாதன் சட்டென்று நிமிர்ந்து, "சுந்தரி! நீ பேசாமல் இருக்க மாட்டாய்?" என்று ஓர் அதட்டல் போட்டார். பீதியடைந்த சுந்தரியம்மாள் பெட்டிப் பாம்பாக ஒடுங்கிச் சுவர்ப் பக்கம் திரும்பி நின்று கொண்டாள். ஆனாலும் அவளுடைய பொருமல் ஒலி ஓயவில்லை.

அந்தப் பெண் உள்ளத்தின் தவிப்பை உணர்ந்த டாக்டர் மாசிலாமணி தணிந்த குரலில், "கவலைப்படாதீர்களம்மா! கடவுள் அவளைக் கைவிட மாட்டார்!" என்றார்.

நிழல்
ஜெகசிற்பியன்

உணர்ச்சியற்றிருந்த ராமநாதனின் முகத்தில் இதைக் கேட்டதும் ஒரு வித கலக்கக் கறை படர்ந்தது. டாக்டர்களின் வாயிலிருந்து 'கடவுள் கைவிட மாட்டார்' என்ற வார்த்தைகள் வந்து விட்டால் நோயாளியின் நிலைமை மனித யத்தனத்தைக் கடந்து விட்டிருக்கிறது என்றுதானே பொருள்? அவர் தம் நண்பரை ஏறிட்டு நோக்கினார்.

மாசிலாமணி மெள்ளத் திரும்பி, "ஆமாம், டாக்டர்! அந்தப் பெண் இப்போது தன் உடலின் வேதனையால் முனகவில்லை. அவள் மனத்தில் ஏதோ சில ஆழ்ந்த அதிர்ச்சிகள் ஏற்பட்டு அவற்றின் முறுக்கலால்தான் அப்படி முனகிக் கொண்டிருக்கிறாள். அதனாலேயே இன்னமும் அவளால் பிரக்ஞை பெற முடியவில்லை. இந்த நிலை நீடித்தால் எந்த நிமிஷமும் அது அவள் இதயத் துடிப்பைப் பாதித்து விடலாம். இதுதான் என் நம்பிக்கைக்குப் பெரிய சோதனையாய் இருக்கிறது" என்றார் மெல்லிய குரலில்.

மன அதிர்ச்சி என்றதுமே டாக்டர் ராமநாதன் நிமிர்ந்து உட்கார்ந்து, "அவள் என்ன வார்த்தைகளை முனகுகிறாள், நண்பரே?" என்று மிகவும் அக்கறையாக வினவினார்.

"அவற்றை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, டாக்டர்! சில சமயம், 'அவருக்கு ஒன்றுமில்லையே? அவருக்கு ஆபத்து ஏற்படவில்லையே?' என்று குழறிக் கேட்கிறாள். உடனே, 'கதவைத் திறவுங்கள்; என்னை வெளியே விடுங்கள்' என்று புலம்புகிறாள். சற்று நேரம் கழித்து, 'ஐயோ, வேண்டாம். கதவைத் திறக்க வேண்டாம். அதோ, அவன் துரத்திக் கொண்டு வருகிறான். என்னைப் பிடித்துக் கொண்டு போவதற்காக வருகிறான்' என்று உளறி நடுங்குகிறாள். இப்படியெல்லாம் அவள் வாய் பினத்தவிடக் காரணம் என்ன டாக்டர்?" என்றார் மாசிலாமணி கவலை நிறைந்த குரலில்.

நெற்றிச் சருமத்தை நெருடி விட்டுக் கொண்டு சற்றுநேரம் மௌனமாயிருந்த ராமநாதன், "ம்....முதலில் சொன்னதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால்...அதற்கு அடுத்த வார்த்தைகள்?.... அவை ஒன்றும் புரியவில்லையே!" என்று இழுத்தார்.

சுவர்ப் பக்கம் திரும்பி நின்று கண்களைக் கசக்கிக் கொண்டிருந்த சுந்தரியம்மாள் சட்டெனத் திரும்பி, "எனக்குப் புரிகிறது! அந்த ஏழைப் பெண்ணின் உயிரைப் பறித்துப் போக எமன் வந்து அவளைத் துரத்துகிறான்! அதனால்தான் அவள் அப்படிப் பயந்து போய் உளறுகிறாள்!" என்று விம்மும் குரலில் சொன்னாள்.

டாக்டர் தம் மனைவியின் அறியாமையை எண்ணிச் சிரித்தார். சிவப்பிரகாசமோ அவள் சொல்வதை முற்றிலும் நம்பி முகம் கறுத்தார்.

இப்படி ஒரு விரும்பத்தகாத எண்ணம் அவர்கள் மனத்தில் அதிக நேரம் நிலவவேண்டாம் என்பதாலோ என்னவோ ராமநாதன் தமது இருக்கையிலிருந்து ஒருக்களித்துச் சாய்ந்து, "அது சரி, நண்பரே! அக்கினித் திராவக வீச்சினால் அவள் முகம் முழுக்கப் புண்ணாகி விட்டிருக்கிறதா? அல்லது......" என்று தம் கன்னத்தை நகங்களால் வருடியபடி கேட்டார்.

உள்ளடங்கிய கவலையுடன் பெருமூச்சு விட்ட மாசிலாமணி, "தெய்வாதீனமாக அப்படி நடக்கவில்லை, டாக்டர்! முகத்தின் வலது பக்கக் கன்னம் மட்டுமே அக்கினித் திராவகத்தால் வெந்து புண்ணாகியிருக்கிறது. அத்துடன், கழுத்தின் பின்புறமும் தோள்பட்டையிலும் திராவகம் வழிந்து ரணமாகி விட்டிருக்கிறது. அந்த இரக்கமற்ற பாதகர்கள் விளக்குப் பல்பிலே திராவகத்தை நிறைத்து வீசியிருப்பார்கள் போல் தோன்றுகிறது; அதனால் அவளுடைய நெற்றிப் பொட்டில் கண்ணாடிச் சில்லினால் ஏற்பட்ட ஓர் ஆழமான காயமும் இருக்கிறது. அதிலிருந்து வழிந்த அதிகப்படியான இரத்தத்தினால்தான் அவள் பிரக்ஞையிழந்திருக்கிறாள். இவ்வளவையும் அந்தச் சிறு பெண் எப்படித்தான் பொறுத்துக் கொண்டாளோ, தெரியவில்லை. வேறொரு பெண்ணாயிருந்தால் இந்த நேரம் அலறித் துடித்தே உயிரை விட்டு விட்டிருப்பாள்!" என்று உணர்ச்சியால் விம்மிக் கரகரத்த குரலில் சொன்னார்.

இதைக் கேட்டுப் பதற்றத்துடன் திரும்பிய சுந்தரியம்மாள் உதடுகள் நடுக்கமுற, "அப்படியானால், வெந்து கருகிய கன்னப் புண்கள் ஆறியபிறகு அவற்றின் தழும்புகளால் அவள் குரூபியாகி விடுவாளா, டாக்டர்?" என்று கேட்டாள்.

"முதலில் அவள் உயிர் பிழைத்து எழுந்திருக்கட்டும்மா!" என்றார் மாசிலாமணி ஒரு சோகப் புன்னகையுடன்.

"உங்களுக்குத் தெரியாது, டாக்டர்! தன் அழகை இழந்து குரூபியான ஒரு பெண் உயிர் வாழ்வதைவிட அவள் இறந்து விடுவதே மேல்! ஏனென்றால், அந்த வாழ்க்கையிலே அவ்வளவு கஷ்ட

உங்கள்
கேசத்திற்கும்
தலைக்கும்
ஆரோக்கியத்தையும்
போஷாக்கையும் அளியுங்கள்!
கால்கேட் ஹேர் டானிக் லெனேலின் என்ற ஓர் அற்புதமான எண்ணெயுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதிப்பித்து... கேசத்தை ஆரோக்கியத்துடனும், சேர்த்தியாகவும் இருக்க உதவுகிறது.
COLGATE
COLGATE
HAIR TONIC
Lanolin
புதிய கால்கேட்
ஹேர் டானிக்
லெனேலின் கலந்தது

Exide
சேவையில்
சிறந்ததென
நிரூபிக்கப்
பட்டது
ஸில்வர்
எக்ஸைட்
குளோரைட் & எக்ஸைட் பாட்டரீஸ் (ஈஸ்டர்ன்) பிரைவேட் லிட்.
சென்னை ஆந்திரா கேரளா & மைசூர் ராஜ்யங்களுக்கு பிரதான ஏஜண்டுகள்
ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட் - - சென்னை 2
கிளைகள் கோயமுத்தூர், பெங்களூர், செகந்திராபாத்

டாடா மெர்ஸிடேஸ் பென்ஸ் டிரக்குகளின் உதவியால்

தேயிலை வெளியே செல்கிறது

....அந்நியச் செலாவணி உள்ளே வருகிறது.



அதிர்ஷ்டத்தை அழைத்து வரும் நட்சத்திரம்

தேயிலையானது ஆண்டொன்றுக்கு ரூ. 125 கோடிக்கு அதிகமாக இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருகிறது. அஸ்ஸாமிலும், நீலகிரியிலும் செங்குத்தான பசும் சரிவுகளிலிருந்து செல்லும் நீண்ட சாலைகளில், இந்த ஜீவாதாரமான ஏற்றுமதிப் பொருளைத் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்வதில் மற்ற ரகங்களைவிட அதிகமாக டாடா மெர்ஸிடேஸ் பென்ஸ் டிரக்குகளே செல்வதைக் காண்பீர்களென்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தேயிலை உற்பத்தியில் பாதியை உலகின் ஒரு பாதியிலுள்ள அடுக்களைகளுக்கு எடுத்துச் செல்வதென்பது இடையறாத ஒரு பணியாகும்..... அதனால் தான் தேயிலை ஏற்றுமதியாளர்கள் டாடா மெர்ஸிடேஸ் பென்ஸ் டிரக்குகளைச் சிறப்பிட மளித்துத் தேர்வு செய்கிறார்கள்

TATA-MERCEDES-BENZ

TATA ENGINEERING & LOCOMOTIVE CO. LTD.,
Automobile Division: 148 Mahatma Gandhi Road, Bombay 1.

478A

நஷ்டங்கள் இருக்கின்றன !" என்று குமுறினாள் சுந்தரியம்மாள்.

ராமநாதனுக்கு மீண்டும் கோபம் வந்தது. "உன்னை இங்கு அழைத்து வந்ததே தவறாகிவிட்டது !" என்று சினந்தார் அவர்.

"அவர்கள் சொல்வது முற்றிலும் சரியானதே, டாக்டர்! ஆனால், நாம் என்ன செய்ய முடியும்? விதியின் கரங்கள் அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் இன்னும் என்னென்ன கோலங்களை வரைந்து காட்ட இருக்கின்றனவோ!" என்றார் மாசிலாமணி.

சிறிது நேரம் அங்கு அமைதி சூழ்ந்தது. அந்த அமைதியைக் கலைத்துக் கரகரத்த குரலில் கேட்டார் சிவப்பிரகாசம். "ராமு! நான் போன் பண்ணிய போது நீங்கள் எங்கே போய் இருந்தீர்கள்? வீட்டில் யாருமே இல்லையென்று உங்கள் வேலைக்காரன் சொன்னானே?"

"ஆமாம், சிவப்பிரகாசம்! அப்போது நாங்கள் வீட்டில் இல்லைதான்" என்று தம் வழுக்கைத் தலையைத் தடவியவாறு சொன்ன ராமநாதன் மீண்டும் தொடர்ந்து, "நம்ம துரை கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போய் விட்டாரல்லவா? அவரைத் 'தாஜா' செய்து அழைத்து வருவதற்காகப் போயிருந்தோம். அங்கே அவன் வீடு பூட்டிக் கிடந்தது. ஏமாற்றத்துடன் திரும்பிப் போனபோதுதான் நீங்கள் மறுபடியும் போன் பண்ணி இந்தத் திடுக்கிடும் சேதியைத் தெரிவித்தீர்கள். உடனே புறப்பட்டு நண்பர் மாசிலாமணியை அழைத்துக்கொண்டு இங்கு ஓடி வந்து சேர்ந்தோம்" என்றார் சலிப்புடன்.

"ஓகோ!" என்று இழுத்தார் சிவப்பிரகாசம்.

"ஆமாம், அண்ணா! எல்லாம் எங்கள் தலைவிதி. அவன் வீட்டில் ஒழுங்காக அடங்கியிருந்திருந்தால் இந்த மாதிரி வேண்டாத துன்பமெல்லாம் வந்திருக்காதல்லவா?" என்று விவேகானந்தனின் காதில் விழும்படி சற்று உரக்கவே சொன்னாள் சுந்தரியம்மாள்.

"அப்படியெல்லாம் சொல்ல முடியாது, தங்கச்சி! எதெது எப்படியெப்படி நடக்கவேண்டுமென்றிருக்கிறதோ, அதெல்லாம் அதனதன் போக்கில் நடந்தேதான் தீரும்!" என்று ஏதோ ஒரு பெருந் துன்பத்தில் தோய்ந்தவராய் வெகு நிதானமாகச் சொன்னார் சிவப்பிரகாசம்.

"நீங்கள் சொல்வது உண்மைதான், அண்ணா! அவன் எங்கள் வீட்டில் இருந்

டாக்டர்: காலையில் எழுந்ததும் பையனுக்கு என்ன கொடுக்கிறீர்கள்?
தகப்பனார்: பல்பொடி!

தாலும் இம்மாதிரி ஆபத்தான நிகழ்ச்சிகள் நிகழத்தான் செய்யும். அன்றொரு நாள் திருமூர்த்தி நகரில் அவனை இப்படித்தான் வழி மடக்கிக் கொல்லப் பார்த்தார்கள். அப்போதும் இந்தப் பெண்தான் அவன் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தாள். அது அசந்தர்ப்பமாக அவள் உதவி செய்ய நேர்ந்த ஒரு விஷயம். ஆனால், நேற்று அந்த முரடர்கள் திட்டமிட்டுச் செய்ய வந்த காரியத்தை அவள் எப்படி முன்கூட்டியே அறிந்து அந்த நடுச்சாம நேரத்தில் அங்கு அத்தனை தீரத்துடன் தோன்றிக் காப்பாற்றினாள் என்பதைத்தான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று வியப்பால் சொற்கள் தடுமாறச் சொன்னாள் சுந்தரியம்மாள்.

"ஆமாம், தங்கச்சி! இந்த விஷயத்தை உங்கள் தம்பியாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை என்று என்னிடம் சொன்னார்!" என்றார் சிவப்பிரகாசம் எங்கோ தம் பார்வையைச் செலுத்தியபடி.

"இதெல்லாம் கூட எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை, சிவப்பிரகாசம்! அந்த இக்கட்டான நிலையில், அவன் உங்கள் உதவியை நாடி வந்தானே, அது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்று முகத்தைச் சுளித்துக் கூறினார் ராமநாதன்.

"ஏன்? உங்கள் மைத்துனர் என்னிடம் உதவி கேட்டு வந்திருக்கக் கூடாது

என்கிறீர்களா?'' என்று மெல்லச் சிரித்துக் கேட்டார் சிவப்பிரகாசம்.

''அப்படியல்ல, நண்பரே! அவனுடைய குணப்போக்குகளைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. தனக்கு வந்த உயிராபத்தைத் தடுத்துத் தன்னைக் காப்பாற்றினாளே என்ற நன்றியுணர்ச்சிகூட இன்றி அவளை எங்கேயாவது ஒரு தர்ம ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ப் போட்டு விட்டு, தன்னைத் தாக்கத் திட்டமிட்டவர்களைப் பழி வாங்க, சட்டம், போலீஸ் என்று தன் திறமையைக் காட்டப் போயிருக்கக் கூடியவன் அவன்! அப்படிப்பட்டவன் மனத்தில், அந்த ஏழைப் பெண்ணின் உயிரை முதலில் காப்பாற்ற வேண்டுமென்ற இரக்க உணர்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!'' என்றார் ராமநாதன் கேலியும் வெறுப்பும் கலந்த குரலில்.

''ஆமாம்; நீங்கள் இப்படிக் குத்திக் காட்டிப் பேசிப் பேசியே அவனைக் குணம் திருந்ாதவனாக ஆக்கி விட்டீர்கள்'' என்று உள்ளடங்கிய ஆத்திரத்துடன் சொன்னாள் சுந்தரியம்மாள்.

''இல்லை, தங்கச்சி! ராமு சொல்வது ஒரு வகையில் சரிதான். இன்று காலை உன் தம்பி என்னை வந்து என் கம்பெனியில் சந்தித்தபோது அந்தப் பெண்ணை என்னிடம் ஒப்படைத்துக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, அச் சதிகாரர்களின் மேல் போலீஸ் நடவடிக்கை எடுக்கப் போவதாகத்தான் படபடத்தார். நேற்றிரவு நடந்த விஷயங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டேன். தம்பி சொன்னவற்றிலிருந்து அந்த நீலமேகத்தின் கையாட்கள் மிகவும் சாமர்த்தியமாகத் தங்கள் காரியத்தை முடிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புலனாயிற்று. அதாவது, அந்த இரண்டு முரடர்களில் ஒருவனிடம், மூன்றாவது ஆட்டத்துக்கான சினிமா டிக்கட்டுகள் இருந்திருக்கின்றன. அக்கினி திராவகத்தை வீசிக் கொலை செய்ய முயன்றதாகப் போலீஸில் புகார் செய்தால், அந்தப் புகாரில் குறிக்கப்பட்ட நேரத்தில் தாங்கள் சினிமாத் தியேட்டரிலிருந்து படம் பார்த்துக் கொண்டிருந்ததாகக் கூறி, அதற்கு அத்தாட்சியாக அந்த டிக்கட்டுகளைக் காட்டி அவர்கள் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம். எனவே, போலீஸ், சட்டம், கோர்ட் என்றெல்லாம் வீண் முயற்சி செய்ய வேண்டாம் என்று சொல்லித் தம்பியை என்னுடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்!'' என்றார் சிவப்பிரகாசம் மெல்ல நகைத்து.

''கேட்டாயா, சுந்தரி? நன்றாகக் கேட்டுக் கொள்!'' என்று கடுகடுப்புடன் சொன்னார் ராமநாதன்.

''கொலைகாரப் பாவிகள்! அவர்கள் புத்தியிலே கொள்ளியை வைக்க!'' என்று கைவிரல்களை மடக்கி முறித்தாள் சுந்தரியம்மாள்.

''பாவம், அந்த அப்பாவி ஆட்களை ஏன் சபிக்கிறாய்? எய்தவன் இருக்க, அம்பை நொந்து பயனில்லை. இந்த மாதிரி குயுக்திப் புத்திகளெல்லாம் கல்வியறிவில்லாத அந்த முரட்டு ஜன்மங்களுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது. நீலமேகம் அவர்களுக்குப் பணத்தையும் கொடுத்து அந்தக் குயுக்தியையும் சொல்லியனுப்பி யிருப்பார்; அவர்கள் அகப்பட்டுக் கொண்டால் தாமும் குற்றவாளியாக நேரிடுமே என்பதால்! சட்டங்களைச் சமைக்கத் தேர்தலில் நிற்பவர்கள் அந்தச் சட்டங்களைக் கிள்ளுக்கீரையாக எண்ணி நடப்பதைத்தானே இன்றைய ஜனநாயக அரசியலில் நாம் கண்டு வருகிறோம்?'' என்று மிகவும் மனம் நொந்து கூறிய டாக்டர் ராமநாதன், ஏதோ நினைவு வரப் பெற்றவராய்த் தம் மனைவியைப் பார்த்து, ''அது சரி; கமலி எங்கே? அவளைக் காணோமே!'' என்று கேட்டார்.

''நமக்கிருக்கும் வேதனைகள் போதாதென்று அந்தப் பெண் வேறு நம்மை ஆட்டிப் படைக்கிறாள்! பாருங்களேன், நேற்று மாலை ஆறு மணிக்கு வெளியே போனவள், இரவு பத்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தாள். வந்தவள் ஒன்றுமே சாப்பிடாமல் படுக்கைக்குப் போய் விட்டாள். காலையில் எழுந்த பின்னும் கலகலப்பாக இருக்கவில்லை. அப்புறம், அண்ணா சிவப்பிரகாசம் போன் பண்ணி, கோமதியைப் பற்றிச் சொன்னதைக் கேட்டதும் அவள்தான் நமக்கு முன்னால் மிகவும் அவசரமாகக் கிளம்பினாள். அப்படிக் கிளம்பிச் சென்றவள் இந்நேரமாகியும் இங்கு வந்து சேரவில்லை'' என்று கோபமும் கவலையுமாகச் சொன்னாள் சுந்தரியம்மாள்.

இந்தச் சமயம், கோமதி படுத்திருந்த அறையிலிருந்து, ''நீ ஏன் இங்கே நிற்கிறாய்? போ! போய்விடு!'' என்ற குரல் உரக்கக் கேட்டது. அது கோமதியின் கீச்சுக் குரல்தான்.

கூடத்திலிருந்த அனைவரும் திகிலுடன் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். அந்த அறையிலிருந்து சரேலென்று வெளிவந்த தேவகி, டாக்டர் ராமநாதனை மிரட்சியுடன் பார்த்து, ''மாமா! அவளைப் போய்ப் பாருங்கள்!

தரத்திலும் உழைப்பிலும் சிறந்த

EVEREST

TRADEMARK

SEWING MACHINE

SHARDA MACHINERY CORPORATION

11, PUSA ROAD - NEW DELHI - 5

AJANTA- SMC 61-1

"மூலம் தீராத வினையன்று"

பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்-புதிய நிவாரணி அரிப்பு, எரிச்சல் மற்றும் வலியிலிருந்து குணமளிப்பதுடன் மூலத்தையும் சுருக்குகிறது.



உலகப் பிரசித்தமான ஆராய்ச்சிக் கூடமொன்று மூலத்தைச் சுருக்குவதுடன், வலியற்றமுறையில் குணப்படுத்தக்கூடிய புதிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது. அப்பொருள் சில நிமிடங்களிலேயே அரிப்பையும் வலியையும் போக்குவதுடன் பாதிக்கப்பட்ட தசைநார்களையும் குணப்படுத்துகிறது. உண்மையாகவே, சுருக்கமும் ஏற்படுகிறது. டாக்டர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளும்–10, 20 வருஷங்களான கேஸ்களில்கூட–இதை நிரூபித்தன. மேலும் வியக்கத்தக்கதென்னவென்றால், இந்த நல்ல முன்னேற்றம் பல மாதங்களுக்கு நீடித்திருந்தது. உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள், இதனால் அடைந்த பூரணக் குணத்தைக் கண்டு வியந்து "மூலம் தீராத வினையன்று" எனக்கூறினார்கள். இவ்வளவு பலன்களும், எந்த விதமான போதை தரும் மருந்துகளோ, அல்லது துவர்ப்பு பொருள்களோ, மயக்க மருந்துகளோ, உபயோகிக்காமல் அடையப் பெற்றவை. இரகசியம் என்னவென்றால், இந்த விசேஷமான புதிய நிவாரணி (பயோ-டைன்*) புண்ணான இடத்தைச் சீக்கிரத்திலேயே குணப்படுத்தி, மறுபடியும் ஆரோக்கியமான தசை துரிதமாக வளர உதவுகிறது. இப்பொருள் களிம்பு வடிவத்தில் ப்ரிப்பரேஷன் H* என்ற பெயரில் கிடைக்கிறது. உண்மையாகவே மூலத்தைச் சுருக்குவதுடன்–ப்ரிப்பரேஷன் H*, வழவழப்பாக்குவதன் மூலம் கழிவுப் பொருள் வெளியேறும் போதுள்ள வலியைக் குறைக்கிறது. அது மூலத்தின் முக்கிய காரணமான இரணம் பாவுவதையும் தடுக்கிறது.

இப்பொழுது இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

ஜாப்ரே மானேர்ஸ் & கம்பெனி லிட்.

டிரேட்மார்க் உரிமையாளர்கள்:

ஒயிட்ஹால் லாபரட்டரீஸ், U.S.A.

ப்ரிப்பரேஷன் H *

களிம்பு * டிரேட் மார்க்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு ஏதேதோ பிதற்றுகிறள்!'' என்றன் பீதிக் குரலில்.

''இருங்கள்; நான் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்று அமைதியாகச் சொல்லி எழுந்த டாக்டர் மாசிலாமணி அந்த அறையை நோக்கி நடந்தார்.

இரண்டு நாட்களாக வீட்டுக்கு வராமல் கம்பெனியிலேயே இருந்து விட்ட சிவப்பிரகாசம், அப்படி இருந்தது தவறு என்று இப்போது உணர்ந்து விட்டவர் போல் தம் மகளைப் பாசப் பரிவுடன் பார்த்தார். ஆனல், தேவகியோ தேடிச் சுற்றுமுற்றும் நோக்கினுள். சுந்தரியம்மாள் அவளிடம் ஏதோ கேட்க அருகில் நெருங்கி வந்தாள். அதையும் கவனியாத தேவகி அவசரமாக வராந்தாவுக்குப் போய் அங்குமிங்குமாக எட்டிப் பார்த்தாள். அவள் முகம் வெளிறிச் சிறுத்தது. துடிக்கும் உதடுகளை மடித்துக் கடித்தபடி ஒரு கணம் சிந்தித்தாள். பிறகு சட்டென்று உள்ளே திரும்பி அங்கிருந்தவர்களைக் கவனியாமலே படிகளில் மளமளவென்று ஏறி மாடியறைக்கு விரைந்தாள். தம் மீதுள்ள கோபத்தைக் காட்டத்தான் அவள் இப்படி ஒன்றுமே பேசாமல் மாடிக்குச் செல்கிறள் என்று எண்ணிய சிவப்பிரகாசம் உள்ளூறச் சிரித்துக் கொண்டார்.

கோமதி இருந்த அறையை விட்டு வெளியே வந்த டாக்டர் மாசிலாமணி புன்னகை மூலம் ராமநாதனுக்கு ஏதோ சமிக்ஞை செய்தவாறு வராந்தாவின் பக்கம் சென்றர். அதைப் புரிந்து கொண்ட ராமநாதனும் அவரைத் தொடர்ந்து போய், ''என்ன நண்பரே! அவள் எப்படியிருக்கிறள்?'' என்று ஆவலுடன் வினவினர்.

''இப்போது அவள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறள் சார்!'' என்றர் மாசிலாமணி தணிந்த குரலில்.

''சற்றுமுன் ஏன் அந்தப் பெண் அப்படிக் கூச்சலிட்டாள்?''

''அந்த விஷயத்தை முன்பே உங்களிடம் சொல்லியிருப்பேன். பக்கத்தில் சிவப்பிரகாசம் இருந்ததால் சொல்ல முடியவில்லை.''

''என்ன அது? இப்போது சொல்லுங்களேன்....?''

''அந்தப் பெண்ணை உடனடியாக இந்த வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி, என்னுடைய நர்ஸிங் ஹோமிலோ அல்லது உங்கள் வீட்டிலோ வைத்துச் சிகிச்சை செய்தால்தான் அவள் பிழைத்தெழுவாள் என்று எனக்குப் படுகிறது.''

''ஏனிப்படி நினைக்கிறீர்கள் நண்பரே?''

மாசிலாமணி புன்முறுவலுடன் சொன்னர் ''நான் இங்கு வந்து சிகிச்சை செய்ய ஆரம்பித்தது முதல் கூர்ந்து கவனித்த விஷயம் சார் இது. கோமதி என்ற அந்தப் பெண் மூர்ச்சை தெளிந்து சுயப்பிரக்ஞை அடையும்போது அவள் எதிரே விசிறிக்கொண்டு நிற்கும் சிவப்பிரகாசத்தின் மகளைப் பார்த்து ஏனே ஒருவித மிரட்சியுறுகிறள். அத்தகைய மிரட்சியுடன் சிறிது நேரம் ஏதேதோ சொல்லிப் புலம்புகிறள். மறுகணம் பழையபடி பிரக்ஞையிழந்து விடுகிறள். இப்படி இதுவரையில் நான்கைந்து முறை நடந்துவிட்டது. சற்று முன்னல் அவள் அந்தப் பெண்ணைப் 'போ போ' என்று விரட்டுவதுபோல் கூவியதும் அதுமாதிரிதான். எனவே...''

''ஓ...கோ! விஷயம் இப்படிப் போகிறதா?'' என்று பெரிதாகத் தலையசைத்து மோவாயை வருடிக் கொண்டார் டாக்டர் ராமநாதன்.

அத்தியாயம் முப்பத்திரண்டு

மாடியறையின் கண்ணாடி ஜன்னலொன்றைத் திறந்து விட்டு, அந்தப் பங்களா காம்பவுண்டு சுவருக்கு அப்பால் தன் பார்வையைச் செலுத்திய தேவகியின் வெளிறிய முகம் மலர்ந்தது.

அங்கே, குறுக்காக நீண்டு செல்லும் தார்ச் சாலையின் மறுபக்க நடைபாதையில், நிழல் பரப்பி நின்ற ஓர் ஒதிய மரத்தின் மீது ஒய்யாரமாகக் கைகளைக் கட்டிச் சாய்ந்தவாறு நின்றுகொண்டிருந்தான் மோகனசுந்தரம். அவன் எதிரில், குத்துக்காலிட்டுக் குந்தியிருந்த ஓர் ஏழைக் கிழவன், கொட்டாங்கச்சியால் செய்த 'ஒரணுப் பிடில்' ஒன்றைத் தன் நெஞ்சுக் கூட்டுக்குமேல் சாய்த்துப்பற்றி, ஈர்க்குச்சி 'வில்லி'னல் அதன் இரட்டைக் கம்பிகளை வெகு சுகமாக ராவிக் கொண்டிருந்தான். அவனது தோளில் அது போன்ற ஏழெட்டுக் கொட்டாங்கச்சிப் பிடில்கள் அடங்கிய ஒரு மூட்டை தொங்கிக்கொண்டிருந்தது. கிழவனின் அந்தப் 'பிடில்' வாசிப்பில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தி ரசித்துக் கொண்டிருந்தான் மோகனசுந்தரம்.

இந்தக் காட்சியைக் கண்டு வியப்பும் திகைப்புமாய் மனம் குறுகுறுத்த தேவகி ஜன்னற் கம்பிகளைப் பற்றிய வண்ணம் மோகனசுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். விவேகானந்தன் காரிலிருந்து கோமதியைத் தூக்கிக்

கொண்டு உள்ளே வரும்போது வராந்தாவில் நின்றிருந்த மோகன் அங்கிருந்து எப்போது வெளியே சென்றிருப்பான் என்று அவள் சிந்தனை ஓடியது.

பிரக்ஞையிழந்த நிலையில் கொண்டு வந்து கிடத்திய கோமதியைப் பார்த்து அதிர்ச்சியுற்ற தேவகி அவளுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய சிசுருஷைகளில் தன் கவனத்தைச் செலுத்தி விட்டதால் அப்போது மோகனசுந்தரத்தைப் பற்றி மறந்தே போனாள். ராமநாதனும் சுந்தரியம்மாளும் மாசிலாமணியும் வந்து கோமதிக்குச் சிகிச்சை செய்து முடிக்கும் வரையில் வீடு ஒரே அல்லோலகல்லோலமாகியிருந்தது. அந்தக் குழப்பமெல்லாம் முடிந்து வீட்டில் அமைதி ஏற்பட்டதும் தான் அவளுக்கு மோகனின் நினைவு வந்தது. ஆனால், கோமதியின் அருகிலிருந்து டாக்டருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டியிருந்ததால் அந்த அறையை விட்டு வெளியே போய் அவனைப் பார்க்க முடியவில்லை. கூடத்தறையில் மற்றவர்களுடன் உட்கார்ந்து அவன் பேசிக் கொண்டிருப்பான் என்று எண்ணித் தன் வேலையில் கவனமாயிருந்தாள். அத்துடன், அவ்வறையிலிருந்த விவேகானந்தனிடம் சில புதிய மாறுதல்கள் தென்பட்டதால் அவனை மேலும் கூர்ந்து கவனிப்பதில் அவளுடைய கவனம் லயித்திருந்தது. இறுதியில் பிரக்ஞை தெளிந்து எழுந்த கோமதி அவளைப் பார்த்ததும், 'போ, போ' என்று கத்தியதால் அதிர்ச்சியுற்று வெளியே வந்தவள், அங்கு மோகனசுந்தரம் இல்லாததைக் கண்டு மேலும் குழம்பி விட்டாள். அந்தக் குழப்பத்துடன் மாடிக்கு வந்து, அதோ சாலையில் நின்று கொண்டிருக்கும் அவனைப் பார்த்தபிறகுதான் அவள் மனம் ஒரு நிலைப்பட்டது. ஆயினும் மற்றவர்களெல்லாம் வீட்டில் இருக்க அவன் மட்டும் ஏன் அங்கு போய் நின்று கொண்டிருக்கிறான் என்ற கேள்வி எழவே அவள் மீண்டும் குழப்பமடைந்தாள். 'காரிலிருந்து கோமதியைத் தூக்கிக்கொண்டு இறங்கிய விவேகானந்தனுக்கு உதவி செய்யும்படி தன் தந்தை அவனை அலட்சியமாக ஏவியதால் கோபமடைந்து அங்கு போய் நின்றுகொண்டிருப்பானோ? அல்லது விவேகானந்தனோ வேறு யாருமோ அவனிடம் மரியாதைக் குறைவாக நடந்து அதைப் பொறுக்காமல் வெளியே சென்று விட்டிருப்பானோ?' என்றெல்லாம் எண்ணிப் பெரிதும் சஞ்சலமுற்றாள் அவள்.

ஆனால், உண்மையில் நடந்ததென்ன?

சிவப்பிரகாசத்தின் கட்டளைப்படி, காரிலிருந்து இறங்கியவர்களுக்கு உதவி

பத்திரிகையாசிரியர்: உங்க கார்ட்டூன்களை எங்க பத்திரிகையில் 'பப்ளிஷ்' பண்றதுக்கு 'அப்ஜக்ஷன்' இல்லே; எத்தனை பக்கம் வேண்டுமானாலும் போடுறோம். ஆனா ஒண்ணு, விளம்பரக் கட்டணத்தை மட்டும் முதலில் செலுத்த வேணும்!

செய்யப்போன மோகனசுந்தரம், அங்கு விவேகானந்தனைப் பார்த்ததும் தன்னை மீறிய ஒரு பயம் வந்து கப்பிக் கொள்ளவே, சட்டென்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வராந்தாவின் மூலைக்குப் போய் ஒதுங்கி நின்று கொண்டான். இயற்கையிலேயே பயந்த சுபாவமுள்ள அவனால் விவேகானந்தனை நிமிர்ந்து பார்க்கத் தைரியம் கொள்ள முடியவில்லை. விவேகானந்தன் மெத்தப் படித்தவன் என்பதாலும், மேடையேறிப் பெரிய விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசக் கூடியவன் என்பதாலும், தேர்தலில் நின்று ஊரெல்லாம் விளம்பரமாகி யிருப்பதாலும் தனக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டுக் கதிகலங்க வைத்ததாலும் அவன்மீது மோகனுக்கு ஒரு விதப் பயம் கலந்த மதிப்பு தானாகவே ஏற்பட்டு விட்டிருந்தது. தன்னை விட அவன் எல்லாவகையிலும் உயர்ந்தவன் என்ற ஒரு தாழ்வு மனப்பான்மை ஆழமாகப் பதிந்திருந்ததால் அவனை ஏறிட்டுப் பார்க்கவே அஞ்சினான். ஆனால், இதே மோகனசுந்தரம் புல்லாங்குழலை எடுத்துத் தன் உதடுகளில் பொருத்தி விட்டானானால், இந்த விவேகானந்தன் அல்ல - வேறு எப்பேர்ப்பட்ட மகாராஜாவாயிருந்தாலும் - துரும்புக்குச் சமானமாய் நினைக்கக் கூடியவன் என்று

> நெல்லைக் குத்தும்போது அவ்வப்போது குத்துவதை நிறுத்தி விட்டு உமி போயிற்ரு என்று பார்ப்பது போல், முக்தி நெறியில் ஈடுபடும் போது அவ்வப்போது மனத்தை நன்கு சோதித்துக் கொள்ள வேண்டும். — ஸ்ரீ ராமகிருஷ்ணர்

லும், இப்போது அந்த நிலையிலே இல்லாததால்தான் அவனைக் கண்டு அப்படி அஞ்சி நடுங்கினான். விவேகானந்தன் உள்ளே செல்லும்வரையில் அவன் தலை நிமிரவே இல்லை.

இந்தச் சமயம், சாலைவழியே அந்தக் கொட்டாங்கச்சிப் பிடில்காரன் இனிமையாக வாசித்துச் சென்ற ஒரு பாட்டின் ஓசை அவன் கவனத்தைக் கவர்ந்தது. ஸ்ரீமான் மயில்வாகனன் தயாரித்து வரும் திரைப் படத்துக்காக, தேவாமிர்த வர்ஷனி ராகத்தில் மோகனசுந்தரம் வாசித்துக் கொடுத்திருந்த பாடல் அது. படம் வருவதற்கு முன்னே அந்தப் புல்லாங்குழல் இசைத்தட்டு வெளி வந்திருந்ததால், நாடோடிக் கலைஞனை அந்தக் கொட்டாங்கச்சிப் பிடில்காரன் அதை எப்படியோ கவனம் செய்து கொண்டு தன் ஒரு வியாபாரத்துக்காக அந்தப் பாடலை வெகு திறமையுடன் பயன்படுத்திச்சென்றுகொண்டிருந்தான்.

இசைக் கலையில் எவ்வித ஏற்றத் தாழ்வும் பாராட்டாத மகா கலைஞனை மோகனசுந்தரம் அந்த அற்பமான இசைக் கருவியிலிருந்து, தன்னால் உருவாக்கப் பெற்ற பாடல் புனர் ஜன்மம் எடுத்திருப்பதைச் செவி மடுத்ததுமே தன்னை மறந்தான். தான் இருக்கும் இடத்தையும் மறந்தான்; அந்த எளிய நாடோடிக் கலைஞனைக் காணவேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டவனுய் அங்கிருந்து சாலையை நோக்கி நடையைக் கட்டினான். அப்படிப் போனவன்தான், அந்தக் கொட்டாங்கச்சிப் பிடில்காரனைக் கூப்பிட்டு நடைபாதையில் உட்கார வைத்துக் கொண்டு, அவனது பாமர இசைஞானத் திறமையிலே தன் மனத்தைப் பறி கொடுத்து நிற்கிறான்.

ஆகா! சற்றுமுன்னால், காரிலிருந்து கோமதியை விவேகானந்தன் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றதை இவன் மட்டும் பார்த்திருந்தால் இப்போது இங்கே இப்படியா நின்று கொண்டிருப்பான்? அந்த நிலைமையைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது!......

இந்த விவரங்களை அறியாத தேவகி இன்னமும் தன் மனத்தைப் போட்டு உருட்டிக்கொண்டுதான் இருந்தாள்.

கொட்டாங்கச்சிப் பிடில்காரன் தன்னிடமிருந்த இசைத் திறமையையெல்லாம் கொட்டித் தீர்த்து விட்டுச் சோர்வுடன் எழுந்து நின்றான்.

உற்சாகத்தோடு நிமிர்ந்த மோகனசுந்தரம் புன்னகையுடன் ஏதோ சொல்லி அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, தன் சட்டை ஜேபியில் கை விட்டுப் பார்த்தான். அது காலியாய் இருக்கவே, தனது பித்தான்கள் கோத்த தங்கச் சங்கிலியைக் கழற்றி அந்தக் கிழவனிடம் கொடுத்தான். ஒரு கணம் திகைத்து நின்ற கிழவன் அவனுக்குப் பெரிய கும்பிடாகப் போட்டு விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

மோகனசுந்தரத்துக்கு இப்போதுதான் தேவகியின் நினைவு வந்திருக்க வேண்டும். அவன் அலட்சியமாக இடுப்பின்மேல் இரு கைகளையும் ஊன்றி முகத்தைச் சுளித்துக் கொண்டு அங்கிருந்தவாறே சிவப்பிரகாசத்தின் வீட்டை ஏறிட்டு நோக்கினான்.

இதையெல்லாம் மாடியறை ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு நின்ற தேவகி சட்டென்று திரும்பிப் படிகளில் வெகு வேகமாகக் கீழே இறங்கி ஓடிவந்தாள்.

கூடத்தறையில் சிவப்பிரகாசம் மட்டுமே தனிமையில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தார். வேறு யாரையும் அங்கு காணோம். கோமதி படுத்திருந்த அறையும் பரக்கத் திறந்து கிடந்தது. ஆனால், தேவகி இதொன்றையுமே கவனியாதவளாய் வேகமாக வெளியே சென்றாள்.

'தேவகி, எங்கேம்மா போறே?" என்று அன்புடன் கேட்டுக் கொண்டே எழுந்தார் சிவப்பிரகாசம்.

இதையும் செவி மடுக்காமல் போன தேவகி, வெளி வாயிலைக் கடந்து சாலைமேல் ஏறி நின்று சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தாள்.

அதோ, தொலை தூரத்தில் மூன்று பேர்கள் செல்வது தெரிகிறது. அவர்களில் ஒருவன் மோகனசுந்தரம் என்பதும் நன்ருகத் தெரிகிறது. மற்ற இரண்டு பேர்கள் யார்; சந்தேகமில்லை; நேற்றிரவு அந்த இருளடைந்த மொட்டை மாடி வீட்டில் பார்த்த மத்தாப்புச் சிங்காரியும் அவனது கூட்டாளியும் தான் மோகனசுந்தரத்தைத் தங்களுடன் அழைத்துச் சென்றுகொண்டிருக்கிருர்கள்! (தொடரும்)

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!

ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீச்சும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சிறந்திருக்கும் நூதன நறுமணத்தினால், குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது!

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

RCC.13.QT-TAM.

மெய்க் காதல்

கல்யாணம் என்ற பூதம் புறப்பட்டு அவனை ஓட ஓட விரட்டும் என்று வரதன் எதிர்பார்க்கவில்லை. அன்று வரையில் அவன் கனவிலும் எண்ணாத, அவனுடைய பிரக்ஞையிலேயே இடம் பெற்றிராத விஷயம் இது. கல்யாணமா? பேஷ்! இதற்கு முன்பும் எத்தனை பெண்களைக் காதலிக்கவில்லை அவன்? கணக்கு வழக்கு உண்டா? அப்போதெல்லாம் இந்தப் பூதம் கும்பகர்ண சேவை செய்து கொண்டிருந்ததா, என்ன? அப்படியானால் இப்போது மட்டும் என்ன வந்து விட்டதாம் அதற்கு?

காதல் என்பது ஒரு முட்பாதை; அன்றிலிருந்து இன்று வரையிலும் அப்படித்தான். உலகில் ஒரு ரோடு பாக்கியில்லாமல் சிமெண்ட் போட்டு விட்டார்கள்; அல்லது தாரையாவது பூசி வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த முட்பாதை முட்பாதைதான். ஏதோ ஒரு வைராக்கிய உணர்வில் ஊசியை ஏற்றி வருத்திக் கொள்ளும் தவ முனிவர்கள் போல் துன்பத்தையும் துயரத்தையும் திருணமென மதித்து இந்த முட்பாதை வழியாக நடந்து செல்லத் துணிந்தால் உடனே அது மணப் பந்தலுக்கா இழுத்துச் சென்று தள்ள வேண்டும்? என்ன பித்தலாட்டம் இது!

வரதன் காதலித்தான். உண்மைதான். அவன் ஜோஸ்லினை மனமாரக் காதலித்தான். கணப்பொழுதும் இறக்கி வைக்காமல் இரவும் பகலும் அவளை நெஞ்சில் சுமந்து கொண்டு திரிந்தான். அதுவும் உண்மைதான். சரி; காதலித்தாகி விட்டது. அப்புறம்? அதென்ன கேள்வி? அப்புறம் என்ன? அதற்கு அப்புறமும் காதல்தான். திவ்யமான காதலுக்கு முற்றுப்புள்ளி என்பது உண்டா? இடைவிடாது பெருக்கெடுத்துப் பாயும் கங்கை அது. நெல்லைக் காயப் போட நடுவில் இம்மி இடம் காலி பண்ணித் தர வேண்டும் என்றால் தண்ணீர் விலகுமா? மேலும் காதலுக்காகவே காதல் என்று இருந்து விட்டுப் போகட்டுமே! 'கலைக்காகக் கலை' என்று அடிவயிற்றிலிருந்து கத்துகிறார்களே, படிப்பாளிகள் எல்லாரும். அது மாதிரி இதுவும் ஒன்று. மூட சமூகத்துக்கு நிலையான ஓர் அளவுகோல் உண்டா? எல்லாம் ஆளுக்கு ஏற்றபடி; தக்காருக்குத் தக்கபடி!

2

வரதனுக்கு ஊரில் படிப்ப முடிந்து விட்டது. அவன் கிராம வாழ்க்கைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு நகரத்தை அடைந்து, அங்கு ஒரு கல்லூரியில் சேர்ந்தான். பிறவிப் பயனை அடைந்துவிட்ட பேரானந்தம் அவன் மனத்தில். நகரத்தில் அவனுக்கென்றே தன்னந்தனியாக ஓர் அறை. ஏகாந்த வாழ்வு. அதுதானே அருமையான விஷயம். இங்கு மாதா பிதா, சொந்தம் சுற்றம் ஆகியோரின் கண்காணிப்பு என்ற பொன் விலங்கு இல்லை. வேறு தெரிந்த சத்துருக்களும் கிடையாது. அவனை இனம் கண்டுகொள்ள முடியாத குருட்டு ஜனம்தான் சுற்றுமுற்றும். வரதன் என்பது அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு வெறும் பெயர். அனந்தகோடிப் பெயர்களில் அதுவும் ஒன்று. மற்றப்படி அதற்கு விசேஷ அர்த்தம் எதுவும் கிடையாது. இன்னார், இன்னாருக்கு இன்னார் என்பதெல்லாம் இல்லை. என்ன அற்புதமான விஷயம்!

வரதனுடைய நெடுநாள் கனவு நிறைவேறி விட்டது.

நடுத் தெருவில் வரதன் ஆனந்தமாகச் சிகரெட் பிடித்துக் கொண்டு சென்றான். அவனுக்கோ சும்மா நடந்து செல்வதுகூட ஏதோ ஒரு விதத்தில் அடிமைத்தனத்தை ஒப்புக் கொள்வது போல் இருந்தது. கைகால்களை அகல வீசிக் கோணப் போட்டு அம்மன் கொண்டாடி போல் ஆடியாடிச் செல்ல வேண்டும். எதிர்ப்படுகிறவர் மூஞ்சியிலெல்லாம் சிகரெட் புகையை ஊதி விட்டுக் கொண்டே சென்றால்.... ஆஹா!

அவன் சேர்ந்தது ஆண்களும் பெண்களும் படிக்கிற கல்லூரியில். அதே ஊரில் பெண்கள்



சுந்தர ராமசாமி

மட்டும் படிக்கிற கல்லூரியும் இருந்தது. அதுவும் அவன் அறைக்கு அருகிலேயே. அங்கு அவனைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவேதான் இந்த இரண்டையும் தவிர, ஆண்கள் மட்டும் படிக்கிற தனிக் கல்லூரி ஒன்று இருப்பது தெரிந்திருந்தும் அந்தப் பக்கம் திரும்பாமல் ஆண்கள் படித்தாலும், பெண்களும் படிக்கிற இந்தக் கல்லூரியில் சேர்ந்தான் அவன். இருக்கிற சூழ்நிலையில் இதற்கு மேல் செய்வதற்கு எதுவுமில்லை.

கல்லூரி இப்போதுதான் திறந்திருக்கிறது. உடனே படிப்பா? அதெல்லாம் இறுதிப் பரீட்சைக்கு ஒரு மாதத்துக்கு முன்னாலிருந்து. ஒரு மாதம் இரவில் கண் விழித்து டீ குடித்துப் படித்தால் பாஸ் பண்ண முடியாத பரீட்சை இந்த ஜகத்தினில் இல்லை. அது வரையிலும் பேராசிரியர்களின் வாய் ஓயாத அரற்றலைச் சகித்துக் கொள்ள வேண்டியது தான். என்ன செய்ய? வேறு வழியில்லை. கண்களைப் போல் காதுக்கும் மூடி போடாமல் விட்ட கடவுளின் கைக்கு ஒரு முத்தம். அதனால் தானே பேராசிரியர்களுக்குத் தங்களுக்குத் தானே ஒரு மணிநேரம் பேசிக் கொள்வது தெரியாமல் இருக்கிறது?

3

வரதன் ஒரு நாள் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்று கொண்டிருந்தான். கல்லூரி விட்டசமயம்! எங்கு பார்த்தாலும் மயில்கள். வழக்கமாக இரவு வரும் சலிப்புணர்ச்சி அன்று பொழுதோடு வந்து விட்டது. பாதி கூடக் கருகி விராத சிகரெட்டைத் தூக்கி வீசி யெறிந்தான். எதிரே சினிமா விளம்பரத்தில் ஒரு ஜோடி. யுவதி, இளைஞனின் கண்களில் விழுந்திருக்கும் துரும்பை ஊதி அகற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறாள்! சினிமாவுக்குச் சென்றும் என்ன?

அப்போது என்ன காரணத்தாலோ — முதுகு குறுகுறுத்தது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது—வரதன் சடக்கென்று பின் பக்கம் பார்க்கவும், ஜோஸ்லின் அவனையே விழுங்கிக்கொண் டிருப்பதும் தெரிய வந்தது. மெய்ம்மறந்து போனான். ஏனெனில் அது சாதாரணப் பார்வையல்ல; பாராட்டு! 'அடியம், ஆட்கொள்ள வேண்டும்' என்று வியாக்கியானம் பண்ணுவது வலிந்து பொருள் கொள்வதாக இருக்கலாம். ஆனாலும் கிட்டத் தட்ட அதற்கான ஆரம்பம்தான். அப்படியே இல்லை யென்று கொண்டாலும் கண்களில் சகோதரத்துவம் மிளிராமல் இருப்பதே பெரிய விஷயம். அது போதும். நாட்பட வசக்கி விடலாம்.

வரதனுக்கு இது முற்றிலும் புதிய அனுபவம். அந்த ஊரில் குடியேறிய தினத்திலிருந்து, தினமும் காலையில அறையை விட்டு வெளியேறுவது முதல் அர்த்த ஜாமத்தில் பழையபடி அங்கு நுழைந்து தொப்பென்று படுக்கையில் சோர்ந்து விழுவது வரை, தெருவில், பஸ் ஸ்டாண்டில், கல்லூரியில், ஓடுகிற பஸ்களில், பாய்கிற கார்களில் காம்பவுண்டுச் சுவர்களில், மேல் மாடிகளில் கடை வாசல்களில், கோயில் முகப்புக்களில் இன்னும் எங்

கெங்கோ அங்கெல்லாம் கண் வட்டத்துக்குள் தப்பாமல் அகப்படும் லிலிகளுக்கெல்லாம், நாலு அப்பத்தை ஒரு பட்டாளம் குழந்தைகளுக்கு நகத்தால் கிள்ளிப் பங்கு போட்டுக் கொடுத்து விடும் கோயில் அர்ச்சகரின் சாமர்த்தியத்தையும் விஞ்சும்படி, தன்னை ஆளுக்குக் கொஞ்சமாய்ப் பிய்த்துப் பிய்த்துக் கொடுத்துக் கொண்டே செல்வது அவனுடைய அன்றாட அலுவலாகும். பதிலுக்கு அவர்களிடம் எதையும் எதிர்பார்க்கிறவனும் அல்ல. அதெல்லாம் அவரவர்களுடைய சௌகரியத்தை, நர்பிக்சையைப் பொறுத்த விஷயம். இந்தச் சுதந்திர தேசத்தில் யாரையும் காதலிக்க அவனுக்கு உரிமையுண்டு. அவனுடைய உள்ளம் அதற்குரிய மதிப்புக் கொடுத்து ஏற்றுக் கொள்கிறது. இதில் என்ன தப்பு? ஆகவே, அவனுடைய காதல் உணர்வு தினத்துக்கு ஓராயிரம் தடவை மூண்டு, தடவைக்கு ஒரு செகண்டிலிருந்து சமயங்களில் அபூர்வமாக இரண்டு நிமிடங்கள் வரையிலும்கூட நீண்டு நிற்கும் தன்மையது. அவசர உலகில் அவ்வளவுக்குத்தான் அவகாசம் உண்டு. மேலும் இன்றையச் சமூக அமைப்பு அத்தகையது. அது மாறுவது வரையிலும் இந்தத் தொல்லைதான்.

இருந்தாலும் எத்தனை இடையூறுகள்! எண்ணத்தான் தொலையுமோ?. ஆற அமரப் பார்ப்பதற்குள் பஸ் புறப்பட்டுச் சென்று விடும். அநியாய வேகத்தில் நடந்து வந்து கணப் பொழுதில் தாண்டிச் சென்று மறைந்து விடுவது ஒரு தனி ஜாதி. இந்த அழகில் திரும்பிப் பார்ப்பது அநாகரிகம் என்று வேறு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில சமயம் ஒரு பரட்டைத் தலை குறுக்கே நின்று மறைக்கும்; தூண்கள் மறைக்கும்; விருட்சங்கள் மறைக்கும். அந்த இடத்தில் ரோடு அக்கிரமமாகத் திரும்பிச் செல்லும். இல்லை, படக்கென்று அவள் ஒரு கடைக்குள் நுழைந்து சென்று விட்டால் என்ன செய்ய முடியும்? ஏறிச் சென்ற கடை உளைக் கடையாகவும் இருந்து விட்டால் பின்தொடர முடியுமோ? பெரும் தடைகளெல்லாம் ஏகோபித்துக் கூட்டு முன்னணி அமைத்துக் கொண்டு சதிகள் செய்யும். ஒரு நாள், கொள்ளுமட்டும் வைக்கோலை ஏற்றிக் கொண்டு வந்த லாரி ஒன்று சொல்லி வைத்தாற் போல் பெண்கள் கல்லூரியின் வாசலில் வந்து நின்று நூற்றுக்கணக்கான சந்திர பிம்பங்களைப் பார்க்கவொட்டாமல் செய்துவிடவில்லையா? ஒரு தீக்குச்சியைக் கிழித்துப் போட்டு விட்டு ஓடி விடலாமா என்று வந்தது வரதனுக்கு. இது தவிர, தர்மத்தை நிலைநாட்டவென்றே அவதரித்திருக்கும் தூய ஆத்மாக்களின் விமர்சிக்கும் பார்வைகள். வயதாகி விட்டதென்றால் எந்தத் தர்மத்தைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது!

இவ்வாறெல்லாம் நாட்கணக்கில் முயன்று, தோல்வியுற்று, மனத்தில் சலிப்பு என்ற சாம்பல் குவியல் ஒரு பக்கமும், மோகம் எனும் தழல் மனச்சுவர்களை வெந்த இடத்திலேயே மேலும் ஒக்கும் வேதனை மறு பக்கமுமாக அவன் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, ஒரு யுவதி பின்னாலிருந்து தன்னை விழுங்கிக் கொண் டிருந்தால் ஒருவனுக்கு எப்படி இருக்கும்? தலை சுற்றாதா அவனுக்கு? அன்றிரவு தூக்கம் ஏது? விடிய விடிய அவள் ஸ்மரணைதான்.

விடிவெள்ளி நேரத்தில் தூக்கச்சடைவோ, சோர்வோ யில்லாமல் தனது அறை ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றான் அவன். வாழ்நாளில் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசிக்க வேண்டிய சந்தர்ப்பம் கூடி விட்டது. வானம் வெளிறிப் போயிருந்தது; சந்திரனும் அப்படியே. தெருவில் நாய்கள் எதுவும் குரைக்கவில்லை. (இப்போது அவை அவசியமில்லாமல் குரைப்பதெல்லாம் கதைகளில்தான்!) காற்று மட்டும் இதமாக வீசிக்கொண் டிருந்தது. அதுவரையிலும் அவளையே எண்ணி நெக்குருகிப் போனதில் மனம் ஒரு திரவப் பொருளாக மாறி விட்டது போலும்! கிழக்கு வானத்தின் ஒரு மூலையில் செடிகொடிகளின் இடையினூடே ஒரு கைவிளக்கு ஒளி தெரியலாயிற்று. இருள் அகல ஆரம்பித்து விட்டது.

அந்தப் புனித வேளையில் வானத்தையும், மண்ணையும் செடி கொடிகளையும் சாட்சிகளாகச் சங்கற்பித்துக் கொண்டு, 'இந்த ஜென்மத்தில் மற்றொரு பெண்ணை மணந்தாலும் எண்ணேன்' என்று அவன் சபதமிட்டபோது அவனது விரல்கள் ஜன்னல் கம்பிகளை மேலும் இறுகப் பற்றியதோடு கண்களும் பனித்தன.

சலியாத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் வரதன் ஜோஸ்லினைப்பற்றி எத்தனையோ தகவல்களைச் சேகரித்துக் கொண்டான். இது என்ன சுளுவான வேலையா? அந்த ஒரு வார காலம் அவன் பட்டபாடு, அசுவமேத யாகம் ஒன்றை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கும் போதுமானதாகும். மணிக்கணக்காக வெயிலில் நின்று வாடினான். அவளுடைய வீட்டைக் கண்டுபிடிப்பதற்காகவே அவன் அந்த ஊருக்குள் எத்தனை காதம் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறான்? அதையெல்லாம் எண்ணி இப்போது அவன் வருந்தவில்லை. அவளுடைய வாழ்க்கை வரலாற்றைச் செவ்வனே எழுதி முடிப்பதற்குப் போதுமான குறிப்புக்களைச் சேகரித்துக் கொண்டு விட்டானே, அதுதான் பெரிய விஷயம்!

வரதன் தினமும் காலையில், கல்லூரிக்குச் செல்ல வேண்டிய பாதைக்கு நேர் எதிரான பாதையில் ஒரு மைல் தூரம் வரையில் நடந்து செல்வான். இதில் ஆயாசமுண்டு என்றாலும் ஜோஸ்லினை எதிர்கொண்டு அழைத்து வர வேண்டுமென்பதே தலையாய நோக்கம். அவனைக் கண்ட மாத்திரத்தில் அவளுடைய முகத்தாமரை மலருவதை அவன் கவனித்திருக்கிறான். இது அவன் தனக்குத்தானே கற்பனை செய்து கொள்வதும் அல்ல. உண்மையிலேயே அப்படித்தான். தொடர்ந்து அவளுடைய மெய்க்காப்பாளனாக அவள் பின்னாலேயே, - ஆனால் பாதையின் மறுபுறமாக, — நடந்து செல்வான். போகிற வழியில் ஒரு பங்களாக் காம்பௌண்டுச் சுவருக்குவெளியே தலை நீட்டிக் கொண்டிருக்கும் சூரிய காந்தி மலரை அவள் ஒரு கணம் நின்று ரசித்து விட்டுப் போவதற்கு என்ன அர்த்தம்? 'அந்த மலரைப்போல் உன்னையும் நேசிக்கிறேன்' என்பதா, அல்லது 'உன் முகத்தைக் கண்டபின்பு

எந்த நேரத்திலும்...

எந்த இடத்திலும்...

எந்த சந்தர்ப்பத்திலும்...

நீங்கள் எழில் மேம்பட காண்கிறீர்கள்

கடாவ்

வாயில்களில்

[illegible] கோ., லிட்., மில்: [illegible] பம்பாய்; ஆபீஸ்: [illegible], பம்பாய்-1

சில்லறை விற்பனைக் கடை: 216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை-1



நீங்கள் எப்பொழுது ஸ்நானம் செய்தாலும் ஹமாம் சோப்பினாலேயே ஸ்நானம் செய்யுங்கள்

ஹமாம்

குடும்பத்தில்
ஒவ்வொருவரும்
விரும்பும் சோப்

...அது நீடித்தும் நிற்கிறது !

டாடா தயாரிப்பு

THY-7-TAM

இதிலென்ன அழகு' என்பதா? ஏதோ ஒன்று தான். இந்தமாதிரி இடங்களில் கவிஞர்கள் சக்கைப் போடு போடுவார்கள். இருந்தாலும் அடங்கியுள்ள சூட்சுமத்தை வரதனும் அவனுடைய அறிவுக்கு எட்டுகிற அளவுக்குப் புரிந்து கொள்ள முடியாதா, என்ன?

ஜோஸ்லின் அவனை மனமாரக் காதலிக்கிறாள் என்பதில் வரதனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

4

ஒருநாள் ஜோஸ்லின் தனது தாயாருடனும் தங்கையுடனும் கடைத்தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தாள். அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த வரதன், திடீரென்று ஒரு பக்கவாட்டுச் சந்திலுள் நுழைந்து தொடர்ந்து மேலும் பல முடுக்குகள் வழியாக வளைய வளைய ஏறி இறங்கி வெளிப் போந்ததின் விளைவாக, ஜோஸ்லின் குடும்பத்தை ஒரு பர்லாங் தூரம் பின் தங்க அடித்து விட்டு, பழையபடி அந்த இடத்திலிருந்து திரும்பி, அவசர அலுவல் நிமித்தம் எங்கோ செல்கிற பாவனையில் அவர்களுக்கு எதிராக வர ஆரம்பித்தான். மிகவும் நெருங்கி வருவது வரையில் அவர்கள் பக்கம் திரும்பாமலே வந்தவன், கைவளையல்களின் ஒலியைச் செவி பற்றிக் கொண்ட கணத்தில் அவர்கள் பக்கம் திரும்பியதும் முகத்தை ஆட்கொண்ட ஆச்சரிய பாவம் பூரணத்துவம் பெறுவதற்கு முன்னேயே சரேலென்று குறுக்கிட்ட பண்பாடு அவனைப் பாதையின் ஓரத்துக்கு இழுத்துச் சென்று தள்ளி விட்டது.

அன்று வரையிலும் ஜோஸ்லின் அவனைப் பார்த்துச் சிரித்திருப்பதெல்லாம் கண்ணால் தான். உதட்டை அசைத்து ஓசைப்படுத்தினால்தான் பேச்சா?

வரதனை, ஜோஸ்லின் அன்று தனது தாயாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். உலகத்திலுள்ள பவ்யத்தை யெல்லாம் நொடியிடையில் உடம்பில் வரவழைத்துக் கொண்டு கரம் குவிக்கிறான் வரதன். ஜோஸ்லினின் தாயாரைப் பார்த்துப் பெற்றெடுத்த தனயன் சிரிப்பதுபோல் சிரிக்கிறான். ஜோஸ்லினின் இளைய சகோதரியைப் பார்த்துச் சிரிக்கிறான். சிரித்துக் கொண்டே நிற்கிறான்.

அவர்கள் அவனைத் தாண்டிச் சென்றபோது ஜோஸ்லினின் தாயார் அவனை, "தங்கமான பிள்ளை, என்ன அடக்கம்! என்ன பண்பு!" என்று வியந்து பாராட்டி விருப்பாள் என்பதில் அவனுக்குச் சிறிதும்ஐயமில்லை. ஆமாம்! அதிலென்ன சந்தேகம்? அப்படியே சொன்னாள் அவள். சில வார்த்தைகள் கூடக் காற்று வாக்கில் அவனுடைய காதில் விழவில்லையா?

ஜோஸ்லினின் தாயாருக்கு அவன் மேல் நல்லெண்ணம் விழுந்து விட்டது.

5

வரதன் அன்று ஜோஸ்லினைப் பார்க்கவேயில்லை. மாலையில் வெகு நேரம் கடைத்தெருவில் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தான். காணோம். ஒரு தடவை அவளைக் கண்ணாரப் பார்த்து விட்டுச் சினிமாவுக்குப் போக வேண்டும். எண்ணம் கைகூடாததால் சலிப்பும் விரக்தியும் மேலிட்டு விட்டன. என்ன சினிமா! நேராக அறைக்கு வந்து சேர்ந்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை.

மனத்துள் மண்டியெழுந்த சலிப்புணர்ச்சி ஒவ்வொரு மயிர்க்காலிலும் கசிந்தது. உள்ளூறக் குமட்டிக் கொண்டிருந்த ஏதோ ஒன்றை வாய்க்குள் பிண்டமாக வரவழைத்துக் கக்கித் தொலைத்து விட்டால் எவ்வளவோ ஆசுவாசமாக இருக்கும். அல்லது தூக்கம் என்ற இயற்கையான போதையில் ஆழ்ந்து விட்டாலும் விமோசனம் உண்டு. தற்காலிகச் சாந்தியாவது கிடைக்கும். வரதன் கண்ணை இறுக மூடிக் கொண்டு முடிந்த மட்டும் முயன்று பார்த்தான். தூக்கம் ஏணிப் பணியோடு நின்று கொண்டு விட்டது.

கையிலிருந்த 'குரூப்' போட்டோவில் ஜோஸ்லினுடைய முகம் ஒரு நயாபைசா வட்டத்துக்குத் தெரிந்தது. அதை ஆதாரமாகக் கொண்டே அவனுடைய கற்பனை ஐந்தே கால் அடி உயரத்துக்கு எழுந்தது. அவனுக்கோ அவளுடைய கால் கட்டை விரல் கூட எப்படியிருக்கும் என்பது தெரியும்!

கற்பனையில் அவளுடைய சௌந்தரியத்தைக் கண்டானோ இல்லையோ, அந்தக் கணமே அவளை நேரில் காண வேண்டும் என்ற துடிப்பு அவன் நெஞ்சில் மூண்டு விட்டது. அப்போது மணி பத்து.

பதினொரு மணிக்கு வரதன் ஜோஸ்லின் வீட்டுக்கு முன்னால் வந்து சேர்ந்தான். அந்த வீடு பின்னால் அவனுக்குச் சௌகரியமாக இருக்க வேண்டும் என்ற முன்யோசனையுடன் எழுப்பப்பட்டது போலும்! ரோட்டைப் பார்க்க ஜன்னல்கள்!

வரதன் ஜன்னலைப் பார்த்தான். யாரது? ஜோஸ்லினுடைய தகப்பனாரா? விசாலமான முதுகும், குட்டையான கழுத்தும். பர்லாங் கல்லின் மேல் ஏறி நின்றுகொண்டு பார்த்த போது ஜோஸ்லினுடைய இடது காது மட்டும் தெரிந்தது. 'அடி சக்கை! புதிய குண்டலமா? 'பப்பாவின் பரிசா? பேஷ்!'

உள்ளேயிருந்து மெல்லிய சங்கீதம் எழுந்தது. ஜோஸ்லின்தான்! என்ன அற்புதமான குரல்! 'எனதுயிர் சதீப்ற்று' என்ற சாகித்தியம்! கொஞ்சும் குரலில் குழைகிறாள். சில இடங்களில் அதி அற்புதமாகக் கொஞ்சி

> தெய்வ பீடத்தின் முன் நிவேதனத்தைப் படைக்குமுன், உனக்கும் உன் போன்றதொரு சக ஜீவனுக்குமுள்ள பிணக்கை நினைவுபடுத்திக் கொள். காணிக்கையைப் பீடத்தின் முன்பே வைத்துவிட்டு அவனை நாடிச் செல். அவனோடு சமாதானம் செய்து கொண்டு, பின்னர் வந்து உனது நிவேதனத்தை இறைவனுக்கு அளி. —இயேசு கிறிஸ்து

> தனிப்பட உமிக்கு என்ன மதிப்பு? ஆனால் உமி நீக்கிய நெல் முளைப்பதில்லை. இப்படியேதான் தருமம் நிலைத்து வளரச் சடங்குகள் அவசியமாக இருக்கின்றன.
>
> —ஸ்ரீ ராமகிருஷ்ணர்

வழிந்த போது. வரதனுக்கு மனச் சுவர்களில் சந்தனத்தைப் பூசி வெண்சாமரத்தால் வீசுவது போல் இருந்தது.

பாட்டு முடிந்ததும் ஜோஸ்லினுடைய தகப்பனார் நீண்ட நேரம் கரகோஷம் செய்தார். அவருடைய முதுகும் தோள் பட்டையும் குலுங்குவதைப் பார்த்துக் கொண்டு நின்றான் வரதன். மீண்டும் டர்லாங் கல்லில் ஏறிப் பார்த்தபோது ஜோஸ்லினுடைய இடது காது தெரியவில்லை.

தெரு விளக்கு அணைந்து விட்டது. 'பீட்' போலீஸ் சுற்றி வரும் வேளை. சந்தேகப்பட்டுக் காவலில் இருக்க நேர்ந்தால் அவமானம்; ஜோஸ்லின் மனம் புண்படும். வரதன் விறுவிறுவென்று நடந்தான்.

படுக்கையில் விழுந்து நெடுநேரமான பின்பும் வரதனால் தூங்க முடியவில்லை. அவனுடைய மனத்துக்குள்ளிருந்து சன்னமான ஒரு குரல் 'எனதுயிர் ஈஜிப்ற்று' என்ற அந்தப் பல்லவியை இடைவிடாது பாடிக் கொண்டிருந்தது. 'எனதுயிர் ஈஜிப்ற்று! ஜோஸ்லின் நீ என்ன அற்புதமாகப் பாடுகிறாய்!'

காலையில் காப்பி சகிதம் உள்ளே நுழைந்த பையன் அவனுடைய உள்ளங்காலைச் சொறிந்தபோது கண் விழித்த வரதன் அந்தப் பையனுடைய முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு அவனுடைய கன்னத்தில் செல்லமாகத் தட்டியபடி 'எனதுயிர் ஈஜிப்ற்று' என்று தலையைச் சரித்துக் கொண்டே முனகினான். அன்றைக்கெல்லாம் 'சூயிங்கம்' மிட்டாய் மாதிரி அந்த இரண்டு வார்த்தைகளையும் குதப்பிக் கொண்டே இருந்தான் அவன்.

6

மறுநாள் ஜோஸ்லின் வரதனைச் சந்தித்த போது அவளாகவே அவன் அருகில் வந்தாள். அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்துத் தாராளமாகச் சிரித்துக் கொண்டே, ''எங்கப்பா வந்திருக்காங்க'' என்றாள்.

''தெரியுமே!'' என்று கணமும் சிந்திக்காமல் பதில் சொன்னான் வரதன்.

''எப்படித் தெரியும்?''

இனிமேல் மறைக்க முடியுமா? மறைக்க வேண்டிய அவசியம்தான் என்ன? வரதன் விஷயத்தைச் சொன்னான்.

''ஜோஸ்லின், நீ ரொம்பவும் அற்புதமாகப் பாடுகிறாய்'' என்று தொடர்ந்து சொன்னான் வரதன்.

ஜோஸ்லின் காதில் அவ்வார்த்தைகள் விழுந்ததாகவே தெரியவில்லை.

''இரவு பதினோரு மணிக்கு வெளியே நின்று கொண்டிருந்தீர்களா?'' என்று தீனமான குரலில் கேட்டாள் ஜோஸ்லின். அழுது விடுவாள் என்றுகூடத் தோன்றியது.

''பதினோரு மணியா? கூட இருக்கும்... இருந்தாலும் இப்படிப் பாடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை'' என்றான் வரதன்.

ஜோஸ்லின், ''நீங்கள் உள்ளே வந்திருக்கலாமே. டப்பாகூட ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பார்'' என்றாள்.

இருவரும் பேசிக் கொண்டு வருகிறபோதே, வரதனுடைய அறைக்குத் திரும்பும் சந்து வந்து விட்டது.

''ஜோஸ்லின்! அறைக்குப் போய் விட்டுப் போகலாமே; உடனே திரும்பி விடலாம்'' என்றான் வரதன்.

ஜோஸ்லின் வரதன் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''இன்னொரு நாள் வருகிறேன். நீங்களும் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வாருங்களேன்'' என்றாள்.

வரதனால் பதில் சொல்ல முடியவில்லை. ஜோஸ்லின் அவனைத் தன் வீட்டுக்கு அழைக்கிறாள்! தலையை மட்டும் வேகமாக அசைத்தான் வரதன்.

வரதனுக்கு ஒரே ஆசை. ஜோஸ்லினுடைய வீட்டுக்குச் செல்ல வேண்டும். அவளுடைய தகப்பனார் வந்திருக்கிறார். அதனால் என்ன? அவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது வரதனுக்குத் தெரியாதா? அன்று ஜோஸ்லினுடைய தாயார் அவனைப் பற்றி என்ன சொன்னாள்? இவரும் அதைத் திரும்பப் படிக்கப் போகிறார். வேறு என்ன? ஜோஸ்லினே அவனை அழைத்தாள். ஆனால் அவள், அவனைக் கண்டிப்பாய் எதிர்பார்க்கிறாளா? அல்லது உபசார வார்த்தைதானா? உபசார வார்த்தையா? ஒரு நாளும் இல்லை. ஜோஸ்லினுடைய தகப்பனார், 'எங்கே வந்தாய்?' என்று கேட்டு விட்டால்...கேட்டால் என்ன? உடனே மூர்ச்சை போட்டு விழுந்து விடுவார்களா? கல்லூரி மாணவர்கள் ஒருவருக்கொருவர் 'நோட்ஸ்' வாங்கிக் கொள்வதில்லையா? ஒரு மாணவன் ஒரு மாணவி வீட்டுக்குச் சென்றால் உடனே....என்ன தேசம் இது.....

7

மறுநாள் மாலையில் நிகழ்ந்த ஆச்சரியம் தான் எல்லாவற்றிலும் பெரிய ஆச்சரியம். ஜோஸ்லினுடைய தகப்பனார் அவனுடைய அறைக்கே வந்து விட்டார். வரதனுக்குத் திக்கென்றது. விஷயம் அவருடைய காதுக்கு எட்டி விட்டதா?

ஆனால் உள்ளே வந்தவர் தணிந்த குரலில், ''மிஸ்டர் வரதன் என்பது நீங்கள்தானே? என் பெயர் லாரென்ஸ். ஜோஸ்லினுடைய அப்பா'' என்றார். வரதன் அவரை மலர்ந்த முகத்துடன் வரவேற்று ஆசார உபசாரம் பண்ணினான். அருமையான சந்தர்ப்பம்வாய்த்திருக்கிறது. வரதனுக்குத் தெரியாததா?

மிஸ்டர் லாரென்ஸ் சிறிது நேரம், தாம் வேலை பார்த்து வரும் எஸ்டேட்டைப் பற்றித் தமிழ் கலந்த ஆங்கிலத்தில் பேச,

வரதன் ஆங்கிலம் கலந்த தமிழில் அவர் சொன்னதற்கெல்லாம் ஆமோதித்துப் பதில் பேசிக் கொண்டிருந்தான். இருவருக்கும் இருமொழிப் பரிசயமும் இருந்ததால் ஒரு வாறு பேசிக்கொள்ள முடிந்தது.

பேசிக்கொண்டே வந்தவர் திடீரென்று தொண்டையைக் கனைத்துக் கொண்டே, "மிஸ்டர் வரதன்! நான் உங்களிடம் முக்கிய மான ஒரு விஷயம் பேசிவிட்டுப் போக வந்திருக்கிறேன்" என்றார்.

வரதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

வாரென்ஸ் ஒரு நிமிஷ நேரம் ஜன்னலையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மீண்டும் பேச ஆரம்பித்தார்.

"சுருக்கமாகச் சொல்கிறேன். ஜோஸி அவ ளுடைய 'மம்மா'விடம் எல்லா விஷயத்தை யும் மனம் விட்டுப் பேசியிருக்கிறாள் என்பது தெரிகிறது. எங்களுக்கெல்லாம் ரொம்பவும் சந்தோஷம். ஒருவிதத்தில் ஜோஸியை ரொம் பவும் அதிருஷ்டசாலி என்றுதான் சொல்ல வேண்டும். மேற்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்பது தெரிந்தால் நல்லது. லீவு நாட்கள் திருவதற்குள் ஒருவாறு பேசி முடித்து விடலாம் என்று எண்ணுகிறேன். இனிமேல் அவள் படிப்பதும் படிக்காததும் உங்கள் இஷ்டம்..."

வரதன் நாற்காலியின் கைகளைப் பலமாகப் பிடித்துக் கொண்டான்.

அவன் கனவிலும் எதிர்பார்த்திராத பூதம் புறப்பட்டு விட்டது.

"யோசித்துச் சொல்கிறேன்" என்ற இரண் டொரு வார்த்தைகளைக் கூட எப்படித்தான் சொல்ல முடிந்தது அவனால்?

வாரென்ஸ் போய்ச் சேர்ந்தார்.

அன்று முழுதும் படுக்கவும் முடியாமல், உட்காரவும் முடியாமல், மனப் புழுக்கத்தில் தவியாய்த் தவித்தான் வரதன். பேராபத் தான ஒரு சூழ்நிலை கைகோத்து அவனைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. முடி வில் அது அவன்மேல் கவிந்து அவனை ஒரே அமுக்காய் அமுக்கிவிடும்.

'மேற் கொண்டு செய்யவேண்டிய காரி யங்கள் தெரிய வேண்டுமாம்! அழகுதான். இவருடைய பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு போகத்தான் இங்கு வந்திருக் கிறேனா? நல்ல ஆசாமி. புறப்பட்டு வந்து விட்டார். ஜோஸ்லின் நீ எவ்வளவு புத்தி சாலி! இருந்தாலும் நீ இதை உன் அம்மா காதில் போடுவாய் என்று நான் நினைக்கவே யில்லை. நீ என்ன குழந்தையா? அந்தப் பழைய காதல் என்று நினைத்துக் கொண்டு விட்டாயா? அடி அசடே! காதல் என்றால் காதல்தான். கல்யாணத்துக்கு அங்கு என்ன வேலை? இது ஏன் உனக்குத் தெரியாமல் போய் விட்டது?...'

8

மறுநாள் வரதன் நேராகக் கல்லூரிக்குச் சென்று விட்டான். ஜோஸ்லின் முகத்தில் ஒரு பெரிய கேள்விக் குறியைத் தாங்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

டி. யு. ஸி. எஸ்.
புரசைவாக்கம் கிளை
பொன் விழா
13-4-61 வியாழனன்று மாலை 5-30 மணிக்கு ராஜாஜி அவர்கள் தலைமையில் ஸர் எம். ஸி. டி. முத்தையாச் செட்டியார் உயர் நிலைப் பள்ளியில் நடைபெறும்.

"காலையில் எழுந்திருக்கிறபோதே ஒன்பது மணி ஆகிவிட்டது. அப்படியே அவசரமாகக் கல்லூரிக்கு வந்து விட்டேன்" என்றான் வரதன்.

"சாயங்காலம் 'பார்க்' வழியாகப் போக லாமே?" என்றாள் ஜோஸ்லின்.

வரதன் தலை அசைத்தான்.

ஆனால் கல்லூரி விட்டதும் தன் நண்பன் ஒருவனின் சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு ஒரு நொடியில் அறைக்கு வந்து சேர்ந்தான். மனத்தில் மட்டும் ஜோஸ்லினின் கையைப் பிடித்துக் கொண்டு 'பார்க்' வழி யாக வருவது போலவும், இருவரது தலையிலும் சின்னஞ்சிறிய மஞ்சட் பூக்கள் உதிர்வது போலவும் பல காட்சிகள் 'டெக்னி கலரில்' ஓடிக் கொண்டிருந்தன.

இரண்டொரு நாட்களை இப்படியே கழித் தான். அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் ஒரு பையன் வந்து வரதன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான். வாரென்ஸ்தான் எழுதியிருந்தார்.

அன்று ஜோஸ்லினுக்குப் பிறந்த தினமாம். மாலையில் விருந்தாம். அவன் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டுமாம்.

பின் குறிப்பு: 'மிஸ்டர் வரதன், உங்கள் உடம்பைப் பற்றி எனது மனைவி மிகவும் கவலைப்படுகிறாள். நீண்ட நேரம் இரவில் கண் விழித்துப் படிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளச் சொல்கிறாள். அதோடு இன்றிலிருந்து இரவு உங்களுக்கு ஒரு தம்ளர் பால் கொண்டுதர ஏற்பாடு செய்திருக் கிறோம். அதைத் தாங்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் உடல் நலத்தை உத்தேசித்தே இந்த ஏற்பாடு.'

விஷயம் 'சீரியஸா'கி விட்டது.

வரதன் படுக்கையில் விழுந்து கண்களை இறுக மூடிக் கொண்டான். அவன் மனத்தில் பல பயங்கரமான காட்சிகள்.

வாரென்ஸும் அவரது மனைவியும் தம் வீட்டு வராண்டாவில் நின்றுகொண்டு இரு கரங்களையும் முன்னால் நீட்டியபடி கடைசிப் படியில் நின்று கொண்டிருக்கும் வரதனைப் பார்த்து, 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை' என்று கத்திக் கொண்டேயிருக்கிறார்கள். கணத் துக்குக் கணம் அவர்கள் குரல் வலுத்து உச்சஸ்தாயிக்குச் சென்று கொண்டிருக் கிறது. அதோ முகம் சிவந்து கண்விழி வேறு பிதுங்க ஆரம்பித்து விட்டது. ஜோஸ்லின் வெள்ளை ஸாட்டின் பாவாடையும், சிவப்புத் தாவணியும் அணிந்து கொண்டு தடதட

வென்று படியிறங்கி வந்து அவனது இரு கால்களையும் இறுகப் பற்றியபடி, "மை டியர்! 'என்ன' என்று ஒரு தடவை கேட்டு விடுங்கள். எனது பப்பாவும் மம்மாவும் தொண்டை வெடித்து மரித்துப் போக வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? ஐயோ! உங்களுக்கு இத்தனை கல்நெஞ்சா!" என்று அலறுகிறாள்.

மற்றொரு காட்சி.

"போ வெளியே!" என்று கத்துகிறார் அவனுடைய தகப்பனார்.

ஆட்டுக்குட்டி போல் வரதனுடைய முகத்தைப் பரிதாபமாகப் பார்க்கிறாள் ஜோஸ்லின்.

"என் வயிற்றில் நெருப்பைக் கொட்டி விட்டாயே பாவி" என்று கத்துகிறாள் அவனுடைய தாயார்.

வீட்டில் ஒரே ஓலம்!

தெருவில் வருவோர் போவோர் எல்லோரையும் வலியக் கூப்பிட்டு, "எனக்கு ஒரு பிள்ளை இருந்தானே, வரதன், அவன் செத்தே போய் விட்டான்" என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார் அவனுடைய தகப்பனார்.

"அப்பா! அப்பா!" என்று முனகிக் கொண்டே முகத்தை மூடிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான் வரதன். கண்ணை விழித்துப் பார்த்தபோது நன்றாக இருட்டி யிருந்தது. இந்நேரம் ஜோஸ்லின் வீட்டில் விருந்து நடந்து முடிந்திருக்கும். எவ்வளவு அருமையான விஷயம். அவனுக்குக் கலந்துகொள்ளக் கொடுத்து வைக்கவில்லை.

கடைத்தெருவுக்குச் சென்றால் பிறந்ததின அலங்காரத்தோடு ஜோஸ்லினைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கலாம். ஹோட்டல் மூன்றாவது மாடியில் முன்னதாகவே ஏறி நின்றுகொண்டு விட்டால் அவர்களுடைய பார்வைக்கு இலக்காகும் துரதிருஷ்டம் நேராமல் தப்பித்துக் கொள்ளலாம்: அவளைப் பார்க்கவும் செய்யலாம்.

வரதன் அவசரம் அவசரமாக உடைகளை அணிந்து கொண்டான். தலை சீவிக்கொள்ள ஜன்னலோரம் சென்றபோது மெயின் ரஸ்தாவில் ஜோஸ்லினும் அவளுடைய தகப்பனாரும் நடந்து செல்வது தெரிந்தது. ஜோஸ்லின் தன்து தகப்பனாரின் கவனத்தைக் கவராமலே அடிக்கொரு தரம் அவனுடைய அறை ஜன்னல்களைப் பார்த்துக் கொள்கிறாள். அவனுக்கு மெய்சிலிர்த்தது.

வரதன் பின்னால் நகர்ந்து கொண்டே 'ஜோஸ்லின் உனக்குத்தான் என் மீது எத்தனை அன்பு' என்று மனத்துள் சொல்லிக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்!

ஜோஸ்லினும் அவளுடைய தகப்பனாரும் அவனுடைய அறைக்கு வர வேண்டிய சந்தில் திரும்புகிறார்கள்.

வரதன் சட்டென்று வாசல் கதவைச் சாத்தித் தாளிட்டான். அப்படியே சாய்வு நாற்காலியில் மெதுவாக உட்கார்ந்து கொண்டான்.

மாடிப் படியில் பூட்ஸ் ஓசைகேட்டது.

"தட்...தட்...தட்...தட்"

"மிஸ்டர் வரதன்!"

வரதன் கண்ணை இறுக மூடிக்கொண்டான்.

"மிஸ்டர் வரதன்...தட்தட்...தட்"

"பப்பா! அவர் வெளியே போயிருக்கக் கூடும். அல்லது தூங்குகிறாரோ என்னவோ?" என்கிறாள் ஜோஸ்லின்.

என்ன இனிமையான குரல்!

இரண்டு நிமிடங்களுக்குப் பின்னால் வரதன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

ஜோஸ்லின் மெயின் ரஸ்தாவில் தன் தகப்பனாரை இடித்துக் கொண்டே அழகாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

9

மறுநாள் காலையில் வாரன்ஸிடமிருந்து பழையபடியும் ஒரு கடிதம் வந்தது.

அவன், விருந்தில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டது அவருக்கும் அவருடைய குடும்பத்துக்கும் பெரும் ஏமாற்றமாக இருந்ததாம். அதையே இரண்டு பக்கங்களுக்கு எழுதியிருந்தார். சரி, இது வரதன் எதிர் பார்த்ததுதான். ஆனால் இதென்ன? நானை மீண்டும் அவளைப் பார்க்க வரப் போகிறாரா? எதற்கு?... 'இரண்டொரு நாட்களில் லீவு முடிவடைகிறது!'... முடியட்டுமே! எனக்கு என்ன... 'தங்கள் தகப்பனாரைச் சந்தித்துப் பேசலாம் என்று எண்ணுகிறேன். தாங்களும் உடன் வரவேண்டும், நாளை நின்று மறு நாள் புறப்படலாம். எதற்கும் நாளை தங்களைச் சந்திக்கிறேன்...'

கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டான் வரதன்.

அன்று அவன் கல்லூரிக்குச் செல்லவில்லை; ஹோட்டலுக்கும் செல்லவில்லை. இரவு ஏழு மணிவரையில் அன்ன ஆகாரமில்லாமல் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான். படுக்கையில் புரண்டு அலுத்துவிட்டது. கண்ணாடியில் முகத்தைப் பார்த்தபோது அவன் வெருண்டு போனான்.

அவன் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்; அல்லது விபரீதம் விளைந்துவிடும்.

கையால் தலையைப் பிடித்துக் கொண்டு யோசித்தான் வரதன். நீண்ட நேரம் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

நடுநிசியில் ஒரு யோசனை பளிச்சிட்டது. மேற்கொண்டு ஒரு நிமிஷம்கூட வீணாக்காமல் துரிதமாகப் பல காரியங்களைச் செய்து முடித்தான் அவன்.

10

விடியற்காலம் நாலரை மணி ரயிலில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்து கொண்டிருந்தான் வரதன்.

ரயில் ஊர் எல்லையைத் தாண்டிச் சென்ற போது வரதனுக்குத் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. இயன்ற மட்டும் அடக்கிப் பார்த்தான். அவனையும் மீறி அது பொங்கிப் பாய ஆரம்பித்துவிட்டது.

தன்னைச் சுற்றியிருந்த பிரயாணிகளையும் பொருட்படுத்தாமல் முகத்தைத் துண்டால் மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதான். அதற்குக் காரணம் அவனுக்குத் தெரிந்தது போலவும் இருந்தது. தெரியவில்லை போலவும் இருந்தது.

USHA
எல்லா ஸீலிங் விசிறிகளுக்கும் நீண்ட கால வாழ்வுக்காக டபிள் பால் பெயரிங்ஸ் உண்டு.
செயல் குணம் பாணி
'ஹயர் பர்ச்சஸ்' முறையிலும் கிட்டும்
உஷா
குணத்தை எடுத்துக் காட்டும் பெயர்
மிக அதிகமான விற்பனையுள்ளது
ஜே எஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிமிடெட்., கல்கத்தா-31.

உங்கள் எல்லோருக்கும்
எங்கள் மனமார்ந்த

புது வருஷ வாழ்த்துக்கள்!

★

பாபாலால் & கம்பெனி

(ஸ்தாபிதம்: 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்

சாட்டன் பஜார் :: மதருஸ் - 3

தந்தி: "NECKLACE" போன்: 2696

ஸ்பென்ஸர்ஸ் கிரைப் ஸிரப்

குழந்தைகளுக்கு சிறந்தது

இது ஸ்பென்ஸர் கம்பெனியாரின் உயர்ந்த தயாரிப்பு

Sole Distributors For
Spencer's GRIPE SYRUP
for Madras State:
THE DRUG HOUSE, SALEM - 1
Branch: MADRAS

20. கவிஞன் பிறந்த ஊர் !

“ எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே — அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே — இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ — இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ !”

என்ற பாரதியாரின் பாடலைப் பொது மேடைகளிலும் தெரு வீதிகளிலும் பாடிப் பாடி மகிழ்வதிலே நாம் குறையே வைப்பதில்லை. ஆனால் இந்தப் பாடலிலே சுடர் விடுகிற தேச பக்தியும் முன்னோர்களின் நினைவும் நம்மை விட ஆங்கிலேயர்களுக்குச் செயல் முறையிலே அதிகம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்! ஷேக்ஸ்பியரின் பிறந்த ஊராகிய 'ஸ்ட்ராட்போர்ட் அபான் ஏவன்' என்ற பழைய கிராமமே இதற்குச் சான்று.

'ஏவன்' என்பது ஒரு நதி. இந்த நதியின் குறுக்கே ஒரு பாலம். அதன் மருங்கில் அழகானதொரு கிராமம் 'ஸ்ட்ராட்போர்ட் அபான் ஏவன்' என்பது. நவீன நகரத்தின் புகைச்சலோ, அசுர வேகமோ புகுந்து பாதித்து விடாதபடி பழைய நாட்டுப்புற எழிலை அப்படியே பாதுகாத்துக் கொண்டு நிற்கிறது இந்த ஊர் !

பர்மிங்ஹமிலிருந்து இந்த ஊருக்குச் செல்கிற பாதை முழுதும் கண்ணுக்குக் குளிர்ச்சியான புல்வெளிகளும், மரஞ் செடி கொடிகளுமாக இருக்கிறது இயற்கை ! ஏவன் நதியின் பாலத்தை நெருங்கும்போதே ஒரு புண்ணியத் தலத்துக்குள் செல்வது போன்ற புனித உணர்ச்சி மனத்தை நிரப்புகிறது. இந்தக் கிராமத்தின் அழகு, நவீன மேனிப் பூச்சுக்களோடு காட்சி தருகிற பகட்டுக் கன்னியின் எழிலில்லை. பண்பாடும் சீலமும் நிறைந்த அழகியான ஒரு மூதாட்டியின் கனிவைப் போன்று மரியாதை யுணர்ச்சியை உண்டாக்குகிற வனப்பு அது! உலக மகா கவிஞனை ஷேக்ஸ்பியரை உலகுக்கே தந்து உண்மையிலேயே வான்புகழ் கொண்டு நின்றாலும், தெருக்களும் வீடுகளும் அன்றிருந்த அதே கிராமச் சூழ்நிலையோடுதானே இன்றும் திகழ்கின்றன.

இந்தக் கிராமத்தில் ஹென்லி வீதி என்று ஒரு தெரு. இந்தத் தெருவிலே யுள்ள ஒரு மாடி வீட்டிலேதான் ஷேக்ஸ்பியர் 1564ம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தை அந்த ஊரில் ஒரு வியாபாரி. அவருடைய தாய் பிறந்தது அங்கிருந்து சற்றுத் தொலைவிலுள்ள இன்னொரு சிறிய கிராமத்தில். இந்த இடங்களெல்லாம் இன்னும் நினைவு நிலையங்களாகக் கண்ணைக் கவர்ந்து கொண்டு நிற்கின்றன.

கவிச் சக்கரவர்த்தியாகிய 'ஷேக்ஸ்பியர்' 1616ம் ஆண்டில் இறந்து விடவே, அந்த ஊரைப் பார்ப்பதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இலக்கிய ரசிகர்கள் வர ஆரம்பித்தார்கள். முக்கியமாகக் கவிஞர் பெருமான் அவருடைய கையாலேயே நட்டு

வளர்த்த ஒரு மல்பெரி மரத்தைச் சென்று பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே வர ஆரம்பித்தார்களாம். அந்த மரம் இருந்த மனையின் சொந்தக்காரர் கூட்டத்தின் உபத்தரவம் தாங்கமாட்டாமல் அந்த மரத்தை வெட்டி வீழ்த்தி விட்டாராம்! என்றாலும் மக்களின் பக்தியும் உற்சாகமும் குறையவில்லை. 1769ல் 'டேவிட் காரிக்' என்ற புகழ் பெற்ற ஷேக்ஸ்பீரிய நடிகர் இந்தக் கிராமத்தில் கவிஞரின் நினைவு விழாவைக் கொண்டாடிப் பெரிய பிரசாரமே நடத்தினார். இது காரணமாக ஷேக்ஸ்பீயர் பிறந்த வீட்டின் புகழ் மேலும் அதிகரித்தது. அந்த வீட்டிலே வாழ்ந்த பிற்கால மனிதர்கள் இந்தப் புகழை வியாபார முறையில் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். ஆனாலும் மக்களின் உற்சாகம் குன்றவில்லை. இருநூறு ஆண்டுகளாக இந்த உற்சாகம் மேலும் மேலும் வளர்ந்தோங்கியது. 1847ல் இந்த வீடு விற்பனைக்கு வந்தது! இப்போது தனிப்பட்ட மனிதர் யாரும் இதைப் பார்க்கக் கூடாதென்றும், நன்கொடை திரட்டி அந்த நிதியிலிருந்தே இந்த வீட்டை வாங்கி ஒரு பொது உடைமையாகச் செய்து பாதுகாக்க வேண்டும் என்றும், கிளர்ச்சி செய்தார்கள் பொது மக்கள்! அதன் விளைவாக ஒரு பெரிய நினைவுக் கழகம் நிறுவப்பட்டது. ஷேக்ஸ்பீயர் பிறந்த வீட்டை விலைக்கு வாங்கியதோடு, அங்கிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள அவருடைய மனைவியின் வீட்டையும், 'ஒல்ட் டவுன்' என்ற இடத்திலுள்ள கவிஞரின் மகள் வீட்டையும், அங்கிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஷேக்ஸ்பீயரின் தாயார் வீட்டையும், கவிஞர் பிற்காலத்தில் வாழ்ந்த புதிய இல்லத்தையும் — ஐந்தையும் விலைக்கு வாங்கி இந்த நினைவுக் கழகத்தார் சிரிய முறையில் இன்றளவும் நிர்வகித்து வருகிறார்கள். இந்த வீடுகள் எல்லாம் கவிஞரின் காலத்தில் எந்த அமைப்பில், எந்தச் சுற்றுறவோடு இருந்தனவோ, அதே அமைப்பையும், சுற்றுறவையும் அதே பழைய நிலையில் சற்றும் மாறுதலின்றி அப்படியே பாதுகாத்து வருவது அதிசயமாக இருக்கிறது.

இந்த நினைவு நிலையங்களைச் சென்று பார்ப்பதற்குத் தனித்தனியே இரண்டு ஷில்லிங் கட்டணம் வைத்திருக்கிறார்கள். ஐந்தையும் சேர்த்துப் பார்க்கவேண்டுமென்றால், மொத்தமாக ஐந்து ஷில்லிங் கொடுத்து அனுமதிச் சீட்டு வாங்கிக் கொள்ளலாம்.

இந்த நிலையங்கள் தவிர, ஷேக்ஸ்பீயரின் பெயரால் ஒரு பெரிய நாடக மன்றமும் கட்டியிருக்கிறார்கள். எல்லா நவீன வசதிகளும் கூடியதாய், ஏவன் நதியின் கரையில் அந்த நதியின் தண்ணீருக்குள் தனது காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது, இந்த அழகான நாடகமண்டபம்! உள்ளேயுள்ள நாடகமேடையோ சுழல்கிற அரங்கம்! வருஷத்தில் ஏழெட்டு மாதங்கள் இங்கே ஷேக்ஸ்பீயரின் நாடகங்கள் நடந்த வண்ணம் இருக்கும்! ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளை ஒரு பெரிய திருவிழாவாகவே பல வாரங்கள் தொடர்ந்து கொண்டாடி இந்த மேடையிலே உலகப் புகழ் பெற்ற நடிகர்களைக் கொண்டு ஷேக்ஸ்பீயரின் நாடகங்களை நடத்திக் காட்டுகிறார்கள்! இந்த மேடையை ஒட்டி ஷேக்ஸ்பீயர் நூல் நிலையமும், அவருடைய நாடகக்காட்சிகளைச் சித்திரிக்கும் ஒப்பற்ற ஓவியங்கள் கொண்ட சித்திரக்காட்சிச் சாலை ஒன்றும் இருக்கின்றன!

நான் ஷேக்ஸ்பீயரின் வீட்டுக்குச் சென்ற போது திருவிழாச் சமயம். அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள். அந்த மக்களின் பக்தியும், அவர்கள் அங்குள்ள நினைவுப் பொருள்களைச் சென்று சென்று கண்ட ஆர்வமும், ஷேக்ஸ்பீயரின் காட்சி நிலையங்களோடு சேர்த்துப் பார்க்க வேண்டிய மற்றோர் அரிய காட்சியாகவே இருந்தது.

வீட்டினுள்ளே கவிஞர் பிறந்த அறை, தொட்டில், நாற்காலி, படுக்கை, கவிஞரின் நூலடுக்கு, அவருடைய குறிப்புக்கள், உருவத்தலை, சில முக்கிய கடிதங்கள் முதலியவற்றை அணியழகோடு வைத்திருக்கிறார்கள். வீட்டின் தோற்றமும் அமைப்பும் மிகப் பழமையானவை. மர வீடுதான். கதவுகளெல்லாம் குடுமிக் கதவுகள்! நம்மூர் மாதிரியே தாழ்ப்பாளும் அடிதண்டாவும் போடப்பட்ட கதவுகள் அவை!

அங்கே வந்துபோன மக்கள் எல்லாரும் ஒரு பெரிய புத்தகத்திலே கையெழுத்திட்டிருக்கிறார்கள். கழிந்த ஆண்டில் எந்தெந்த நாட்டிலிருந்து எத்தனைபேர் வந்துபோனார்கள் என்று ஒரு கணக்குப் பார்த்தேன்! 1959-ம் ஆண்டில் ஷேக்ஸ்பீயரின் வீட்டுக்கு வந்து போனவர்கள் மொத்தம் 95478! இந்தியாவி

ஷேக்ஸ்பீயர் பிறந்த அறை

ஷேக்ஸ்பீயரின் கல்லறை



விருந்து 989 பேர்! பாகிஸ்தானிலிருந்து 141, இலங்கையிலிருந்து 133 என்றும், ரஷ்யாவி லிருந்து 91 என்றும் கண்டேன்! இந்த எண்ணிக்கைக் கணக்கு பல இலக்கிய விமரிச னங்களை மனத்தில் எழுப்பியது. அவற்றை யெல்லாம் மனத்தினுள் விமரிசனம் செய்து கொண்டே, ஷேக்ஸ்பியரின் உடலை அடக் கம் செய்துள்ள கோவிலுக்குச் சென்றேன்.

'புனித 'டிரினிடி சர்ச்' என்ற கிறிஸ்து கோவிலில் பீடத்தின் வலப்பக்கத்திலே சல வைக் கல்லினாலான ஷேக்ஸ்பியரின் கல்லறை நிற்கிறது. அதற்கு அருகில் ஷேக்ஸ்பியரின் சிலையையும் ஓர் உருக்கமான ஆங்கிலக் கல்வெட்டையும் பார்த்தேன்.

நல்ல நண்பனே! ஏசுவின்
ஆணையாகச் சொல்லுகிறேன்,
இதன் கீழே புதைந்துள்ள
மண்ணைத் தோண்டிவிடாதே!
இந்தக் கற்களை இப்படியே விட்டுவைப்
பவர்கள் ஆசிர்வதிக்கப்படுவார்கள்!
என் எலும்புகளை அசைப்பவர்கள்
பாவிகள்!

ஷேக்ஸ்பியரின் கல்லறைக்கு அருகில் இந்த வரிகளைப் படித்ததும் கண்கள் கலங்கின. என்னைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான இலக் கிய அன்பர்கள் சிலையைக்கு முன்னே மண்டி யிட்டுத் தொழுது கொண்டிருந்தார்கள். உலகப் பெருங்கவிஞன் கண்மூடித் துயில்கிற இந்தப் புனித மண்ணை இரண்டு கையாலும் தொட்டுக் கண்ணில ஒற்றிக் கொண்டேன். அப்போது கம்பனும் வள்ளுவனும் பாரதியும் மற்றும் புலவர் பெருமக்களும் என் நினைவிலே சுழன்றார்கள்! அந்தப் புனித நினைவோடு, ''பதிவு நூல்'' வைத்துள்ள இடத்துக்கு வந்தேன். அந்தக் கோவிலிலே கிறிஸ்துவ தீட்சை பெற்ற குழந்தைகள், அங்கே அடக் கம் செய்யப்பட்ட மனிதர்கள் ஆகியோரின் விவரங்களைப் பதிவு செய்துள்ள புத்தகம் அது. அதைப் புரட்டினேன். ஷேக்ஸ்பியர் என்ற குழந்தை அந்தக் கோவிலிலே 'ஞானஸ்நானம்' பெற்ற தேதியின் குறிப்பும் செய்யுட் காலத்தின் மொழியில் எழுதியிருந்தன. இதைப் பார்த்துவிட்டு அவர் மரணம் அடைந்த நாளான 1616 ஏப்ரல் 16ந் தேதியைப் பார்த்தேன். ஆங்கிலத்திலே குண்டு குண்டாக எழுதியிருந்தது. ஷேக்ஸ்பியரின் உடலை அடக்கம் செய்து புனிதத் தண்ணீர் தெளித்த பாதிரியாரின் கைப்பட எழுதிய குறிப்பு அது! 'நான் ஷேக்ஸ்பியரின் மகன் வில்லியம் ஷேக்ஷ்பியர்—ஆண் மகன்' என்று எழுதி யிருந்தது! அதாவது இறந்தது ஆணா பெண்ணா என்று புத்தகத்தில் குறிப்பிட வேண்டும் அல்லவா? அந்த வழக்கப்படி 'ஆண் மகன்' என்று எழுதியிருந்தது. அதற்கு மேல் அந்த உடம்புக்கு உரிய மகானைப் பற்றி ஏதுமில்லை!

ஷேக்ஸ்பியர் எழுதிய ஒரு நாடக நூலில் கதாநாயகனைப் பற்றிய ஓர் உருக்கமான வர்ணனை வருகிறது! அதில் ''அவனிடம் இணைந்திருந்த இயல்பு நலன்கள் எப்படி யிருந்தன என்றால், இயற்கையன்னை தலை

ஷேக்ஸ்பியர் வீடு

நிமிர்ந்து நின்று 'இதோ ஓர் ஆண் மகன் என்று பெருமையோடு சொல்லுவாள்'' என்று கூறுகின்றது ஷேக்ஸ்பியரின் வர்ணனை. ''ஆண்மகன்'' என்று சொல்லக் கூடிய தகுதி வாய்ந்த மனிதர்கள் அத்தனை அபூர்வம்! சிந்தித்துப் பார்த்தால் ஷேக்ஸ்பியர் யார் என்பதை ஆண்மகன் என்ற அந்த ஒரே வார்த்தையில் உலகுக்கு உணர்த்திவிட்டது அப் பதிவுப் புத்தகம்.

இந்தக் கோவிலின் வெளிக் கதவிலே 'ஸாங்க்சுவரி நாக்கர்' என்று ஒரு கொண்டி இருக்கிறது. இங்கிலாந்திலுள்ள மிகப் பழமையான ஒருசில கோவில்களிலே இந்தக் கொண்டியைப் பார்க்கலாம். அந்தப் பழங்காலத்து வழக்கப்படி ஒருவன் எவ்வளவு பெரிய குற்றம் செய்தாலும் ஓடிவே வந்து இந்தக் கதவுக் கொண்டியைத் தொட்டு விட்டானானால் அவனை அந்த வினாடியிலிருந்து முப்பத்தேழு நாட்களுக்கு எந்த அரசனும் எந்தப் படையினரும் தொடக்கூடாது! அத்தனை பெருமை வாய்ந்த ''அபய கரம்'' அது! இந்தக் கொண்டியை இன்று ஒரு சரித்திரக் காட்சிப் பொருளாகப் பார்க்க லாமே தவிர, யாரும் அதை உபயோகிப்பதற் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு பேசா மல் நடந்து வந்து விட்டேன்!

கூரை வேய்ந்த ஷேக்ஸ்பியரின் மனைவி வீடும், பண்ணையார் வீடுகளைப் போலத் தோற்றம் தருகிற தாயார் வீடும், அங்கே வைத்துள்ள காட்சிப்பொருள்களும் படங் களும் ஆங்கில மக்களுக்குத் தங்களுடைய கவிஞனிடம் உள்ள பக்தியை நன்கு நிரூபிக் கின்றன! கவிஞரின் பெயரால் அமைந்துள்ள நாடக மேடையில் அவருடைய நாடகங்களே தினமும் நடைபெறுகின்றன. இது தவிர, ஷேக்ஸ்பியரின் நாடகங்களை நடிப்பதற்காக ஒரு நடிகர் பயிற்சிப் பள்ளியும் நடத்தி வருகி றார்கள். அவருடைய நூல்களை இலக்கிய முறையிலே படித்து அனுபவிப்பதற்கான

கல்விச்சாலை ஒன்றும் அங்கே இருக்கிறது! இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? ஆங்கில மக்கள் ஒரு கவிஞனை வழிபடுவதோடு நின்றுவிடாமல், ஆண்டுக்கு ஒரு முறை திருவிழாக் கொண்டாடுவதோடு திருப்தியடைந்துவிடாமல், அவனுடைய இலக்கியப் படைப்புக்களை மக்களிடையே பரப்புவதற்கு எத்தனையோ அறிவோடு திட்டமிட்டு ஏற்பாடுகளும் செய்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் நாடக மன்றத்தின் அமைப்பும், அங்கே நான் பார்த்த நாடகங்களும் மனத்தில் நிலையாக நிற்கின்றன. முக்கியமாக ஒருநாள் ஏற்பட்ட ஓர் அரிய நிகழ்ச்சியை நான் ஒருநாளும் மறக்க முடியாது.

அன்று "வெரோனாவின் இரண்டு பிரமுகர்கள்" என்ற நாடகம் நடந்தது. ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் இன்ப முடிவோடு கூடிய ஒரு கதை அது. நாடகம் ஆரம்பிப்பதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்பே எல்லாரும் போய் அவரவருக்கு உரிய இடங்களில் உட்கார்ந்து விட்டோம்! என்னருகேயிருந்த ஆங்கிலேயர் மட்டும் பதினைந்து நிமிஷங்களில் மூன்று முறை வெளியே போய் சிகரெட் பிடித்து விட்டு வந்தார்! ஏனென்றால் கவிஞரின் நினைவு மன்றமாகிய இந்தக் கொட்டகைக்குள் யாரும் புகைபிடிக்கக் கூடாது! நாடகம் ஆரம்பித்து விட்டாலோ யாரும் மத்தியிலே எழுந்து போகவோ, மத்தியிலே உள்ளே நுழைந்து வரவோ கூடாது. ஆகையால் இந்த ஆங்கிலேயர் நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே முடிந்தவரை சிகரெட்டுகளை ஊதித் தள்ளிவிட்டு வந்தார்!

நாடகம் ஆரம்பித்த விநாடியிலிருந்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசையவில்லை அவர். நாடகம் அத்தனை உயர்வாக இருந்தது என்பது ஒருபுறமிருக்க, அந்த ஆங்கிலேய நண்பரின் ரசிகத்தன்மையும் அத்தனை சிறப்பாக இருந்தது. 'இடைவேளை' வந்ததும் என் பக்கம் திரும்பிச் சிரித்துக் கொண்டே வெளியே போய் 'சிகரெட்' பிடித்துவிட்டு வந்தார். நாடகம் முடிந்ததும் என்னைப் பார்த்து அவரே பேச ஆரம்பித்தார். ஷேக்ஸ்பியருடைய நாடகத்தை நான் அனுபவித்த விதத்தை அவர் மிகவும் பாராட்டுவதாகச் சொல்லி என்னைப் பற்றி விசாரித்தார். எனக்கு அதெல்லாம் பெரிதாகப் படவில்லை. இத்தனை நேரம் அவர் சிகரெட்டை எப்படி மறந்திருந்தார் என்பதே ஆச்சரியமாக இருந்தது. "நாடகத்தை அனுபவித்ததைப் போலவே உங்களுடைய ஈடுபாட்டையும் நான் மிகவும் அனுபவித்தேன். இத்தனை நேரம் புகை பிடிக்காமல் நீங்கள் இருந்தது உங்களுடைய இலக்கிய மோகத்தையே காட்டுகிறது. நீங்கள் ஒரு கலாசாலை ஆசிரியரா? அல்லது பத்திரிகை விமர்சகரா? தயவு செய்து சொல்ல முடியுமா?" என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். "நான் கலாசாலைகளையே எட்டிப் பார்த்ததில்லை! பத்திரிகைகள் படிப்பதைத் தவிர இதுவரை ஒரு வரி சொந்தமாக எழுதியதில்லை! என்னுடைய தொழில் மோட்டார்களைப் பழுதுபார்ப்பது! ஆஸ்டின் மோட்டார்த் தொழிற்சாலையில் நான் ஒரு மெக்கானிக்" என்றார் அந்த நண்பர்! (தொடரும்)

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப் பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபகசக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4.50 : சிறிய பாட்டில் விலை ரூ. 2.25

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR - BOMBAY-14

மதராஸ் டிப்போ: 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

கொஞ்சிக் கோட்

பிலோ இருதய நாத்

சரித்திரப் புகழ் பெற்ற மாமன்னர் விக்கிரமாதித்தனைப் பற்றி நம் நாட்டில் எத்தனையோ கதைகள் வழங்கி வருகின்றன. வேதாளத்தை அடக்கியாண்ட வித்தை மன்னரான இவர் நாடாறு மாதம், காடாறு மாதம் என்று வாழ்ந்து வந்தாராம். நான் அவரைப் போல் மகாராஜாவாக இல்லாவிட்டாலும் ஒரு விஷயத்தில் மட்டும் அவரைப் போலவே என் வாழ்க்கை நியதியை நாட்டில் ஆறு மாதம், காட்டில் (காட்டு மக்களிடையே) ஆறு மாதம் என்று வகுத்துக் கொண்டிருக்கிறேன்; என் உத்தியோகத்திடையே எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தையெல்லாம் கள்ளங் கபடறியாத காட்டு மக்களிடையே கழிப்பதற்காகச் சென்று விடுவேன். அவர்களிடமிருந்து எத்தனையோ அதிசயமான விஷயங்களைச் சேகரித்துக் கொண்டு மறுபடியும் நகரத்துக்குத் திரும்பி விடுவேன்.

இப்படி வருடத்தின் பாதி நாட்களைக் காட்டு மக்களிடையே கழித்துவிட்டு வரும் என்னை முதலில் வரவேற்பது என் வீட்டுக்காரிதானே. அவளிடம்தான் நான் முதலில் என் காட்டு அனுபவங்களைச் சொல்லுவேன். திறந்த வாய் மூடாது கேட்டுக் கொண்டிருக்கும் அவள் வியப்பினாலும் திகைப்பினாலும் திக்குமுக்காடிப் போய்ச் சில வேளைகளில் நான் சொல்லும் அனுபவங்களை நம்பக் கூடமாட்டாள். காட்டுவாசிகளிடமிருந்து சேகரித்து வந்துள்ள பொருள்களையும் புகைப் படங்களையும் அவள் முன்னால் பரப்பிவைத்து நம்பச் செய்வதற்குள் பெரும் பாடாகிவிடும்.

ஆதிவாசிகளிடம் போகும்போது ஒரு தடவை நம்மோடு இவளையும் அழைத்துப் போகவேண்டுமென்று நினைத்துக் கொள்வேன். ஆனால் அதற்கு வாய்ப்பில்லாமல் நாட்கள் போய்க் கொண்டிருந்தன.

ஒரு ஞாயிற்றுக்கிழமை என் மனைவி தலை முடியைச் சீவிக் கொண்டை போட்டுக் கொள்ளுவதில் முனைந்திருந்தாள். ஆதிவாசிகளைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த என்னை அவள் செய்கை கவர்ந்தது. ஏதோ ஒருவிதக் கொண்டை போட முயன்று முடியாமல் தோல்வியினால் எரிச்சலடைந்து சீப்பை வீசி எறிந்துவிட்டுக் கருங்குழலை அள்ளிச் செருகிக் கொண்டு எழுந்திருக்கலானாள். எனக்குச் சிரிப்பு வந்தது. என் சிரிப்பைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

''கொஞ்சிக் கோட் போட்டுக் கொள்ளத் தெரியுமா உனக்கு?'' என்றேன் நான்.

''இப்ப ஒண்ணும் கொஞ்ச வேண்டாம், நீங்க'' என்று முகம் சிவக்கக் கூறிவிட்டுச் சோப்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்ற அவள் கையைப்பற்றி நிறுத்தினேன்.

''கொண்டை முடிய வரவில்லை யென்பதற்காக இத்தனை கோபப்படுகிறாயே? தோதுவப் பெண்கள் போட்டுக்கொள்ளும் கொண்டையைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையே. அது பார்க்க ரொம்ப அழகாக இருப்பதோடு மட்டுமல்ல; அதைப் போட்டுக் கொண்டால் ஒரு வாரம் வரையில் கூடக் கலையாமல் அப்படியே இருக்கும். அவர்கள் போட்டுக் கொள்ளும் அந்தக் கொண்டைக்குத்தான் 'கொஞ்சிக் கோட்' என்று பெயர்'' என்றேன்.

பெண்களின் கோபம் தணிய வேண்டுமானால் நகை, உடை, அலங்காரம் இவைகளைப் பற்றிப் பேசினால் போதும் என்பது தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே. உடனே கொஞ்சிக்கோட்டைப் பற்றி என்னைக் கெஞ்சத் தொடங்கி விட்டாள் என் மனைவி.

வெகு நாட்களாக அவளையும் என்னுடன் காட்டுவாசிகளிடையே அழைத்துப் போக வேண்டுமென்று எண்ணியிருந்ததை இந்தக் கொஞ்சிக்கோட் பூர்த்திசெய்து வைத்தது. கோத்தப் பெண்கள் போட்டுக்கொள்ளும் கொஞ்சிக்கோட் என்ற கொண்டையைப்பற்றி நான் விளக்குவதைக் காட்டிலும் இவளையே அவர்களிடம் கொண்டுவிட்டு விடலாமென்று தீர்மானித்தேன்.

கோத்தகிரி — அக்கால் பகுதியில் வாழும் பூர்வீகக் குடிகள் என்னிடம் மிகுந்த அன்புடையவர்கள். என்னிடம் ரொம்ப மதிப்பும் விசுவாசமும் உடையவர்கள். நீலகிரியில் இவர்கள் ஏழு கிராமங்களில் வாழ்கிறார்கள். கோத்தகிரியிலிருந்து அக்கால் என்ற இடம் மலையுச்சியிலிருந்து அதல பாதாளத்துக்கு இறங்குவது போலிருக்கும்.

நான் என் மனைவியுடனும் குழந்தை பிரேமாவுடனும் கோத்தகிரி அக்கால் பகுதி கோத்தர்களின் மந்துகளை நோக்கிப் பயணமானேன். எங்களைக் கண்டதும் கோத்தர்கள் வந்து சூழ்ந்துகொண்டார்கள். சந்தோஷ மிகுதியால் ஆர்ப்பரித்தார்கள். என் மகள் பிரேமா கோத்தக் குழந்தைகளுடன் குலவி விளையாடச் சென்றுவிட்டாள். என் மனைவிக்குத் தோதுவப் பெண்கள் தாங்கள் போட்

கொண்டைக்கு வேண்டிய பொருள்கள்

கொண்டை அலங்காரத்துடன் கோத்தப் பெண்கள்

டுக் கொள்ளும் 'கொஞ்சிக்கோட்' என்ற கொண்டையை அவளுக்கு விளக்கிக் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கொண்டையான கொஞ்சிக்கோட் பார்க்க அழகாக இருக்கும். இவர்கள் மாதத்தில் ஏழு நாட்கள் தனிக் குடிசையில் இருக்கும் போது இந்தக் கொண்டையைப் போட்டுக் கொள்ளுவதில்லை. மற்ற வேளைகளில் எல்லாம் கொஞ்சிக்கோட் கோலத்துடன் காணப் படுவார்கள். இந்தக் கொண்டைக்கு எவ் விதமான பூவும் வைப்பதில்லை. 'மாண்டுல்' என்ற ஒருவிதக் காட்டுச் செடிகளின் இலைகளை ஒன்ருகச் சேர்த்து ருல் தடி போலக் கட்டிய பிறகு கொண்டைக்கு அளவாக வெட்டி அதன் மீது துணியைச் சுற்றுகிருர்கள். துணி சுற்றிய 'மாண்டு'வை ஒரு முனையில் ஓர் அங்குல அளவுக்கு வளைக் கின்றனர். இதன் பிறகு இந்த மாண்டுல் இன்னட மங்கையர்களின் கூந்தலின் கீழ் வைத்து அதைக் கூந்தலோடு சேர்த்துச் சுருட்டிக் கொண்டே வருகிறார்கள். பிடரியின் பின்புறமாக அதைச் சேர்த்து வளைத்து முடியுடன் கொண்டை ஊசியால் குத்தி விடு கின்றனர். கொஞ்சிக் கோட் என்ற இந்தக் கொண்டை போடுவதற்குத் தலையில் நன்ருக எண்ணெய் தடவிச் சீவவேண்டும். எண்ணெய்க்குப் பதில் வெண்ணெயைத் தடவிக் கொண்டை போடுபவர்களும் உண்டு.

என் மனைவிக்கு அவர்கள் கொஞ்சிக் கோட் போட்டு விட்டார்கள். அக் கொண்டை தன் கழுத்து நரம்புகளை யெல்லாம் இழுப்பதாகவும் வலி எடுப்பதாகவும் முதலில் கூறிய என் மனைவி பிறகு அதை எப்படி லாகவமாசப் போடுவ தென்று கற்றுக் கொண்டாள். கொஞ்சிக்கோட் கொண்டை போட்டுக் கொள்ளக் கற்றுக் கொண்டதும் கோத்தர்கள் எல்லாம் தங்களது வாத்தியங்களுடன் பாட்டுப் பாடி மகிழ்விக்க உட்கார்ந்து கொண்டார்கள். முதன்முதலில் நீலகிரி வாழ் மலைவாசிகளான தொதுவர்களைப்பற்றி இந்திய மொழியில் நீண்ட கட்டுரை எழுதியது நான் தான். என் கட்டுரையின் பயனுகத்தான் அரசாங்கம் அவர்கள் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொண்டு ரஸ்தா, குடி தண்ணீர், மருத்துவ விடுதி, கல்விச்சாலை ஆகிய வசதிகளை எல்லாம் இந்த ஆதிவாசிகளுக்குச் செய்து கொடுக்க முன் வந்தது. ஆகவே என்னிடம் இவர்களுக்கு அளவிலாப் பக்தி. தங்கள் நன்றியைத் தெரிவிக்க என்னைப்பாராட்டி ஒரு பாட்டையே கவனம் செய்திருந் தார்கள். அதை என்னிடமே பாடிக் காட்ட விரும்பிப் பாடலானுர்கள்.

கோவெ ஆமெ எத்துமேரெ, குறுகிரெ நடதோ
கோதுநேர் வினெ, நம்பிரேனெ, கோக்கா
வெகச்சோ
படிப்பெ-ஏனெ கலாதாமெ, பரிதேசி ஆனுமா
முயற்சியெனெ, இல்லாதேனெ முட்டாள்
ஆனுமா
பிலோமெ இருதிய நாதனெ வந்திற்றெ.
நாயந்தினெ வெந்தாளு,
நாயந்தினெ வெந்திற்றெனெ, தேனைச்சிரெ
ஒளு
கோசிதெனெ, பெருமையினெ, பேப்பர்
கின்னாளு
பேப்பெரெனெ கின்னானெகெ இருதியநாதே

காட்டிலஉலகமேதெரியாதிருந்தஎங்களிடம் பிலோ இருதயநாத் வந்தார். எங்களுடன் பழகினுர். எங்களைப் பற்றிய விஷயங்களைக் கொண்டுபோய்ப் பேப்பர்களில் தந்து எங்களை உயர்த்தி எங்கள் அறியாமையைப் போக்கினுர் என்பது இந்தப் பாட்டின் பொருள்.

பாட்டும் நடனமும் முடிந்ததும் நாங்கள் அவர்களிடம் விடைபெற்றுத் திரும்பினேம்.

இப்போதெல்லாம் என் மனைவிக்குக் கொஞ்சிக்கோட் கொண்டை போட்டுக்கொள்ளுவது என்ருல் ரொம்பப் பிரியம்.

அதுமட்டுமல்ல ; தன் தோழிகளிடமெல்லாம் 'இப்போது நம் நகரத்துக் கடைகளில் கொண்டை போட்டுக்கொள்ள விற்கும் பலவிதமான கறுப்பு நூல் சுற்றிய இண்டுகள் எல்லாம் கோத்தர்களின் இந்தக் கொஞ்சிக் கோட்டிலிருந்து உண்டானதுதான் என்று அடித்துப் பேசித் தன் ஆராய்ச்சித் திறனை ஸ்தாபித்துக் கொள்ளுவதிலும் முனைந்திருக்கிருள்.

தாயே! எனக்கு மோட்சம் வேண்டாம், பெரும் புகழும் வேண்டாம், அறிவு வேண்டாம், இன்பமும் வேண்டாம். மேலும் பல பிறவிகள் தான் வேண்டும்—உனது நாமங்களையே ஜபித்துக் கொண்டிருப்பதற்காக.

— ஸ்ரீ ஆதிசங்கரர்.

தனிப்பட்ட சேவை

நீண்ட நாள் அனுபவத்தின் பயனால்
ஏற்பட்ட தனித்தன்மை திறமையினால்
பஞ்சாப் நேஷனல் பாங்கு இன்று நம்
நாட்டில் ஒரு உன்னத நிலையை வகித்து
வருகிறது. இக் காரணத்தினால்தான்
தனிப்பட்ட சேவையை எல்லோருக்கும்
அளித்து உதவத் தயாராக இருக்கிறது.

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களையும் ஏற்றுச் செய்யப்படும்.

தி பஞ்சாப் நேஷனல் பாங்கு லிட்.,

ஸ்தாபிதம்: 1895

தலைமை ஆபீஸ்: புது டில்லி

கிரைப் ஸிரப் - ஐ. டி. எல்.

சிசுக்களின் ஜீரணக் கோளாறுகளை
நீக்கும் பிரபல நிவாரணி.
உடனே குணம் தெரியும்.

**குழந்தைகள் விரும்பிச்
சாப்பிடக் கூடியது**

தொடர்ந்து உபயோகித்தாலும்
ஹானி விளைவிக்காதது.

ஒரு ஐ. டி. எல்.
தயாரிப்பு

தயாரிப்பவர்கள்:
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் &
டெஸ்டிங் லாபரேட்டரி லிட்.,
மல்லேஸ்வரம், பெங்களூர்-3.

விற்பனை டிப்போக்கள்: 35/37, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.
71/4, ஆர்க்காட் ஸ்ரீனிவாஸாசார் தெரு, பெங்களூர்-2.
விற்பனை ஏஜெண்டுகள்: மெஸர்ஸ். கர்நாடக் & டெக்கான் ஏஜன்ஸீஸ், ஹூப்ளி,
மெஸர்ஸ். டெக்கான் ட்ரக் ஏஜன்ஸி, ஹைதராபாத் (டெக்கான்)

HITZ-J TM

படியளந்தான் மலை

பி.எஸ்.ராமையா

திருக்குளத்தில் முழுகி எழுந்து கரை யேறி, பரந்தாமன் தலையைத் துவட்டித் துவாலையை முறுக்கிப் பிழிந்து கொண்டே தம்மைச் சுற்றிப் பார்த்தார். அவரைச் சூழ்ந்திருந்த இயற்கைக் காட்சியின் கம்பீரமான அழகு அவரைச் சிலிர்க்க வைத்தது.

அந்தத் தாமரைக் குளம், அருகில் நிமிர்ந்து நின்ற படியளந்தான் மலை என்ற குன்று, அதன் உச்சியிலிருந்த சிறிய கோயில், குளத்தின் எதிர்க் கரைப் புறத்திலிருந்து மலை மேல் ஏறிச் செல்லும் படிக்கட்டு, மலையை அடுத்துச் சிதறிக் கிடந்த குத்துக் கல்லும் குண்டுப் பாறையுமான கரட்டுத் துண்டுகள், அவற்றுக்கு அப்பால் கம்பீரமாக நின்ற மலையும் அதன் தொடரும்; இடையிடையே ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் யாவும் ஒருபுறம்.

மற்றொரு புறத்தில் இடமிருந்து வலக்கோடி வரை நீண்டு வளர்ந்திருந்த தென்னந் தோப்புகள்; மரங்களின் இடைவழிகளில் தெரிந்த விளைநிலப் பரப்பு; அதில் அங்கங்கே பச்சைக் குப்பல்களாகத் தோன்றிய கொடிக்கால்கள். நிலங்களில் அங்கங்கே சிலர் பயிர்த் தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

இன்னொரு புறம் சோலையாகத் தோன்றிய மரக் குப்பல்களினிடையில் அமைந்திருந்தது படியளந்தான்புரம் கிராமம். கை ஓடு, கள்ளிகோட்டை ஓட்டுக் கூரைகள், காரைக்கட்டு மாடிகள் எல்லாம் மரங்களினிடையில் ஒளிந்து மறைந்து கண்ணில் பட்டுக் கொண்டிருந்தன.

நான்காவது திசையில் சிறிது தூரத்தில் ஆற்றின் கரையும் அதன் மேல் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களின் வரிசையும் இருந்தன. கரையை அடுத்து ஏழெட்டுக் குடிசைகள் அடங்கிய ஒரு சிறிய பாடியும் இருந்தது.

அழகு கொழித்த அந்த இடத்தைத் தேடி வந்து பகவான் கோயில் கொண்டிருந்தார் என்று தோன்றியது பரந்தாமனுக்கு.

படியளந்தான் மலையைப் பற்றியும், அதன் உச்சியில் எழுந்



தருளியிருந்த பெருமானைப் பற்றியும் இப்படியொரு கதை அங்கு வழங்கி வருகிறது.

அந்தக் கிராமத்தில் வாழ்ந்த ஓர் ஏழை உழவன் கீல் பிடிப்பு நோயினால் மிகவும் துன்புற்றான். அவன் தினமும் உள்ளூர் ஆலயத்துக்குச் சென்று தொழுது வராமல் கூழும் குடிப்பதில்லை. கீல்வாதம் அவனைக் குடிசைக்குள் முடக்கி வைத்து விட்டது. அவன் 'உன்னை வந்து காணாமல் நான் உண்ணப் போவதில்லை' என்று தெய்வத்திடம் சொல்லி விட்டு, நோன்பு பிடித்து வீட்டில் படுத்துக்கிடந்தான். மூன்றாம் நாள் இரவில் யாரோ ஒருவர் அவன் கனவில் தோன்றி, "பக்கத்திலிருக்கும் குன்றின்மேல் ஏறி அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமானைப் போய்க் கண்டு துதித்து வணங்கு. உன் துன்பம் தீரும்" என்றார்.



காலையில் அவன் படுக்கையிலிருந்து எழுந்து விட்டான். ஒரு கைத்தடியின் உதவியுடன் அவன் காலை இழுத்து இழுத்து வைத்து நடந்து மலையடிவாரத்திலிருக்கும் குளத்தையடைந்து அதில் மூழ்கினான். உடலிலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட மலையேறப் புறப்பட்டான். இடது முழங்காலை மடக்கவும், நீட்டவும் இயலாமல் கிடந்தவன் எப்படி மலையேறுவான் என்று பார்க்க ஊரே வந்து கூடி விட்டது. என்ன ஆச்சரியம்! அவன் தன் காலில் ஏதுமே ஊனம் இல்லாதவன் போல் மடமடவென்று படிகளில் ஏறி உச்சியை அடைந்து விட்டான். அந்த அற்புதத்தைக் கண்டு சிலிர்த்த ஊராரும் அவன் பின்னால் பாய்ந்து ஏறி மலை உச்சியை அடைந்தார்கள். அங்கே எழுந்தருளியிருந்த பெருமானுக்கு ஆலயம் ஒன்று கட்டப்பட்டது.

வழக்கில் மலை என்றாலும் அது ஒரு சிறிய குன்றுகூட அல்ல. எண்பது எண்பத்தைந்தடி உயரமுள்ள ஒரு கற்பாறை அல்லதுகரடு என்றுதான் சொல்லலாம். அடிவாரத்திலிருந்து அதன் உச்சிக்குச் சரியாக நூற்றெட்டுப்படிகள். ஒவ்வொரு படியும் சரியாக ஒரு சாண் உயரம். ஒரு சாண் என்பது அங்கே ஒன்பதேகால் அங்குலம். மலைமேல் உள்ள மூர்த்தியின் கைச்சாண் அளவும் சரியாக ஒன்பதேகால் அங்குலம்தான்! அவ்வளவு பெரிய சிலை.

பெருமானே தன் சாண் அளவை வைத்து, அந்தப் படிகளைச் செதுக்கிக் கட்டு அமைத்ததாகவும் அதனால்தான் அதற்குப் படியளந்தான் மலை என்று பெயர் வந்ததென்றும் தலக் கதை முடிகிறது.

படியளந்த பெருமான்! அகில சரா சரங்களுக்கும் படி அளக்கும் ஐயன்.

பரந்தாமனின் உடல் மீண்டும் ஒரு முறை சிலிர்த்தது. அவர் உள்ளம் நெகிழ்ந்து உருகியது.

பரந்தாமன் பதவியிலிருந்து பென்ஷன் பெற்று விலகி மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தன. பெண்கள், பிள்ளைகள் எல்லாம் அவரவர் தனியாகக் குடும்பம் கட்டி வளர்த்துப் பெருகிக் கொண்டிருந்தார்கள். பரந்தாமன் மனைவியுடன் தனியாக, 'ஜோடி'யாக வாழ்ந்தார். திடீரென்று வலது முழங்காலில் கீல் பிடிப்புத் தோன்றியது.

பரந்தாமன் டாக்டரிடம் போனார். அவர் முதலில் உள்ளுக்கு மாத்திரையும், வெளிக்குத் தடவக் களிம்பும் கொடுத்தார்; பலனில்லை. பிறகு ஊசி போட்டார். ஊஹூம். குணம் காணவில்லை.

அந்த நிலைமையில்தான் நண்பர் வந்து பரந்தாமனிடம் படியளந்தான் மலையைப் பற்றிச் சொன்னார். "அந்த ஊருக்குப் போய் வரும் ரயில், வண்டிச் செலவுகளும், ஓர் அர்ச்சனை அல்லது கற்பூரச் செலவும்தான். வேண்டுமானால் ஆலயத்து வாசலில் வைத்திருக்கும் உண்டியலில் உங்கள் மனம் இசையும், உங்கள் சக்திக்கு இயன்ற பொருளைப் போடலாம். கட்டாயமில்லை" என்றார்.

பரந்தாமன் மறுநாளே புறப்பட்டார். அவருடைய மனைவி அவரைத் தனியே போகவிட விரும்பவில்லை. "இந்தக் காலுடன் நீங்கள் எப்படி ரயில் ஏறி இறங்கி நடந்து போய் வருவீர்கள்? நானும் வருகிறேன்" என்று கெஞ்சினாள். அவர், "உன்னை அழைத்துக் கொண்டு போவதற்கு என் தெய்வ நம்பிக்கையில் இடம் போதாது, கெட்டியில்லை என்றுதான் பொருள். எப்படிப்பட்ட சிரமம் வந்தாலும் சரி. நான் மட்டும்தான் போய் வந்தாக வேண்டும்" என்று சொல்லி விட்டுத் தனியாகத்தான் கிளம்பினார்.

பஸ், ரயில், மாட்டு வண்டிகளில் ஏறி இறங்குவதற்கு அவர் பட்டபாடு அந்தத் தெய்வத்துக்குத்தான் தெரியும். அவ்வளவையும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்து அவர் அன்று காலை ரயிலில் வந்து இறங்கி மூன்று மைல் மாட்டு வண்டிப் பயணம் செய்து படியளந்தான் மலையை அடைந்தார்.

பரந்தாமன் தலையைத் துவட்டித் துவாலையை முறுக்கிப் பிழிந்து இடுப்பில் ஈரவேட்டியின் மேலேயே இறுக்குப் பட்டையாகச் சுற்றிக் கட்டி, கரைமேல் வைத்திருந்த சிறிய தோல் பையையும், கைத்தடியையும் எடுத்துக் கொண்டு நிமிர்ந்தார்.

அப்போதுதான் அந்தப் பையன் அவரை நோக்கி ஓடி வந்தான். ஆறு ஏழு வயதிருக்கும். மண் சேறு படிந்த உடல். உதறிவிட்ட வைக்கோல் கூளம் மாதிரி காட்சியளித்த தலைமயிர். ஒன்றரைச் சாண் அகலமுள்ள ஒரு கந்தல் துணியை இடையைச் சுற்றிக் கட்டியிருந்தான். அந்தத் துணியின் நிறம் என்னவென்பதை ரஸாயன ஆராய்ச்சி செய்துதான் கண்டுபிடிக்க இயலும். அவன் கையில் ஒரு மெல்லிய காட்டுக் குச்சி இருந்தது.

அவன் அவர் முன்னால் வந்து நின்று கும்பிட்டு, "அதோ தெரியுதே அதுதான் சாமி அங்காளம்மா அவங்க குடிசை" என்று கூறினான்.

பரந்தாமன், "அங்காளம்மாவா? யார் அது? நீ யார்?" என்று கேட்டார்.

பையன், "பாவம்! அவங்களும் அவங்க மூணு பிள்ளைங்களும் கூழு குடிச்சு நாலு நாட்களாவுது சாமி. அந்தம்மா புருசன் சொல்லாமே எங்க்கேயோ போயிட்டாரு. அவங்களுக்கும், சின்னப் பிள்ளைக்கும் ரெண்டு நாளாக்காய்ச்சல். அங்காளம்மா நேத்துரவுலே கனவு கண்டாங்களாம். அவங்களுக்குப் பணம் கொடுக்கறதுக்குச் சாமி யாரையோ அனுப்பறேன்னு கனவுலே வந்து சொல்லிச்சாம். அப்புறம் யாரோ ஒரு பெரியவரு கையிலே ஒரு தோல் பையும் தடியும் எடுத்துக்கிட்டுக் குடிசை வாசலுக்கு வந்து 'இந்தா. உன் பிள்ளைங்களுக்குச் சோறு போடு. சாமி அனுப்பின பணம்'னு சொல்லிக் குடுத்துட்டுப் போனாராம். நான் ஆடுங்களை மேய்க்கறதுக்கு ஓட்டிக்கிட்டு வரப்போ, வழியிலே பாத்து அவங்க மகன் சித்தான் பய சொன்னான். 'பாத்துக்கிட்டே இரு. இன்னிக்கி எங்களுக்குச் சாமி பணம் அனுப்பப் போறாரு. எங்கம்மா சோறாக்கப் போறாங்க'ன்னான். நான் நம்பல்லே. ஆடுங்களை ஓட்டிக்கிட்டு இப்படி வந்தப்போ உங்களைப் பாத்தேன். அதோ மேயுது பாருங்க ஆடுங்க. அவங்க அம்மா கனவுலே வந்தாருன்னாங்களே, அவரு மாதிரியே இருந்தீங்க நீங்க. சாமிதான் உங்களை அனுப்பியிருக்காருன்னு தெரிஞ்சுக்கிட்டேன். உங்களைக் கூட்டிப்போக ஓடியாந்தேன்" என்றான்.

பரந்தாமன் உள்ளத்தில் உண்மை பளிச்சிட்டது. தம்மைக் கருவியாகக்

நீங்கள் தயங்கத்

தேவையில்லை

எப்போதும்



விரும்பி

வாங்கலாம்

வாழ்வும், அழகும் அரிய பொக்கிஷம். அவை பணயம் வைப்பவை அல்ல. ஒருவேளை நீங்கள் உங்களது அதிர்ஷ்டத்தைப் பார்க்க விரும்பினால் எதை வேண்டுமானாலும் சோதனைக்கு உட்படுத்துங்கள்; ஆனால் உங்கள் அழகைமட்டும் பலியிட வேண்டாம். ஒருநாள் உங்கள் அழகின் பொலிவை அஜாக்கிரதையால் இழந்துவிட்டால் பிறகு வாழ்நாள் முழுவதும் அழுது அழுது வருந்தினாலும் முன்பு திகழ்ந்த அழகைத் திரும்பப் பெறவே முடியாது. ஆப்கன் ஸ்னோ அழகு சாதனங்கள் இருக்கும்போது கவர்ச்சி மிகுந்த தோற்றத்தைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டியதில்லை. அவைகள் சிறந்தவை... நம்பகமானவை...விலையிலும் மிதமானவை...

ஆப்கன் ஸ்னோ

அழகு சாதனங்களை

ஈ. எஸ். படான்வாலா, பம்பாய் - 27 (இந்தியா)

SHIMADA

VACUUM FLASK

"உங்கள் நண்பன்"

உலகதரச் சிறப்புடன் சீரோடு
இந்தியாவில் தயாரிக்கப்படும்
வாக்கூம் பிளாஸ்க்குகளின்
உபயோகங்கள் எண்ணிலடங்கா.
கடும் உழைப்பிற்குப் பின்
புத்துணர்ச்சிபெற உல்லாசப்
பயணத்தில் உவகைபெற,
நோயாளிகள் புதிய ஊக்கம்பெற,
கொட்டும் பனியிலும் வாட்டும்
வெயிலிலும் சூடான அல்லது
குளிரான பானம் பரிமாற-
படிக்கும்போதும், பல சிக்கலான
பிரச்னைகளில் மூழ்கியிருக்கும்போதும்
உங்களுக்குச் சேவை செய்ய,
உற்றதுணையாய்-சேவகனாய்-
உதவுவதும்-எங்கும் எப்போதும்
உபயோகத்திலிருப்பதும்-அன்றாட
வாழ்வில் நீங்காத ஓர் அங்கமாய்
விளங்குவதும் - ஷிமாடா.

முழு சோதனைக்குப் பின் வெளிவரு
வது அதன் தனிச் சிறப்பு. அந்த
நண்பனைப் பெறுவது உங்களு
க்குச் சிறப்பு. அதற்குச் செல
விடும் ந. பை. ஒவ்வொன்றும்
பயனுள்ளது என்பது
எல்லோருக்கும் சிறப்பு.
மறவாதீர்கள் உங்கள்
நண்பனை
ஷிமாடாவை.

இந்தியாவில்
தயாரிப்பவர்கள் :
ஷிமாடா கிளாஸ் &
பிளாஸ்க் பாக்டரி
பிரை விட்.
சென்னை—25

HPS-TAM

கொண்டு படியளந்த பெருமான் ஓர் அற்புதத்தை நிகழ்த்த வழி செய்திருக்கிறான்! அந்தத் திக்கற்ற ஏழைக் குடும்பத்துக்குப் படியளக்கத் திட்டம் செய்திருக்கிறான்.

''வா!'' என்று கையை விசிக் காட்டி விட்டுப் புறப்பட்டார். என்ன அதிசயம்! ஒரு மணி நேரத்துக்கு முன் மாட்டு வண்டியில் ஏறி இறங்க முடியாமல் துடிக்க வைத்த முழங்கால் நோய் திடீரென்று விட்டு விலகி விட்டதா? அந்தப் பையன் அவரைப் பின் தொடர்ந்து ஓடவேண்டி யிருந்தது.

ஆற்றின் கரைப்பாடியில் முன்னால் இருந்தது தான் அங்காளம்மாவின் குடிசை. மூன்றுஅடி உயர மண் சுவரின் மேல் கொம்பு நட்டு வரிச்சிகட்டி தென்னங்கிடுகு வேய்ந்த கூரையின்மேல் வைக்கோல் பரப்பியிருந்தது. ஓலையும், வைக்கோலும் மக்கி நைந்து மாவாக உதிரும் நிலையில் இருந்தன.

குடிசையின் வாசலில் ஏழெட்டு வயதுப் பையன் ஒருவன் நின்றிருந்தான். அருகில் ஒரு நாலு வயதுப் பையன் புழுதியில் உட்கார்ந்து கேவிக் கேவி அழுது கொண்டிருந்தான்.

பரந்தாமனும் அந்த ஆட்டுக்காரப் பையனும் குடிசையை அடைந்தபோது, பெரிய பையன், ''வாங்க சாமி, எங்க ஆத்தா உள்ளாறத்தான் இருக்காங்க. ஏய், ஆத்தால்!...உள்ளே வாங்க'' என்று கூவிக் குடிசையின் புறம் ஓடினான்.

பரந்தாமன், ''இந்தா பையா நில்லு. இப்படி வா'' என்று அவனைத் தடுத்து நிறுத்தித் தோல் பையைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்தார்.

குடிசைக்குள்ளிருந்து, ''சித்தான்! யாருடா அது?'' என்று ஒரு நைந்த பெண் குரல் வந்தது.

சித்தான், ''நீ கனவுலே கண்டேன்னியே அவுங்கதான் போலேருக்கு ஆத்தால்'' என்று கூவினான்.

பரந்தாமன், ''அவர்களை யெல்லாம் ஏன் தொந்தரவு செய்கிறாய்? இந்தா இதைக் கொண்டுபோய் உன் தாயிடம் கொடுத்து உங்களுக்கெல்லாம் சோறு சமைத்துப் போடச் சொல்லு'' என்று நோட்டை அவனிடம் நீட்டினார்.

குடிசைக்குள்ளிருந்து பஞ்சத்தில் அடிபட்ட தோற்றத்துடன் ஒரு பெண் பிள்ளை கையில் ஒரு பெண் குழந்தையை ஏந்திக் குனிந்து நிமிர்ந்து வெளியே வந்தாள். பரந்தாமனைக் கண்டவுடன் அவள், ''ஆமாண்டா! சொப்பனத்துலே கண்டவரேதான். படியளந்தான் சாமி பொய் சொல்லுமா?'' என்று கூவிக் குழந்தையை அவர் காலடியில் கிடத்தி அவளும் அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள்.

பரந்தாமன் தடுமாறிக் கால்களைப் பின்னால் இழுத்துக் கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் துளித்தது. அவர், ''என்னை ஏன் அம்மா கும்பிடுகிறாய்? அதோ கோயில் கொண்டிருக்கிறானே அந்தப் பரமனைக் கும்பிடு'' என்று சொல்லிவிட்டு விறுவிறென்று நடந்தார்.

அதே வேகத்தில் சென்று அவர் நூற்றெட்டுப் படிகளையும் ஏறிக் கோயிலை அடைந்து படியளந்த பெருமானைக் கண் குளிரக் கண்டு நெஞ்சிலும் நிறைத்துக் கொண்டார். ஓர் அர்ச்சனை நடத்தி வைத்தார். உண்டியிலும் ஒரு பத்து ரூபாய் நோட்டைச் செலுத்தி விட்டுக் கீழே இறங்கினார்.

தெய்விக அற்புதம் நிகழ்ந்துவிட்டது. பெரிய டாக்டரினால் தீர்க்க இயலாத நோய் ஒரு நொடியில் விட்டு விலகி விட்டது. அதுமட்டுமல்ல; தெய்வம் அவரைக் கருவியாகப் பயன்படுத்தி ஓர் ஏழைக் குடும்பத்துக்கும் படியளந்து விட்டது.

பரந்தாமன் தமது நோய் மறைந்த அற்புதத்தைப் பற்றி ரயிலில் கண்டவர்களிடமெல்லாம் சொன்னார். தமது மனைவியிடம் கதை கதையாகச் சொன்னார். அந்தத் தெருவில் அவருக்கு அறிமுகமானவர்களிடமெல்லாம் சொன்னார். மண்ணெண்ணெய் வண்டியைத் தள்ளிக்கொண்டு வரும் கிழவன் கோவிந்தனிடம் கூடச் சொன்னார்.

ஆனால் தமது மனைவியிடம்கூடப் பெருமான் அங்காளம்மாவின் குடும்பத்துக்குப் படியளந்ததைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அது தெய்வ ரகசியம், தூய்மையானது என்று தமக்குள்ளேயே அடைத்து வைத்து விட்டார்.

அடுத்த நாளிலிருந்து கழுத்தைச் சுற்றித் தொங்கிய மேல்வேட்டியின் முனைகள் கொடிச் சீலைபோல ஆடிப் பறக்கக் கைத்தடியை விசிக்கொண்டு அவர் காலையில் ஒன்றரை மைல் நடந்து விட்டு வந்தார். அவருடைய நண்பர் நித்தியானந்தம் கீல் வாதப் பிடிப்பினால் படுத்த படுக்கையாகி விட்டார் என்று கேள்விப்பட்டு அவர் வீட்டைத் தேடிக் கொண்டுபோய் அவரிடம் படியளந்த பெருமானைப் பற்றிச் சொல்லி அவரையும் அங்கே போய் வரச் சொன்னார்.

எட்டு நாட்களுக்குப் பிறகு அவர் வீட்டில் மேசையடியில் உட்கார்ந்து தமது மூத்த பெண்ணுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தபோது நித்தியானந்தம் வந்து சேர்ந்தார்.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து கொண்டார் நித்தியானந்தம். "கேட்டால் புராணக் கதையிலே நடப்பது போலவே இருக்கும், ஸார்! உங்களைப்போல எனக்குத் தனியாகப் புறப்பட்டுப் போகத் துணிவு போதவில்லை. என் பெரிய மகன் அருணாசலத்தை மட்டும் உடன் அழைத்துச் சென்றேன். அவன் வந்திராவிட்டால் நான் ரயிலுக்கே போய்ச் சேர்ந்திருக்க மாட்டேன். அந்த ஊர் எல்லையை மிதித்தவுடனேயே கால்களிலிருந்த நோய் சிறிது மட்டுப்பட்டது போல் ஆகிவிட்டது. அருணாசலத்துக்கு நல்ல ஜலதோஷம். இரவெல்லாம் ரயிலில் இருமிக்கொண்டேயிருந்தான். உடம்புகூட இலேசாகச் சுடுகிறது என்றான். அதனால் அவனைக் குளத்தில் மூழுக வேண்டாமென்று முன்னால் மலைமேல் ஏறிப் போக அனுப்பிவிட்டேன்.

"அவன் உடனிருந்து என்னைப் படியேற்றி அழைத்துச் சொல்லத்தான் விரும்பினான். நான்தான் கூடவே கூடாதென்று அவனை அனுப்பி விட்டேன்.

"குளத்தில் முழுகித் தலையைத் துவட்டிக்கொண்டிருந்த போது யாரோ ஒரு ஆறேழு வயதுப் பையன் என்னிடம் ஓடி வந்தான். அவன் உடலெல்லாம் சேறு. தலைபரட்டை. இடையிலே ஒரு கந்தல் துணி..." என்றார்.

பரந்தாமன் திடுக்கிட்ட குரலில் இடைமறித்து, "அந்தப் பையன் உங்களிடமும்ஓடிவந்தானா!" என்றுகேட்டார்.

நித்தியானந்தம் பொருள் பொதிந்த புன்னகைபுரிந்து, "முழுவதையும் கேளுங்கள். அவன் வந்து கும்பிட்டு, 'அதோ தெரியுதே அதுதான் சாமி அங்காளம்மா அவங்க குடிசை" என்றான். 'யார் நீ?' என்று கேட்டேன்" என்று தொடங்கி, பரந்தாமனுக்கு நேர்ந்த அனுபவத்தை அப்படியே ஒரு விவரம் குறையாமல் அதிகம் மாறாமல் சொல்லி முடித்தார்.

இரண்டு அனுபவங்களுக்கும் இரண்டொரு வேறுபாடுகள்தாம். நித்தியானந்தம் பதினைந்து ரூபாய் கொடுத்தார். அங்காளம்மாவின் கனவிலே வந்தவருக்கு நித்தியானந்தத்தின் இடது நெற்றிப் பூட்டு அருகில் உள்ள தழும்புகூட இருந்தது.

அந்தப் பெண்பிள்ளையின் பரிதாபக் கோலத்தைக் கண்டு நித்தியானந்தத்தின் நெஞ்சை அடைத்தது. அவளுக்குப் படியளக்கப் பகவான் நிகழ்த்திய திருவிளையாடலை எண்ணி அவர் உடல் சிலிர்த்தது.

அவற்றை யெல்லாம் பரந்தாமன் ஊமையாகி உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். நித்தியானந்தம் அந்தக் குடிசையையும், அங்காளம்மாவையும் வர்ணித்தபோது பரந்தாமனின் வலது முழங்காலில் ஏதோ சுருக்கென்று நோவு கண்டது. கையால் முழங்காலைத் தடவிவிட்டு அவர் காலை அசைக்க முயன்றார். ஐயமேயில்லை. அந்தப் பழைய கீல் பிடிப்புத் திரும்பி வந்துவிட்டது.

அங்காளம்மா மூன்று சிறுவர்களையும், ஒரு பெண் குழந்தையையும் வைத்துக்கொண்டுபடியளந்தான்பெயரால் நாடக மாடி வசூல் செய்து கொண்டிருக்கிறாள் என்பது அவருக்குத் தெளிவாகிவிட்டது.

அவள் கனவில் கண்ட மனிதரின் நெற்றிப் பூட்டில் நித்தியானந்தத்துக்கு இருக்கும் தழும்புகூட இருந்ததாம் என்று அவர் சொன்னதைக் கேட்டபோது ஆறேழு வயதேயுள்ள ஆட்டுக்காரப் பையன் அவர் மனக்கண்முன் எழுந்தான். அவனுடைய மேதை அவரைப் பிரமிக்க வைத்தது. அவருடைய உணர்ச்சி தாங்க முடியாத எல்லையை எட்டிவிட்டது. "நிச்சயமாக இருந்திருக்கும், ஸார்!" என்று சொல்லிக்கொண்டு அவர் எழ முயன்றார்.

முழங்காலின் நோவு அவரைத் துடிதுடிக்க வைத்தது. அப்படியே பொத்தென்று நாற்காலியில் விழுந்தார்.

அவருடைய முகத்தில் படர்ந்திருந்த வேதனையைக் கண்ட நித்தியானந்தம் திடுக்கிட்டு, "என்ன ஸார்! உடம்புக்கென்ன?" என்று கூவி எழுந்தார்.

ஓர் ஊசி முனைப்பொழுதில் பரந்தாமன் மனத்தில் இருவகை உணர்ச்சிகளும், எண்ணங்களும் எழுந்து மூட்டி மோதிச் சிதறி விழுந்தன. அங்காளம்மா கூட்டத்தின் மோசடி நாடகத்தையும் கொள்ளையையும் வெட்ட வெளிச்சமாக்கிவிட வேண்டும், உண்மையை உலகம் அறியச் செய்துவிட வேண்டும் என்ற வேகம் மூண்டது.

'உன் நம்பிக்கை கலைந்து, நீ பெற்ற பலன் மறைந்து போய் விட்டது. உன்னை விட்டு விலகி விட்டது என்று நீ கருதிய நோய் உன்னை மீண்டும் பற்றிக் கொண்டது. அவருடைய நம்பிக்கையையும் குலைத்து அவரையும் உன் நிலைக்கு இறக்கித்தான் தீர வேண்டுமா?' என்ற எண்ணம் எழுந்து அந்த வேகத்தை அடக்கியது.

பரந்தாமன் பெரும் பாடுபட்டு முகத்தை மலர வைத்துக்கொண்டு, "ஒன்றுமில்லை. மேசையில் முழங்காலை இடித்துக் கொண்டு விட்டேன் போலிருக்கிறது. முன்பு நோய் கண்டிருந்த அதே கால். அது ஒன்றுமில்லை. உட்காருங்கள். தெய்வம் உங்களைக் காயாக வைத்துத் திருவிளையாடல் நடத்தி யிருக்கிறது. ஆஹா!" என்றார்.

அப்படியே எடுத்துக் கொள்ளுகிறார்கள் என சிறுவர்கள் மீது குறைகூற முடியாது....
சிறுவர்கள் தூங்கும் சமயத்தில் பெரியவர்கள் ருசிப்பதையும் குறைகூற முடியாது....
நீங்கள் யாரையாவது குறைகூற விரும்பினால், எங்களைத்தான் குறைகூற வேண்டும். ஏனெனில் அடக்கமுடியாத ஆவலைத் தூண்டுவது ருசி மிகுந்த நியூட்ரைன்....

Nutrine

மிட்டாய்கள்

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திர பிரதேசம்)

NC-60



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85834

சேரக் கடைசி தேதி 20-4-1961 ... முதல் ஏலத் தேதி 22-4-1961

25 மாதங்கள்	மாதாந்திர சீட்டுகள் (4-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள்: கன்னாட் ஹவுஸ், 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1 * பாலுஸேரி பில்டிங் 14-F/1, W. E. A. கரோல்பாக், புது டில்லி-5 * 198, முதல் மாடி, ஜோர்பாக் மார்க்கெட், புது டில்லி-3 * பெங்களூர் கிளை ஆபீஸ்: 185, முதல் மாடி, ஆறாவது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9 * பம்பாய் கிளை ஆபீஸ் "வினு விஹார்" 17-A, லவாஸ் மாதுங்கா, மார்க்கெட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

மேற்கு ரெயில்வேயில்
துரிதமாக சரக்கெடுத்துச் செல்லும் சேவை

பம்பாய், அகமதாபாத், இந்தூர், புது தில்லி, மற்றும் பல இடங்களுக்கிடையே சரக்குகளைத் துரிதமாக எடுத்துச் செல்வதற்காக நடைபெறும் தமது பற்பல சர்விஸ்களின் வேகத்தை மேற்கு ரெயில்வே கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

முக்கியமான மார்க்கங்களில் ஞாயிறு தவிர வாரத்தின் எல்லா நாட்களிலும் சரக்குகளை துரிதமாக எடுத்துச் செல்லும் சேவை கிடைக்கிறது. ஏனைய மார்க்கங்களில் இந்த சர்விஸ்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறுகின்றன.

புக்கிங் தினம், டெலிவரி தினம் உட்பட பிரயாண காலம் வருமாறு :

சர்விஸின் வகை		பிரயாண கால இலக்கு
பிராட்கேஜ்		
கார்னாக் பிரிட்ஜ்	- புது தில்லி	5 நாட்கள்
கார்னாக் பிரிட்ஜ்	- அகமதாபாத்	3 ,,
கார்னாக் பிரிட்ஜ்	- இந்தூர்	4 ,,
கார்னாக் பிரிட்ஜ்	- சூரத்	3 ,,
கார்னாக் பிரிட்ஜ்	- பேலன்கஞ்ஜ்	6 ,,
புது தில்லி	- கார்னாக் பிரிட்ஜ்	5 ,,
புது தில்லி	- அகமதாபாத்	6 ,,
பேலன்கஞ்ஜ்	- கார்னாக் பிரிட்ஜ்	6 ,,
அகமதாபாத்	- கார்னாக் பிரிட்ஜ்	4 ,,
இந்தூர்	- கார்னாக் பிரிட்ஜ்	5 ,,
சூரத்	- கார்னாக் பிரிட்ஜ்	3 ,,
அகமதாபாத்	- புது தில்லி	6 ,,
மீட்டர் கேஜ்		
ஆஜ்மீர்	- ஜெய்ப்பூர்	2 நாட்கள்
ஜெய்ப்பூர்	- ஆஜ்மீர்	2 ,,

கார்னாக் பிரிட்ஜிலிருந்து புக் செய்யப்படும் சரக்குகளுக்கு துரிதப் பிரயாயாணத்துக்கான செலுத்த வேண்டிய கட்டணம் முதலியன குறித்த மற்ற விவரங்களை கார்னாக் பிரிட்ஜ் கூட்ஸ் சூப்பரின்டெண்ட்டிடமிருந்து பெறலாம்.

WESTERN RAILWAY

திருமெய்யம் சத்தியமூர்த்தி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

சத்தியசந்தனான அரிச்சந்திரன் கதை பிரசித்தமானது. அயோத்தி மன்னனாக இருந்த அரிச்சந்திரன் விசுவாமித்திரரால் கடுஞ் சோதனைக்கு உள்ளாகிறான். சொன்ன சொல்லைக் காப்பாற்ற நாட்டைத் துறந்து புறப்படுகிறான்; மனைவியைப் பிறன் ஒருவனுக்கு அடிமையாக்குகிறான்; மகனை விற்கிறான். மேலும் மேலும் துன்பங்கள் வளருகின்றன. தன் மகன் பாம்பு கடித்து இறந்த போதும் காசி மன்னன் மகனைக் கொன்றதாகத் தன் மனைவி குற்றம் சாட்டப்பட்ட போதும் மனம் கலங்காமலேயே இருந்தான். பின்னர் தன்னை அடிமை கொண்ட வீரபாகுவின் ஆணைப்படி தன் மனைவியையே வெட்ட வாளை ஓங்கியபோதும்,

பதி இழந்தனம் பாலனை
இழந்தனம், படைத்த
நிதி இழந்தனம் நமக்கு
உளதென நினைக்கும்
கதி இழக்கினும்
கட்டுரை இழக்கிலம்

என்ற உறுதிப் பாட்டில் நிலைத்து நின்றிருக்கிறான். அதனால் அவன் வெட்டிய வெட்டே மாலையாக விழுந்திருக்கிறது – அவன் மனைவியின் கழுத்தில். சத்தியம் தலைகாக்கும், 'சத்ய மேவ ஜயதே' என்ற உண்மையும் நிலைத்திருக்கின்றது. இந்த சத்யகீர்த்தியின் சரித்திரம் தெரிந்தவர்களுக்கு எல்லாம் ஓர் அதிசயம். இப்படி வடநாட்டு அயோத்தி மன்னன் தான் புகழ் பெற்றான் என்றில்லை. தென் தமிழ் நாட்டிலும் ஓர் ஊர் சத்தியத்துக்கு உறைவிடமாக விளங்கியிருக்கிறது. அந்த ஊரில் தான் சத்தியமூர்த்தியாம் விஷ்ணுவும், சத்திய கிரீசுவரராம் சிவனும் கோயில் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மலை சத்யகிரி; அங்குள்ள தீர்த்தம் சத்ய தீர்த்தம்; ஊரின் பெயரே திருமெய்யம். அந்தத் திருமெய்யத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருமெய்யம் தொண்டைமான் புதுக்கோட்டைக்குத் தெற்கே பதின்மூன்று மைல் தொலைவில் உள்ள ஒரு தாலூகாவின் தலை நகர். இதனை இன்று திருமயம் என்றே அழைக்கின்றனர். சத்யகிரீசுவரரும், சத்ய மூர்த்தியும் வந்து தங்கியிருக்கிற தலம் திருமய்யமாக இருப்பதில் விசேஷமில்லைதான். என்றாலும் திருமெய்யமே நாளடைவில் திருமய்யம் எனத் திரிந்து, பின்னர் திருமயம் என்று குறுகியிருக்கிறது. வடக்கேயிருந்து காரிலோ, பஸ்ஸிலோ வருகிறவர் ஊர்ப்பக்கத்துக்கு வந்ததும் கோட்டைச் சுவரில் இருக்கும் பைரவரை வணங்கித்தான் ஊர் புகவேண்டும். அவ்வழியே செல்லும் பஸ் காரர்கள்கூட அந்த இடத்துக்கு வந்ததும் பஸ்ஸை நிறுத்தி, சிதறுகாய் ஒன்றைப் போட்டு விட்டுத்தானே நகருகிறார்கள். நாமும் அப்படியே செய்யலாம். இந்தப் பைரவரை 'ஆவாய்டு' பண்ணிக் கொண்டு வர விரும்பினால் புதுக்கோட்டை மானாமதுரை லைனில் திருமயம் ஸ்டேஷனுக்கு ஒரு டிக்கெட் வாங்கி அங்கு இறங்கி மேற்கு நோக்கி நாலு பர்லாங்கு குளக்கரை வழியாக நடந்தால் ஊர் வந்து சேருவோம். ஊரைச் சுற்றி ஒரு பெரிய கோட்டை இருந்திருக்க வேணும். அதன் சிதைந்த சின்னங்கள் இன்னும் தெரிகின்றன. ஊருக்குள் நுழைந்ததும் நம் கண் முன் தெரிவது ஒரு சிறிய குன்றும் அதன்மேல் உள்ள கோட்டையும் தான். மலைமேலே ஏறுவது எளிது. ஆனால் அங்குள்ள காவல்காரனைத் தேடிப்பிடித்து அவனையும் உடன் அழைத்துச் செல்வது நல்லது. ஏனென்றால் மலை மீதுள்ள கோட்டைச்சுவரிலுள்ள வாயிலைக் கதவிட்டுப் பூட்டி வைத்திருப்பார்கள். அதைத் திறக்கும் திறவுகோல் அக்காவல்காரனிடம் தானே இருக்கிறது. மலை ஏறி உச்சிக்குச் சென்றால் அங்குள்ள மேட்டில் பழைய பீரங்கி ஒன்றிருக்கும். அதன் பக்கத்தில் ஏறி நின்று வடபுறம் உள்ள ஏரி குளம் நெல் வயல் எல்லாவற்றையும் பார்த்தால் மனத்துக்கு ரம்மியமாக இருக்கும். வேறு கோட்டையில் பார்க்க வேண்டியவை ஒன்றும் இல்லைதான்.

பின்னர் கீழே இறங்கி ஊரைச் சுற்றிக் கொண்டு வந்தால் முதலில் சத்தியமூர்த்தியாம் பெருமான் கோயிலைப் பார்ப்போம். அதற்குக் கீழ்ப்பக்கத்தில்தான் சத்யதீர்த்தம் என்னும் சிறு குளம் இருக்கும். இந்தச் சத்தியமூர்த்தியின் கோயில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஸ்ரீரங்கத்துக்கு அடுத்தபடியாக இத் தலம் ஸ்ரீ வைஷ்ணவர்களால் கருதப்படுகிறது. ஆதிரங்கம் என்றே அழைக்கிறார்கள். கோயில் வாயிலை ஓர் அழகிய கோபுரம் அணி செய்கிறது. கோயில் வாயிலைக் கடந்து சென்றால் ஒரு பெரிய மண்டபத்திடையே வந்து சேருவோம். தூண்களில் எல்லாம் நல்ல சிற்ப வடிவங்கள். இந்த மண்டபத்திலேயே ஆண்டாள், கண்ணன், சக்கரத்தாழ்வார் சந்நிதிகள் எல்லாம் இருக்கின்றன. வலப்புறத்தில் நரசிம்மருக்கும் ஒரு சந்நிதி. இந்த மண்டபத்தையும் அதை அடுத்த மண்டபத்தையும் கடந்துதான் தாயார் சந்நிதிக்கு வரவேணும். தாயார்

> தாயே! சாலை ஓரத்திலோடும் கழிவு கால் நீரும் கங்கைப்பெருக்கில் கலந்து புனிதமாவது போல், பரிச வேதியில் தங்கிய இரும்பும் உடனேயே பொன்னாக ஆவதுபோல், ஜன்ம ஜன்மங்களாகப் பாபம்செய்து மிகவும் களங்கமுற்றுள்ள என்உள்ளமும், உன்பால் அன்பு பூண்டு கலந்த பின், மாக நீங்கித் தூய்மை பெறாதிருக்க முடியுமா ? — ஸ்ரீ ஆதி சங்கரர்

கோயில்

திருநாமம் உஜ்ஜீவனத் தாயார். அங்குள்ள ஆழ்வார் ஆச்சார்யர் சந்நிதிக்குப் பின்னால் தான் மகா மண்டபம் இருக்கிறது. அம் மண்டபத்தில் சந்நிதியை நோக்கியவண்ணம் கருடாழ்வார் நிற்கிறார். இதை அடுத்தே சுந்தரபாண்டியன் குறடு. அதன் வழியாகச் சத்தியமூர்த்தி சந்நிதிக்குச் செல்லவேணும். சத்தியமூர்த்தியின் கருவறை மலைச் சரிவை ஒட்டியிருக்கிறது. தூண்களில் எல்லாம் புஷ்பப் போதிகைகள் தாமரை மொட்டுகள் எல்லாம் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சத்திய மூர்த்தியினை மங்கை மன்னன் மங்களாசாசனம் செய்திருக்கிறான்.

மையார் தடங்கடலும்
மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும்
காயாவும் போன்றிருண்ட
மெய்யானை, மெய்ய
மலையானைச் சங்கேந்தும்
கையானைக் கைதொழாக்
கையல்ல கண்டோமே

என்ற பாடல் மிக நல்ல பாட்டாயிற்றே. இந்த மெய்யனையே சத்தியமூர்த்தி, சத்ய நாராயணர் என்றெல்லாம் அழைக்கிறார்கள். 'மொய் வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்தும் மெய் வண்ணம் நினைந்தார்க்கு மெய் நின்ற வித்தகன்' என்றே பாராட்டப் பட்டவன் இவன். இமயமலையிலிருந்து தவம் செய்த முனிவர் சத்தியரே இங்கு எழுந்தருளி இப்பெருமானைப் பிரதிஷ்டை செய்தார் என்பது வரலாறு. கோயிலின் பிரதான வாயில் தெற்கு நோக்கி இருந்தாலும் இவர் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்தோடு நின்ற கோலத்தில் எழுந்தருளி யிருக்கின்றார்.

இந்தச் சந்நிதிக்கு மேற்கே தான் பாறையில் குடைந்தெடுக்கப்பட்ட குடைவரையுள்ளது. அக்குடைவரையின் உள்ளே போக சயனமூர்த்தியும் இருக்கிறார். இங்கு இவர் அனந்தசயனக் கோலம் எல்லாம் மலையைக் குடைந்து அமைத்தது. பாம்பணையானாக இருக்கும் ஆதிசேஷன் பெருமானுக்குக் குடை பிடிக்கிறான். பெருமானுக்கு ஸ்ரீரங்கத்தில் இருப்பது போலவே இரண்டே திருக்கரங்கள்தாம். ஒன்று ஆதிசேஷனுக்கு அருளுவது போல் உயர்ந்திருக்கிறது. மற்றொரு கை, வக்ஷ ஸ்தலத்தில் இருக்கும் லக்ஷ்மியைப் பாதுகாக்கும் நிலையில் இருக்கிறது. சயனமூர்த்தியைச் சுற்றிக் கருடன், சித்திரகுப்தன், மார்க்கண்டேயர், பிரமன் எல்லாரும் இருக்கிறார்கள். வான வீதியிலே தேவர்களும் கின்னரர்களும் விரைந்து செல்லும் காட்சி மற்றத் தலங்களிலும் காணக் கிடையாத தொன்று. பெருமானின் காலடியில் மதுகைடபர் என்ற அசுரரும், பூமிதேவியும் இருக்கிறார்கள். அன்று பூமிதேவியை மதுகைடபர் தூக்கிச் சென்றபோது ஆதிசேஷன் தன் விஷத்தை அவர்கள்மீது கக்கி யிருக்கிறான். அவர்கள் பஸ்மீகரமாகி யிருக்கிறார்கள். பரந்தாமனது கட்டளை இல்லாமலேயே ஆதிசேஷன் தானுகவே விஷம் கக்கியதற்கு வருந்தி யிருக்கிறான். அதனாலேயே அவனைச் சாந்தி செய்யும் கோலத்தில் இந்த அனந்தசயனர் கிடக்கிறார் என்பது புராணக் கதை. இங்குள்ள பெருமாளும் மாமல்லபுரத்து தலசயனப் பெருமாளும் ஒரே கோலத்தவர். ஆம்! மெய்யத்துக் குடைவரையும் மாமல்லபுரத்தைப் போல் பல்லவர் பணிதானே.

இந்த மெய்யத்துப் பெருமானை வணங்கிய பின் மேலே நடந்து அடுத்த கோயிலான சத்தியகிரீசுவரர் கோயிலுக்கு வரலாம். நிரம்ப நடக்க வேண்டியதில்லை. ஒரு சிறு தெருவைத்தான் கடக்க வேணும். இந்தக் கோயிலையும் ஒரு சிறு கோபுரம் அழகு செய்யும். வாயிலைக் கடந்தால் முன் மண்டபத்தில் பானு உமாபதீசுவரர் சந்நிதி கிழக்கு நோக்கியபடி இருக்கும். இவற்றைக் கிழைக்கோயில் என்பார்கள். இங்கேயே ராஜராஜேசுவரி தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறாள். இதற்குக் கொஞ்சம் மேலேதான் வேணுவனசுவரி கோயில். இதையும் கடந்துதான் சத்தியகிரி ஈசுவரர் சந்நிதி. இவருமே குடைவரையுள் இருப்பவர்தான். பெருமானைக் குடைந்தெடுத்த பல்லவ மன்னன் மகேந்திர வர்மனே சத்தியகிரியாரையும் குடைந்து அமைத்திருக்கிறான். குடைவரையில் மேல் கோடியில் லிங்கம் இருக்கிறது. மலையைக் குடைந்து நிர்மாணிக்கப்பட்டவரே இவர். இவரது கருவறை, அதற்கு முன்னுள்ள அர்த்த மண்டபம், அங்குள்ள நந்தி எல்லாம் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டவை. இங்குள்ள தூண்கள் அடியில் உருளையாகவும் நடுவில் எட்டுப் பட்டை போட்டவையாகவும் இருக்கும். பல்லவர் காலக் குடைவரைதான் என்பதற்கு இது ஒரு சான்று. இங்குள்ள துவாரபாலகர்களுக்கு எல்லாம் இரண்டே கைகள் என்பது கூர்ந்து நோக்கத் தக்கது. வலம்புரி விநாயகர் வேறே இங்கு உருவாகி யிருக்கிறார். முன்னர் குடுமியான் மலையில் கண்டது போல் இங்கே சங்கீத வின்னியாசக் கல்வெட்டு ஒன்று உண்டு. ஆனால் அவையெல்லாம் சிதைந்து போய் விட்டன. இங்கு

சோழர் காலத்துச் செப்புப் படிமங்கள் பல இருக்கின்றன.

வேயிருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த
　　மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம்
தாயான நாயகர் ஆவார் தோழி!
　　தாமரைக் கண்கள் இருந்தவாறு?

என்று மங்கை மன்னன் சத்தியமூர்த்தியையே பாடி யிருந்தாலும், தேவாரம் பாடிய மூவ ராலும் பாடப் பெறாத சத்திய கிரீசுவரருக் குமே இப்பாடலை ஏற்றலாம். ஏற்றித் துதித்து வணங்கித் திரும்பலாம்.

இக்கோயிலில் கல்வெட்டுகள் நிரம்ப இருக் கின்றன. அவற்றில் முக்கியமானது குடுமி யான் மலையில் உள்ளது போல் சங்கீத வின்னி யாசத்தைப் பற்றியது. ஆனால் இந்தக் கல் வெட்டின் மேலேயே நிரம்பவும் கல்வெட்டு குடைவரை அமைப்பு முதலிய சான்றுகளைக் கொண்டு இக் கோயில் மகேந்திரவர்ம பல்ல வனே கட்டியிருக்க வேண்டும் என்று கருத இடம் இருக்கிறது. சத்தியமூர்த்தியின் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் சாத்தன் மாறன் இக்கோயிலைப் புதுப்பித் தான் என்றும் தெரிகிறது. அவன் தாயான பெருந்தேவி நிலமான்யம் நிரம்ப அளித் திருக்கிறான் என்றும் தெரிகிறது. சாத்தன் மாறன் இரண்டாம் நந்திவர்மன் காலத் தவன். அதன் பிறகு விஜயாலய சோழன் சந்ததியினரே இந்த நாட்டை ஆண்டிருக்கின் றனர். அவர்களின் பிரதிநிதியான அப்பண்ண தண்டநாயகன் ராமேசுவரத்திலிருந்து திரும்பி வரும்போது இத்தலத்தில் தங்கி இங்குள்ள இரண்டு கோயில் தர்மகர்த்தர் களுக்குள் ஏற்பட்டிருந்த விவகாரத்தைத் தீர்த்து வைத்திருக்கிறான். இத்தண்டநாயகன் ஹொய்சள தளகர்த்தன். இவன் சிவவிஷ்ணு ஆலயங்களுக்கு இடையே ஒரு சுவர் நிரந் தரமாக எழுப்பியிருக்கிறான். இதை ஒரு கல்வெட்டில் குறித்திருக்கிறான். இந்தக் கல்வெட்டு கி. பி. 1245-ல் பொறிக்கப் பட்டது என்றும் தெரிகிறது. 16, 17ம் நூற்றாண்டுகளில் இந்த வட்டாரம் சேதுபதி யின் ஆளுகையில் இருந்திருக்கிறது. அவர் களில் விஜய ரகுநாத ராயர் என்பவர் இந்தப் பிரதேசத்தைப் புதுக்கோட்டைத் தொண்டை மான்களுக்குக் கொடுத்திருக்கிறார். பின்னர் தஞ்சாவூரிலிருந்து ஆனந்தராவ் புதுக் கோட்டைமீது படையெடுத்து வந்தபோது விஜய ரகுநாதத் தொண்டைமான் இத்திரு மெய்யம் கோட்டையிலேயே வந்து ஒளிந்து கொண்டிருந்திருக்கிறான். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரனான கட்டபொம்மன் ஊமைத் துரையும் இந்தக் கோட்டையில் வந்து ஒளிந் திருந்தார்கள் என்பதும் கர்ண பரம்பரை. இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் கோட்டை மிகவும் பிந்திக் கட்டப்பட்டதொன்று என் றும், கோயில் மகேந்திரவர்மன் காலத்தே கட்டப்பட்டது என்பதும் விளக்கமுறும். திரு மெய்யத்து இன்னமுதன் என்று பெரிய திரு மடலிலேயே திருமங்கை மன்னனால் பாராட் டப் பட்டவன் அல்லவா இந்தச் சத்யமூர்த்தி?

இந்தியாவின் தொழில்வளத்திற்கு உதவும்போதே உங்களுக்கும் உத்திரவாதமான லாபம் கிடைக்கின்றது...

தி மதராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

38, ஒயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14

எங்கள் பிக்சட் டிபாஸிட்டுகளின் அசல் மற்றும் வட்டிக்கு சர்க்கார் எவ்வித நிபந்தனையுமின்றி உத்திர வாதம் அளித்துள்ளனர். நாங்கள் அளிக்கும் வட்டி விவரம்

1 வருடமும் அதற்கு மேலும்	வருடம் 1க்கு ..	4 %
2 வருடமும் அதற்கு மேலும்	வருடம் 1க்கு ..	$4\frac{1}{4}$ %
3 வருடமும் அதற்கு மேலும்	வருடம் 1க்கு ..	$4\frac{1}{2}$ %
4 வருடமும் அதற்கு மேலும்	வருடம் 1க்கு ..	$4\frac{3}{4}$ %
5 வருடமும் அதற்கு மேலும்	வருடம் 1க்கு ..	5 %

மற்ற விவரங்களுக்கு எழுதவும்

எஸ். ராஜரத்தினம், காரியதரிசி

நீகோ

சருமத்தை வியாதிகள் அணுகாமல் தடுப்பதோடு, மேனி அழகையும் அதிகரிக்கிறது.

இது உங்கள் சருமத்தை நன்கு சுத்தம் செய்து பொலிவுடனிருக்கச் செய்கிறது. நீகோ சோப்பின் சுத்தப் படுத்தும் தன்மையும், கிருமிகளைக் கொல்லும் நுரையும் உங்கள் சருமத்தை பரிசுத்தமாக்கி முகப்பரு, வேனல்கட்டி, கருப்பு வடுக்கள் போன்ற தோல் நோய்கள் வரவொட்டாமல் தடுக்கிறது.

நீகோ சோப்பை பதினைந்து நாட்களுக் கொருமுறை தலையில் தேய்த்து ஸ்நானம் செய்தால் தலையில் பொடுகு வராமல் தடுக்கலாம். வழக்கமாக, உடம்பில் தேய்த்து குளித்து வந்தால் சருமம் சுத்தமடைவதுடன் உங்கள் மேனி எப்பொழுதும் பொலிவுடன் விளங்க சருமத்திற்கு வழவழுப்பையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது.

சரும ஆரோக்கியத்திற்கு
மிகச் சிறந்த நீகோ சோப்பை
நீங்களும், உங்கள் குடும்பத்தினரும்
தினந்தோறும் உபயோகியுங்கள்.

நீகோ கிருமிகளைக் கொல்லக்கூடிய தினசரி உபயோகத்திற்கேற்ற சிறந்த சோப்

சாத்வீகப் போர் நீடிக்கிறது

கொழும்பு, ஏப்ரல் 5டி.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சியின் தலைமையில் நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டம் சற்றும் தளர்ச்சியடையாமல் தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போராட்டத்தினால் மக்கள் எத்தனையோ விதமான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்பட நேரிட்டிருப்பினும் இதுவே தங்களது கடைசி உரிமைப் போராட்டமாக இருக்கும் என்ற எண்ணத்துடனும் இதில் தோல்வியுற்றால் நிரந்தரமான அடிமைத்தனம் தங்களை ஆட்கொள்ளும் என்ற நினைப்புடனும் திடமனத்துடன் ஆயிரமாயிரமாக மறியலில் ஈடுபட்டு இரு மாகாணங்களிலும் அரசாங்கம் முற்றாக இயங்காமல் செய்திருக்கிறார்கள். காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் பரிபூரண அஹிம்சையையும் தன்னலத் தியாகத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததென்பதை இலங்கை மக்கள் புத்தகங்களில் படித்திருக்கிறார்கள்; அதையே இன்று இலங்கையின் இரு மாகாணங்களிலும் நிதர்சனமாகக் காண்கிறார்கள். வயது முதிர்ந்த தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்களின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு மிகமிகக் கொடூரமாகத் தாக்கி ஆத்திரமூட்டப்படுகையிலும் சத்தியாக்கிரகிகள் சாத்வீகக் கொள்கையிலிருந்து சிறிதும் பின்வாங்காது அறப்போர் நடத்துவது கண்டு அரசாங்கமே செயலற்றுப் போயிருக்கிறது.

அரசாங்க அலுவலகங்கள் இவ்விரு மாகாணங்களிலும் மாதக் கணக்கில் மூடப்பட்டுக் கிடப்பதால் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி சத்தியாக்கிரகத்தை முறிக்க அரசியலார் திட்டமிட்டார்கள். அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தையும் அதன் கீழ் ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனப் படுத்துவதாயின், பலாத்காரம் தலையெடுத்துப் பொதுஜனப் பாதுகாப்புக்கு ஆபத்து உருவாகி யிருப்பதைச் சட்டப்படி கட்டிக் காட்ட வேண்டுமே! சிங்களச் சிப்பந்திகள் பலாத்காரத்தைக் கிளப்பிவிடத் தீவிரமாக முயற்சி செய்து பார்த்தும்கூட சத்தியாக்கிரகிகள் பதிலுக்குத் தாக்காமல் பொறுமையுடன் சமாதானத்தைக் கடைப்பிடிக்கும்போது எப்படி அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதென்று புரியாமல் அரசாங்கம் தவிக்கிறது. இந்தக் கடிதத்தை எழுதும் வரை சத்தியாக்கிரகத்தை நசுக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்த அரசாங்கம் சரியானதொரு காரணத்தைக் கண்டுபிடிக்கவில்லை.

பைத்தியக்காரன் கதை

கல்யாணம் நடந்தால்தான் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் நடக்கும் என்று ஒரு பழமொழியுண்டு. அதைப் போலிருக்கிறது இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை. தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டால்தான் அவர்களுடன், தான் சமரசம் பேச முடியுமென்கிறது அரசாங்கம். சமரசப் பேச்சுகளை ஆரம்பித்து நியாயம் கிடைக்குமென்ற உத்தரவாதம் ஏற்பட்டால்தான் சத்தியாக்கிரகத்தைக் கைவிட முடியுமென்கிறது தமிழரசுக் கட்சி. இரு தரப்பாரும் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் சமரசப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் புதியதொரு யோசனையும் கூறப்பட்டு வருகிறது. தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகத்தைக்கைவிடாமலே ஓரிரண்டுவாரத்துக்குப் போராட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்றும் அதற்கிடையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென்றும் சொல்லப்பட்டு வருகின்றன. தமிழ் இனம் முழுதுமே உரிமைப் போராட்டத்தில் இன்று ஒன்று திரண்டிருப்பதால் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பிரச்னைக்கு ஏற்படப் போகும் பரிகாரம் இறுதியானதாகவும் பூரணமானதாகவும் இருக்குமென்று நம்பலாம். அரைகுறையான சமரச ஏற்பாட்டைத் தமிழ் மக்கள் இன்று ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

— ரஜனி

வருக புத்தாண்டு...!

பூத்துக் குலுங்குது ஞாலம்—புதுப்
புன்னகை கொள்ளுது வானம்;
காத்துக் கிடந்த மணங்கள்—முகைக்
கட்டை உடைத்தன பாரீர்!

பார்த்துக் களித்திடும் போதில்,—தமிழ்ப்
பண்டிகை வந்தது கூட
சேர்த்துப் பெருமகிழ் கொள்வோம்—'புதுச்
சித்திரை வாழிய!' என்போம்.

எத்திசை யும்மெழில் வெள்ளம்—அதை
இப்படி அப்படி ஆட்டும்,
சித்திரை யின்இளந் தென்றல்—நமைத்
தேடி வருகுது பாரீர்!

முத்தமிழ் இன்சுவை போலே—புவி
முற்றும் இயலிசை கூத்து,
கத்தும் குயிலிசை, வண்டின்—கவிக்
கற்பனை, பூஞ்செடிக் கூத்த.

போனவற் றின்நினை வோடே—வரும்
புத்தம் புதுமைகள் காண்போம்
ஞானப் படிகளை ஏந்தி—வரும்
காலப் படிகளை நாமே

மோன மகிழ்வுடன் கொள்வோம்—களி
பொங்கிப் பொலிவுகள் மிஞ்சி
வான உயர்வுகள் காண்போம்;—புவி
வாழ்க வருக புத்தாண்டே

சாலை இளந்திரையன்

வெள்ளம் வந்தது

வறண்டு கிடந்த வானத்துக்குத் திடீரென்று ஆனந்தம் வந்து விட்டதோ, துக்கம் வந்து விட்டதோ தெரியவில்லை. கொட்டுக் கொட்டென்று கொட்டித் தீர்த்து, நாடு நகரமெங்கும் ஒரே வெள்ளக் காடாக மாற்றி விட்டது. மழையோடு புயலும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்?—சில மாதங்களுக்கு முன்பு சென்னை, மதுரை முதலிய இடங்களைச் சூழ்ந்து பெய்த மழையைத்தான் சொல்கிறேன்.

சென்னை நகரத்து மாடி வீட்டுக் குழந்தைகள் மாடிச் சன்னல்கள் வழியாக மழைக் காற்றில் தலைவிரித்தாடும் தென்னை மரங்களை வேடிக்கை பார்த்தார்கள். பொழிந்து தள்ளும் மழைப் பெருக்கில் திளைத்து விளையாடத் துடித்தார்கள். ஆனால் பெரியவர்கள் அவர்களை விடவில்லை.

சிற்சில குழந்தைகள் மட்டிலும் காகிதக் கப்பல்கள் செய்து, வீட்டுக்கு வெளியில் வழிந்தோடும் வெள்ளத்தில் விட்டுப் பார்த்தார்கள். காகிதக் கப்பல்கள் சிறிது தூரம் நேராகச் சென்றன; பிறகு காற்றில் சுழன்றன; பிறகு நீருக்குள் அமிழ்ந்து அமிழ்ந்து எழுந்தன; பிறகு தலைகுப்புறவோ பக்கவாட்டிலோ சாய்ந்து அமிழ்ந்தே போய் விட்டன.—குழந்தைகள் கை கொட்டிச் சிரித்தார்கள். புதிய கப்பல்களை அனுப்பிவைத்தார்கள்.

அதே சமயத்தில், சென்னை நகரத்தின் பிரசித்தி பெற்ற கூவம் நதிப் பெருக்கிலும் பல கப்பல்கள் மிதந்து கொண்டிருந்தன. ஆனால் காகிதக் கப்பல்களல்ல; கூரைக் கப்பல்கள். —கூரைக் கப்பல்களா! ஆமாம்; வீட்டுக் கூரைகள்தான்; குடிசைகள்தான்.

குப்பத்துக் குழந்தைகளும் பெரியவர்களும் கூட்டங் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அந்த வேடிக்கையில் விளையாட்டில்லை; கண்களில் உற்சாகமோ, உல்லாசமோ சிறிதும் இல்லை.

கடலுக்குள் கட்டு மரத்தில் போய் மீன் பிடித்து வரும் குப்பத்துக் குப்புசாமியின்

குடும்பமும் அங்கே நின்றுகொண்டிருந்தது. குப்புச்சாமி, அவன் மனைவி முனியம்மா, பத்து வயதுப்பையன் துலுக்காணம் இந்த மூவரும், கடலுக்குள்ளிருந்து கரையில் இழுத்துப் போட்ட மீன்களைப் போல் துடித்துக் கொண்டிருந்தார்கள். — அவர்களுடைய குடிசை, காகிதக் கப்பலின் கடைசி நிமிஷம்போல் வெள்ளத்துக்குள் அமிழ்ந்து - அமிழ்ந்து எழுந்தபடியே வெள்ளத்தோடு வெள்ளமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

தகப்பன் தாய் இருவரையும்விட அந்தப் பத்து வயதுப் பையன் துலுக்காணத்துக்குத்தான் அதிகமான ஆத்திரம். அவன் ஒரு கந்தலில் முடிந்து பதினைந்து நயா பைசா காசைக் கூரைக்குள் ஒரு பக்கம் சொருகி வைத்திருந்தான். ஒரு மாதமாய்த் தன் தகப்பனிடம் அடம் பிடித்துச் சேர்த்து வைத்த காசு அது.

குடிசை போனது பற்றிக் கூடத் துலுக்காணத்துக்குக் கவலை யில்லை. அந்தப் பொல்லாத குடிசை அவனுடைய பதினைந்து நயா பைசா காசையுமல்லவா எடுத்துக் கொண்டு போய் விட்டது?

மரத்திலே ஒரே ஒரு மாம் பிஞ்சு தோன்றி, நாளுக்கு நாள் அது பெரிதாகி, காயாகி, பிறகு பழுக்கிற வரையில் தினமும் அதை ஒருவன் வாயில் நீர் ஊற எதிர் பார்த்து நிற்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பழமும் பழுக்கிறது; அதை அவன் மறுநாள் ஏறிப் பறிக்க நினைக்கிறான். மறுநாள் அதை மரத்தில் தேடிப் பார்க்கும்போதோ, அணில் கடித்துப் போட்ட வெறுங் கொட்டை கீழே தரையில் கிடக்கிறது!

துலுக்காணத்தின் நிலையும் அப்படித்தான். ஒரு மாதம் பாடுபட்டுப் பதினைந்து நயா பைசா சேர்த்தாகி விட்டது. அதை வைத்துக்கொண்டு ஒரு பெரிய சுகத்தை அநுபவிப்பதற்காக அவன் நல்ல நாள் பார்த்துக் கொண்டிருந்தான். தகப்பன் கடல் மேலே போன பிறகு, அடுத்த தெருவுக்கு அடுத்த தெருவில் உள்ள ஓர் ஓட்டலுக்குப் போய் ஒரு தட்டுச் சாம்பார் சாதம் சாப்பிட வேண்டும் என்பது அவனது நெடுநாளைய ஆசை.

எப்போதோ ஒரு முறை அப்ப... அவன் அந்த ஓட்டலுக்குப் போ... கிறான். அவன் தாய் முனியம்மா ... சரியில்லாமல் வீட்டில் முடங்கி...

> கனி நிறைந்த கிளை தழைந்து தொங்குகிறது. நீ பக்குவம் பெற விரும்பினால் பணிவாய் இருப்பாய்
>
> —ஸ்ரீ ராமகிருஷ்ணர்

சமயம் அது அந்த ஓட்டல் சாம்பார் சாதம் மிகவும் குறைவாய்த்தான் இருந்தது. ஆனால் என்ன ருசி! என்ன ருசி! பதினைந்து நயா பைசாவுக்கு நெய் மணக்கும் சாம்பார் சாதத்தை அல்வாத் துண்டுபோல் பிளேட்டில் வைத்துத் தருகிறார்களே!

தான் அநுபவிக்க விரும்பிய சுகத்தை இப்போது நினைத்துக் கொண்டான் துலுக்காணம். அவனுடைய சொத்தைச் சுமந்து கொண்டு மிதந்த குடிசை அதற்குள் வெகுதூரம் சென்று, கண்களிலிருந்து மறைந்து விட்டது. பொங்கிய கண்ணீர் உதட்டில் உப்புக் கரிக்க, நெய் மணக்கும் சோற்றைக் கரண்டியில் நாகரிகமாய் எடுத்துச் சாப்பிடுவதாய் நினைத்துக் கொண்டு, எச்சிலை வெடுக்கென்று விழுங்கினான்.

கொட்டும் மழை அவர்களுக்காகச் சிறிதும் இரக்கம் காட்டவில்லை. வீசுகிற காற்றும் அவர்களுக்காக நின்றுவிடவில்லை. குப்பத்துக் கூட்டம் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே, புகலிடத்துக்காக அங்கங்கே அலையப் பார்த்தது.

நல்ல வேளை! இயற்கை இரக்கங் காட்டாத சமயத்தில் நல்லவர்கள் சிலர் இரங்கத் தொடங்கி விட்டார்கள். திடீரென்று சில லாரிகளும் மோட்டார்களும் அங்கு வந்து நின்றன. அவைகளில் குப்பத்துக்காரர்களை ஏறிக் கொள்ளச் சொன்னார்கள். துலுக்காணமும் தன் பெற்றோர்களோடு ஓடிப் போய் ஒரு மோட்டாரில் தொத்திக் கொண்டான்.

வெள்ளக்காடாய்க் கிடந்த சென்னை நகரத்துத் தெருக்களில் கார்கள் சேற்றை அள்ளி வீசிக் கொண்டு புறப்பட்டன. இரு புறமும் விழுந்து கிடக்கும் மரங்களையும், மின்விளக்குக் கம்பங்களையும் பார்த்துக் கொண்டே போனான் துலுக்காணம். இருபுறமும் காணப்பட்ட கெட்டிக் கட்டிட வீடுகளும் அவன் கண்களில் பட்டன.

“ஏம்பா, இந்த வீடுகள்ளே இருக்கவங்கள்ளாம் நம்பளோட வரலியே! பாவம், இவுங்க என்ன செய்வாங்க?” என்று தன் தகப்பனைக் கேட்டான் துலுக்காணம்.

குப்புச்சாமி சிரித்தான். சிரித்துவிட்டு, “மழையும் புயலும் நமக்குத்தாண்டா கண்ணு! காசு வச்சிருக்கவங்களைக் கண்டா கடவுள்கூடப் பயப்படுவாரு!” என்று சொல்லி வைத்தான்.

காசு என்ற பேச்சு காதில் விழுந்தவுடன் துலுக்காணத்துக்கு வேறு எந்த நினைவும் எழவில்லை. வேறு புறம் திரும்பித் தன் தகப்பனுக்குத் தெரியாமல் நாவால் ஒருமுறை உதட்டைத் துழாவிக் கொண்டான். ‘ஹும்! ஒரு பிளேட் சாம்பார் சாதம் வெள்ளத்தில் கரைந்தே விட்டது’ என்ற ஏக்கம் அவனுக்கு.

மோட்டாரில் இருந்தவர்கள் தங்களுக்கு உதவி செய்தவர்களை வாழ்த்திக் கொண்டு வந்தார்கள். நல்ல மனமுள்ள சில சினிமாக்காரர்களும், வேறு சில செல்வந்தர்களும், இரக்க குணம் படைத்தவர்களும் அவர்களுக்குப் புகலிடம் கொடுக்க முன் வந்திருக்கிறார்களாம். அதோடு உணவும் உடையும் கூடக் கிடைக்குமென்றுபேசிக்கொண்டார்கள்.

பள்ளிக்கூடங்கள், அரசாங்க அலுவலகங்கள், திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள், சில பெரிய மாளிகைகள் இப்படி வெவ்வேறு இடங்களுக்குக் கார்கள் பிரிந்து சென்றன.

துலுக்காணம் முதலியவர்கள் ஏறியிருந்த மோட்டார் பெரிய மாளிகை போல் தோன்றிய ஒரு கட்டிடத்தின் காம்பவுண்டுக்குள் நுழைந்தது. பிறகு ஒரு பிரும்மாண்டமான கூடத்தின் அருகில் நின்றது. அங்கு நின்றவர்கள் அவர்களை அழைத்துக் கொண்டு போய் உள்ளே தங்கச் சொன்னார்கள்.

துலுக்காணத்துக்குத் தன் கண்களையும் காதுகளையும் நம்பவே முடியவில்லை. இத்தனை பெரிய இடத்துக்குள் போகச் சொல்கிறார்களே! தாயும் தகப்பனும் அவனைப் பிடித்து இழுத்ததால், குளிரோடு சேர்த்துப் பயத்தையும் உதறிக் கொண்டு, மெல்ல உள்ளே நுழைந்தான்.

உள்ளே அந்தக் கூடத்தில் கண்ட காட்சியை அவன் அதுவரையில் நேரில் பார்த்ததே யில்லை. திரைப்படத்தில் எப்போதோ அவன் ஒரே ஒரு முறை பார்த்திருக்கிறான். அந்தக் காட்சியும் சீக்கிரம் மறைந்து விட்டது.

அவன் பார்த்தது உண்மைதான் என்று நம்புவதற்கு அவனுக்கு வெகு நேரம் சென்றது. அவன் நடந்து சென்ற தரை வழவழவென்று பளிங்கு போலிருந்தது. ஒருபுறம் மெத்தை வைத்துத் தைத்த நாற்காலிகளும் சோபாக்களும் ஒதுங்கிக் கிடந்தன. கண்ணைப் பறிக்கும் திரைத் துணிகள். மேலே அண்ணாந்து பார்த்தான். எங்கும் விசிறிகள், மின் விளக்குகள், என்னென்னவோ, அவனால் புரிந்துகொள்ள முடியாத சாமான்கள்.

ஏப்ரல்
14உ முதல்
சென்னை
கெயிட்டி
பிரபாத்
சரஸ்வதி
நூர்ஜஹான்
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
கொங்கு நாட்டு தங்கம்
டைரக்ஷன் • M.A. திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்
சங்கீதம்
K.V. மஹாதேவன்
கதை வசனம்
ஆரூர் தாஸ்
கேமரா...
C.V. மூர்த்தி
Elegant

அவ்வளவும் அவனுக்குப் பிரமிப்பைத் தந்தன வென்றாலும், அந்த மாளிகையிலும் அவனுக்கு ஒரு குறை தென்படாமல் இல்லை. ஒரு மாதம் கஷ்டப்பட்டுப் பதினைந்து நயாபைசா காசைச் சேர்க்க முடிந்தால், அதை எப்படிக் கந்தலில் முடிந்து, கூரையில் சொருகுவது? தலையைத் தட்டுகிற உயரத்தில் கீற்றுக்கூரை போட்டிருந்தால் எவ்வளவு சௌகரியமாய் இருக்கும்?

நன்றாக உற்றுப் பார்த்தான். அங்கே காசைச் சேர்த்து வைக்கிறாற் போல் ஓர் இடம்கூடத் தென்படவில்லை. 'ப்பூ! இவ்வளவுதானா?' என்று தனக்குள் அலட்சியமாய்ச் சொல்லிக்கொண்டான்.

அவனுடைய அலட்சியம் அடங்குவதற்குள் அங்கு மற்றோர் அதிசயம் நடந்தது. எல்லோரையும் வரிசையாக வந்து உட்காரச் சொன்னார்கள். துலுக்காணமும் தன்னைப் பெற்றவர்களுக்கு மத்தியில் உட்கார்ந்தான். உட்கார்ந்த ஒரு நிமிஷத்தில் ஒவ்வொருவர் கரங்களிலும் ஒவ்வொரு காகிதப் பொட்டலம் வந்து விழுந்தது. பொட்டலங்களைப் பிரிப்பதற்கு முன்பே 'கும்' மென்று நெய் வாசனை வீசியது.

துலுக்காணம் தன் பொட்டலத்தைப் பிரித்தவுடன் தன்னை ஒருமுறை கிள்ளிப் பார்த்துக் கொண்டான். அவன் சொப்பனம் காணவில்லை. அவன் கையிலிருந்தது சூடான சாம்பார் சாதப் பொட்டலம்தான். சந்தேகம் இல்லை; சந்தேகமே இல்லை; சாம்பார் சாதமேதான்...

துலுக்காணத்தின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. இடது கையால் தன் பரட்டைத் தலையை ஒதுக்கி விட்டுக் கொண்டான். சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டான். வெகு நேரம் அதைப் பார்த்துக் கொண்டே மெல்ல மெல்லச் சாப்பிட்டான். மற்றவர்கள் சாப்பிட்ட பிறகும் அவசரமில்லாமல் சாப்பிட்டான். சீக்கிரம் தீர்ந்து விடக் கூடாதல்லவா? பிறகு, இலையைப் பளபளவென்று சுத்தப்படுத்தினான். தூக்கி எறிய மனமில்லாமல் எறிந்துவிட்டுக் குழாயில் கையைக் கழுவினான்.

அன்றைக்கு மாலை அங்கே மற்றோர் அதிசயம் நடந்தது. எல்லோருக்கும் கனமான போர்வைகள் கொடுத்தார்கள். பெரிய போர்வை; புதுப் போர்வை. ஒவ்வொருவருக்கும் சொந்தமாகவே கொடுத்து விட்டார்கள்!

மழையும் புயலும் வந்தாலும் வந்தது, அதிசயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. ஈரத் துணிகளைக் கழற்றச் சொல்லி, மாற்றுத் துணிகளும் கொடுத்து விட்டார்கள்.

இரண்டு நாட்களுக்கு மேல் இப்படி இந்திர போகத்தை, குபேர சம்பத்தை, நினைத்துப் பார்க்க முடியாத இன்ப வாழ்க்கையை அநுபவித்தான் துலுக்காணம். காலையில் இட்டிலி சாம்பார், மற்ற வேளைகளில் சாம்பார் சாதம், இரவில் அந்த மாளிகைக்குள்ளாகவே புதுப் போர்வைக்குள் உறக்கம்.

'அடடா, வெள்ளம் வந்தாலும் இப்படியல்லவோ வரவேண்டும்?' என்று நினைத்து ஆனந்தப்பட்டான் அவன்.

மூன்றாவது நாள் மழை குறைந்தது; புயலும் தணிந்தது. அந்த மாளிகைக்குள்ளிருந்த வானொலிப் பெட்டிக்கு முன் பலர் கூடிக் கொண்டிருந்தார்கள்.

"நாளையிலிருந்து மழையும் புயலும் கிடையாது. இனி சமீபத்தில் மறுபடியும் இப்படிப் பெரிய அளவில் வருவதற்கான நிலைமை இல்லை" என்றது வானொலிப் பெட்டி.

துலுக்காணத்தின் அப்பா குப்புச்சாமி புன்னகை பூத்தான். அம்மா முனியம்மாள், "அப்பாடா! கடவுள் ஒருவழியாகக் கண்ணை முழிச்சிட்டார்!" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

துலுக்காணம் உம்மென்று முகத்தை என்னவோ போல் வைத்துக் கொண்டு நின்றான். 'கடவுள் எதுக்காக இப்பக் கண்ணை முழிக்கிறார்? மழையும் புயலும் இல்லேன்னா நம்ப இங்கேவந்து இவ்வளவு சுகமாகத் தங்கியிருக்க முடியுமா? இதெல்லாம் பெரியவர்களுக்குத் தெரிய மாட்டேங்குதே!'

"அப்பா! இந்த மழை நிக்கவே படாதுப்பா!" என்று பரிதாபமாக அடம் பிடிக்கும் குரலில் கூறினான் துலுக்காணம். "நின்னு போச்சுன்னா நம்மளை இங்கே யிருந்து போகச் சொல்வாங்கள்ள?" என்றான்.

"சொல்லாமல் இருப்பாங்களா?— சொல்லியும் போகலேன்னா அடிச்சு விரட்டுவாங்க!" என்று கூறினான் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மற்றொரு குப்பத்து மனிதன்.

துலுக்காணம் அவனைக் கோபத்தோடு பார்த்தான்; பார்த்துக் கொண்டே நின்றான். அவனது நெஞ்சில் இடி இடித்தது; புயல் வீசியது; மழை கொட்டியது. அதனால் ஏற்பட்ட வெள்ளம் அவன் கண்களில் பெருகியது

மகனின் கண்ணீருக்குக் காரணம் தெரியாத குப்புச்சாமி அதை மெல்லத் துடைத்து விட்டான், அவன் கண்களை இந்தச் சமுதாயம் துடைத்துவிட்டதைப் போல. இந்தக் கண் துடைப்பால் துலுக்காணத்தின் கண்ணீர் நிற்கவில்லை; வெள்ளம் வடியவில்லை.



உள்ளது
உள்ளபடியே
எடுத்துக்
காண்பிக்க
LIPI
லிபி
போட்டோகிராபிக்
பேப்பர்களே!
(இந்தியாவிலேயே முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்)
லிப்ரா போட்டோகிராபிக் இண்டஸ்ட்ரீஸ்
(போத்தனூர் - தென் இந்தியா)

"அம்மா, போயிட்டு வாரேன்..."

தென்னிந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் இரு கோடி மக்கள் பஸ் பிரயாணம் செய்கின்றனர். முக்கியமான ஒவ்வொரு கிராமத்துக்கும் திறமையான பஸ் போக்கு வரத்து உண்டு.

பஸ் பிரயாண போக்கு வரத்தில் ஒரு தரத்தை நிர்ணயிப்பது மட்டும் போதாது. இதனை 1920ஆம் ஆண்டு முதலே டிவிஎஸ் உணர்ந்திருக்கிறது. புது பஸ் கம்பெனிகள் பலவற்றை அமைப்பதற்கு ஆக்கம் அளித்த ஸ்தாபனம் டிவிஎஸ். புதுக் கம்பெனிகளுக்கு வேண்டிய பொருளாதார உதவி செய்தல், பஸ் பாடிகளைக் கட்டுதல், பஸ்களைச் சரிவரப் பராமரிப்பதற்கு வேண்டிய பயிற்சி அளித்தல், டயர்களை ரீடிரெட் செய்து புதுப்பித்தல், தேய்ந்து போன உறுப்புக்களுக்கு புத்துயிரளித்தல் முதலிய பணிகளைச் செய்ய தென்னகத்தில் டிவிஎஸ் ஸ்தாபனம் தோன்றியது. தென்னிந்தியாவின் சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்க டிவிஎஸ் ஸ்தாபனங்களின் வளர்ச்சி ஓர் அளவு கோலாகும். மோட்டார்த் தொழிலில் நாள்தோறும் பெருகி வரும் தேவைகளை டிவிஎஸ் ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்கின்றன.

பஸ் பிரயாணத்தில் பயமில்லை; பத்திரமாக குறித்த காலத்தில் போய்ச் சேரலாம். இதனாலேயே "போயிட்டு வாரேன்" என்று சொல்லும் பொழுது மன உறுதி செயலாக உருவாகிறது.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதறாஸ் - பெங்களூர் - செகந்திராபாத்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
புதுக்கோட்டை - மதறாஸ் - கோயமுத்தூர் - பெங்களூர்
மதறாஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதறாஸ் - பெங்களூர்
சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை
மதறாஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதறாஸ்
இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் அக்ஸெஸரீஸ் லிமிடெட் மதறாஸ்
சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், மதறாஸ்

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை

JWT/TVS/U 927a

குறுநாவல்

பட்டுப்பூச்சி

பொன்முடி



1-பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகத்திலிருந்து வந்த பட்டமளிப்புவிழா அழைப்பு இதழைப் படித்து முடித்தபோது சுகுணாவுக்குப் பழைய நினைவுகளை வரிசையாய் நினைக்கத் தோன்றியது. நேற்றுத் தான் பரீட்சை முடிந்தது போலிருக்கிறது! நாட்கள் தாம் எவ்வளவு வேகமாக ஓடியிருக்கின்றன? பரீட்சை மண்டபத்தின் ஆழ்ந்த அமைதிக்கு நடுவே படபட வென்று அடித்துக் கொள்ளும் மன நிலையோடு விடைகளையும் எதிர் காலத்தையும் சேர்த்து நினைத்துத் தவித்த நாட்கள் இப்போதுதான் கழிந்து போயின போல் தோன்றுகின்றன. குறுக்கும் நெடுக்கும் நடை போட்டுக் கொண்டே மாணவர்களைக் கண்காணித்த பேராசிரியர்களின் கூரிய விழிப்பார்வையும், விடையெழுதிய தாள்கள் புரட்டப்படுகிற ஒலியும், விடைகளை உரிய நேரத்துக்குள் எழுதித் திருப்பிக் கொடுக்க வேண்டுமே என்று பரபரப்புக் காட்டும் முகங்களும் இன்னும் பசுமை மாறாமல் கண்ணுக்குள் நிறைந்திருக்கின்றன. மனத்துக்குள் நிழலிடுகின்றன. படித்துக் கொண்டிருந்தபோது பரீட்சையைப் பற்றிய கவலை. பரீட்சை எழுதியபோது ரிஸல்டைப் பற்றிய கவலை. ரிஸல்ட் வந்தபோது வாழ்க்கையைப் பற்றிய கவலை. இப்போது மீதமிருப்பது இந்த மூன்றாவது கவலை மட்டும்தான். முடிவாக நினைவுகளும் நினைவுகள் பிறந்த மனமும். 'நான் ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும்' என்ற ஒற்றைக் கவலையில் வந்து மேலே வளராமல் நின்றன. சுகுணாவுக்குப் பெருமூச்சு வந்தது. தாய்படும் துன்பங்களெல்லாம் நினைவில் உறுத்தின.

அம்மா இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி அப்பளமும், வடாமும் விற்று என்னையும், தன்னையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்?

சுகுணா! அவர் என்னை இப்படிச் சீரழியவிட்டு அல்பாயுசாகப் போனதற்கு நீ மட்டும் பெண்ணாகப் பிறந்திருக்காமல் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எனக்கு எத்தனை ஆறுதலாயிருக்கும், தெரியுமா? சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையல்லவா? —என்று அம்மா அடிக்கடி சொல்லிக் குறைப்பட்டுக் கொள்ளும் வார்த்தைகளை நினைத்துக் கொண்டாள் அவள். அம்மா இப்படிச் சொல்லும் ஒவ்வொரு முறையும் சுகுணாவுக்கு என்னவோபோலிருக்கும். ஓரிரு வேளைகளில் இது அவள் உள்ளத்தில் சுருக்கென்று தைத்ததுண்டு. "இப்படி உன்னிடம் வார்த்தை கேட்பதற்கு நான் ஒரு பெண்ணாகப் பிறந்தேனே என்று எனக்கும் வருத்தமாகத்தானம்மா இருக்கிறது" —என்று சில சமயங்களில் விளையாட்டாகச் சிரித்துக் கொண்டே அம்மாவுக்குப் பதிலும் சொல்லியிருக்கிறாள் அவள். அப்போதெல்லாம் "அதற்கில்லையடி, பெண்ணே! ஒரு வார்த்தைக்குச் சொன்னேன். பெண் பிறந்ததோ, கவலை பிறந்ததோ என்று பழைய வசனம் சொல்வார்கள்" என்று அவளைச் சமாளித்துத் தழுவிக் கொள்வாள்

அம்மா, சிற்சில வேளைகளில் விளையாட்டுப் போல் அம்மாவை எதிர்த்துச் சொல்லி விடுவாளே தவிர, சுகுணாவின் மனத்தில் அம்மாதான் தெய்வம். அம்மா இல்லாவிட்டால் அவளுக்கு ஒன்றுமே இல்லை. இந்தத் தள்ளாத வயதில் விடு வீடாக ஏறி இறங்கி ஏழ்மையும் இழப்பமும் பாராமல் அப்பளம் வடாம் விற்றுப் பெண்ணைக் கல்லூரிப் படிப்புவரை படிக்க வைத்த தாயைத் தெய்வமென்று நினைக்காமல் வேறு எப்படி நினைப்பது? அவள் பிள்ளையாகப் பிறந்திருந்தால் அம்மா என்னென்ன செய்து மகிழ்ந்திருப்பாளோ, அவ்வளவு சீரையும் தனக்குப் பிறந்த பெண்ணுக்கே கொண்டாடிப் பார்த்து விட்டாள். அம்மாவுக்கு நிறைந்த மனம். குறைந்த வசதிகள். ஒற்றைக்கொரு குழந்தையாகப் பிறந்திருந்த சுகுணாவுக்கு என்னென்னவோ அலங்காரமெல்லாம் புனைந்து பார்க்க வேண்டுமென்று அம்மாவுக்கு ஆசைகள் உண்டு. கையில் ஒட்டமில்லை. அப்பளம் வடாம் விற்பதிலும், முறுக்கு, சீடை செய்து கொடுப்பதிலும் குபேர சம்பத்தா குவிந்து விடும்? வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டிப் பெண்ணைப் படிக்க வைத்ததே பெரிய காரியம். அப்பா இறந்து போனபோது சுகுணாவையும், கவலைகளையும் தவிர வேறு எதையும் அம்மாவுக்கு வைத்து விட்டுப் போகவில்லை. தேசத் தொண்டு, சமூக சேவை என்று ஊர் ஊராக அலைந்து நிலத்தையும், கையிலிருந்த பணத்தையும் கட்சி, கூட்டம் மகாநாடுகளுக்காகச் செலவழித்து விட்டு மிக இளமையிலேயே இறந்து போனவர் சுகுணாவின் தந்தை. கேவலம் பாராமல், உழைப்பில் இழப்பம் நினைக்காமல் எதையும் துணிந்து செய்யும் தன்னம்பிக்கை அம்மாவுக்கு இருந்தது. அந்த நம்பிக்கை மட்டும் அம்மாவுக்கு இல்லாமற் போயிருந்தால் தாயும் மகளுமாக இரட்டைப் பிச்சைக்காரிகளாய் எங்கேயாவது கோவில் வாசலில் நின்று கொண்டு வயிறு வளர்க்க நேர்ந்திருக்கும். கழுத்து அமங்கலமாகப் போனபின்னும் மனம் மங்கலமாக இருந்தது அம்மாவுக்கு. அம்மாவின் அந்த நல்ல மனத்தினால்தான் இவ்வளவும் நடந்தது, நடக்கிறது. இன்னும் நடக்கும்.

சுகுணா எஸ். எஸ். எல். சி. படிக்கிறபோதே அவள் படிப்பை நிறுத்தி விட முயன்றாள் அம்மா. அப்போதே சுகுணாவுக்கு நல்ல வளர்ச்சி. தங்கக் குத்து விளக்கு மாதிரி வளர்ந்து நிற்கிற பெண்ணை மேலும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிக் கொண்டிருப்பது நன்றாயிருக்குமா என்று தயங்கினாள் அம்மா. ஆனால் சுகுணா பள்ளிக்கூடத்தை விடுவதற்குச் சம்மதிக்கவே இல்லை. கல்யாணம் என்று வந்தால் பெண் படித்திருக்கிறாள் என்கிற ஒரு தகுதியாவது இருக்கட்டுமே என்ற நினைப்பினால்தான் தயக்கத்தோடு தயக்கமாகப் பெண்ணை பி. ஏ. வரையில் படிக்க வைத்துவிட்டாள் அம்மா. இல்லாவிட்டால் முன்பே நின்று போயிருக்க வேண்டிய படிப்புத்தான் அது.

ஒரு வழியாகப் படித்தாயிற்று. முதல் வகுப்பில் தேறி, பட்டமும் கிடைக்கப் போகிறது. நாளைக்குப் பட்டமளிப்பு விழா. இனிமேலாவது அம்மாவுக்கு விடிவு பிறக்க வேண்டும். ஏதாவது ஒரு வேலையைத் தேடிப் பிடித்துக் கொண்டு அப்பளக் குழவிகளின் பிடியிலிருந்து அம்மாவின் கைகளுக்கு விடுதலையளிக்க வேண்டும். சுகுணாவின் மனத்தில் இந்த முடிவு உறுதியாக ஏற்பட்டிருந்தது. வேலைக்குப் போக விடுவதற்கு அம்மா தயங்கினாலும் விவரத்தை எடுத்துச் சொல்லிச் சம்மதிக்கச் செய்து விடலாமென நம்பிக் கொண்டிருந்தாள் அவள். 'இனிமேல் அம்மாவை ஒரு வேலையும் செய்ய விடாமல் உட்கார வைத்துச் சாப்பாடு போடவேண்டும். வேலை கிடைத்தாலும் பத்து மணிக்குள் சமையல் வேலைகளை நானே முடித்து அம்மாவுக்கும் போட்டு விட்டுப் புறப்பட்டுப் போக வேண்டும்' — என்று நினைத்துக் கொண்டாள்

கருணா. 'நீ பிள்ளையாகப் பிறந்திருந்தால் எனக்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கும்!' என்று இனி நினைக்கவும் முடியாதபடி அம்மாவை உட்கார்த்தி உபசரிக்க வேண்டும் என்று நினைத்துப் பார்க்கிறபோது கருணாவுக்குப் பெருமையாயிருந்தது. ரிஸல்ட் வந்தவுடனே பத்திரிகைகளில் பார்த்து இரண்டு மூன்று வேலைகளுக்கு விண்ணப்பமும் அனுப்பி வைத்திருந்தாள் அவள்.

வீட்டில் அம்மாவும் பெண்ணும் ஓய்வாகப் பேசிக் கொள்வதற்கு வாய்க்கிற நேரமே இரவு ஒன்பது மணிக்கு மேலே தான். அது வரையில் அம்மாவுக்கு ஏதாவது வேலைகள் இருக்கும். முடித்த வேலைகளில் கருணாவும் அம்மாவுக்கு உதவியாக அப்பளமிட உட்கார்ந்துவிடுவாள்.

"நீ உன் வேலையைப் பாரேன். இதற்கெல்லாம் வராதே" என்று அம்மா பெண்ணைச் செல்லமாகக் கடிந்து கொள்வாள். கருணா அந்த வேலைகளையெல்லாம் செய்ய வருவது அம்மாவுக்குப் பிடிக்காது. சுவர்ண விக்கிரகம் போல் இருக்கிற தன் பெண்ணை அழுக்குப்படாமல் வளர்த்து அழகு பார்ப்பதில் அம்மாவுக்குக் கொள்ளை ஆசை.

மறுநாள் கருணா மிகவும் உற்சாகமாயிருந்தாள். பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் கருத்துச் செறிவோடு அற்புதமாயிருந்தது. இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெற்ற பேரறிஞர் ஒருவர் விழாப் பிரசங்கத்தை நடத்தினார். அவர் சமூக சீர்திருத்தத் துறையிலும் நிறையப் பணி புரிந்தவர்.

"ரெயில்வே நிலையத்தில் காசை உள்ளே போட்டதும் டிக்கட்டை வெளியே தள்ளுகிற எந்திரம் போல உங்களில் பலர் இந்தப் படிப்பை நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. மெய்யான படிப்பு உங்களுக்குள்ளே இருக்கும் அகக் கண்களை நன்றாகத் திறக்க வேண்டும். பல பேருடைய அகக் கண்களைத் திறந்து உதவுவதற்கும் பயன்பட வேண்டும்" என்பது போல் விழாவில் சொற்பொழிவாளர் கூறிய பல கருத்துக்கள் கருணாவின் மனத்தைக் கவர்ந்தன. அவளுக்கும் அப்படி ஓர் இலட்சியப் பித்து உண்டு. தான் செய்யப் போகிற வேலை பலபேருடைய அகக் கண்களைத் திறக்கும் பணியாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள் அவள். சொற்பொழிவாளர் தம் பேச்சு வன்மையால் எல்லோருடைய மனத்தையும் மிக உயரத்துக்கு வளரச் செய்து விட்டார். குமாஸ்தா வேலையையும், வேறு பல வெள்ளை வேஷ்டி உத்தியோகங்களையும் கற்பனை செய்து கொண்டு குழுமியிருந்த மாணவர்களிடையே தம் பேச்சின் மூலம் ஒரு புரட்சியையே உண்டாக்கி விட்டு விட்டார்.

கருணாவும் அவளுடைய தோழிகள் சிலரும் விழா முடிந்ததும் பட்டமளிப்பு விழாக் கோலமாகக் கறுப்பு அங்கி, குல்லாயைக் களையாமல் அப்படியே போய்ப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். கருணா வீடு திரும்

பியதும் அம்மா அவனை உள்ளே நுழைய விடாமல் வாசலில் நிறுத்தித் திருஷ்டி சுற்றிக் கழித்தாள். பெண்மேல் கண்ணேறு பட்டு விடக் கூடாதே என்று அம்மாவுக்குக் கவலை.

சாப்பாட்டுக்குப் பின் ஓய்வாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது, "மேலே என்ன செய்வதாக உத்தேசம்?" என்று யாரோ மூன்றாம் வீட்டுப் பெண்ணை விசாரிப்பதுபோல் தன் பெண்ணையே விசாரித்தாள் கருணையின் அம்மா.

"நான் கிராமத்துக்குப் போய்க் கிராம சேவிகையாகப் பணி புரியப்போகிறேன் அம்மா! பட்டினமும், ஆபீஸ் வேலைகளும் என் மனத்துக்குப் பிடிக்கவில்லை. என்னுடைய படிப்பினால் சிலருடைய அகக் கண்களையாவது திறந்துவிட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது" என்று பெண்ணிடமிருந்து பதில் வந்தபோது அம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கருணையின் அப்பா இப்படித்தான் அடிக்கடி விளங்காதபடி ஏதாவது பேசுவார்.

"என்னடி, அசடுமாதிரி உளறுகிறாய்? இத்தனை பெரிய பட்டினத்தில் இல்லாத வேலை கிராமத்திலா இருக்கப் போகிறது? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன?"

"இப்படிப்பட்ட பைத்தியம் இந்தத் தேசத்துப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெறுகிறவர்களில் நூற்றுக்குப் பத்துப்பேர்கள் வீதம் பிடித்திருந்தாலும் நமது தேசம் என்றைக்கோ பொன் விளையும் பூமியாயிருக்கும் அம்மா!" என்று கருணை சொற்பொழிவு போல் பதில் கூறியபோது அம்மா திகைத்தாள். பெண்ணின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

2. தாமரைக்குளம்

இலட்சியம். தொண்டு. சீர்திருத்தம் இந்தமாதிரி வார்த்தைகளை யாராவது பேச ஆரம்பித்து விட்டாலே அம்மாவுக்குப் பயம் தான். இப்படிப் பேசிப் பேசித்தான் அவர் அல்பாயுசாய்ப் போய் விட்டார் என்பது அவளுடைய ஆற்றாமை. இப்போது பெண்ணும் இதே வார்த்தைகளைப் பேசத் தொடங்கவே அவள் மனம் அஞ்சத் தொடங்கியது. எப்படி எப்படி ஆகுமோ என்று பயந்தாள்.

"என்னவோ, உனக்குத் தெரியாததில்லையம்மா! இவ்வளவு படித்த பெண்ணுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன்? இப்போதைக்கு ஒரு வேலை பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்தான். என்றைக்கும் அப்படியே வேலையும் நீயுமாக இருந்துவிட முடியாது. ஊர் உலகத்துக்கு ஒத்தாற்போல் அதது ஆக வேண்டிய வயதில் அதது ஆக வேண்டும்."

அம்மா கூறியதைக் கேட்டுக் கருணை சிரித்தாள். "எனக்கு ஆட்சேபணையே இல்லையம்மா! பி. ஏ. படித்திருக்கிறேன் என்பதற்காக எல்லாச் செலவும் தானே போட்டுக் கல்யாணம் பண்ணி என்னை அழைத்துக் கொண்டு போகிற மாப்பிள்ளை யாராவது உனக்குக் கிடைப்பாரா? என் கலியாணத்துக்காகச் செலவழிக்க நீ என்ன சேர்த்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறாய்? டின் நிறைய அப்பளமும், வடாமும்தான் இருக்கின்றன. உன் கவலை எனக்குத் தெரியாதா அம்மா? எல்லாம் தானே நடக்கும்! இன்னும் என்னைப் பச்சைக் குழந்தையாகவே நினைத்துக் கொண்டு பேசாதே" என்று பெண் கூச்சமில்லாமல் தெளிவாகப் பதில் கூறக் கேட்டபோது அம்மா அயர்ந்து போனாள். கருணை கேட்டது நியாயம்தான் என்பது அம்மாவுக்கும் புரிந்தது. கையில் காசு இல்லாமல் கலியாணத்தைப் பற்றிப் பேசினால் சிரிக்கமாட்டார்களா?

'என்ன இருந்தாலும் என் பெண் புத்திசாலி தான். இனிமேல் நான் சொல்கிறபடி அவள் கேட்பதைவிட அவள் சொல்கிறபடி கேட்டுக் கொண்டு நான் பேசாமல் இருந்து விடுவது தான் நல்லது' என்று மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டாள் அம்மா.

செத்துப்போன அப்பா, தாம் வாழ்ந்த காலத்தில் செய்திருந்த தேசத் தொண்டுகளையும், தியாகங்களையும் நினைவுபடுத்தி, 'அந்த அப்பாவுக்குப் பெண்தான் நான்' என்பதையும் எடுத்துக் கூறி, ஒரு மாத காலம் அலைந்து திரிந்த பின் தேசிய வளர்ச்சித் திட்டத்தில் ஒரு வேலை பெற்றாள் கருணை.

'தாமரைக் குளம்' என்ற கிராமத்தைச் சார்ந்துள்ள பகுதிகளுக்காகச் சர்க்கார் அமைத்திருந்த தேசிய வளர்ச்சி பிர்க்காவுக்குத் தலைவியாக அவளை நியமனம் செய்தார்கள். அப்பப்பா! அந்த நியமனம் கிடைப்பதற்கு மந்திரிவரை பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது.

அவளுடைய எடுப்பான தோற்றத்தையும் பி. ஏ. முதல் வகுப்புத் தேர்ச்சியையும் கண்டு, "உனக்கு எதற்கம்மா இந்த முரட்டு வேலையெல்லாம்? அலைச்சல் அதிகமாயிருக்குமே. பிர்க்காவைச் சேர்ந்த கிராமங்களுக்கெல்லாம் சைக்கிளில் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டும்! கோழிப்பண்ணையிலிருந்து, முதியோர் கல்வி வரையில் அலைந்து கவனித்துக் கொள்ள வேண்டும், உன்னால் முடியுமா?" என்று மந்திரி புன்முறுவலோடு அவளைக் கேட்டார்.

"இந்த வேலைக்கு நான் தகுதி இல்லை என்கிறீர்களா? இந்த வேலை எனக்குத் தகுதி இல்லை என்கிறீர்களா? பிழைப்புக்காக இதைக் கேட்கவில்லை. பிழைப்புடன் எனக்குச் சமூக சேவையில் ஆர்வமும் இருக்கிறது:

அளவற்ற
தூரம்
அலேந்தாலும்
தகும்
ஒரு வாய்
வின்ஸெண்ட்
அருந்த . . .

வின்ஸெண்ட்ஸ்

ஐம்பது ஆண்டுகளுக்கு அதிகமாக
தென்னிந்தியாவின்
அபிமான பானமாக விளங்குவது.

வின்ஸெண்ட் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
திருச்சிராப்பள்ளி - சென்னை - சேலம் - கும்பகோணம்
காரைக்குடி - திருநெல்வேலி - மதுரை - கோயமுத்தூர்

- ★ ஸோடா வாட்டர்
- ★ ஆரஞ்சு
- ★ லெமனேட்
- ★ வின்கோ-கோலா
- ★ மாங்கோ-ஸிப்
- ★ வின்ஸெண்ட் ஸ்பெஷல்

EP

அஸோஸியேட்டுகள்: வின்ஸெண்ட் & கம்பெனி, திண்டுக்கல்

1-4-1961 முதல் கடலூரில் (O.T.) தங்கள் புதிய கிளை ஒன்றை ஆரம்பித்திருப்பதை வின்ஸெண்ட்ஸ் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றனர்



ரூ. 5/-

சிறந்த சேமிப்பிற்கு
வழி காட்டும்
திறவு
கோலாகும்

பற்றாக்குறையேற்படும் காலே சமாளிக்க இன்றே சேமிக்க ஆரம்பியுங்கள். மெர்கன்டைல் பாங்கில் ஒரு சேவிங்ஸ் அக்கவுண்டு வைத்துக்கொள்ள 5 ரூபாய்களே போதுமானவை. சிறுகச் சிறுக உங்கள் சேமிப்பு பெருகட்டும். உங்கள் பணத்திற்கு 3 சத விதம் வட்டி உண்டு.

வட்டி விதம் 3%

மெர்கன்டைல் பாங்க் லிமிடெட்,

16, முதல் லேன் பீச்,
மற்றும்
198, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

"உடனுக்குடன்"
வயிற்றுக் கோளாறுகளிலிருந்து
நிவாரணம் பெற

நீங்கள் எங்கு சென்றாலும் வயிற்றுக் கோளாறுகள், வாயு, நெஞ்செரிச்சல் அல்லது புளிப்பினால் ஏற்படும் அஜீரண கோளாறுகளினால் அவதிப்படக்கூடும். ஆகையால் உடனடி நிவாரணம் தரக்கூடிய ரம்மியமான வாசனையுள்ள பிலிப்ஸ் மாத்திரைகளை எடுத்துச் செல்லுங்கள். உலகத்திலேயே வேகமாக வேலை செய்து அமிலத்தை எதிர்க்கும் பொருள்களில் ஒன்று பிலிப்ஸ் மாத்திரைகளில் இருப்பதால் சாப்பிட்டவுடனேயே உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். கையில் எடுத்துச் செல்ல 4 மாத்திரைகள் கொண்ட மடித்த அட்டைகளும் மற்றும் 75 மற்றும் 150 மாத்திரைகள் கொண்ட புட்டிகளும் கிடைக்கின்றன.

பிலிப்ஸ்
REGD. TRADE MARK
மில்க் ஆப் மக்னீஷியா
வில்லைகள்

பூரண விநியோகஸ்தர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா-பம்பாய்-டெல்லி-சென்னை-பாட்னா-கௌஹாத்தி-கட்டாக்

லிட்டில்ஸ்
ஓரியண்டல்
பாம்

75 ஆண்டுகளுக்கு மேலாக ஜலதோஷம் மற்றும் வலி முதலிய உபாதைகளுக்கு நம்பகமான நிவாரணி.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
ஸ்பென்ஸர் எஸ்டேட் - சென்னை - 2

LOB-509

அதனால்தான் கேட்கிறேன். 'சமூக சேவையில் சிறிதுமே ஆர்வ மில்லாதவர்கள்தான் இந்த வேலைக்குச் சரியானவர்கள் என்று நீங்கள் நினைப்பதா யிருந்தால் இது எனக்கு வேண்டாம்'' என்று வெடிப்பாகப் பதில் சொன்னாள் கருணா.

இதைக் கேட்டு மந்திரிக்குக் கோபம் வரவில்லை. அவர் சிரித்து விட்டார். கருணாவுக்கு அப்படி ஒரு தனித் தன்மை. அவள் யாரிடம் எடுத்தெறிந்து பேசினாலும் பதிலுக்கு அவர்கள் எடுத்தெறிந்து பேச மாட்டார்கள் சிரித்துக் கொண்டே கேட்பார்கள். அவள் தோற்றத்தின் கவர்ச்சியைக் கண்டபின் எந்தக் கிராதகனாலும் அவளோடு இரைந்து பேசவோ, சீறிப் பேசவோ முடியாது. கவர்ச்சியோ, குளுமையோ, அழகோ, எந்த வார்த்தையால் சொன்னாலும் அது அவளுக்கு வாய்த்திருந்தது. ''வேலை கிடைத்துவிட்டது! தாமரைக் குளம் என்ற ஊரில் போட்டிருக்கிறார்கள். புறப்பட வேண்டும்'' என்று கருணா வந்து சொன்னவுடன் அம்மா மறு பேச்சுப் பேசாமல் ஒப்புக் கொண்டு விட்டாள்.

''இரண்டு நாள் அவகாசம் கொடு! அப்பளம் போட்டிருக்கிற வீட்டிலெல்லாம் பாக்கி வசூல் பண்ணிக் கொண்டு இனிமேல் வேறு யாரிடமாவது வாங்கிக் கொள்ளச் சொல்லி விவரம் கூறிவிட்டு வந்து விடுகிறேன்'' — என்றாள் அம்மா. இருபது வருஷப் பழக்கத்தையும் பழகியவர்களையும் பிரிவதென்றால் இலேசா? ஒவ்வொருவராகப் பார்த்துச் சொல்லி விடைபெற்றுக் கொண்டாள் கருணா.

''உன் சுபாவத்துக்கு இந்த வேலை ஒத்து வருமடி கருணா. நீதான் கல்லூரிக்கே கதர்ச் சேலை கட்டிக் கொண்டு வருவாயே?'' என்று பாராட்டிய தோழிகள் சிலர்.

''எதற்காக இந்த வம்பில் போய் மாட்டிக் கொள்கிறாய்? அழகான பட்டினத்தை விட்டுப் பட்டிக்காட்டுக்கு ஓடி, என்ன குரு க்ஷேத்திரமோ?'' என்று ஏளனம் செய்த தோழிகள் சிலர்.

''பட்டினமும், நீங்களும் அழகாயிருப்பதாக நீங்களேதான் சொல்லிக் கொள்ள வேண்டும். வேறு யாரும் துணிந்து அதைச் சொல்ல மாட்டார்கள்'' — என்று அவர்கள் முகத்தில் அறைந்தாற் போல் பதில் சொல்லி விட்டு வந்தாள் கருணா.

''பெண்ணுக்கு வேலையாகி யிருக்கிறது. வேறு ஊருக்குப் போகிறோம்'' — என்று தன் வாடிக்கை வீடுகளில் எல்லாம் சொல்லி விடை பெற்றுக்கொண்டிருந்தாள் அம்மா.

★

தாமரைக் குளத்துக்கு ரயில்வே ஸ்டேஷன் உண்டு. ஆனால் அந்த ஸ்டேஷனுக்கு எக்ஸ்பிரஸ் வண்டிகள் நிற்கிற கௌரவம் மட்டும் கிடையாது. எல்லார் கையிலும் இரண்டிரண்டாக விழுகிற பஜனை மடத்துச் சுண்டல் போல் எல்லா ஸ்டேஷன்களிலும் நிற்கிற சாதாரண வண்டிகளே தாமரைக் குளத்திலும் நிற்கும். ஒவ்வொரு நாளும் சாயங்காலம் அந்தி மங்குகிற சந்தி வேளையில் தாமரைக்குளம் ஸ்டேஷனில் பாஸஞ்சர் வண்டி வந்து நிற்கிறபோது ஸ்டேஷன்மாஸ்டர் உள்பட நாலு பேர்கள் நிச்சயமாய் அங்கு நிற்பார்கள். யார் வந்தாலும் வராவிட்டாலும் தாமரைக்குளம் நியூஸ் ஏஜெண்டு ராமலிங்க ரூப்பனார் கண்டிப்பாக வந்திருப்பார். என்னடா 'ராமலிங்க என்று எழுதியிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? ஒரு சமயம் எவனோ தமிழ் உணர்ச்சியுள்ள பத்திரிகைக்காரன் பார்சலில் 'இராமலிங்க ரூப்பனார்' — என்று கைதவறிப் பேரைச் சரியாக எழுதிவிட்டு அவரிடம் பட்டபாடு ஊரெல்லாம் பிரசித்தம். நியூஸ் ஏஜெண்டுக்கு வருகிற எல்லாப் பத்திரிகைப் பார்சல்களும் அந்த மாலை இரயிலில்தான் வரும். அவரையும், ஸ்டேஷன் மாஸ்டரையும் தவிர, ஒரு பாயிண்ட்ஸ்மேன், இரயிலில் வருகிறவர்களுக்குத் தாக சாந்தி செய்து அனுப்பும் ஒரு வாட்டர்மேன் — ஆக மொத்தம் நாலு பேர்கள்தான் தாமரைக்குளம் ஸ்டேஷன். அல்லது நாலு பேருக்காக என்றும் வைத்துக் கொள்ளலாம். தாமரைக் குளம் ஸ்டேஷனுக்கு ரயில் வந்து கொண்டிருக்கிற இரகசியம் இந்த நாலு பேருக்கும் தெரியும்.

ஆனால் அன்று மாலையென்னவோ தாமரைக் குளம் ஸ்டேஷன் சிறிது கலகலப்பாக இருந்தது. ஸ்டேஷனுக்கு வெளியே இரட்டை மாடு பூட்டிய வில்வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. இரயிலை எதிர்பார்த்து வழக்கமான நாலு பேரைத் தவிரப் பஞ்சாயத்து போர்டு தலைவர், கிராம முனிசீப், கோழிப் பண்ணை வடமலைப் பிள்ளை, கதர்க் கடை ராஜலிங்கம் ஆகியவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அன்று பௌர்

ணமியாதலால் கிழக்கே பூர்ண சந்திரன் பெருருவமாக எழுந்து கொண்டிருந்தான். ஸ்டேஷனும், ஊரும் மிக அழகாகத் தோன்றின. தென்னை, மாமரத் தோப்புகளும் சுற்றிச் சுற்றி ஓடும் பன்னீர் ஆற்றின் அழகும் சந்திரோதயத்தில் எழில் மயமாய்த் தோற்றின. பன்னீர் மாதிரியிருக்கும் தண்ணீரையுடையதாக இருந்ததனால் அந்த ஊர் ஆற்றுக்கு அப்படிப் பெயர் தொன்று தொட்டிருந்தது.

ஊரை ஒட்டினாற்போல் மேற்குத் தொடர்ச்சி மலை. மலைச்சரிவில் பழத் தோட்டங்கள். கொடி முந்திரி, மாதுளை, மா, கொய்யா, ஆரஞ்சு, சாத்துக்குடி எல்லாம் அந்த மண்ணுக்கு நன்றாக வரும். மலைத் தொடரும், பசுமையான தோட்டங்களும், ஊரும் ஏதோ பாற்கடலில் மூழ்கி எழுந்தாற் போலப் பூர்ண சந்திரனின் ஒளியில் அற்புதமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்க அந்த அழகிய நேரத்தில் கருணாவும் அவள் அம்மாவும் மூட்டை முடிச்சுக்களோடு தாமரைக்குளம் ஸ்டேஷனில் இறங்கினார்கள். இறங்கி நின்று சுற்றிலும் பார்த்த முதற் பார்வையிலேயே கருணாவுக்கு ஊர் பிடித்து விட்டது. கருணாதேவி, பி. ஏ. என்ற பெயரைப் பார்த்து யாரோ ஐம்பது வயது அம்மாள் கிராம சேவாதளத்துக்குத் தலைவியாய் வரப் போகிறாளென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த பஞ்சாயத்து போர்டு தலைவரும், பிறரும், வெள்ளைக் கதருடையில் மின்னல் இறங்கி நிற்பதுபோல் வந்து நின்று கைகூப்பிய கருணாவைப் பார்த்து ஆச்சரியத்தில் திளைத்துப் போனார்கள். 'என்ன அழகு! என்ன அழகு! இந்தப் பெண்ணின் பாதங்கள் நடந்தால் தாமரைக்குளமே இன்னும் அழகாகி விடுமே.'

"சரியான பட்டுப்பூச்சி ஐயா!" — என்று கிராம முன்சீப்பின் காதில் மெல்ல முணுமுணுத்தார் வடமலைப் பிள்ளை. கையோடு கொண்டு வந்திருந்த ரோஜாப்பூ மாலையை அம்மாவின் கையில் கொடுத்துக் கருணாவுக்குப் போடச் சொன்னார் பஞ்சாயத்து போர்டு தலைவர். பெண்ணுக்கு மாலை போடும்போது அம்மாவுக்கு மனம் பூரித்தது. உடன்வந்திருந்தவர்களையும், தம்மையும் அறிமுகம் செய்து கொண்டார் பஞ்சாயத்துத் தலைவர். அவர்களுக்குத் தன் தாயை அறிமுகம் செய்து வைத்தாள் கருணா.

சாமான்களை வில்வண்டியில் ஏற்றியதும் "நீங்கள் இருவரும் ஏறிக் கொள்ளுங்கள், அம்மா! நாங்கள் பின்னாலேயே நடந்து வந்து விடுகிறோம்" என்றார் கிராம முன்சீப்.

"ஏன்! எல்லோருமே நடந்து போகலாமே" என்றாள் கருணா. "உங்களுக்கு நடந்து பழக்கமிருக்காது. நாங்களெல்லாம் தினசரி நடந்து பழகி விட்டோம். எங்களுக்கு இது சிரமமாகத் தோன்றாது."

"இந்தச் சிரமங்களைப் பழகிக் கொள்ளத் தான் நான் வந்திருக்கிறேன்" என்று சொன்னாள் கருணா. அவர்கள் மேலும் விடாமல் வற்புறுத்தியதின் பேரில் அம்மாவை மட்டும் வண்டியில் ஏறிப் போகச் சொல்லி விட்டுத் தான் அவர்களோடு நடந்தாள். தனியாக நடந்து போனாலும் அந்த நாலு ஆண் பிள்ளைகளும் சிரித்துப் பேசிக் கொண்டு போவார்கள். அவள் உடன் வந்ததனால் அளவாகச் சுருக்கமாய் மட்டுமே பேசிக்கொண்டார்கள். அநாவசியமாகச் சிரிக்கவில்லை. 'சில பெண்களுக்கு அப்படி ஒரு சக்தி. தான் உடன் வருவதனால் மற்றவர்களையும் கௌரவமாக நடந்து கொள்ளச் செய்யும் புனித நிலை சிலருக்கு உண்டு. அரச குமாரியைச் சூழ வரும் ஊழியர்களைப் போல் அடக்க ஒடுக்கமாகக் கருணாவோடு நடந்து கொண்டிருந்தார்கள் அவர்கள்.

3 - சுற்றுப் பயணம்

கிராம சேவாதளத்தின் அலுவலகத்தில் ஒரு பகுதியைக் கருணாவுக்கு வீடாக ஒழித்துக் கொடுத்திருந்தார்கள். சுற்றிலும் பெரிய தோட்டத்தோடு கூடிய பழைய கட்டிடம் அது. கருணாவின் சேவாதளத்தில் அவளுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நான்கு பெண்களும் இரண்டு இளைஞர்களும் கிராமத் தொண்டர்களாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லாருக்கும் சைக்கிள் கொடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவருக்கும் நான்கு கிராமங்களாக வேலை பிரித்து விடப் பட்டிருந்தது. ஆனால் கிராமத் தொண்டர்களாக நியமிக்கப்பட்டிருந்த பெண்களும் ஆண்களும் சைக்கிள் ஏறி மாந்தோப்புக்கும் தென்னந் தோப்புக்கும் உல்லாசப் பயணம் போவது போல் போய் இளநீரும், மாம்பழமும் சாப்பிட்டு விட்டு ஊர் வம்பு பேசித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். உருப்படியாக ஒரு வேலையும் நடைபெறவில்லை. முதியோர் பள்ளிக்கூடமென்று கட்டப்பட்டிருந்த ஓட்டுக் கட்டிடங்களின் உட் பக்கம் மண் தரையில் எருக்கஞ் செடியும் எமப் பூண்டும் முளைத்திருந்தன. கோழிப் பண்ணைகளில் கசாப்புக் கடைக்கு அனுப்புவதற்கான ஆடுகளை வளர்த்துக் கொண்டு கோழிகள் வளர்ப்பதாக ஏமாற்றி மான்யம் வாங்கிக் கொண்டிருந்தார் வடமலைப் பிள்ளை. இப்படி எத்தனையோ நடந்து கொண்டிருந்தன!

கிராமத்துக்கு வந்த ஒரு வாரத்துக்குள் நிலவரத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள் கருணா. அவள் நினைத்துக் கொண்டு வந்தது போலவோ, பட்டமளிப்பு விழாவில் அந்தப் பேராசிரியர் கூறியது போலவோ கிராமத்தில் எவருடைய அகக் கண்களையும் விரைவாகத் திறந்துவிட முடியாதென்று அவளுக்கு இப்போது நன்றாகத் தெரிந்தது. மற்றவர்களுடைய அகக் கண்கள் திறப்பதற்கு மாறாக அவளுடைய அகக் கண்கள் தாம் நன்றாகத் திறந்துகொண்டன.

"ஊர் நன்றாயிருக்கிறதடி, பெண்ணே! தயிரும் பாலும் வேண்டிய மட்டும் கிடைக்

களிப்பூட்டும்
கரகரப்பு

ஷாங்க்ரிலா

பிஸ்கட்டுகள்

SHANGRILA THE QUALITY BISCUITS

க்ரீம் மற்றும்
சாதா வகைகள்

இப்பொழுது
எங்கும் கிடைக்கும்

[redacted]

கின்றன. காய்கறிகளுக்குப் பஞ்சமே இல்லை. ஆற்றில் படிகமாகத் தண்ணீர் ஓடுகிறது'' என்று அம்மா தாமரைக் குளத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டாள். பாலும் தயிரும் கிடைத்தால் போதுமா? மனிதர்கள் கிடைக்க வேண்டுமே! கோழிக்கும், ஆட்டுக்கும் பண்ணை வைத்து வளர்ப்பதற்கு முன் மனிதர்களுக்கே ஒரு பண்ணைவைத்து வளர்க்க வேண்டும் போல் இருந்தது. கிராமத்து மக்கள் ஒரேயடியாக முரடர்களாக இருந்தார்கள். அல்லது ஒரேயடியாக அப்பாவிகளாக இருந்தார்கள். பணத்துக்காகவும் பதவிகளுக்காகவும் மட்டுமே மனிதர்களை மதிக்கத் தெரிந்து கொண்டிருந்தார்கள். குணத்துக்காகவும், மனிதத் தன்மைக்காகவும் மதிக்கப் பழகிக் கொள்ளவில்லை.

தனது அலுவலகத்தில் பணிபுரியும் மணமாகாத கிராம சேவிகள் ஆண் தொண்டர்களுடன் கும்மாளமிட்டுச் சிரித்துப் பேசுவதும், ஊர்வலம் போவது போல் சைக்கிளில் சேர்ந்து போவதும், பண்புக் குறைவாக நடந்து கொள்வதும் கருணாவுக்கு வருத்தத்தை அளித்தன. கிராமத்தைச் சீர்திருத்த வந்தவர்கள் கிராமத்தார் கண் முன்பே சீர்கேடாக நடப்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒருநாள் தன்னிடம் பணிபுரியும் நான்கு கிராம சேவிகளையும் கூப்பிட்டு விவரமாக உபதேசம் செய்தாள்.

''பெண்ணுக்குத் தன் அழகே பகை. அதுவே நண்பன். பெண்ணின் அழகு மற்றவர்களை அழிக்கும்போது ஆயுதம். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்போது அதுவே கவசம். ஊருக்கெல்லாம் எளிமையை உபதேசிக்கிற நீங்கள் இப்படி உடல் தெரிகிற மாதிரி வாயில் புடவையும் ஒற்றை மேலாக்குமாக அலைந்தால் நன்றாயிருக்கிறதா? எளிமையைக் கற்பிக்க வந்திருக்கிற நாமே ஆடம்பரத்தைக் கடைப்பிடிக்கலாமா? கிராமத்தை வளர்க்க முடியாவிட்டாலும் கெடுத்துவிடாமல் இருக்க வேண்டாமா?'' என்று அவள் இதமான முறையில் சகோதரிகளிடம் பேசுகிறதுபோல் பேசியும் அந்தப் பெண்கள் அதை நல்ல விதமாக எடுத்துக் கொள்ளவில்லை.

''உடம்பு தாங்க முடியாமல் படுதாவைக் கட்டிச் சுமப்பதுபோல் கதரைக் கட்டிச் சுமப்பதற்கு எங்கள் உடம்பில் சத்து இல்லையம்மா'' என்று சற்றுத் துணிச்சலான பெண்ணொருத்தி எதிர்த்தே பேசிவிட்டாள். கருணா நினைத்திருந்தால் அப்போதே மேலதிகாரிக்கு எழுதி அந்தப் பெண்ணைச் சீட்டுக் கிழித்து அனுப்பியிருக்க முடியும். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. கெடுதல் செய்து அன்பை வளர்க்க முடியாதென்பதில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. சிரித்த முகத்தோடும் பொறுத்துக் கொள்ளும் மனத்தோடும் அவள் எல்லாவற்றையும் சமாளித்தாள்.

''இவள் பிக்ஷுணி மாதிரிச் சாயம் மங்கின கதர்ப் படுதாவைக் கட்டிக் கொண்டு திரிகிறாள் என்பதற்காக நாமும் அப்படிச் செய்யணுமோ!'' என்று கிராம சேவிகள் தனியே பேசிக்கொள்வதும் அவள் காதில் விழுந்தது. அப்போதும் கருணா பொறுமை இழக்கவில்லை. குமார சம்பவத்தில் பரமசிவனுக்காகப் பரமசிவனையே நினைந்து உயர்ந்தோங்கிய பனிமலைக் கொடுமுடிகளிலே தவம் செய்த பார்வதியைப் போல் அந்த மலையடிவாரத்துக் கிராமத்தில் இலட்சியத்துக்காக தவம் செய்தே தீருவது என்று உறுதியாக இருந்தாள் அவள்.

தாமரைக்குளம் வட்டாரத்தில் தன்னுடைய பிர்க்காவைச் சேர்ந்த எல்லாக் கிராமங்களுக்கும் தானே சைக்கிளில் சுற்றுப் பயணம் செய்து பார்த்துவரத் தீர்மானம் செய்து கொண்டாள் கருணா!

''இது கிராமாந்தரம். ஒண்டி சண்டியாக நீ மலைக்காட்டுக் கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் துணையில்லாமல் தனியே சுற்றக் கூடாது. பட்டினக் கரையைப் போல் என்ன கெடுதல் செய்யலாம் என்று யோசித்து யோசித்து மனத்துக்குள்ளேயே பெரிய கெடுதலாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கிற அளவு இங்கே மனிதர்கள் மரத்துப் போயிருக்க மாட்டார்கள். ஆளைப் பிடிக்கவில்லையென்றால் முன்பின் யோசியாமல் அரிவாளைக் கையில் தூக்கிவிடுவார்கள். பார்த்து நடந்து கொள். யாரிடமும் முன்கோபப்படாதே'' என்று சாதுப் பெண்ணுக்கு அம்மாவாக வாய்த்த பரம சாது அறிவுரை கூறியிருந்தாள். நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற கடமையுணர்ச்சியில் வேலையேற்றுக் கொண்டு வந்தவுடனேயே பெண் பலபேரைப் பகைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது அம்மாவுக்கும் தெரிந்திருந்தது. பெண் நியாயமாக நடந்து கொள்கிறாளே என்பதில் அவளுக்குப் பெருமை. அதே சமயத்தில் வந்த இடத்தில் பலரைப் பகைத்துக் கொள்கிறாளே என்பதில் கவலையும் இருந்தது. முதல் மாதச் சம்பளம் வந்தபோது ''சூனிக் கைகளோடு இருக்

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸும் தேசியப் பொருளாதாரமும்

தேசியப் பொருளாதாரத்துக்கு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் அத்தியாவசியமானது. விபத்துக்களால் நேரிடும் எதிர்பாராத நஷ்டங்களை அது இலகுவில் ஈடு செய்கிறது; அதன் மூலம், நவீனத் தொழில் சமுதாயம் நன்கு தடையின்றியும், ஒரே சீராகவும் முன்னேற வழிகோலுகிறது.

திடமான நம்பகத்துக்கும், திறன் மிகுந்த சேவைக்கும் சிறப்பாகப் பெயர்பெற்றுள்ள 'நியூ இந்தியா' இந்தியாவின் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் துறையில் முதன்மையானதோர் இடம் பெற்றுள்ளது. கடந்த காலத்தைப் போலவே, எதிர்காலத்திலும், பொதுவாக தேசியப் பொருளாதாரத்துக்கும், குறிப்பாக இந்தியத் தொழில் துறைக்கும் 'நியூ இந்தியா' தொடர்ந்து சேவை செய்து வரும்.

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில்

அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

*

நியூ ஸ்ரீ ரஞ்சித விலாஸ்

ஒப்பணக்கார வீதி :: கோயமுத்தூர்

வசதியாக தங்குவதற்கும்

சுவையான உணவுக்கும், சிறந்த இனிப்புப் பண்டங்களுக்கும் பெயர் பெற்றது.

டி. கே. வைத்திநாதய்யர்

உரிமையாளர்

விரைவில்
வருகிறது
நரசு
ஸ்டுடியோஸ்
ஸ்ரீ
வள்ளி
முழு நீள
கலர் படம்
T.R. ராமண்ணா
டைரக்ஷன்
BAKTHA
நரசு ஸ்டுடியோஸ், நரசு நகர், சென்னை-32.
ELEGANT

கிறாயே; நாலு பவுனில் கைக்கு ரெண்டு வளை பண்ணிக் கொள்ளேன். என்னிடமும் கொஞ்சம் பணம் இருக்கிறது. அதையும் தருகிறேன்'' என்று கெஞ்சினாள் அம்மா. கருணையா கேட்கிறவள்?

''பெண்களின் நகை ஆசையால் இந்தத் தேசத்தின் பொருளாதாரமே கெட்டுக் கிடக்கிறது. மகோன்னதமாக நாகரிகமடைந்த நாடுகளில் கூடப் பெண்கள் இப்படித் தங்கத்தையும் வெள்ளியையும் சுமந்து கொண்டு திரியவில்லை! இதோ பார்! இதுதான் எனக்கு நகை'' என்று கூறிவிட்டு வாய் நிறையச் சிரித்துக் காண்பித்தாள் கருணை.

''போடி அசடு'' என்று அழகு காட்டினாள் அம்மா. அன்று மாலை தாமரைக் குளம் சேரிக்குப் போயிருந்தாள் கருணை. ஏழை அரிசனக் குழந்தைகள் பிறந்த மேனியாய் மாதக் கணக்கில் குளிக்காது புழுதி படிந்த உடம்போடு பன்றிக் குட்டிகள் போல் திரிவதைக் கண்டபோது, அவள் நெஞ்சம் கொதித்தது. இந்த நாட்டுக்கு ஒரு மகாத்மா போதாது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் மகாத்மாக்கள் பிறக்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. எல்லாக் குழந்தைகளையும் ஒன்று சேர்த்துப் பன்னீர் ஆற்றுக்கு அழைத்துப் போய்த் தன் கைகளாலேயே சோப்புத் தேய்த்துக் குளிப்பாட்டி அழைத்துக் கொண்டு போய்ச் சேரியில் விட்டு வந்தாள். மறுநாள் அந்த வேலையைச் செய்யுமாறு தன் ஜீப் பணிபுரியும் கோமனா என்ற கிராம சேவிக்குச் கருணை உத்தரவிட்டபோது, அவள் முகத்திலறைந்தாற் போல் மறுத்துச் சொல்லி விட்டாள்.

''எங்களுக்கு மாடு குளிப்பாட்டிப் பழக்கமில்லை'' என்று இமிராகப் பதில் கூறினாள் கோமனா.

''நான் உன்னை மாடு குளிப்பாட்டச் சொல்லவில்லை, கோமனா! குழந்தைகளைத் தான் குளிப்பாட்டச் சொல்கிறேன்.''

''அவர்களைக் குளிப்பாட்டுவதும், மாடு குளிப்பாட்டுவதும் ஒன்றுதான்.''

''சரி! உனக்குச் சிரமம் வேண்டாம். மாடுகளை நானே குளிப்பாட்டிக் கொள்கிறேன்'' என்று நிதானமாகப் பதில் சொல்லிக் கோமனாவை அனுப்பினாள் கருணை. கோமனாவும் இண்டர்வரை படித்த பெண்தான். ஆனால் படிப்பு அகங்காரத்தைக் குறைப்பதற்குப் பதில் அகங்காரத்தை வளர்ப்பதற்கே பயன்படுகிறதென்பதற்கு நிதரிசனமாக இருந்தாள் அவள். அழுக்குப் படாமல் பணம் சேர்த்து விட ஆசைப்படுவதைத் தவிரப் படித்தவர்களில் பெரும்பாலோருக்கு இந்தக் காலத்தில் வேறு ஆசை ஒன்றுமில்லை என்பது கருணைவுக்குப் புரியலாயிற்று.

தன்னுடைய பிர்க்காவைச் சேர்ந்த இருபத்து நாலு கிராமங்களையும் சுற்றிப் பார்த்து வருவதற்காக அவள் சைக்கிளில் புறப்பட்டபோது அவள் சைக்கிள் ஓட்டிக் கொண்டு செல்வதையே ஓர் அதிசயமாகப் பாவித்துத் தெருவின் இருபுறமும் பார்த்த கண்கள் எத்தனை என்று அளவிட முடியாது. அவ்வளவு அழகான பெண் சைக்கிளேறிப் போவது கூட அங்கே அதிசயம்தான்.

கருணை தனது சைக்கிள் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தபோது ஊர்ச் சாவடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த தாமரைக் குளம் கிராம முன்சீப்பும் கோழிப் பண்ணை வடமலைப் பிள்ளையும் தங்களுக்குள் ஜீப்க் கண்டவாறு உரையாடினார்கள்.

''என்னவேய்! பட்டுப்பூச்சி சைக்கிளேறிப் பறக்கத் தொடங்கி விட்டதே'' என்றார் வடமலைப்பிள்ளை.

''பறக்கும்! பறக்கும்! சிறகு உதிர்கிற வரையில் பறந்துதானே ஆகணும்!''

''உமக்குத் தெரியுமா? என்னுடைய கோழிப் பண்ணையில் ஊழலும் ஏமாற்றும் நிறைந்திருப்பதால் எனக்குச் சர்க்காரிடமிருந்து வரும் உதவித் தொகை நிறுத்தப்பட வேண்டுமென்று 'பட்டுப்பூச்சி' ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறதாம் ஐயா.''

''அது மட்டுமா? சேரிப் பக்கத்தில் தண்ணீர், விளக்கு வசதி சரியாகச் செய்து தரப்படவில்லை என்று பஞ்சாயத்து போர்டைப் பற்றிக் கூட மேலிடத்துக்கு எழுதி யிருக்கிறாளாம், ஐயா!''

'சரிதான். பூச்சி பறப்பதோடு கொட்டவும் ஆரம்பித்திருக்கிறது.''

''இப்படியே பறக்கவிடக் கூடாது! ஏதாவது செய்யணும்'' என்று மீசையை முறுக்கினார் கிராம முன்சீப்.

4 - புளியமரச்சாலையிலே!

அந்தச் சுற்றுப் பயணத்தின்போது கருணைவுக்குப் பல அநுபவங்கள் ஏற்பட்டன. பல உண்மைகள் தெரிந்தன. தாமரைக் குளத்துக்கருகில் இருந்த மேற்குத் தொடர்ச்சி மலை மேல் பள்ளத்தாக்கில் 'சந்தனக்காடு' என்று ஒரு சிற்றூர் இருந்தது. கணவாய்ப் பாதையாக அதற்குப் போவதற்குச் சமதரைச் சாலை உண்டு. அந்த ஊரில் இருபது முப்பது மலைப்பளிஞர்கள் குடும்பம் இருந்தன. சந்தனக் காடு கிராமத்தில் ஒரு முதியோர் கல்விக் கூடமும், ஒரு பிரசவ விடுதியும் பணி செய்து வருவதாக அவளுடைய ஆபீஸ் விவரப் புத்தகத்தில் இருந்தது. ஆனால் அங்கே விசாரித்துப் பார்த்தபோது அப்படி ஒன்றும் இருப்பதாக யாருமே சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் கூர்ந்து விசாரித்துப் பார்த்ததில் இந்தியா என்கிற தேசத்துக்குச் சுதந்திரம் கிடைத்து விட்ட செய்தியையே அந்த மலைப்பளிஞர்களில் பலர் தெரிந்து கொண்டிருக்கவில்லை. கருணைவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. வெளிச்சம் போடுகிற நகரங்களிலும் பெரிய ஊர்களிலும், பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் வைத்து விட்டுத் தேசமெல்லாம் அறிவு வளர்ச்சி ஏற்பட்டு

தேவைகள் கோடி

அவற்றுக்கேற்ற 'பாடி'

IWT-TVS-88-1050

1930 ஆம் ஆண்டிலிருந்து, 'சேஸிஸ் பாடி' (பஸ், லாரி, 'வான்') கட்டுவது சம்பந்தமான தனிப்பட்டவர்களின் தேவைகளை டி.வி.எஸ் ஆராய்ந்து வந்திருக்கிறது. அனுபவத்தாலும், சொந்த உபயோகத்தாலும், 'பாடிகள்' அமைப்பதற்கு வேண்டிய நல்ல சாமான்களைத் தேர்ந்தெடுத்து, தேவைகளுக்கு ஏற்றபடி, தக்க முறையில் தயாரிக்கிறது.

முழு அலுமினியத்தகடு 'எக்ஸ்பிரஸ் வான்', முழு அலுமினியப் பஸ், பெரும்பாலும் அலுமினியத்தகடு மூடிய லாரிகள், 'பிக்கப் வான்', 'கமர்சியல் வான்', 'ஆம்புலன்ஸ்' வண்டி, ஸ்கூல் பஸ், 'கோச்சு' மற்றும் 'கம்போசிட் டைப் பாடி'களை டி.வி.எஸ் கட்டுகிறது.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.

மதுரை - புதுக்கோட்டை

விட்டதாக நினைத்துக் கொண்டிருப்பது எத்தனை பேதைமை என்பதை அவன் உணர்ந்தான்.

கல்லூரிகளையும், சர்வகலாசாலைகளையும் அழகிய கிராமங்களிலும் மலைநாட்டு இயற்கை அழகுகளினிடையேயும் அமைத்தால் இந்த நிலை சிறிது மாறலாமென்று அவனுக்குத் தோன்றியது. மனம் வறண்ட மனிதர்களையும் இலட்சியம் என்றால் விலை என்ன விலை என்று கேட்கிறவர்களையும் பார்த்துப் பார்த்துச் சுற்றுப் பயணமே அலுத்துப் போயிருந்த கருணாவுக்குக் 'கன்னிகாபுரம்' என்ற கிராமத்தில் ஓர் அதிசயம் காத்திருந்தது. தன்னைப் போலவே இலட்சியப் பைத்தியம் பிடித்த அபூர்வ மனிதர் ஒருவரை அவன் கன்னிகாபுரத்தில் சந்தித்தான். கன்னிக் காட்டுக்குள்ளே ஒரு கற்பக விருட்சத்தையும் பார்க்க வாய்த்தது போல் அந்த மனிதரின் சந்திப்பு அவனுக்குக் கிடைத்தது.

கன்னிகாபுரத்தில் தனது சேவாதளத்து அலுவல்களை விசாரித்து முடித்துக் கொண்டு அவன் சைக்கிளில் ஏறிப் புறப்படுவதற்கிருந்த போது "இங்கே ரகுராமன் என்றொரு கவி இருக்கிறார். அவருக்கு ஒரு கால் ஊனம். நடந்துவர முடியாது. அவர் நீங்கள் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு உங்களைப் பார்க்க விரும்புகிறார்! தயவுசெய்து வரலாமோ?" என்று அந்த ஊர்க் கர்ணம் வந்து கேட்டார். கருணா மகிழ்ச்சியோடு அவரைப் பார்ப்பதற்கு ஒப்புக்கொண்டு புறப்பட்டாள்.

ரகுராமன் என்ற அந்தக் கவிஞரின் இருப்பிடமே அவரை அவளிடம் பக்தி கொள்ளச் செய்தது. ஊரிலிருந்து ஒதுங்கினாற் போல் அமைந்திருந்தது அவர் இருப்பிடம். கடல் போல அலை வீசிக் கொண்டிருந்த ஒரு பெரிய ஏரிக்கு நடுவில் தென்னை மரங்கள் அடர்ந்த இடம் ஒன்றில் ஆசிரமம் போல் கூரைக்குடில் வேய்ந்து கொண்டு வசித்து வந்தார் ரகுராமன். ஏரிக் கரையில் சைக்கிளிலிருந்து இறங்கச் செய்து பரிசலில் அவளை அழைத்துக் கொண்டு போனார்கள்.

'ரகுராமன்' முதியவராக இருப்பாரென்று நினைத்துக் கொண்டு போயிருந்தாள் கருணா. ஆனால் முப்பது முப்பத்தைந்து வயது இளைஞராக இருந்தார் அவர். அவருடைய குடிலில் மரப் பீரோக்களில் அடுக்கடுக்காகப் புத்தகங்கள் குவிந்திருந்தன. அவள் உள்ளே நுழைந்த போதும் அவர் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டுதான் இருந்தார்.

ரகுராமன் காண்பதற்கு ஒளி நிறைந்து தோன்றினார்! அவருடைய கண்கள் இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல அழகாயிருந்தன.

"உங்கள் தகப்பனாரோடு அவருடைய கடைசிக் காலத்தில் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நானும் அவரும் சுப்பிரமணிய பாரதியாருடைய தேசியப் பாடல்களை எத்தனையோ மேடைகளில் சேர்ந்து பாடியிருக்கிறோம். சேர்ந்து அடிவாங்கியிருக்கிறோம். நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள் என்று யாரோ சொன்னார்கள். பார்க்க ஆசையாக இருந்தது" என்றார் ரகுராமன். "நீங்கள் மட்டும் இங்கே தனியாயிருக்கிறீர்களா?" என்று கருணா கேட்டாள்.

"இல்லை! பார்ப்பதற்கு ஆசிரமம் போல் இருக்கிறதே என்று நினைத்து அப்படிக் கேட்காதீர்கள். எங்கள் வீடே இதுதான். இந்தத் தீவும் ஏரியும் எங்கள் குடும்பச் சொத்து. நானும் அம்மாவும் இங்கே வசிக்கிறோம். ஊருக்குள் நன்செய் நிலமும் கொஞ்சம் இருக்கிறது. நான் ஆகஸ்டு போராட்டத்தில் அடி வாங்கிக் கால் ஒடிந்து வீட்டோடு வந்து விழுந்தவன்தான். இன்று வரை இந்தப் புத்தகங்களும் சிந்தனையும்தான் துணை. மாதம் இருநூறு ரூபாய்க்காவது புத்தகங்கள் வாங்குவேன். தாமரைக் குளத்துக்கும் கன்னிகாபுரத்துக்கும் அதிக தூரமில்லை. முடிந்த போதெல்

''பேன் பவுடருக்கு இப்பொழுது போட்ட வரியை ரெண்டு வருஷங்களுக்கு முந்தியே போட்டிருக்கக் கூடாதா?''

''ஏங்க?''

'''மேக்-அப்' இல்லாத உன் முகத்தைப் பார்த்திருப்பேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்காமெ தப்பித்துக் கொண்டிருப்பேன்!''

''உம் கதையை நம்பித்தான் படம் எடுக்கப்போகிறேன். முடிவை எப்படி எழுத வேண்டும் தெரியுமா? எனக்கே தூக்கிவாரிப் போடும்படி இருக்க வேண்டும்.''

—படமுதலாளி

''பிரமாதமாக எழுதி விடுகிறேன். ஆனால் என்ன சந்தேகம். எத்தனை லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டால் உங்களுக்குத் தூக்கிவாரிப் போடும்?''

— எழுத்தாளர்

லாம் நீங்கள் வந்தால் இலக்கிய விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருக் லாம்.'

''நீங்கள் கவியெழுதுவீர்கள் என்று என்னை அழைத்துக் கொண்டு வந்தவர்கள் சொன்னார்களே?''

''எழுதுவேன்! அடைந்து கிடக்கிற மனத்தில் எப்போதாவது ஆவேசம் வரும். அப்போது ஏதாவது கிறுக்குவேன்.''

இப்படி ரகுராமனும், கருணாவும் பேசிக் கொண்டிருந்த போது உள்ளேயிருந்து ஒரு வயதான அம்மாள் இரண்டு டம்ளர்களில் மோர் கொண்டு வந்து வைத்தாள்.

''என் தாயார்''—என்று அந்த அம்மாள் பக்கம் கையைக் காட்டினார் ரகுராமன். கருணா அந்த அம்மாளை வணங்கினாள்.

மேலும் சில நாழிகைகள் இலக்கியச்சர்ச்சை செய்துவிட்டுச் கருணா ரகுராமனிடமும் அவருடைய தாயாரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். அந்த ஏரியும் தென்னைமரம் நிறைந்த இடமும், அவள் உள்ளத்தில் அழியா ஓவியமாகப் பதிந்து விட்டன. 'காணி நிலம் வேண்டும்' என்று பாடிய கவி பாரதியாரின் பாட்டு அவளுக்கு நினைவு வந்தது. கன்னிகாபுரத்தில் கவிஞர் ரகுராமனுக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவர் பேரைச் சொன்னாலே எதிரே நிற்பவர்கள் முகங்களில் மதிப்பின் சாயல் படிந்தது. அந்தச் சுற்றுப் பயணத்திலேயே அவளுக்குக் கிடைத்த மறக்க முடியாத அநுபவமாக, ரகுராமனின் சந்திப்பு இருந்தது.

கடைசி நாள் சுற்றுப் பயணம் முடிந்து ஊர் திரும்பும்போது சாயங்காலமாகி விட்டது. கருணா தாமரைக் குளத்துக்கு நாலைந்து மைல்கள் அப்பால் வந்து கொண்டிருக்கும்போதே இருட்டி விட்டது. அவள் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இடத்திலிருந்து ஊர்வரையுள்ள வழியின் இருபுறமும் ஒரே புளிய மரக்காடு. அதற்குக் கூட்டுப் புளித்தோப்பு என்று பெயர். அந்தப் புளிய மரங்கள் யாவும் வடமலைப் பிள்ளைக்குச் சொந்தம். புளியந்தோப்பின் நடுவே வளைந்து வளைந்து செல்லும் வண்டிப் பாதையில் சைக்கிளை விரைவாகச் செலுத்தியவாறு வந்து கொண்டிருந்தாள் கருணா.

ஓரிடத்தில் பாதைத் திருப்பத்தில் வழி மறித்துக் கொண்டு ஆள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. தோப்புக் காவலுக்காக யாராவது உட்கார்ந்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு இரண்டு மூன்று முறை மணியை அடித்தாள் கருணா. ஆள் எழுந்திருக்கவில்லை. ''ஏ பொண்ணு, சைக்கிளை நிறுத்து'' என்று அதட்டும் குரல் கேட்டது. கருணாவுக்கு நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது; தொண்டைக்குழி வறண்டது. ஆயினும் தைரியத்தைக் கைவிடாமல் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்டு போட்டுவிட்டு நின்றாள். அந்த இருளிலும் பளபளவென்று மின்னும் வளைந்த வெட்டரிவாளோடு ஒரு முரட்டு ஆள் எழுந்திருந்து அவளருகே வந்தான். சிறிது நேரத்தில் இன்னும் நாலைந்து ஆட்கள் அதே கோலத்தில் வந்து அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

நம்பகமான

உழைப்பிற்கு...

டாடா - மர்ஸிடிஸ் - பென்ஸ்
பஸ் லாரி டிரக்குகள்
பெயர் வாய்ந்தவை

சிறந்த, சிக்கனமான
நீண்டநாள் சேவை தரும்

TATA-MERCEDES-BENZ
Diesel Trucks & Buses

வீ. எஸ். டி. மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்

சென்னை ★ வேலூர் ★ சேலம்

முற்றிலும் புதியது!

ஸ்பார்ட்டன்

பிளாஸ்டிக்

பெயிண்ட்

- விரைவில் ஒட்டும்
- நீடித்து நிலையாக இருக்கும்
- விசேஷ மூல கூறுகள் பரப்பின்மீது ஆழ்ந்து படியும்
- 10 நிமிடங்களில் உலரும்
- அலம்பலாம், தேய்க்கலாம்
- வர்ண வாசனை இல்லை
- நீராவியை எதிர்க்கும்
- வெல்வெட் - மழமழப்பு
- கண்கவர் வர்ணங்கள்

வர்ணப் பட்டியலுக்கும், ஸ்பார்ட்டன் பிளாஸ்டிக் பெயிண்டை உபயோகிப்பதுபற்றி இலவச ஆலோசனைக்கும் எழுதுக.

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ்
லிமிடெட்

செம்பியம் ★ சென்னை 11

மெம்பர்: இந்தியன் பெயிண்ட் அசோஸியேஷன்

எந்த விதத்தில் பார்த்தாலும்

ராயல் என்பீல்ட்

மோட்டார் ஸைக்கிள் உங்களுக்கு ஏற்றதே

வேகம், அமைப்பு, சக்தி நிறைந்த ராயல் என்பீல்ட் உங்களுக்கு ஒரு இன்றியமையாத வாகனம் என்பதில் சந்தேகமில்லை. மேன்மை அடைய விரும்பும், உற்சாகமும், தீரமும் உள்ள இளைஞர்கள் தேர்ந்தெடுப்பது ராயல் என்பீல்ட் மோட்டார் ஸைக்கிள் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

வாழ்க்கைப்பாதையில் முன்னேறிச்செல்ல ராயல் என்பீல்ட்.

அதிவேகமாகச் செல்லும் மோட்டார் ஸைக்கிள்
ராயல் என்பீல்ட்

தயாரிப்பாளர்,
என்பீல்ட் இந்தியா லிமிடெட்
சென்னை-19

பூரண விநியோக ஏஜெண்டுகள்
மெட்ராஸ் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை - பெங்களூர் - டில்லி

''ஏம்மா நீ வடமலே எசமானுடை கோழிப் பண்ணையைப் பத்திச் சர்க்காருக்கு ஏதோ ரிப்போர்ட் எழுதினியாமே, நெசந்தானு?'' என்று முதலில் வந்தவன் கேட்டான்.

''ஆமாம். எழுதினேன்'' என்று தெளிவாகப் பதில் சொன்னுள் கருணு.

''அவரு இந்த ஊருக்கு ராசா. அவரைப் பத்தி இப்படி யெழுதின தலே உருண்டிடும். உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லி வைக்கலாம்னு தான் வந்தோம். போய் ஜ்னி மேலாவது ஜாக்கிரதையா நடந்துக்க'' என்று மிரட்டியது முதலில் ஒலித்த குரல். அவள் பதில் பேசாமல் சைக்கிளில் ஏறிப் பெடலே மிதித்தாள். ஊர் எல்லேயில் போய்த்தான் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது அவளால். வீட்டுக்குப் போய் அம்மாவிடம் கூட அதை அவள் கூறவில்லே.

அந்தப் பக்கத்தில் இருந்த ஆறு, ஏழு கோழிப் பண்ணைகளை வடமலேப் பிள்ளைதான் பாதுகாத்துப் பராமரிப்பதாகப் பேர் செய்து பணம் வாங்கிக் கொண்டிருந்தார். கருணு எழுதியிருந்த ரிப்போர்ட்டின் பயனுக இந்த ஏழு கோழிப் பண்ணைகளையும் உடனே நிறுத்தி விடுமாறும் இனிமேல் அரசாங்க உதவித் தொகை அளிப்பதற்கில்லே என்றும் ஐந்தாறு நாட்களில் வடமலேப் பிள்ளைக்குப் பாதகமாக மேலேயிருந்து உத்தரவு வந்து விட்டது. வடமலேப் பிள்ளே எரிமலேயானுர். பஞ்சாயத்துத் தலேவரும், கிராமமுன்சிப்பும் அந்த எரிமலேக்குச் சிற்றுருட்டினுர்கள்.

''இந்தப் பட்டுப்பூச்சியை எப்பாடுபட்டாவது இங்கிருந்து சிறகைப் பிய்த்து அனுப்பி விடவேண்டும்'' என்று மூன்று பேர்களும் சேர்ந்து முயன்றுர்கள். ஆனல் அது அவ்வளவு சுலேசாக முடிகிற காரியமாகப் படவில்லே. கருணு வசமாக மாட்டிக் கொள்கிற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும். அவள் என்ன செய்கிருள், எங்கே போகிருள் என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தார்கள். கருணு தவறியும் தவறு செய்யாமல் கவனமாக நடக்கும்போது அவர்கள் எப்படி அவளே மாட்டி வைக்க முடியும்?

அவர்கள் கேலியாகப் பேசியது போலன்றி நிஜமாகவே அவள் பட்டுப் பூச்சியாகத்தான் இருந்தாள். தன்னே வதைத்துக் கொண்டே பிறருக்கு மென்மையைக் கொடுக்கும் பட்டுப் புழுவைப் போல் சேரியிலும், தெருக்களிலும், மென்மையான நற்பணிகளைப் புரிந்து கொண்டே தன் சிரமங்களைப் பொருட்படுத்தாமல் இருந்தாள் அவள். அவளுடைய கைகள் முனேந்து முயன்ற இடமெல்லாம் நல்ல காரியங்கள் நடந்தன. ஆனல் வடமலேப் பிள்ளேயின் ஆக்ரோஷம் சிறிதும் தணியாமல் உள்ளேயே கனன்று கொண்டிருந்தது.

5 அவதாரு

கார்த்திகை மாதத்தின் நடுவிலே மழை பெய்து கொண்டிருந்த ஒரு நாள் கன்னிகாபுரம் முதியோர் கல்வி நிலய ஆண்டு விழாவுக்குப் போயிருந்த கருணு இரவில் அங்கேயே தங்கும்படி நேர்ந்துவிட்டது. மாலே தூறலாக இருந்த மழை இரவில் பெருமழையாக வெளுத்து வாங்கத் தொடங்கிவிட்டது. எனவே ஊர் திரும்பும் எண்ணத்தைக் கைவிட்டு ரகுராமனுடைய ஏரித் திடலுக்குப் போய் அவருடைய தாயாரோடு தங்கி விட்டாள் அவள்.

எத்தனேயோ முறை அங்கு வந்து ரகுராமனேடு பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பியிருக்கிருள் அவள். ஆனல் இரவில் தங்கியதில்லே. சுற்றுப் பயணமாகப் போனுலொழிய அநாவசியமாக வெளியூரில் இரவுத் தங்கல் வைத்துக் கொள்ளக் கூடாதென்று அம்மா உத்தரவு போட்டிருந்தாள் அவளுக்கு. அம்மாவின் உத்தரவை முடிந்த மட்டும் அவளும் கடைப் பிடித்து வந்தாள். அன்றும் கன்னிகாபுரத்தில் ஆண்டு விழா முடிந்ததும் இரவு எவ்வளவு நாழிகையானுலும் திரும்பி விடலாமென்றுதான் அவள் போயிருந்தாள். கன்னிகாபுரத்துக்கும், தாமரைக் குளத்துக்கும் ஏழு மைல்கள்தான். சைக்கிளில் வர ஒரு மணி நேரம்கூட ஆகாது. ஆனல் மழை பெய்து விட்டால் காட்டு ஓடைகளெல்லாம் உடனே பெருக்கெடுத்துவிடும். ஏழு மைல்களுக்குள் ருபது காட்டு ஓடைகளுக்குக் குறைவில்லே. ஆகவேதான் அன்றிரவு அவள் ரகுராமன் வீட்டில் தங்கினுள்.

மறுநாள் அதிகாலேயில் அவள் கன்னிகாபுரத்திலிருந்து புறப்பட்டுத் தாமரைக் குளத்துக்கு வந்து விட்டாள். காலே பத்து மணிக்கு அவள் சேவாதள வேலேயாகப் பஞ்சாயத்து போர்டு ஆபீசுக்குப் போகவேண்டியிருந்தது. அவள் அங்கே போய்ச் சேர்ந்தபோது பஞ்சாயத்து அலுவலகத்தில் வடமலேப் பிள்ளே, முன்சிப், பஞ்சாயத்துத் தலேவர் மூன்று பேர்களுமே இருந்தார்கள். அவளேக் கண்டதும் 'வாருங்கள்' என்று கூடச் சொல்லவில்லே அவர்கள். வடமலேப் பிள்ளே ஒரு தினுசாகச் சிரித்தார். மற்ற இரண்டு பேர்களும் அவளேப் பார்த்து, ''பட்டுப் பூச்சி வந்திருக்கிறது'' என்று அவள் காதிலும் கேட்கும்படி விஷமமான குரலில் கூறினுர்கள். கருணு சீற்றத்தோடு கூறலானுள்: ''தயவுசெய்து மரியாதையாகப் பேசுவதற்குப் பழகிக் கொள்ளுங்கள். மரியாதை தந்து மரியாதை வாங்க வேண்டும்.''

''உனக்கு மரியாதை ஒரு கேடா? ஒவ்வொரு நாள் இரவில் ஒவ்வொரு ஊர்! கன்னிகாபுரத்தில் அந்த நொண்டிப் பயல் ரகுராமன் கொஞ்சம் பசையுள்ள ஆள். நீ அவனேப் பிடித்துக் கொண்டிருப்பது பிர

''என்ன சார் உங்க விருந்தாளிக்குக் கொஞ்சங்கூட இங்கிதம் தெரிய வில்லையே? இப்படியா குடும்பத்தோடு வந்து மாதக் கணக்கில் கூடாரம் போடுவது ?''

'' ஐயையோ! தங்கியிருப்பது என் விருந்தாளி இல்லேய்யா, வீட்டுக் காரர். நான்தான் விருந்தாளி!''

மாரிமுத்து என்று பெயர். வயது 30. அசல் கறுப்பு நிறம். இடது கன்னத்தில் வெட்டுக்காயம் இருக் கும். சற்றுக் கட்டையான ஆள். காணமல் போய் விட்டான். கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு என் ஒரு மாதச் சம்பளம் இனும்.

—இன்னும் 24 மணி நேரத்துக்குள் சஸ்பெண்ட் செய்யப்பட இருக் கும் ஜெயில் வார்டர் ஜேக்கப்.

யோசனமான காரியம்தான். இராம சேவை யெல்லாம் இப்போது அந்த தொண்டியின் குடிலுக்குள்தான் நடக்கிறது போலிருக் கிறது''—என்று வடமலைப்பிள்ளை தொடங்கிய போது, கருணவுக்குப் பேரிடி விழுந்தது போலிருந்தது. உலகத்தில் இத்தனை விஷம் கக்குகிற மனிதர்களுமா இருக்கிறார்கள்? அவளுக்கிருந்த கோபத்தில் அந்த மூன்று பேர்களையும் பஞ்சாயத்து அலுவலகத்தோடு சேர்த்துச் சுட்டுப் பொசுக்கி விருப்பாள். ஆனல் செய்யவில்லை. நிதானமிழந்தால் தன் பக்கம் பலவீனமாகப் போய்விடும் என்று பேசாமல் வீடு திரும்பினள்.

''என்னடி? உடம்புக்கு என்ன? என்னவோ போலிருக்கிறாய்?'' என்று வரவேற்ற அம்மா வின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள் கருணு. நெஞ்சழுத்தக்காரியான பெண் தனக்கு முன் ஞல் முதல் முறையாகப் பொங்கி அழுததைப் பார்த்தபோது அம்மாவுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. கலித்துப் பதறிப் போய்விட்டாள்.

''என்னடி? என்ன நடந்ததென்று சொல் லேன்.'' ஒன்றும் சொல்லாமல் குமுறிக் குமுறி அழுதாள் கருணு.

சிறிது நேரத்துக்கெல்லாம் வாசலில் மாட்டு வண்டி வந்து நின்றது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அதிலிருந்து கன்னிகா புரம் ரகுராமனின் தாயார் கீழே இறங்கிஞள். உள்ளே வராமல் வாசற்படியிலேயே நின்று கொண்டு, ''உனக்கு ரோஷம், மானம் இருந்தால் நீ இனிமேல் அந்த ஊர்ப்பக்கம் வரப்படாது. ஊரெல்லாம் என் பிள்ளை தலை உருளுகிறது. நீ நல்லவள்தான். உன்மேல் அப்பழுக்குச் சொல்ல முடியாது. ஆனல் ஊர்வாயை மூட உலைமூடி இல்லை. உனக்குக் கோடி புண்ணியமாகப் போகிறது. இனிமேல் அந்தப் பக்கம் வராதே. ஊருக்கே தெய்வம் போல இருந்தான் என் பிள்ளை. யார் தொண்டியாளுலும் பேரும் புகழும் செல் வாக்கும் தொண்டியாகாமல் இருந்தான். நீ அதையும் தொண்டியாக்கிப் போட்டுடாதே'' என்று உரைந்தாள் அந்த அம்மாள். கருணு வின் அம்மா அவளருகே சென்று ''உள்ளே வந்து விவரமாகச் சொல்லுங்களம்மா! என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

''ஒன்னும் நடக்கலே. உங்க பெண் மகா லட்சுமி மாதிரி லட்சணமாக இருக்கிறாள். மனசும் நேர்மையாக இருக்கு. அதுவே ஊருக் குப் பொறுமை. இந்த உத்தியோகம் வேண்டவே வேண்டாம். பேசாமே இன்னும் பத்து வருஷங்கள் அப்பளம் இட்டுச் சேர்த் தாவது நல்ல இடமாகப் பார்த்துக் கலி யாணம் பண்ணிவையுங்கள்'' என்று சிறு வேகம் தணிந்த குரலில் சொல்லிக்கொண்டே வண்டியில் ஏறிவிட்டாள் கன்னிகாபுரத்து அம்மாள். வண்டி மறைந்ததும் அம்மா உள்ளே வந்து கருணுவைக் கேட்டாள்:

''இதெல்லாம் என்ன நாடகமடி?''

''வாழ்க்கை நாடகம்'' என்று வெறுப் பாகப் பதில் வந்தது கருணுவிடமிருந்து.

'எனக்கு அப்பவே தெரியுமடியம்மா! உத்தியோகம் பார்த்தால் மனம் விசித்த

அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

ஆறுமுகம் முத்திரை உள்ள

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம், கைகால் வலி, ஜுரம்

முதலிய வியாதிகளுக்குச் சிறந்தது

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான
இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்

எங்கள் ஆர். எஸ். பதி மருந்து மூவர்ண அட்டைப் பெட்டிகளில் மட்டுமே விற்பனையாகிறது. காகிதத்தில் சுற்றப்பட்டு விற்பனையாவது கிடையாது

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

○●○

மேரி ராம் பற்பொடி

பல் வலி, பல் அரனை

முதலியவைகளைப் போக்கி பற்களைச்
சுத்தமாகவும் வெண்மையாகவும் செய்கிறது

தயாரிப்பாளர்கள்

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

(ஸ்தாபிதம் 1909)

த. பெ. எண்: 99 - 214 & 215. மேலமாசி வீதி மதுரை

திருச்சி, தஞ்சை, வட, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு
சோல் செல்லாவின் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண்: 172

213, மேல மாசி வீதி :: மதுரை - 1

Power
to
Please
HINDUSTHAN Ambassador
அபரிமித ஆற்றல் படைத்த கார்
ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா-1
டீலர்கள் உள்ள இடங்கள்

ஊரில் படிக்க வேண்டும். மனம் குறுகினவர்கள் இருக்கிற இடத்திலே ஒழுங்காக நடந்து கொண்டாலும் தப்புத்தான்.''

''நீ ஆயிரம் தடவை சொன்னாலும் ஒப்புக் கொள்கிறேன், அம்மா! நான் செய்தது தப்புத்தான். இங்கே மனம் விரிந்தவர்கள் இல்லை. நியாயமாக நடந்துகொள்வதைவிடத் தவற்றை அநுசரித்துப் போகிறவர்கள்தான் தேவையாயிருக்கிறது. எல்லாத் தப்புக்களையும் கண்டும், காணாத மாதிரி இருந்தால் 'நல்லவன்' என்பார்கள். தப்பைத் தப்பென்று சொன்னால் கெட்டவனாக்கிக் காட்டி விடுவார்கள். அப்பப்பா! பிறருக்கு அவதூறு உண்டாக்குவதில் எத்தனை ஆசை இவர்களுக்கு?''

''இந்த மாதிரி சிறிய ஊர்களில் அவதூறு தான் பொழுதுபோக்கு.''

அன்றைக்குத் தாமரைக் குளத்திலிருந்து வெளியேறிய மெயில் பையில் கருணையின் ராஜிநாமாக் கடிதமும் இருந்தது. மேலதிகாரிக்குத் தனியே எழுதிய தபாலில் தன்னை ஒரு வாரத்துக்குள் ரிலீவ் செய்துவிட்டால் நல்லதென்று கேட்டிருந்தாள். ஆயிரம் பேர்கள் வேலைக்கு மனுப் போட்டு முந்திக் கொண்டு நிற்கும்போது ராஜிநாமாவை மறுக்கவா செய்வார்கள்?

ராஜிநாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டு மூன்று நாட்களில் புதிய சேவாசனத் தலைவி அனுப்பப்படுவாள் என்றும் அவளிடம் 'சார்ஜ்' கொடுத்துவிட்டு ரிலீவ் ஆகலாம் என்றும் கருணைக்கு மேலதிகாரியிடமிருந்து தபால் வந்திருந்தது. தாமரைக் குளத்துப் பிரமுகர்கள் சிறகு ஒடித்து அனுப்புவதற்குப் புதிய பட்டுப்பூச்சி ஒன்று பறந்து வருகிறதே என்று கருணை வருந்தினாள். பட்டினம் புறப்படுமுன் கடைசியாக ரகுராமனை ஒரு முறை பார்த்துவிட்டு வரலாமா என்று கருணை அம்மாவைக் கேட்டபோது, ''கண்டிப்பாகக் கூடாது, பெண்ணே! மறுபடியும் வம்பு வளர்க்காதே'' என்று அம்மா பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

6. பட்டுப்பூச்சி பறந்தது

ஒவ்வொரு நாளும் பட்டினம் போகிற பாசஞ்சர் வண்டி இரவு ஏழரை மணிக்குத் தாமரைக்குளத்துக்கு வருகிறது. அன்றும் பௌர்ணமி. சரத் காலத்து வானத்தின் மங்கலில் சந்திரன் மென்மையழகோடு தோன்றினான். தென்னை மரங்களும், மலைத் தொடரும், ஊரும் அன்றுபோலவே பாற்கடலில் மூழ்கி யெழுந்தவைபோல் கொள்ளை யழகோடு தோற்றமளித்துக் கொண்டிருந்தன.

கருணை ஸ்டேஷனிலிருந்து ஊரைப் பார்த்தாள். முதல் தடவை அங்கு வந்திறங்கிய அன்று இதேபோல் நிலாவில் அழகாகத் தோன்றிய அந்த ஊரை அதே பழைய நிலையில் மனத்துக்குள் கற்பனை செய்ய முயன்றாள். மாட்டு வண்டியிலிருந்து இறக்கிய மூட்டை முடிச்சுச் சாமான்களை ரயில் ஏற்றுவதற்கு வசதியான இடத்தில் வைக்கச் செய்து மேற்பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா. சேரியைச் சேர்ந்த பத்துப் பன்னிரண்டு அரிசனச் சிறுவர்கள் கருணையைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். வேறு யாரும் அவளை வழியனுப்புவதற்கு வரவில்லை. அவளோடு வேலை பார்த்த கிராம சேவிகை கோமளமோ பரிமளமோ, ஒருத்தரும் எட்டிப் பார்க்கவில்லை. பட்டினத்திலிருந்து வந்த வண்டியில் பார்சல் எடுத்துக்கொண்டு புறப்பட்ட நியூஸ் ஏஜண்டு ராமலிங்க மூப்பனார் 'இந்த அம்மா போறாங்க. நாளையிலிருந்து எல்லாப் பத்திரிகைகளும் ஒரோரு பிரதி விற்பனை குறையும்' என்று மனத்துக்குள் வியாபாரக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

''மறுபடியும் திரும்ப வருவீங்களா அக்கா?'' என்று அழுகை கலந்த குரலில் கேட்டாள் ஓர் அரிசனச் சிறுமி.

அந்தச் சிறுமிக்கு 'வருவேன்'' என்று பதில் சொல்வதா? வரமாட்டேன் என்று பதில் சொல்வதா? அல்லது இரண்டையுமே சொல்லாமல் சும்மா இருந்து விடுவதா? என்று கருணைக்குப் புரியவில்லை.

ஸ்டேஷனில் புங்கமரத்துக் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த தந்திக் கம்பங்களிலிருந்து 'சோ' என்ற ஓசை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று இருந்தாற்போலிருந்து ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் ஸ்டேஷன்

மாஸ்டரிடம் போய் 'கம்ப்ளெயிண்ட்' புஸ்தகத்தைக் கேட்டாள் கருணா.

அவர் தயங்கினாற்போல அவளைப் பார்த்து விட்டு கம்ப்ளெயிண்ட் புஸ்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

''தாமரைக்குளம் கிராமம் மிக அழகாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இலட்சியம், நேர்மை, தொண்டு இதுமாதிரி நினைவுகளோடு யாராவது அங்கு வந்தால் தயவுசெய்து அடுத்த ரயிலிலேயே திரும்பி விடுவது நல்லது. அதற்கேற்றாற்போல் பட்டிணத்திலிருந்து வருகிற ரயிலே அடுத்துப் பட்டிணத்துக்குப் போகிற ரயில் இங்கேயிருந்து புறப்படுகிறது. இந்தக் கிராமம் ஒரு தங்கச் சுரங்கம். ஆனால் இதிலிருந்து தங்கத்தைத் தோண்டி எடுக்க முடியாமல் மனித ஆசாபாசங்கள் என்கிற கரி மூடியிருக்கிறது. தாமரைக்குளம் மட்டுமல்ல, பாரத நாட்டின் ஒவ்வொரு கிராமமும் கரி மூடிய தங்கச் சுரங்கமாகவே இருக்கிறது. கரியை நீக்கித் தங்கத்தை எடுக்க முயல்கிறவர்கள் தங்கள் கால்கள் ஒடியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று எழுதி முடித்தாள் கருணா. 'இப்படிக்குக் கால்களை ஒடித்துக் கொண்ட ஓர் அபலை' — என்று கீழே கையெழுத்துப் போட்டு ஸ்டேஷன்மாஸ்டரிடம் திருப்பிக் கொடுத்தாள்.

அவர் அதைப் படித்துவிட்டுச் சிரித்தார்.

''என்ன இப்படி எழுதியிருக்கிறீர்கள்?''

''பின் வேறு எப்படி எழுதச் சொல்கிறீர்கள்...?''

''இரயில்வே கம்ப்ளெயிண்ட் புஸ்தகத்தில் சம்பந்தமில்லாததை எழுதி...?''

''சம்பந்தமில்லை என்று யார் சொன்னது, சார்! இந்த ஊருக்குத் தொண்டு செய்யும் ஆசையோடு என்னைப்போல் பேதைகள் யாராவது வந்தால் ரயிலிலிருந்து இறங்கியதுமே நீங்கள் இதைக் காட்டிவிட்டு அடுத்த ரயிலுக்கு டிக்கெட்டும் கொடுத்து விடுங்கள்.''

ஸ்டேஷன்மாஸ்டர் மறுபடியும் சிரித்தார். ''நீங்களாவது இப்படி எழுதியிருக்கிறீர்கள். சிலபேர்கள் இந்த ஊருக்கு ஸ்டேஷன் இருப்பதையே பெரிய கம்ப்ளெயிண்டாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதில் நானும் ஒருவன்'' என்று அந்தப் பட்டிக்காட்டு ஸ்டேஷன்மாஸ்டராக மாட்டிக் கொண்ட அவலத்தைச் சொல்லி ஆதங்கப்பட்டுக் கொண்டார் அவர்.

ரயில் வந்தது. சாமான்களை ஏற்றிவிட்டு அம்மாவும் பெண்ணும் ஏறிக்கொண்டார்கள். கறுப்பு நிறக் கிராதியின் அருகே அதன் நிறத்துக்கும் தங்கள் உடலுக்கும் அதிக வித்தியாசம் தெரியாதபடி சேரிக் குழந்தைகள் நின்றுகொண்டு ஏக்கத்தோடு பார்த்தன. கறுப்புத் தகரக் கிராதியின் இடைவெளியில் ஒவ்வொரு குழந்தை முகமாகத் தெரிவதைக் கருணா பார்த்தாள். சாரு, மீனு, குப்பன், கருப்பண்ணன். ஒவ்வொரு குழந்தையின் பெயரும் அவளுக்கு நினைவு வந்தது.

''மறுபடியும் திரும்பவருவீங்களா அக்கா?'' சாரு மறுபடியும் இரயிலில் ஜன்னலோரமாக உட்கார்ந்திருந்த கருணாவுக்குக் கேட்கும்படி கீழே கிராதியருகேயிருந்து கத்தினாள்: இப்போதும் அவள் சும்மா இருந்தாள். அந்தச் சிறுமிக்கு வருவேன் என்று பதில் சொல்வதா? வரமாட்டேன் என்று பதில் சொல்வதா? என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?

ரயில் புறப்பட்டது. பெரிதாக ரயில் கரி ஒன்று விழியில் புகுந்து தாமரைக் குளத்தை, அவள் பார்வையிலிருந்து மறைத்தது.

''ஜன்னலை மூடு! பனியடிக்கிறது'' என்றாள் அம்மா. கருணா ஜன்னலைப் போட்டாள்.

அந்த ரயில் கருணா என்னும் அழகிய பட்டுப் பூச்சியோடு தாமரைக் குளத்தைக் கடந்து பறந்தது.

ரயிலில் எதிரே பேப்பர் வைத்துக்கொண்டிருந்தவரிடமிருந்து வாங்கி மேலோட்டமாகப் பார்க்கலானாள் கருணா.

அவளுடைய பட்டமளிப்பு விழாவில் பேசிய அதே பேரறிஞர் வேறு ஒரு பல்கலைக் கழக விழாவில் பேசியிருந்த பேச்சு அன்றையத் தினத்தாளில் வந்திருந்தது. ''படிப்பு பலபேருடைய அகக் கண்களைத் திறந்துவிடும் தூண்டுகோலாக அமைய வேண்டும். கிராமங்களுக்குப் போய்ச் சமூக சேவை செய்ய வேண்டும்! கிராமங்களைப் பொன் கொழிக்கச் செய்ய வேண்டும்'' என்றெல்லாம் அவர் பேசியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

முதலில் அவருடைய அகக்கண்ணை யாராவது திறந்துவிட வேண்டுமென்று தோன்றியது கருணாவுக்கு.

முடிவுரை

பாரத நாட்டுக் கிராமங்கள் தங்கச் சுரங்கங்கள் மாதிரி. ஆனால் அவற்றை வளர்க்கிறோம் என்ற பேரில் நாம் அமைத்துள்ள பிரதேச வளர்ச்சி சமூக நலத்திட்டம், முதியோர் கல்விப் பண்ணைகள் இவையெல்லாம் சரியாகப் பயன்படும் காலம் இன்னும் வரவில்லை. காரணம் அந்தத் தங்கச் சுரங்கங்களில் உள்ள தங்கம் தெரியாதபடி கரிகள் மூடியிருக்கின்றன. இதை விளக்கிக் கொண்டது தவிரத் தாமரைக் குளம் கிராமத்தில் கருணாவுக்கு வேறு எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

நாளைக் காலையிலிருந்து என் கதாநாயகி கலகலப்பு நிறைந்த பட்டினப் பூச்சியாகி விடுவாள். ஆனாலும் அவளுடைய அழகு என்றும் பட்டுப்பூச்சியாகவே இருக்கவேணும் என்பது என் ஆசை. தாமரைக் குளத்தில் வீணாக அவள்மேல் எழுந்த அபவாதம் நீங்கி அவளுக்கு நல்ல இடத்தில் திருமணமாக வேண்டும் என்பதும் என் ஆசை. ஒரு வரன், நல்லதாகப் பாருங்களேன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited. at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

ஷாலிமார்
ஸூபர்லாக்

ஸிந்தடிக் எனாமல்

அநேகமாக எல்லாப் பொருள்களுக்கும் பளபளப்பாகப் பூசலாம்



- வெகு சீக்கிரமாகவும், கெட்டியாகவும் உலரும் மிகப் பளபளப்பான ஸிந்தடிக் எனாமல்.
- உள்புற அல்லது வெளிப்புற உபயோகத்திற்கு.
- பிரஷினாலோ, ஸ்ப்ரே அல்லது டிப்பிங் முறையிலோ பூசலாம்.
- 38 வகை, ஒன்றோடொன்று கலக்கக் கூடிய நிறங்களில் கிடைக்கும்.

SHALIMAR PAINT, COLOUR & VARNISH COMPANY LIMITED

CALCUTTA • BOMBAY • MADRAS • NEW DELHI • KANPUR • (Agents overseas)

JWTSPW 578 R

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon